அறிவு அபிவிருத்தி சங்கம்
மதுரை.
பால ஷண்முகா ... சபா.



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**



SHUDDHANAND
BHARATIA

# கதை விருந்து

## (தாமரைக்குளம் முதலிய கதைகள்)

சுவாமி சுத்தானந்த பாரதியார்
இயற்றியது

அன்பு நிலயம்

இராமச்சந்திரபுரம், :: திருச்சி ஜில்லா.

உரிமை பதிப்புற்றது] 1942 [விலை ரூ. 1—12—0

**First Edition : January 1942.**

*All Rights Reserved By*
THE ANBU NILAYAM
**RAMACHANDRAPURAM, TRICHY DIST.**

The Jupiter Press, Madras.

# பதிப்புரை

கதைவிருந்தின் முதற் பகுதியைக் கலைமகள் திருவடியில் வைத்து வணங்குகிறோம். இதிற் பதின்மூன்று அரிய கதைகள் உள்ளன. அத்தனையும் தமிழரைப்பற்றியது, தமிழருக்கே உரியது, தமிழர் பெருமையை நிலைநாட்டுவதாம்.

இப்போது எழுத்தாளர், கதையிலக்கியத்தைக் கருத்துடன் வளர்க்கிறார்கள். வங்கம், இந்தி போன்று தமிழும் கதை யிலக்கியத்திற் சிறந்து விளங்குகிறது. கதை யிலக்கியத்திற்கு எங்களால் ஆன தொண்டு செய்யத் திருவருளை நம்பி முயன்றுவருகிறோம்.

சுவாமி சுத்தானந்த பாரதியார் சுமார் 200 நல்ல சிறு கதைகள் எழுதியிருக்கிறார். அவை கலை, கற்பனை, உண்மை நிகழ்ச்சி மூன்றையும் தழுவியன. அடிகள் நடை, இனிய எளிய தூய இலக்கியமாகும்.

கதைவிருந்தில் இன்னும் வர இருக்கும் பகுதிகளாவன: 1. **கலியாணக் கதைகள்:** இவை காதல் உலகின் பான்மையை நவரசம் ததும்ப விளக்கும். 2. **வீர விருந்து:** இஃது உலக வீரர் வாழ்வைக் கொண்ட ஆவேசக் கதைத் தொகுதியாகும். 3. **காலக்கண்ணுடி:** இது பஞ்சதந்திரம் போன்று மனித வாழ்விற்கு வழிகாட்டும் கதைத் தொகுதியாகும். 4. **ஞானசாகரம்:** அருள்பெற்ற மகான்களின் புண்ணிய வாழ்வை விளக்கும் கதைகள். 5. **உலக யாத்திரை:** உலகின் பல நாடுகளைச் சுற்றி ஆங்காங்குநடக்கும் வியன்களையும் காட்சிகளையும் விளக்கும் யாத்திரைக் கதைகள். 6. **மோலியர் கதைகள்.** 7. **ரஸின் கதைகள்.** 8. **கிரேக்க ரோமக் கதைகள்.** 9. **வங்கக் கதைகள்.** 10. **பெரும் புலவர் கதைகள்.**

இக் கதைகளை அவ்வப்போது செப்பனிட்டு வெளியிட வுள்ளோம். திருவருள் துணை செய்க!

கதைவிருந்தின் முதற்பகுதியை வெளியிடும் செலவில் ஒரு பகுதியை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டவர்கள் அன்புத் திருவாளர் சோம. அரங்கசாமி பிள்ளையவர்களாவார்கள்; சிவபக்தரும் தருமசீலருமான காலஞ் சென்ற தம் பெரிய தந்தையார் மாயவரம் மூ. சிதம்பரம் பிள்ளையவர்கள் நினைவுக் குறியாக அவர்கள் இவ்வுதவி செய்தார்கள். அவர்களுக்கு, எங்கள் நன்றி உரியதாகுக!

எம்மைத் தோன்ருத் துணையா யிருந்து தமிழ்ப் பணியின்பால் ஊக்கும் சிவபிரானுக்கு நன்றி செலுத்துகின்ருேம்.

அன்பு வாழ்க! அன்பர் வாழ்க!

இராமச்சந்திரபுரம்,
1—1—1942

அன்பு நிலயத்தார்.

எண் : சரு-க-௧000

# முன்னுரை

நமது வாழ்க்கையைச் சொற்செட்டுடன் சித்திரிப்பதே சிறு கதை. நாவலை ஒரு நீண்ட கதையாகக் கருதலாம்; ஆனால், ஒரு சிறு கதையை ஒரு சிறு நாவலாகக் கருத முடியாது. நாவலில், நீண்ட சம்பாஷணை, பல நிகழ்ச்சிகளின் ஓய்வற்ற தொடர்ச்சி, சூழ்ச்சியின் நீண்ட வர்ணனை, அதன் வளர்ச்சிக்கு வேண்டிய பல்வேறு முயற்சிகள், உலகத்திலுள்ள பல பாகங்களின் பூகோளச் சித்திரங்கள், பிரயாண வரலாறு, உணர்ச்சியின் எழுச்சி, எதிர்பாரா முடிவுகள்—எல்லாம் படலம் படலமாக மண்டிக் கிடக்கும்.

ஆனால், ஒரு சிறு கதையில், ஒரு சிறு நிகழ்ச்சியும் வாழ்க்கையினின்று வளரும் பொற்சித்திரமாகவே அமைந்துவிடும்; குறைந்த சம்பாஷணை, நிறைந்த உணர்ச்சி, அழகிய சொற்செட்டிற் பிறக்கும் மின்சார நடை, சிறு சூழ்ச்சியின் பெருஞ் சூறுவளி,—இவையே சிறு கதைக் கட்டிடத்தை அழகுபடுத்தி உறுதி செய்கின்றன.

சிறு கதை எழுதுபவனுக்குக் கண் கூர்மையாக இருக்கவேண்டும்; புறக்கண்ணால் வாழ்க்கையின் நிகழ்ச்சியினின்று கிரகித்ததை, அகக்கண்ணில் இன்பமாய்ச் சித்திரிக்கும் ஆற்றல் இயற்கையில் வேண்டும். அகக்கண்ணின் கற்பனைத் தீபத்தில், சித்திரம் வளர்ந்து உயரும்போது, அதைச் சொற்சித்திரமாக அமைக்கும் மொழியாற்றலும் வேண்டும். இந்தச் சித்திரக் கலையை வளர்க்க, ஆசிரியனின் ஐம்புலன்களும், மொழியின் ஐம்புலன்களாக மாறவேண்டும்.

ஐம்புலன்களில் வடிக்கப்பட்ட வாழ்க்கைச் சித்திரம், சொற்சித்திரமாக உடனே மாறவேண்டும்.

சிறு கதையில், கவிதையும் தலை தூக்கி வளரும் சந்தர்ப்பங்களும் உண்டு. கதையின் ஹிருதயத்தில், கவிதை ஒலித்துக்கொண்டே யிருக்கும். சிறுகதை ஒரு சித்திரக்கலையாதலால், இயற்கையின் அழகு சுமந்த காம்பீரியம், மனித வாழ்க்கையின் இதயத்தில் ஊடுருவிப் பாய்கிறது. வாழ்க்கை ஒரு வானவில்; நிகழ்ச்சிகள் நீர்க்குமிழிகள்; இயற்கையின் வருண ஜாலப் பளிங்கு மண்டபத்தில், மொழி மயில் தனது கண் நிறைந்த கலாபத்தை விரித்தாடுகிறது; இயற்கையில் எழுகின்ற மேகங்களும், மின்னல்களும், இடி முழக்கமும், மொழி அரணில் வந்து மோதி இன்பம் எய்துகின்றன.

சிறு கதைக்குக் காதல்தான் வேண்டுமென்ற கட்டாயமில்லை. எந்தச் சிறு நிகழ்ச்சியும் சிறு கதையாக வளரலாம். சிறு கதையைத் தூண்டிச் சித்திரிக்க, கொலைச் சம்பவம் வேண்டுமென்ற அவசியமுமில்லை. துப்பாக்கி முனையில்தான், விதியின் விநோத லீலைகளும், மதியின் மர்மமும் விளையாடக் கூடும் என்பதும் உண்மையன்று. நம் இதய முனையும், கடிகார முனையும் சஞ்சரிக்கும் ஒவ்வொரு நிமிஷமும் நிறைந்த நிமிஷமே. நிகழ்ச்சியின் வளர்ச்சியே, நிகழ்ச்சியின் தொடர்ச்சி. ஒரு சிறு குழந்தை அம்புலிக்கு அழுவது முதல், ஒரு தியாகி தன் தேசக் கொடிக்காகத் தன் காதலியைத் தியாகம் செய்யும் நிகழ்ச்சிவரை, எதுவும் கதைக்குரிய பொருள்தான். ஒரு சிறுகுழந்தை விளையாட்டு 'மோட்டார்' ஓட்டுவது முதல், மலையைத் துளைத்து இரயில் விறுவிறுப்புடன்

ஓடிச் சீட்டி யடிக்கும்வரை எதுவும் சிறு கதையின் அம்சம் நிறைந்த சித்திரந்தான். 200 வார்த்தையிலும் சிறு கதை எழுதலாம்; 2000 வார்த்தையிலும் ஒரு சிறு கதையைச் சித்திரிக்கலாம். எழுதும் ஆசிரியரின் மனோ தர்மத்தையும் கற்பனைத் திறனையும் பொறுத்துக் கதையின் கோபுரம் வளரும், அல்லது குன்றும். 'மாபஸான்' 'தெ லாமார்' 'லாரன்ஸ்' 'மாரிஸ் மாடர்லிங்க்' எழுதிய கதைகளை நன்கு படித்தால், கதையின் உண்மையும், கட்டிட அழகும், வாழ்க்கைத் திறனும், உணர்ச்சித்திறனும், கலைக் கோபுரத்தின் வேலைப்பாடும் நன்கு புலனாகும். பிரெஞ்சுக் கதைக்கலை நிபுணர் 'மாபஸான்' எழுதியிருக்கும் எண்ணற்ற கதைக் கடலில், 'நெக்லஸ்', 'குழந்தை' என்ற கதைகளைப் படித்து இன்புறுங்கள்!

'தெ லாமார்' சிறு கதைக் கட்டுக் கோப்பில், கலாநிபுணர்; முன்னும் பின்னும் உணர்ந்து, சொற்களின் ஆழத்தையும் உயரத்தையும் அளந்து, வாழ்க்கைப் படத்தைச் சித்திரிக்கும் பேராற்றலுடையவர். ஆங்கிலச் சொற்களை, அவர் இதய ஒலியை ஒட்டியே சிருஷ்டிக்கிறார். அவருடைய சிறு கதை, ஓர் இலக்கிய விருட்சம்.

**சுவாமி சுத்தானந்த பாரதியார்** அவர்கள் பல மொழிகளிலும், சிறு கதைக் கட்டுக்கோப்பை உணர்ந்தவர்கள். அவர்கள் எழுதியிருக்கும் இந்தக் கதைக் கோவையில், மருட்கை, சோகம், வீரம், சிருங்காரம், ஹாஸ்யம், அச்சம், இளிவரல், வெகுளி, சாந்தம் ஆகிய நவரசங்களும் ததும்புகின்றன.

'தாமரைக் குளம்' என்ற கதையில், காதற் சித்திரம் கவிதைச் சித்திரமாக ஓங்கி வளர்கிறது; வசன

காவிய நடையில், இதயம் மின்னுகிறது. இஃது ஒரு சரித்திரக் கதையாயினும், இதன் ஹிருதயத்தில் கற்பனைக் கிரீடம் கவிதை மணிதாங்கிப் பொலிகிறது. சுப்பிரமணிய பாரதியாரின் வாக்கையே எதிரொலிப் பதுபோல்—காதல், காதல், காதல், காதல்போயிற் சாதல், சாதல், சாதல் — இந்தப் பேருண்மை, பேரோவியமாக இந்தக் கதையில் வளர்கிறது; காத லும் வீரமும் ஒன்றி இதய மலர்ச்சியாக மணம் வீசு கிறது; இயற்கையின் எழில், அழகுக் கதிர் வீசுகிறது.

தேசப் பற்றும், வீர சௌந்தரியமும், சோகத் தையே மூழ்கடிக்கும் சுதந்தர தாகமும், இருண்ட தோல்வியை முடிவில் நிறைந்த வெற்றியாக மாற்றும் வீரச் செயலும், 'சந்தனத் தேவன்'—'தன்னை யிழந்த வீரன்'—'இராணி வேலு நாச்சியார்' முதலிய சரித் திரக் கதைகளைப் பேரோவியங்களாகச் செய்து விடு கின்றன. இவையே சொல்லோவியங்கள்—மொழி மின்னல்கள்—ஹிருதயப் புயல்கள்—கவிதைச் சித்தி ரங்கள்! சுவாமிஜியின் உரை நடை, சீறிச்சீறி மின் னற் சிலம்பம் வீசுகின்றது—"மறவர் குண்டுக்குக் குண்டு, குத்துக்குக் குத்து, வெட்டுக்கு வெட்டு, சரியான பதில் கொடுத்தனர்!" நாம் இக்கதைகளைப் படிக்கும்போது, உணர்ச்சிப்புயல், இரத்தத் துடிப் பாகவும், இதய பூகம்பமாகவும் வளர்கின்றது.

*1—1—'42.* —**வி. ஆர். எம். செட்டியார், பி.ஏ.**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | பதிப்புரை, முன்னுரை ... | ... i-viii |
| | முகவுரை - கதை, கதை, கதை! ... | ... 9 |
| க. | தாமரைக் குளம் ... ... | ... 17 |
| உ. | சந்தனத் தேவன் ... ... | ... 27 |
| ௩. | வஸ்தாத் சின்ன பாபு ... ... | ... 38 |
| ௪. | தருமசாலை ... ... | ... 51 |
| ௫. | ஊரைக் காத்த பாட்டி ... ... | ... 63 |
| ௬. | இன்றொரு முத்தம் ... ... | ... 75 |
| எ. | ஏழை முருகன் ... ... | ... 81 |
| அ. | வீரபலி ... ... | ... 105 |
| ௯. | வேலு நாச்சியார் ... ... | ... 117 |
| ௧௦. | வெள்ளைக்காரன் போட்டி ... | ... 124 |
| ௧௧. | என்னைத் தொட்டானே!! ... | ... 134 |
| ௧௨. | சமூகப் புரட்சி ... ... | ... 155 |
| ௧௩. | சரியான ஜோடி ... ... | ... 179 |

# முகவுரை

**கதை, கதை, கதை!** எனது சிறு வயது கதாசாகரத்தில் நீந்தியது. எங்கள் குடும்பத்தின் மூலபுருஷர் ஐதராபாத்து நைஜாமிடம் வேலை பார்த்தவர். என்ன வேலை யென்று தெரியவில்லை. வீட்டில் இருந்த சில ஓலைச்சுவடிகள் மூலம் எங்கள் முன்னோர் வரலாறுகள் கொஞ்சம் கிடைத்தன. அன்வாருடன் இறந்த பிறகு, ஐதராபாத்தில் பெரிய உட்கலகம் எழுந்தது. அக்கலகத்தில் இருந்துதான் ஆங்கிலக் கொடியைத் தென்னாட்டிலும், வங்காளத்திலும் நாட்டிய **கிளை விற்கூச்** சுக்கிரதசை அடித்தது. அக்கலகத்தில் எங்கள் குடும்ப முன்னோரான **சிவதாஸ்** என்பவர் குதிரை யேறி மைசூருக்கு வந்துவிட்டார். மைசூரில் திப்புவிடம் அவர் சந்ததி ஊழியம் செய்தது. ஸ்ரீரங்கப் பட்டணம் வீழ்ச்சியின் பிறகு, அவர்களில் மிஞ்சியவர்கள் குதிரையேறி மதுரைக்கு வந்துசேர்ந்தார்கள்.

அக்காலம் தமிழ்நாடெங்கும் போர் முழக்கம்! சண்டையில்லாத நாள் கிடையாது; யாரும் வெளியே தனியாகப் போகமுடியாது. மதுரைக்கருகே **பனையூர்** என்ற ஒரு கிராமம். அதில்தான் என் முன்னோர்கள் கொஞ்சம் தருமாசனக் கிராமம் பெற்றுக் குடியேறினர். என் பாட்டனார் பெரிய ஸம்ஸ்கிருத வித்வான்.

அவர் கிரந்தத்தில் எழுதிய வால்மீகி இராமாயண ஓலைச்சுவடியைப் பார்த்திருக்கிறேன். அத்துடன், தெலுங்கில் அவருக்குக் கவித்துவம் உண்டு. (அக் காலம் பாண்டிய நாட்டில் தெலுங்கும் வழங்கியது). அவர் மனைவி பெயர் மீனாட்சியம்மாள். எனது குழந்தைப் பருவத்தில் நான் பட்சணம் கேட்டதேயில்லை; ஆனால், மீனாட்சியம்மாளிடம் கதை கேட்பது மட்டும் தவறாது. கதை சொன்னால்தான் சாப்பிடுவேன். அதுவும், என்னிஷ்டப்படி கதை சொல்லவேண்டும். "பாட்டி, உன் கதை சொல்லு! தாத்தா கதை சொல்லு! உன் கலியாணக் கதை சொல்லு! நாம் எப்படிப் பனையூருக்கு வந்தோம், சொல்லு!" என்றெல்லாம் கேட்பேன். பாட்டிக்கு உச்சி குளிரும்; என்னை மடியில் உட்கார வைத்துக்கொண்டு கதை சொல்லுவாள். பாட்டி சொன்ன கதைகள் ஒரு படலம் மனத்திலிருக்கின்றன.

*　　*　　*

அடுத்தது என் தகப்பனார்: என் தகப்பனார் பரமபக்தர். சிவநாமமும், இராமநாமமும் அவர் வாக்கில் முழங்கிக்கொண்டே யிருக்கும். சிவகங்கை ஜமீனில் அவருக்கு ஓர் எளிய வேலை. பரம ஏழைக் குடும்பம்; என்றாலும் மனக்குறை இராது. எனக்கு ஆறு வயதிருக்கும்போது பாட்டி சிவனடி சேர்ந்தாள். பாட்டிக்கு நான் நெய்ப்பந்தம் பிடித்தபோது, என் அழுகைக்கு ஒரே பல்லவிதான்: **"ஐயோ பாட்டி, நான் இனிமேல் யாரிடம் கதை கேட்பேன்?** ஊம் உம் உம்..."

பாட்டி இறந்த பிறகுதான் என்னைப் பள்ளிக்கூடத்திற் போட்டார்கள். அந்தக் காலத்துப் பள்ளிக்கல்வி ஒரு மண்ணுக்கும் பயனில்லை. அதனால் வந்த

தீமைகள் ஆயிரம்! ஏதோ திருவருளால் **நான் தப்பிப் பிழைத்தேன்.** இளமையில் எனது ஒழுக்கத்தைச் சீர் திருத்தியவை என் தாயாரும் தகப்பனாரும் சொன்ன கதைகளும், பாடிய அருட்பாடல்களுமேயாம். ஆறு வயது முதல் என் தகப்பனார் எனக்கு ரஸமான கதைகள் சொல்லத் தொடங்கினார்; எல்லாம் தம் அனுபவக் கதைகளே. அவர் சிவகங்கை ஜமீன்தாரி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, மதுரை நாயக்கர் ஆட்சி, தஞ்சாவூர் நாயக்கர் இராயர் ஆட்சி, ஆர்க் காட்டு நவாப்பு இராச்சியம்—இவற்றில் நிகழ்ந்த ரஸ மான சம்பவங்களைச் சொல்லுவார். மங்கம்மாள் கதை, தளவாய் கதை, இராணி மீனாட்சி கதை, ஊமையன் கதை, சின்ன மருது பெரிய மருது கதை, பெரிய வைத்தா கதை, தஹஸீல்தார் கதைகள், அந்தக் காலத்தில் தருமப் பிரபுக்களாய் விளங்கினோர் கதை க்ள்—எல்லாம் சொல்லுவார்.

என்றாலும் சும்மாச் சொல்லமாட்டார். நான் பத்து வயது மட்டும் துஷ்டப் பையனாய் இருந்தேன். கோயிலுக்குப் போவேன், பக்தி செய்வேன், கவி பாடுவேன். மற்றப்படி யெல்லாம் விஷப்புச்சம்; மணிக்கு ஒரு விஷமம், வம்பு, வேடிக்கை பண்ணாவிட் டால் எனக்குப் பொழுது போகாது. பள்ளிக்கூடத் தில் குட்டு வாங்கினாலும் பரவாயில்லை யென்று ஏதா யினும் சேட்டை செய்து பையன்களைக் ‘கொல்’ லென்று சிரிக்க வைப்பேன். உபாத்தியாயர்களுக்கு விதவிதமான திருநாமங்கள் சூட்டி, பாட்டுக் கட்டி, என் சகாக்களுக்குச் சொல்லித் தருவேன். எல்லாரும் புகார் செய்வர். ‘இல்லையப்பா, கொஞ்சம் தமாஷா யிருந்தேன்’ என்று சுண்டைக்காய் கடித்த மாதிரி

எடுத்ததற்கெல்லாம் எதிர் சொல்லுவேன். அன்றிரவு தான் தகப்பனுர் என்னை வாசல் திண்ணையில் உட்கார வைத்துக் கதை சொல்லுவார். நான் பொய்சொல்லி யிருப்பேன். அதை நினைப்பில் வைத்துக்கொண்டு, "செல்லம், ஒரு கதை கேட்கிருயா? நன்ருகக் கவனித்துக் கேள்! மதுரையிலே, மீனுட்சி என்று ஓர் இராணி அரசாண்டாள்......அவளிடம் நாராயணையர் என்ருெரு மந்திரி யிருந்தார்......அவருக்குச் சுப்பா நாயக்கன் என்ற ஒரு விரோதி...அந்தப் பையல் சும்மா இருக்கமாட்டான். உன்னைப் போலத் துறுதுறு வென்றிருப்பான்...அவன் நாராயணையர்மேல் ஒரு பெரிய பொய் கட்டிவிட்டான்...இன்னொருவர் மேல் பொய் கட்டி விடலாமா?" என்று ஒரு கேள்வி போட்டு விடுவார். நான் தலை குனிந்து "ஊஹூம்" என்று சொல்லுவேன். மானம் பிடுங்கித் தின்னும்! "ஏன் அப்படி வெட்கப்படுகிருய்? நீ ஏதாயினும், யார் மேலாயினும் பொய்கட்டி விட்டாயா?" என்று என்னைக் கிண்டுவார். மனத்திலிருப்பது வெளியே வந்துவிடும். என் மனத்திலிருப்பதையறிந்து, அதற்குத் தக்கபடி மேலே கதையைச் சொல்லி, என் பிழைகளை உணர வைப்பார். "இனிமேல் நான் அப்படிச் செய்யமாட்டேனப்பா" என்று விம்மிவிம்மி யழுவேன். உடனே சமாதானம் பண்ணிவிட்டு, இன்னொரு வேடிக்கைக் கதை சொல்லிச் சிரிக்க வைப்பார்.

* * *

அப்பாவின் கதைகளைக் கேட்டுவிட்டு அம்மாளிடம் செல்வேன். அம்மாளுக்கு இராமாயணம், பாரதம், பாகவதம், திருவிளையாடல் புராணம், பெரிய புராணம்-எல்லாம் நன்ருகத் தெரியும். கேட்டும், வசன நூல்

களைப் படித்தும், அம்மாள் கதைப் பொக்கிஷமாயிருந்தாள். இரவில் படுக்குமுன் நாள் தவருமல் அவள் எனக்கு ஒரு நல்ல கதையைச் சொல்லி, “அதுமாதிரி நீ நடக்கவேண்டும். ஹநுமான் இராமன் கட்டளையை எவ்வளவு வீரத்துடன் நிறைவேற்றினான் பார்! இராவணன் முன்னே அவன் எவ்வளவு தைரியமாகப் பேசிஞன் பார்!” என்று உணர்த்துவாள்; “ராமசாமி தூதன் நானடா. அடட ராவணு” என்ற பாட்டைப் பாடுவாள்; தெலுங்கில் இராமதாஸ் சரித்திரப் பாடல்களையும், சுமதி சதகம், நரஸிம்ஹசதகம், வேமன சதகம் முதலியவற்றையும் பாடுவாள். என் தகப்பஞர் எடுத்ததற்கெல்லாம் தெலுங்கிலாவது தமிழிலாவது ஒரு பாட்டுச் சொல்லுவார்; வடமொழிச் சுலோகங்களை அடுக்குவார்; அவற்றை யொட்டி எங்களுக்கெல்லாம் கதைகளும் சொல்லுவார். நான் சூனிய நெற்றியோ டிருந்தால், அதற்கொரு பாட்டும் கதையும் சொல்லி, நெற்றிக்கு இட்டுக்கொள்ளச் செய்வார். அப்பா, அம்மாள் சொன்ன கதைகள் இப்படி.

* * *

என் அம்மாள் ஊர் மதுரை. என் மாமன்மார் இலட்சாதிபதிகள். மதுரையில் நான் மிகவும் உற்சாகமாக இருப்பேன். அம்மாள் மதுரைக்குப் போகும் போதெல்லாம் கூடப் போவேன். மாமன் வீட்டில் 95 வயதுப் பாட்டி ஒருத்தி எனக்கு அருமையான குடும்பக் கதைகளைச் சொல்லுவாள். “பாட்டி, ஒரு கதை” என்று காது கேட்கும்படி ஓங்கிச் சொல்ல வேண்டியதுதான் தாமதம். தான் பிறந்த கதை, வளர்ந்த கதை, குடும்பச் சண்டைகள், தான் கண்டது கேட்டது, மதுரையிலே சந்தாசாஹெபு வந்தது, மதுரை,

கொள்ளை போனது—எல்லாம் சொல்லுவாள். அக் கதைகள் ஒரு மூலையில் உள்ளன. என் மாமன் வீட்டுச் சேவகனின் பாட்டனார் இராணி மங்கம்மாள் ஊழியத்தில் இருந்தவர். "திருமலைத் தாத்தா, எனக் கொரு கதை சொல்ல மாட்டீரா?" என்று அவரிடம் கேட்பேன். அவர் தம் தாத்தா காலக் கதைகளை யெல்லாம் சொல்வார். விசுவநாத நாயக்கர் மது ரைக்கு வந்தது முதல், சந்தாசாஹெபு படையெடுத்து இராணி மீனாட்சி சிறையில் இறந்தது வரையில், அவரிடம் கதை கேட்டிருக்கிறேன். அந்தக் கதைகள் ஒரு மூலையில் இருக்கின்றன. இன்னொருவர் எனக்கு நாஞராயன் சண்டையைப்பற்றிச் சொல்வார். நாஞராயன் சண்டை 1857-ல் நடந்த சுதந்தர யுத்தமே.

* * *

எனக்குக் கொஞ்சம் வயது வந்தபின், சிவகங்கை ஜமீன்தார்களின் மரபினர் நட்புக் கிடைத்தது. அவ ரிடம் சென்றால் ஏகத் தமிழ் விருந்துதான்; கேட்கக் கேட்கத் தேவாமிருதமா யிருக்கும். அந்த மரபினர் சிலரிடம் கவிச்சுவை யருந்தச் செல்வேன்; சிலரிடம் வீர விளையாட்டுக்களைக் காணச் செல்வேன்; சில ரிடம் வரும் பெரியோர்களை முன்னிட்டுச் செல்வேன்; சிலரிடம் பழங் கதைகளைக் கேட்கவே ஆவலாகச் செல்வேன். அவர்களில் ஒருவர் வைத்தியத்தில் நிபு ணர்; இரசவாதமும் அறிந்தவர்; தங்கமான மனிதர்; நல்ல பலசாலி; வீரமணி; தமிழில் பெரிய படிப்பாளி. நான் அவர் வீட்டிற்குச் சென்று மருந்து செய்யத் துணைபுரிவேன். அவரிடம் தினந்தோறும் துறவிகள் வருவர். அவர்களை அவர் அன்புடன் உபசரிப்பார்; அத்

துறவிகளுக்கு வேண்டிய பணிவிடை செய்வார். அவர்கள் செய்யும் உபதேசங்களை ஒன்று விடாமல் கேட்பேன். அதனால் நான் அடைந்த பயன் மிகப்பெரிது. எந்தத் துறவி வந்தாலும் "சாமி, வரட்டும், இருக்கட்டும், சாப்பிடட்டும், என்ன வேண்டுமோ கேட்கட்டும்!" என்று ஒரு கிழவி அந்த வீட்டில் உபசரிப்பாள். அவளுக்குச் சுமார் 88 வயதிருக்கும். அந்தக் கிழவி இராமநாதபுரம் சிவகங்கைச் சீமைகளின் சரித்திர வடிவு. அவள்தான் முதலில் எனது தேசாபிமானத்தை வளர்த்தவள். அவளிடம் கேட்ட சின்ன மருது பெரியமருது கதைகள் எனது நரம்பிற் பாய்ந்து கலந்தன. ஊமையன் கதையை அவள் வெகு உருக்கமாகச் சொல்லுவாள். அஞ்ஞு துரை (Agnes) திருமயத்தில் படைவீடமைத்து, ஊமைத்துரையுடன் போர் செய்யப் பட்டபாட்டை அவள் சொல்லும் போது, 'நம் தமிழ்வீரர்முன் லியோனிதாசும், பிரதாப சிம்மனும் எந்த மட்டும்?' என்று எனக்குத் தோன்றும். இந்தப் பாட்டி சொன்ன கதைகள் ஒரு மூலையில் உள்ளன.

நான் இலக்கிய இலக்கணங்கள் படிக்கும்போது, எனக்கு அரிய துறவியொருவர் ஆசிரியராக வந்து சேர்ந்தார். அவரிடந்தான் பையற் பருவத்திலேயே யோகப்பயிற்சி தொடங்கினேன். அவர் எந்தச் செய்யுளையும் ஒரு கதை மூலமாக நன்கு விளக்குவார். அவர் இலக்கணம் சொல்லும்போது கதை சொல்லுவது போல இனிமையாயிருக்கும். புத்தகம் பார்ப்பதில்லை. அவருடன் உலாவிக்கொண்டே கற்பேன். அவர்வெண்பாக்களுக்கு ஈற்றடி கொடுத்து ஒரு கதையின் மூலம் அதைப் பூர்த்தி பண்ணச் சொல்லுவார். ஓர் உதா

ரணம்: ஒருநாள் "வீரனுய் வாழ விரும்பு" என்று அடி யெடுத்துக் கொடுத்தார்.

**கொங்கண மெல்லாங் குழுறியெதிர்த் துந் †தளவாய்ச்**
**சிங்கஞ் சமரிற் செயங்கொண்டான்—இங்கவன்போற்**
**சோர்வு விடுத்துச் சுயேச்சை யடைந்துலகில்**
***வீரனுய் வாழ விரும்பு.***

என்று முடித்தது நினைப்பிருக்கிறது. இந்தப் பெரி யாரிடம் கேட்ட பெரியார் வரலாறுகளும், உபதேசங் களுமே எனது அத்யாத்ம உணர்ச்சியைத் தூண்டின. பிறகு ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, இந்தி, பிரெஞ்சு முதலிய மொழிகளிற் படித்த பெருங் கதைகள் வேறு உள்ளன. சொந்தமாக எழுதிய கதைகளும் உள்ளன. இக்கதைக் குழாங்களை முடிந்தமட்டும் சேர்த்து என் னருமைத் தமிழருக்குத் தருகிறேன். கதை விருந்துக்கு வாருங்கள்!

இப்போது தமிழுலகில் ஏராளமான கதை விருந்துகள் நடக்கின்றன; வங்காள சந்தேஷ், ஹிந்தி மிட்டாய், மராட்டிய லட்டு, கன்னடபோளி, தெலுங் குப் பச்சடி, மலையாள அவியல், ஆங்கில சாக்லெட், பிரெஞ்சு திராக்ஷா ரஸம் இன்னும் எத்தனையோ பட்சணங்களும் பானங்களும் இளம் எழுத்தாளர் கதை விருந்தில் கம கமக்கின்றன. நெடுநாளாக வைத்துள்ள எளிய விருந்தையும் தமிழருக்கு என் எளிய முறையில் பரிமாறுகிறேன். வருக தமிழன்பர்!

**சுத்தானந்தபாரதி**

---

† தளவாய் - ஒரு பெரிய தளகர்த்தன். மங்கம்மாளின் படைத் தலைவன்.

# கதை விருந்து

## க. தொகுதி

### க. தாமரைக் குளம்

I

அந்தத் தாமரைக் குளப் படியில் உட்கார்ந்தாலே போதும்; கவலை மறக்கும்: விசாலமான குளம்; பளிங்குபோலப் படித்துறைகள்; படிகம் போல ஊற்றுநீர்; அதில் புன்னகைக் கிண்ணங்கள்போலத் தாமரைக்காடு பூத்திருக்கிறது. கலையும் திருவும்போல வெண்டாமரையும், செந்தாமரையும் விளங்குகின்றன. அவற்றிடையே வாத்துகள் ஒய்யாரமாக நீந்துகின்றன; மீன்கள் பாய்ந்து விளையாடுகின்றன; தவளைகள் தத்துகின்றன. கற்பனைத் திரையில் அருட்புலவன் எழுதிய அற்புதக் கவிபோல் இருக்கிறது காட்சி!

சூரியோதயம்; குளம் பொன்மயமா யிருக்கிறது; வைரமும், இரத்தினமும்போலத் தாமரைகள் மின்னுகின்றன. வண்டுகளும் புட்களும் சுற்றிலும் உள்ள வனங்களில் தென்றலுடன் பாடுகின்றன; அந்தப் பாட்டுக்குத் தாளங் கொட்டுவதுபோல் 'த்ஸொ' 'த்ஸொ' என்று மக்கள் ஆடை துவைக்கிறார்கள். பெண்கள் ஒரு துறையிலும், ஆடவர் மற்றத் துறைகளிலும் குளிக்கின்றனர்.

அந்தத் துறையில் **அவள்**; இந்தத் துறையில் **இவன்**. இவன் செந்தாமரையைப் பார்ப்பதுபோல்

அவள் முகமலரைப் பார்க்கிறான்; அவள் வெண் டாமரையைப் பார்ப்பதுபோல் இவன் விழிகளைப் பார்க்கிறாள். கண்கள் பேசுகின்றன; ஆகாசத் தந்தி போல் மனங்கள் பேசுகின்றன......அவள் குளித்ததும் தன் தோழிகளுடன் செல்கிறாள். போகும் போது ஒரு விழி மின்னல்......இவனது உள்ளத்தை வெட்டுகிறது. இவன் அவசரம் அவசரமாகத் திருநீறு பூசிக்கொண்டு, அவளுடைய அடிச் சுவடுகளில் கண் வைத்துச் செல்லுகிறான். அவள் ஒரு மாடி வீட்டுக்குள் போகிறாள்; இவன் தனது மண்குடிலில் நுழைகிறான்.

* * *

அந்திமாலை; சந்திரன் எழுந்தது; தாமரை குவிந்தது; அல்லிகள் பூத்தன; அவள் குடத்தை வைத்துக்கொண்டு அந்தப்படித்துறையி லிருக்கிறாள். இவன் தூண்டில் போட்டு இந்தப் படித்துறையி லிருக்கிறான். இருவரும் அல்லியைப் பார்க்கின்றனர்; அல்லி ஒரு மோனத் தூதுபோல் இருவர் விழிகளையும் கூட்டுகிறது. இவன் தூண்டில் அவள் மனத்தைப் பற்றுகிறது.

இவன் குளத்தைச் சுற்றிப் பார்ப்பவன்போல அவளிருக்கும் படித்துறைக்கு வருகிறான். அவள் நாணத்தால் எழுந்து நீர் மொண்டு விழிமின்னல் வீசி நடக்கிறாள் .....சிறிது சென்றதும், "ஆத்தா!" என்று அவள் குடத்தை வைத்து உட்காருகிறாள்........... "என்ன என்ன.........தங்கமே, முள்ளா"? என்று இவன் ஓடிச்சென்று பார்க்கிறான். "காலில் ஏதோ சுறுக்கென்றது." "முள்ளு; இதோ எடுத்துவிடுகிறேன்." முள் எடுத்தாயிற்று! அவர்கள் வாயை

மூடிய நாணத்தையும் எடுத்தெறிந்தாயிற்று; இருவரும் பேசினர் :

"இந்த நேரத்தில் தனியாக வரலாமா......பெண்......?"

"தனியென்ன, நீங்களிருக்கும்போது......?"

"அப்படியானால் எனது தனிமையும் தீர்ந்தது—உன் பெயர்?"

"மீனாள்—தங்கள் பெயர்?"

"சுந்தரம்."

"நான் போகிறேன். நேரமாகிறது."

"நாளை பார்க்கலாமா?"

"பலாரென்று விடியவும் இங்கே வருவேன்."

* * *

அதிகம் சொல்வானேன். தினம் இப்படியே இருவரும் பார்த்தனர், பேசினர், காதலித்தனர்; இருவர் ஒருவரானார்.

## II

சுந்தரம் போர்வீரன். **சூரப்புலி சுந்தரம்** என்றால், சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை எங்கும் தெரியும். அவன் மறவருள் மறவன்; போர் வலியுடன் பிறந்தவன். ஆனால், அவன் கூலிக்கு வாள் பிடிப்பதில்லை; அறத்துக்கே வாள் பிடிப்பான்; தரும நியாயம் எங்கிருக்கிறதோ அங்கேதான் அவன் இருப்பான்; மன்னாதி மன்னனானாலும் நியாயந் தப்பி நடந்தால் எதிர்ப்பான். ஆதலால், பெரிய மனிதர்கள் அவனிடம் மிகவும் மரியாதையாக நடந்தனர். மன்னர் அவனுக்கு எவ்வளவோ வாள்கூலி தந்தார். அவன் சிறுகக் கட்டிப் பெருக வாழ்ந்தான். எளிய வாழ்வுக்கு வேண்டியதை வைத்துக்கொண்டு, மீதி

யெல்லாம ஏழை எளியவருக்குத் தந்தான். "சுந்தரம் நாலு காசு சேர்த்து வையப்பா!" என்றால், "இந்தக் காலத்திலே பணம் சேர்த்துப் புதைத்தென்ன? யாராவது அள்ளிக்கொண்டு போவான். இருக்கும் போதே நம்மைப்போன்ற எளியவருக்கு அள்ளி விடுவோமே!" என்பான்.

சுந்தரம் நெடுநாளாகக் கலியாண நினைப்பே யில்லாதிருந்தான். "நமது சீமையில் வந்து கொள்ளை யடிக்கும் 'வடுவாக்'களை ஒழிக்க வாள் பிடிப்பதே நமது வேலை" என்று வீர விரதம் கொண்டிருந்தான். சில மாதங்கள் போரில்லை; அப்போதே அவன் மனம் மீனாளிடம் சென்று பதிந்தது; "மீனாள்—இன் றேல் தனிமை" என்றிருந்தான்.

## III

மீனாள் வேலுத்தேவனது செல்வ மகள்; கட் டழகி; குணவதி. அவள் அழகுக்குத் தம் உயிரை அடமானம் வைத்த வாலிபர் பலர். அனைவரையும் அவள் உதறித் தள்ளினாள். பெருஞ் செல்வரெல்லாம் அவள் மனதை விலைக்கு வாங்க முயன்று ஏமாறினர். அவள் மனத்தைக் கவர்ந்தவன் சுந்தரமே. வேலுத் தேவர் சரியான வீரர்; குஸ்தி, சிலம்பம், வாள் இவற் றில் தேர்ந்தவர். தம் பெண்ணுக்கும் அவர் போர்க் கலை பயிற்றினார். ஆனால், அவர் தம் மகளைப் பெரிய இடத்தில் கொடுக்கத் தீர்மானித்தார். "சுந்தரம் வீரனே; ஆனால் ஏழை!" என்றார்.

வேலுத்தேவரின் தங்கைமகன் செல்லத்தேவன்; செல்வமாக வளர்ந்தவன்; முரட்டுப் பேர்வழி; கேட் டதைக் கொடுக்காவிட்டால், மூக்குக்குமேல் கோபம்

வரும். அவன் கோபம் கொலையில் வந்தும் முடியும். செல்லத்தேவன் பணக்காரன்; அவனுக்கென்று ஓர் அடிமைக் கூட்டம் உண்டு; அதில் அவன் வைத்தது சட்டம். செல்லத்தேவனுக்கு இப்போது வயது முப்பது; பதினாறு வயதிலிருந்தே அவன் மனத்தைப் பூங்கணை துளைக்கப் புகுந்தது! அதுமுதல் அவன் காம வனத்தில் கடுவேட்டை யாடிவந்தான்.

மீனாள் மேலேயே அவனுக்குக் கண். என்னென்னவோ முயற்சி செய்தான்; மீனாள் அவனை உதறித் தள்ளி நிமிர்ந்து நடந்தாள். இப்போது அவள் மனம் சுந்தரத்தைப் பற்றிக்கொண்டது. அதைச் செல்லன் அறிந்தான்; பொறாமை கொண்டான். சுந்தரத்தை அணுகப் பயம்; ஆதலால், பொய்க்கதை யெல்லாம் கட்டிவிட்டான்; பலிக்கவில்லை.

## IV

புதுக்கோட்டை இராமநாதபுரம் சிவகங்கைச் சீமைகளில் புகுந்தது ஐதராலியின் படை. கொள்ளை, கொலை, தீ, நாசம்; சூறை — எங்கும் எம தாண்டவம்! அக்காலம் ஏழை எளியவர்கள் பட்ட பாட்டை இன்று நினைத்தாலும் கண்ணீர் வருகிறது. ஐதர் திண்டுக்கல்லில் முகாம் போட்டுத் தன் சேனையைத் தெற்கே விடுத்தான். "ஒற்றைக் குதிரைக்காரன்" என்னும்போதே, ஜனங்களின் குடல் நடுங்கும். குதிரைப் பட்டாளம் கன வேகமாக வரும்; காலாட்கள் 'ஹா ஹா' என்று ஆர்கலித்து வருவர்; எதிரே வந்த பேர் எமலோகம்! ஐதரின் படை வீரர், வீடுகளில் புகுவர்; உணவுகளை உண்பர்; நகை நட்டுகளைப் பறிப்பர்; தாலிகூட விடமாட்டார்கள்; பாத்திரம்

பண்டங்களை உடைப்பர்; பெண்களின் மானத்தைக் கெடுப்பர்; ஆட்களை வெட்டுவர்; வீட்டைக் கொளுத்துவர்... அட்டகாசம் செய்து வேறூர் ஊருக்குத் தாவுவர். அவர்கள் வருவதறிந்ததும், ஊர்களில் சாப்பாடு தயாராக வைத்திருக்க வேண்டும்; அவர்கள் கேட்கும் தொகையை வசூலித்துத் தரவேண்டும்; எதைக் கேட்டாலும் தரவேண்டும். பெண்களது கற்பு நடுநடுங்கும்! ஐதராலி படை சிவகங்கையை நோக்கி வருகிறது. எல்லை தாண்டாமல் அதை எதிர்த்து விரட்ட, மறவர் படை திரண்டது. முரசு கேட்டதும், மறவர் திசை யதிர முண்டாத் தட்டி வந்தனர். சூரப்புலி சுந்தரம் ஆயிரம் வீரருக்குத் தலைமை வகித்தான். அவனையே, மன்னர் முன்னே அனுப்பினார்.

புறப்படுமுன், அவன் சிவ தரிசனம் செய்தான்; உடனே தாமரைக் குளத்துக்கு வந்தான். மீனாள் காத்திருந்தாள். சுந்தரம் ஒரு செந்தாமரையை அவளது கையில் தந்தான்; அவள் கையால் தான் ஒரு வெண்டாமரை பெற்றுக்கொண்டான்; "மீனாள், இந்தத் தாமரை வாடி உதிருமுன், எனது வெற்றி கொண்டுவருவேன், பார்!" என்று புறப்பட்டான்.... மீனாள் செந்தாமரையை நிரம்ப நீர் ஊற்றிய செப்பில் வைத்துப் பாதுகாத்து, அதன் முகம் வாடாதிருக்க வேண்டுமென்று கடவுளை வேண்டினாள்.

## V

கொள்ளைப் படை ஜமீன் எல்லைக்கு வந்துவிட்டது; சுந்தரம் தன் வீரருடன் எதிர்த்துக் கடும்போர் செய்தான். இருபுறமும் வலுத்த சேதம்;

என்றாலும், பகைவர் எளிதில் முன்னேறவில்லை. இது தான் சமயம்; சூரப்புலி போரிலிருக்கிறான்; மீனாளைப் பலாத்காரம் செய்யக் கிளம்பினான் செல்லத்தேவன். தன் தாசிகளை விட்டு, மாயம் பேசினான்; தானே அவளைக் கண்டு, "பேசாமல் இணங்கு; இன்றேல் என் குணத்தைக் காட்டுவேன்!" என்று மிரட்டினான். "அடே, நானும் மறக் குலக் கன்னி; எனக்கும் வாள் பிடிக்கத் தெரியும்; என் குணத்தையும் காட்டுவேன். மரியாதையாகப் போ!" என்று தீப்பொறியப் பார்த்தாள் மீனாள். அந்தப் பார்வையைத் தாங்காமல் செல்லன் போனான்; ஆசை போகவில்லை. சுந்தரம் உயிரோடிருக்கும் மட்டும் தன்னை அவள் மதிக்க மாட்டாள் என்பதைச் செல்லன் தெரிந்துகொண்டான்; சுந்தரத்தின் உயிருக்கு உலை வைக்கச் சூழ்ச்சி ஜோடித்தான். நல்லது செய்வது கடினம்; கெடுதல் செய்வது எளிதே. ஐதராலி படைக்குத் தந்திரமாக ஆளனுப்பி வழி காட்டிவிட்டான். பகைவர் தந்திரமாக ஊருக்குள் புகுந்துவிட்டனர். சுந்தரம் வீராவேசமாகப் போர்புரிந்தான். தெருக்கள் கொள்ளை! கடைகள் சூறை! கட்டிடங்கள் தவிடு பொடி! குதிரைப் படை அட்டகாசஞ் செய்தது. மறவர் ஆனமட்டும் எதிர்த்தனர். யாரோ சுந்தரம் போரில் இறந்ததாகச் செய்தி பரப்பினர்.

## VI

ஒரு நாள், இரண்டு நாள். தாமரை முகம் வாட்டங் கண்டது; முழுதும் வாடவில்லை. மீனாள் முக மலரும் வாடியது; அகமலர் கருகியது. அச் சமயம் செல்லத் தேவனின் ஆட்கள் மேற்சொன்ன செய்தி

யைப் பரப்பினர். கேட்டாள் மீனுள். வீடு பிடிக்க வில்லை; வாழ்வு பிடிக்க வில்லை; தாமரைக் குளத்துக் குச் சென்ருள்; அதே படித்துறையில் அமர்ந்தாள்; சுந்தரத்தை நினைத்துக் கண்ணீர் வடித்தாள். தாம ரைகளெல்லாம் சுந்தர விழிகளால் அவளையே நோக் கின. நேரமானது. அந்தி சிவந்தது; அல்லி மலர்ந் தது. மீனுள் அல்லியைப் பார்த்துக் கொண்டே, காத லனை நினைத்துக் கண்ணீர் விட்டாள். "கண்ணுளா, இனி உன்னைக் காண்பேனே?" என்று கதறினுள். துக்கம் பொறுக்க வில்லை; வாழ்வுச் சுமையைத் தாங்க முடியவில்லை. "அவன் இரத்தக் குளத்தில் மூழ்கினுன்; நான் காதலைத் தந்த தாமரைக் குளத்தில் மூழ்குவேன்" என்று இறங்கினுள்.

அப்போது ஒருவன் அவளது கையைப் பிடித்து இழுத்தான். பார்த்தாள்; செல்லத் தேவன்!

"அடியே, சுந்தரம் ஒழிந்தான்; இனி நீ என்னு டன் வாழ வேண்டும்."

"அட பாவி, விடு கையை! அவர் முகத்தைப் பார்த்த பிறகு, உன் முகத்தைக் கழுதைகூடப் பாராது. போ, போ!"

"அடி உன் வசவும் வாழ்த்தே; வாடி......என் கண்ணே! என் ராணி!—"

"இதெல்லாம் உன் கூத்தியாளிடம். நான் கற் புள்ள மறத்தி; என்னிடம் வாலைக் காட்டாதே; போ! வெட்க மில்லையா? தனியா யிருக்கும் ஒரு பெண்ணு டன் வாதாடும் பேடி!"

"அடியே வாயை அடக்கு! உன்னை விடமாட் டேன்; வாயைத் திறந்தால் இதோ வாள்........... இணங்கு!"

"செத்தாலும் முடியாது."

அவள் கையைச் செல்லத்தேவன் வெடுக்கென் றிழுத்தான்; படித் துறைக்குக் கொணர்ந்தான். மீனுள் வெடுக்கென்று அவன் வாளைப் பிடுங்கினுள்... "இப்போது வாடா பயலே......!" என்று வாளை வீசினுள்......அவள் வாள் அவன்மேல் படுமுன்பே, இன்னொரு வாள் அவன் கழுத்தைச் சீவியது......யாரது? சூரப்புலி சுந்தரமே...!

"கண்ணுளா, வந்திரா......!"

"இதோ வெற்றிமாலை கொண்டுவந்தேன்; ஐதர் படையை விரட்டி யடித்தோம்; இனி அச்சமில்லை." சுந்தரத்தை மீனுள் இறுகத் தழுவி முத்தமிட்டாள்.

"இந்தப் பாவி இடி விழுந்ததுபோல் பொய் கட்டிவிட்டான்."

"அதெல்லாம் வெறும் கதை; இந்தப் பாவி ஊரைக் காட்டிக் கொடுத்தான்!......துரோகி!"

"இவன் என்னை இங்கே வந்து பலாத்காரம் செய்தான்."

"நீதான் சரியான பதில் சொன்னுயே! அவன் இப்படிச் செய்வானென்று தெரியும்; அவன் பாய்ச்சல் பலியாமல் ஆட்களை அனுப்பினேன். என் கையால் இந்தத் துரோகியை வெட்ட நினைத்தேன்— ஒழிந்தான். கண்ணே இனி இன்பம்!"

செல்லத்தேவனின் பிணத்தை உடனே அடக்கம் செய்யச் சுந்தரம் தன் வீரரை ஏவினுன். மீனுளும், சுந்தரமும் அல்லி மலர்களைப் பார்த்துச் சிறிது நேரம் பேசிக்கொண் டிருந்தனர்.

மகளை வேலுத்தேவர் தேடி வந்தார். "சவாசு, சுந்தரம்! நல்ல போர் புரிந்தாய்!" என்று மெச்சினார். "மீனாள், உன் விருப்பம் நடக்கட்டும்" என்று காதலரை ஆசீர்வதித்து வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

மீனாளும் சுந்தரமும், எந்த வேலை எப்படியிருந்தாலும், தினம் தாமரைக் குளத்துக்கு வரத் தவறுவதில்லை......

கமலப் பொய்கையும் அவர்களது காதலைத் தளர விடாமல் வளர்த்தது.

# உ. சந்தனத் தேவன்

## I

ஒருகாலத்தில் இங்கிலாந்திலே நார்மன் பிரபுக்கள் கோட்டை கட்டிக்கொண்டு கொடுங்கோல் செலுத்தினர். அந்தக் கொடுங்கோலை எதிர்த்துச் சுதேசிகளான **ஸாக்ஸன் வீரர்** ஆங்காங்குக் கிளம்பினர். அவர்களிற் சிலர் கள்வர்தலைவராகி நார்மன் பிரபுக்களைக் கொள்ளையடித்தனர். அக்கள்வர் தலைவரில் புகழ்பெற்றவன் **ராபின் ஹூட்**. அவனைப்பற்றி **ஸ்காட்** என்னும் நாவலரசர் ரஸமான கதைகள் புனைந்திருக்கிறார். **ஐவான் ஹோ** என்னும் நாவல் அவற்றிற் சிறந்தது. அதே ஸ்காட் தமிழ்நாட்டிற் பிறந்திருந்தால் ஒரு தமிழ் **ராபின் ஹூட்**டைப்பற்றி அற்புதமான நாவல் எழுதியிருப்பார். யார் இந்தத் தமிழ் ராபின் ஹூட்?

கேளுங்கள் ஒரு தெம்மாங்கு: தொண்டியிலிருந்து தேவகோட்டை, காளையார்கோயில், சிவகங்கை மார்க்கமாக மதுரைக்குச் செல்லும் வண்டிக்காரர்கள் பாடுகிறார்கள் :—

**தண்டை சிலம்பு சலசலென்ன**
**சந்தனம் வாராண்டி கலகலென்ன !**

* * *

**எல்லாரும் ஏறும் வண்டி**
**ஏழைக்கேற்ற கட்டை வண்டி**
**சந்தனம் ஏறும் வண்டி**
**சரியான பெட்டி வண்டி** **(தண்)**

* * *

எல்லாரும் கட்டும் வேட்டி
ஏழைக்கேற்ற கம்பி வேட்டி
சந்தனம் கட்டும் வேட்டி
சரியான சரிகை வேட்டி (தண்)
* * *

எல்லாரும் உண்ணுஞ் சோறு
ஏழைக் கேற்ற கம்பஞ் சோறு
சந்தனம் உண்ணுஞ் சோறு
சரியான சம்பாச் சோறு...... (தண்)

இப்படிச் சிலர் விழிப்பிலும், சிலர் கண்மயக்கத்திலும், சிலர் அரைத் தூக்கத்திலும் சந்தனத்தேவன் தெம்மாங்கு பாடுவதைச் சிவகங்கைச் சீமையிலே சகஜமாகக் கேட்கலாம். யார் இந்தச் சந்தனத்தேவன்?

பாருங்கள் ஆளை! இரண்டுகால் சிங்கம் மாதிரி நிற்கிருன்! ஆறரை அடி உயரம். கருங்காலி மரத்திலுற் செதுக்கியதுபோலக் கட்டுமஸ்தான உடல். தேர்வடம் மாதிரி திருகிவிட்ட தசைகள். நன்ருக ஒதுக்கி வளைத்துவிட்ட மீசை. கூர்ந்த மூக்கு. பயங்கரமான கருணை நடமாடும் விழிகள். சிலையிலடித்தாற் போன்ற புஜங்கள். அமாவாசை யிரவிற் பளிச்சிடும் இரண்டு நட்சத்திரம் போன்ற வைரக் கடுக்கன்கள். ஆள் கறுப்புத்தான். ஆனுல், அவனிடம் ஓர் இராஜகளை யுள்ளது; ஆம், அவன் காட்டு ராஜாதான்.

## II

சந்தனத் தேவன் வீர மறவன். அவன் பையனுயிருக்கும்போதுதான் ஊமையன் சண்டை பலமாக நடந்தது; பெரிய மருது, சின்ன மருது இருவரும் காளையார்கோயில் காடுகளில் ஒளிந்து கும்பினித் துரைகளுக்கு அல்லும் பகலும் குடல் நடுங்க வேலை கொடுத்

தனர். அக்காலத்தில் ஒவ்வொரு வீர மறவரும் சிலம்பம் வீசல், வளரிக்கம்பு வீசல், வில்வித்தை, குண்டு வேலை ஆகிய அனைத்தையும் பயின்றனர். சந்தனத்தேவன் பையனு யிருக்கும்போதே, வீர விளையாட்டுக்களில் முதன்மை பெற்றுன். காளைப் பருவத்தில் அவன் அந்தப் பக்கத்திற்கே இணையற்ற வீரனுனன். வீரப் பந்தயங்களிலெல்லாம் சந்தனத் தேவனே முந்திநிற் பான். மஞ்சுவிரட்டுக் காளைகளை ஒரே எட்டில் கொம் பைப் பிடித்து நிறுத்தி விடுவான். குஸ்தி சிலம்பம் வில்லாட்டம் வேட்டை இவற்றில் யாரும் அவனை மிஞ்சிப்போக முடியாது. அக்காலம் மத்திம கால ஐரோப்பாவைப் போலவே, வீரவுணர்ச்சியுள்ள காலம். ஆதலால் சந்தனத்தேவனைச் சுற்றி ஒரு வீரக் கூட்டம் சேர்ந்தது. ஊமையன் சண்டைகளால் நாடு அல்லோல கல்லோலப்பட்ட காலம் அது. அப்போது திருட்டும் கொலையும் கொள்ளையும் பஞ்சமும் பேய் நடம் புரிந்தன.

* * *

## III

சந்தனத் தேவன் கிளம்பினுல் சுமார் நூறு முண் டர்கள் அவனுடன் கிளம்புவர்; அவனுடைய பலத் தைப் பார்த்து வியக்காதவரில்லை. இவ்வளவு பலத் தையும் ஆட்களையும் கொண்டு அவன் என்ன செய் தான்? அவன் எண்ணங்கள் மிகப் பல. அவற்றிற் கெல்லாம் ஏராளமான பணம் வேண்டும்.

“சந்தனம்! **செம்பனூர் கள்ளக் காத்தான்** என் வீட் டைக் குறிவைத்திருக்கிருன். நீதான் காப்பாற்ற வேண்டும்” என்று ஒரு பணக்காரன் வருவான். சந்

தனம் அந்தப் பணக்காரன்வீடு கொள்ளை போகாமல் தன் வீரருடன் சேர்ந்து காப்பான். அந்த உதவிக்காகப் பணக்காரன் ஆயிரம் ஐநூறு தருவான். அத்தொகையைக் கொண்டு சந்தனம் தன்னைச் சேர்ந்தவர்களைக் காப்பாற்றுவான். கருமிச் செல்வர் சிலரைக் கண்டால் அவனுக்குப் பிடிக்காது. "இந்தச் சோம்பேறித் தொந்திகளைக் கரைக்கவேண்டும்; இந்த வைர மோதிரங்களை யெல்லாம் கொள்ளையடித்து ஏழைகளுக்குத் தரவேண்டும்" என்று நினைப்பான். 'ஐயா உமக்கெதற்கு இவ்வளவு சொத்து? தாருமே ஏழைகளுக்குப் பாதி' என்பான். இதனால் சில பணக்காரர்களுக்கு அவனைக் கண்டால் பிடிப்பதில்லை. ஏழைகளின் வறுமைத் துயரைக் கண்டால் சந்தனம் மனம் இளகும். உடனே ஒரு தக்க பணக்காரனிடம் போய்ப் பணம் கேட்பான். உயிரைக் கொடுத்தாலும் பணத்தைக் கொடுக்க மனம் வராது செல்வனுக்கு. "இரு, சொல்லுகிறேன் இந்தப் பயல்களை!" என்று சந்தனம் பல்லைக் கடிப்பான். நாளடைவில் அவனுக்குப் பணக்காரர்களிடம் திராப்பகை ஏற்பட்டது. அதற்குக் காரணம் ஏழைகளிடம் அவனுக்கு ஏற்பட்ட பரிவே யாகும். இதன் முடிவென்ன?

## IV

சந்தனத் தேவனைக் காட்டிற் காண்கிறோம்: அவனோடு இருநூறு பேர்கள் வாளும் கையுமா யிருக்கின்றனர். சிவகங்கையிலிருந்து காளையார் கோயிலுக்குப் போகும் வழியிலுள்ள காட்டிற்கு அவனே இராஜா; மதுரைக்குப் போகும் வழியிலுள்ள செம்பனூர் வரையில் அவனது இராஜ்யந்தான். அதனால் அவனுக்கு

'தனிக் காட்டு ராஜா' என்றும் பெயர் வந்தது. அவன் ஆட்கள் ஒவ்வொரு கிராமத்திலும் நகரிலும் இருப்பர்; 'இன்ன பணக்காரன் இந்த ஊருக்கு இத்தனைப் பேரு டன் போகிறான். இன்னபேர் கல்யாணத்திற்காக இன்ன இடத்திற்குப் போகிறார்கள். இன்ன பேர்வழி வீட்டில் நகைநாணயங்கள் அதிகம். இன்னான் தனது பொருளை இன்ன இடத்திற் புதைத்திருக்கிறான். இன்ன வியாபாரி இங்கே சரக்குக் கொண்டுபோகி றான்' என்றெல்லாம் துப்பறிந்து, தம் காட்டு ராஜா விற்குத் தெரிவிப்பர். "அடே முத்துராக்கு, நீ இருபது ஆட்களுடன் செம்பனூர்ப் பாதையிலே போய் இன் னார் வண்டியைக் கொள்ளையடி! அடே கருப்பா, நீ காளையர்கோயில் பாதையிலே மறைந்திரு! அங்கே கலியாணத்திற்குப் போகும் நான்கு வண்டிகள் வரும்; ஆட்களை விட்டுச் சாமான்களை ஜாடாவாகக் கொண்டு வா! அடே சுப்பா, அந்த வீட்டிலே பத்து ஆடுகள் லவட்டிக்கொண்டு வா! அடே நாகா, இந்த நாட்டரசன் கோட்டைக்குப் போய், இன்னார் வீட்டு மயிலைக் காளை யைக் கொண்டு போய் மானாமதுரைச் சந்தையிலே விற்று வா! அடே துரைக்கண்ணு, நீ பத்துப் பேருடன் போய், அந்த வீட்டைக் காலிபண்ணிக் கொண்டுவா!" எனத் தன் சகாக்களுக்குக் கட்டளை யிடுவான். சந்தனத் தேவன் பேச்சுக்கு இரண்டு கிடையாது. தோழர், கொள்ளைப் பொருளை நம்பிக்கையாக அவ னிடம் கொண்டுவந்து வைத்து, அவன் தரும் பங்கைப் பெற்றுக் கொள்வர். சந்தனத்திற்கு இவ்வாறு ஏராள மான கொள்ளை கிடைத்தது. அதைக்கொண்டு அவன் என்ன செய்தான்? தன்னை அண்டினபேர்களுக் கெல்லாம் அவன் ஏராளமாகத் தந்தான். அவன்

சகாக்கள் குறித்த நாட்களில், குறித்த இடத்தில் கூடுவர். அவர்களில் அணிவகுப்பு உண்டு. ஒவ்வோர் அணிக்கும் தலைவன் உண்டு. ஒவ்வொரு தலைவனும் இன்ன நாள் வந்து தனிக்காட்டு ராஜாவைப் பார்ப்பது என்று திட்டம் உண்டு. சந்தனம் ஒரு நாள் இருந்த இடத்தில் இன்னொருநாள் இருக்கமாட்டான். அவன் பட்டப் பகலில் ஊருக்குள் ஜோராக வருவான்; நண்பரைப் பார்த்துச் செல்வான். யாரும் அவனை அடையாளம் காண முடியாது. ஆயிரம் விதமாக அவன் உடை மாற்றிக்கொண்டு இந்திர ஜாலம் பண்ணுவான். அவன் ஆட்களையும் எளிதில் கண்டு பிடிக்க முடியாது. திடீரென்று ஒரு கிராமத்திற்குப் பெட்டி வண்டி வரும். பத்து விரல்களிலும் மோதிரமும் வைரக் கடுக்கனும் போட்டுக்கொண்டு ஒரு கம்பீரமான ஆள் வருவான். அவனுக்குப் பின்னே முப்பது பேர் வருவர். ஒரு பணக்காரன் வீட்டில் இக்கூட்டம் புகும். வீட்டை முற்றுகை போடும். 'கொண்டா 5000!' என்னும். தராவிட்டால், அல்லது சத்தம் போட்டால் ஆளுக்கே மோசம் வரும். வீடு சூறையாகும்; தீக்கடவுளுக்கும் விருந்தாகும். மறுநாட் காலையில் இருபது மைலுக்கு அப்பாலுள்ள ஒரு கிராமத்தில் இருப்பான் சந்தனத்தேவன். அங்கு ஓர் ஏழைக் குடும்பத்திற்கு ஏராளமான பணங்கொடுத்து 'நல்லாச் சாப்பிடுங்கள்!' என்பான். இவ்வாறு அவன் ஒருபுறம் எமன்மாதிரி கொள்ளையடித்தான்; மறுபுறம் மேகம்மாதிரி ஏழைகளுக்குப் பொன்மாரி பொழிந்தான். அவன் ஆயிரம் எளியர் வீடுகளில் தங்குவான். அனைவரும் அவனை மரியாதையுடன் உபசரிப்பர்; யாரும் அவனைக் காட்டிக்கொடுக்க மாட்

டார்கள். 'சந்தனத் தேவன் வருகிறுன்!' என்ருல், ஏழைகளுக்கு மனம் குளிரும்; பணக்காரருக்குப் பகீர் என்னும். சந்தனத் தேவனைக் கண்டுபிடித்து கொடுப்பவருக்கு ஏராளமான இனும் தருவதாகச் செய்தி கிளம்பியது. பணக்காரர் பலர் முயன்றும் ஆளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. கேளுங்கள், ஒரு சம்பவத்தை; சந்தனத்தேவன் எப்படிவந்து ஆட்களைத் திகைக்க வைக்கிறுன் பாருங்கள்!

*  *  *

## V

ஆவாரங்காட்டுச் **சொக்கனும் மீனுளும்** ஒருவரையொருவர் காதலித்தனர். பெற்ருேருக்கு அது பிடிக்கவில்லை. சொக்கன் தகப்பனுர் திண்ணைப் பள்ளிக் கூடம் போட்டுப் பிழைத்தார். அக்காலம் கிராம உபாத்தியாயருக்கு மானியம் உண்டு. அதைக் குடும்பம் பரம்பரையாக அனுபவித்துக்கொண்டு பிள்ளைகளுக்கு எண்சுவடி, குழிமாற்று, தமிழ் எழுதப்படிக்க, ஓலை யெழுதச் சொல்லிவைக்க வேண்டியது. சொக்கன் தன் தகப்பனுர் தொழிலுக்கு லாயக்கானுன். பிள்ளைக்குத் தகப்பன் ஒரு நல்ல பெண்ணைப் பார்த்தான். சொக்கன் மீனுளின் சொக்குப் பொடியில் மயங்கிப் போனுன்; 'மீனுள் கறுப்பாயிருந்தாலும் அவளே அன்னம், மற்றப் பெண்கள் அழகாயிருந்தாலும் அவர்களே ஆந்தை' யென்று நினைத்தான். தகப்பனுக்கும் பிள்ளைக்கும் தர்க்கம், மனஸ்தாபம், பகை. இவை முற்றிச் சண்டை நடந்தது. அதன் பலனென்ன? சொக்கன் மீனுளைக் கூட்டிக்

கொண்டு, 'வேறெங்கேயாவது போய்ப் பள்ளிக்கூடம் வைத்துப் பிழைப்போம்' என்று கிளம்பிவிட்டான்.

சொக்கனும் மீனுளும் காட்டில் ஒரு நாவல் மரத் தடியிற் காணப்படுகின்றனர். இரண்டு நாளாக அவர் கள் உண்ணவில்லை. இன்று நாவல் மரத்திலிருந்து பட் சிகள் உதிர்த்த பழங்களை யுண்டு அருகிலிருந்த குளத் தில் தண்ணீர் குடித்து நிழலில் படுத்தனர். மீனுள் மரத்திற் சாய்ந்துகொண் டிருந்தாள். அவள் மடியிற் சொக்கன் தலை வைத்துப் படுத்துக்கொண்டான். இருவருக்கும் அடியில்வரும் பேச்சு நிகழ்ந்தது :

சொக்கன் :—என் கண்ணே மீனு! என்னுலல்லவா நீ இப்படி வீட்டைவிட்டுக் காட்டில் அநாதையாக வந்து வருந்துகிருய் ?

மீனு :—என் கண்ணுளா, தங்களிடம் இருப்பதே என் வீடு. தங்கள் காதலே என் விருந்து.

சொ :—என் முத்தே, நமக்கு எங்கு வேலை கிடைக்கப்போகிறது ? இங்கே பட்டினி கிடந்து சாகத்தான் நமது தலையில் எழுதியது. இக்காட்டில் இப்படித் தனியாகப் படுத்திருக்கிருேம். புலி நரி வந்து நம்மைக் கொன்ருல் என்ன செய்வது? இக் காடு சந்தனத்தேவன் அரசு ; அவன் ஆட்கள் வந்து நம்மைக் குத்திக்கொன்ருல் என்ன செய்வது ?

மீ :—என் கண்ணப்பா, கடவுளை நம்பிக் காதல் புரிவோம். நாம் பிரியாது வாழ்வோம். அப்படி அபா யம் நேர்ந்தால் நாம் இருவரும் ஒருவரை யொருவர் கட்டியணைத்துக் கொண்டே சாவோம்! மடியிலே கனமிருந்தாலன்ருே வழியிலே பயம்? கள்ளர் வரட் டுமே. 'எங்களிடம் இருப்பதை எடுத்துக்கொள்ளுங் கள்' என்று தைரியமாகச் சொல்லுவோமே. மேலும்

சந்தனத்தேவன் புண்ணியவான். ஏழைக்கு இரங்கும் மகராஜன். நம்மை யொன்றும் செய்யமாட்டான்.

சோ:—அடுத்தவூர் நாட்டரசன்கோட்டை; அதிலாயினும் நமக்கு ஒரு பள்ளிக்கூடம் அமைந்தால் நல்லது.........

இவர்கள் இவ்வாறு பேசும்போது நாவல் மரத்திற்குப் பின்னால் "பள்ளிக்கூடம் இங்கேயே நடக்கட்டுமே!" என்றொரு சத்தங் கேட்டது. காதலர் திடுக்கிட்டுப் பார்த்தனர். சந்தனத்தேவன் பத்துத் திருடர் சூழ முன்னே நின்றான். காதலர் அஞ்சினர்.

சந்தனத்தேவன்:—பயப்படாதீர்கள்! உங்கள் நிலைமை யறிந்தேன். உங்களைப் போல நல்ல ஏழைகளுக்குப் பணந் தரவே நான் பணக்காரரைக் கொள்ளை யடிக்கிறேன். இந்தாருங்கள் இன்று எனக்குக் கிடைத்த கொள்ளைப் பணம் ஐம்பது வராகன்! என் பின்னே வாருங்கள்! ஒரு கிராமத்தில் இன்றே பள்ளிக்கூடம் வைக்கலாம்.

காதலர் வியந்து மகிழ்ந்து, கள்ளன் பின்னே சென்றனர். பக்கத்துக் கிராமத்தில் ஒரு நண்பனுக்குச் சந்தனத்தேவன் தகவல் சொல்லி யனுப்பினான். அந்த நண்பன் வந்தான். "சாமியப்பா, இன்றொரு புண்ணியம் கட்டிக்கொள்! இந்தக் கிராமத்தில் பள்ளிக்கூடம் இல்லை. இன்றே கிராமச் சவுக்கத்தில் பள்ளிக்கூடம் போடவேணும். அதற்காகும் செலவு என்னைப் பொறுத்தது. இதோ உபாத்தியாயரை அழைத்து வந்திருக்கிறேன்; இவர் பெயர் சொக்கலிங்கம்; பிள்ளைகளுக்கு நன்றாகப் பாடம் சொல்லிவைப்பார். அவருடன் இருப்பது அவர் மனைவி; பதிவிரதை. இருவருக்கும் இருக்க வைக்க, நல்ல மனையை ஒழித்துவிட

வேண்டும். இவர்களுக்கு வேண்டிய அரிசி, பருப்பு, உப்பு, புளி, மிளகாய், சாமான்கள் எல்லாம் கொடுத்துத் 'தேவர் பற்றுவழி' யென்று கணக்கெழுதி மாதா மாதம் நமது பார்வைக்கு அனுப்பிவைக்க வேண்டியது.

**சாமியப்பன் :**—உத்தரவுப்படியே நடக்கிறேன். கிராமப் பிள்ளைகளுக்குப் படிப்பு வேண்டியதுதானே. உபாத்தியாயரை நாங்கள் கருத்துடன் கவனித்துக் கொள்ளுகிறோம்.

**சந்த :**—இந்தக் கிராமப் பிள்ளைகளுக்குக் கல்வி யளிப்பது நமது புண்ணியமா யிருக்கட்டும். சொக்கு வாத்தியாரே, பிள்ளைகளிடம் ஒரு சல்லி வாங்கக் கூடாது! அக்கறையாகப் படிப்புச் சொல்லித் தர வேண்டும். உங்கள் சௌகரியங்களை நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம். ஆனால், நமது பெயர் வெளி வராது காரியம் நடக்கவேண்டும். போம்! நல்லாச் சாப்பிடும்! பிறகு பள்ளிக்கூடம் ஆரம்பியும்!

சந்தனத்தேவன் இவ்வாறு சொல்லி மீண்டும் காட்டிற்குச் சென்றான். சொக்கனும் மீனாளும் அந்தக் கிராமத்தில் ஊன்றிக்கொண்டனர். மறுநாளே சாமியப்பனுக்கு ஏராளமான பனஞ் சட்டங்களும், ஓலைகளும், ஒரு மனை வாங்கப் பணமும் வந்து சேர்ந்தன. அவற்றைக் கொண்டு ஒரு பள்ளிக்கூடமும், உபாத்தியாயருக்குப் பக்கத்தில் வீடும் அமைத்தான் சாமியப்பன். சொக்கன், சிறு பிள்ளைகளுக்கு எண்ணெழுத்துச் சொல்லிக் கொடுத்துக் கொண்டு, தன் காதலியுடன் கவலையற்று வாழ்ந்தான்.

சிவகங்கையிலிருந்து நாட்டரசன்கோட்டை போகும் வழியில் ஒரு பாழடைந்த மண் கட்டிடம்

இருந்தது. இப்போது அஃது என்னவாயிற்றோ தெரி யாது. அதுதான் சந்தனத்தேவன் பள்ளிக்கூடம் என் பர். பள்ளிப்பருவத்தில் நான் நாட்டரசன்கோட்டை யிலுள்ள கம்பர் சமாதியில் உட்கார்ந்து **கம்பராமா யணம்** படிக்கவும், கவி வாணியைத் தியானிக்கவும் அடிக்கடிச் செல்வதுண்டு. போகும்வழியில் ஒரு கிழவி அவலும், பொரி கடலையும், கருப்பட்டியும் மேற் சொன்ன மண் கட்டிடத்தினின்று விற்றுக்கொண் டிருப்பாள். அக்கிழவியிடம் கேட்ட கதையே இது.

## ௯. வஸ்தாத் சின்ன பாபு

"ஏ சின்ன பாபு" என்ருல் "இதோ நொறுக்கித தள்ளுகிறேன்!" என்று முண்டாத் தட்டிக்கொண்டு நிற்பான் நம் சின்ன பாபு. "இன்னது செய்" என்ருல் "சித்தம்" என்று செல்வான்; அந்தக் காரியத்தை முடித்துக்கொண்டுதான் வருவான். பெயர் **சின்ன பாபு** தானே, நாம்கூட அவனை வேலை ஏவலாம் என்று பார்க்கிறீர்களோ? அதுதான் நடவாது. அவன் உண்மையில் **பெரிய பாபு**! **இராணி மங்கம்மாள்** சொன்னபடி தான் கேட்பான். வேறு யாரும் அவனை அதிகாரத் தோரணையில் எதுவும் கட்டளையிட முடியாது.

சின்ன பாபு, திருமலை நாயக்கன் மஹால் தூண் போல கம்பீரமான ஆள். கத்தி, குஸ்தி, சிலம்பம் மூன்றும் அவனுக்கு **நித்யகர்மானுஷ்டானங்கள்**. அவன் சிலம்பத்தில் **அபூர்வமான பிடிகள்** காட்டுவான்; ஒரு தடியைச் சுழற்றி ஐம்பது பேருக்குப் பதிற் சொல்லுவான். சுருள் கத்தி வீச்சில் அவனுக்கு நிகரில்லை. அவன் சுருள் கத்தி வீசும்போது, ஆயிரம் மின்னல்கள் ஒன்றையொன்று வெட்டிப் போர் புரிவதுபோலிருக்கும். சின்ன பாபுவுக்கு எழுத்து வாசனையே கிடையாது; தடி சுழற்றுவதே அவன் எழுத்து. திசையதிர முண்டாத்தட்டிக் கோதா மண்ணில் குஸ்தி பண்ணிப் புரளுவதே அவன் படிப்பு. ஆனுல், அவனை '**மூளையில்லாக் காளை**'யென்று நினைத்தீர்களோ, ஏமாறுவீர்கள். புத்தகப் படிப்பில் போட்டுத் தீட்டாமலே அவன் மூளை கூர்மையா யிருந்தது. அவன் கண்சாடை பார்த்துக் கருத்தறிவான்; சமயத்தில் இன்னது

செய்ய வேண்டுமென்று சட்டென் றுணர்வான். இலட்டு, ஜிலேபி, மைசூர்ப்பாகு, குலாப்ஜான், சேமியா கேசரி, போண்டா, தயிர்வடை, இட்டிலி முதல் ஹிட்லர் சட்டினி வரையில், காப்பிக்கடை காப்பிக்கடையாக நம் இளங்காளைகள் காலி செய்கின்றனர்; உடம்பு வளரமாட்டே னென்கிறது; சட்டையைத் திறந்தால் 206 எலும்புகளும் தெரிகின்றன; மலச்சிக்கலும் மண்டையிடியும் ஆளைக் கொல்லுகின்றன! **சின்ன பாபு** பரம ஏழை; அவன் சாப்பிடுவது கம்பங் கூழ்தான்; கூழ்சாப்பிட்டுக் கொட்டாப்புளியாயிருந்தான் சின்னபாபு. சின்ன பாபுவுக்கு வயது முப்பதிருக்கும்; கலியாணமாகவில்லை; தாயார் தகப்பனார், இரண்டு தம்பிகள், கண் தெரியாத ஒரு விதவைத் தமக்கை—இவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அவனுக்கேற்பட்டது. எப்படிக் காப்பாற்றுவது? சின்னபாபுவின் தலை யாருக்கும் வணங்காது; முண்டாப்பெருத்த அவன் கை பகைவரைக் குத்தும்; பிறரைக் கும்பிடாது.

அவன் யாரிடமும் சேவகம் பார்க்கமாட்டான். "நமது ரோஷத்திற்கு அது சரிப்படாது!" என்பான். சின்ன பாபு **தமிழ் மண்ணிற்** பிறந்தவன்; தான் தமிழன் என்பதில் பெருமை கொண்டவன். அவன் "தமிழ் நாட்டிற் பிறந்து தமிழ் தெரிந்தவர்களெல்லாம் தமிழரே; **இராணி மங்கம்மாள்கூடத் தமிழரசியே**" என்பான். அவன் பெயர் ஏன் சின்னபாபு என்றிருக்கிறது என்பீர்களா? அதற்கும் காரணம் சொல்லிவிடுகிறேன்.

மதுரையில் ஒரு பெரிய குஸ்திப் பயில்வான் இருந்தான். அவனுக்குப் **பாபு நாயுடு** என்று பெயர்.

பாபுநாயுடு பெரிய போர்வீரனுமாவான். அவன் வீர வாலிபர் பலரைப் பயிற்றிவந்தான். அவர்களுள் ஒரு வாலிபன் பாபு நாயுடுவிற்குச் சரிசமானமாக வீரப் பயிற்சிகளில் தேர்ந்தான். பாபு நாயுடு அவனுடன் சிலம்பம் விளையாடுவான். அந்த வாலிபன் குருவும் வியக்கும்படி புதிய புதிய பிடிகளைக் காட்டுவான். அவனை வியந்த வாலிபர்கள் குருவிற்குப் **பெரிய பாபு** என்றும், மாணவனுக்குச் **சின்னபாபு** என்றும் பெயர் சூட்டினர். அப்பெயரே நிலைத்து விட்டதால், இயற்கைப் பெயர் .மறைந்து போயிற்று. '**மதுரை ஹநுமான்**' என்றும் அவனுக்கு பெயர் உண்டு.

குஸ்தி சிலம்பம் பயிற்றுவதில் வரும் சிறு வரும்படியைக்கொண்டு எளிய வாழ்வு வாழ்ந்தான் சின்ன பாபு. அக்காலம் அரசாங்கத்திற்கு ஏராளமான போர் வீரர் வேண்டி யிருந்தது. கண்ணயர்ந்தால் மராட்டியரும், மலையாளிகளும் மதுரை நாயக்கர் ஆட்சியை அடியோடு வீழ்த்தக் கிளம்புவர். நவாபுகளின் பயம் எப்போதும் உண்டு. **தளவாய் நரசையன்** 'எங்கே, எங்கே' என்று அரசாங்கப்படைக்கு வீரரைத் தேடிக் கொண்டிருந்தான். ஒரு கும்பிடு போட்டு எதிரே நின்றால், சின்ன பாபுவுக்குத் **தளவாய்** சேனையில் சரியான வேலை கிடைக்கும். ஆனால், சின்ன பாபு தன் மனச்சாட்சியையே கும்பிடுவான். **அதற்கடுத்தபடி இராணி மங்கம்மாளைத்தான்.** மங்கம்மாளின் நேர்மையும், நீதியும், தருமமும், தாராளமான மனமும் சின்ன பாபுவின் உள்ளத்தைக் கவர்ந்தன. மங்கம்மாள் தன்னைப் பார்த்துச் 'சபாஷ்' என்றால் போதும்; உலகில் தான் பெறவேண்டியதெல்லாம் பெற்றதாக அவன் நினைப்பான். அதற்கொரு சரியான சந்தர்ப்பத்தை

அவன் எதிர்பார்த்திருந்தான். சேவகன் மாதிரி இராணியின்சமூகத்தில் போய் நிற்பதில் அவனுக்கு விருப்பமில்லை. **வீரன்போலத் தலைநிமிர்ந்து நின்று, இராணியிடம் 'சபாஷ்' பட்டமும், 'புன்னகை'ப் பரிசும் வாங்க வேண்டுமென்பது அவன் அவா.** அல்லும் பகலும் அவனுக்கு அதே நினைவு, அதே கனவு. அதற்கொரு சந்தர்ப்பம் தற்செயலாக வந்தது.

## II

## அரண்மனையில் நவராத்திரி

**நவராத்திரி** காலத்தில், மங்கம்மாள் அரண்மனையில் அமோகமாக உற்சவங்கள் நடக்கும். நாலாபக்கங்களிலிருந்தும் வித்வான்கள் ஏராளமாக வருவர். மங்கம்மாளின் தருமக்கொடி சங்கீதத் தென்றலிற் பறந்து கொண்டிருக்கும். ஒவ்வொரு மாலையும் அரண்மனையில் வீரவிளையாட்டுகள் நடக்கும். அதற்கு ஏராளமான பயில்வான்களும், பலசாலிகளும் வருவர்.

## III

## கலியுக பீமன்

நாம் குறிக்கும் நவராத்திரித் திருவிழாவிற்கு ஆந்திர தேசத்தி னின்றும், மஹாராஷ்டிரத்தி னின்றும் பேர்போன பயில்வான்கள் வந்திருந்தனர். அவர்களில் முதன்மையானவன் **குண்டு மல்லையா.** அவன் "**கலியுக பீமுடு**" என்று விஜய நகரத்தில் விருது பெற்றவன். ஆளைப் பார்த்தவர் "**மல்லையா, நீ கல்லையா!**" என்பர். செக்குலக்கையைத் தலை கீழே நட்டது போலக் கால்கள்; பீமன் கதை மாதிரி முண்டாப் பெருத்த கைகளுடன், நாமக்கல் ஹநுமார் சிலைபோல்

ஆள் உரத்துப் பருத்து உயர நிமிர்ந்திருப்பான். இந்த விருது பெற்ற சிங்கத்திற்குக் கைங்கரியம் செய்ய எப்போதும் 16 பயில்வான்கள் கூடவே யிருப்பர்; அவர்களைத் தவிர, சிஷ்யர்கள் ஏராளமா யிருப்பார்கள். **பன் ரொட்டிக்கு மாப் பிசைவதுபோன்று, மல்லையாவுக்குத் தசைகளைப் பிசைந்து பிசைந்து தைலம் தேய்க்கவே மூன்று மல்லர்கள் வேண்டும்.** பாதாமி ஹல்வா, பாலடைக் கட்டி முதலிய மஸ்தான உணவுகள் செய்து கொடுத்துக் கொண்டே யிருக்கப் பலர் வேண்டும். உடம்பு பிடித்துவிட, அதை அலங்கரிக்க, வேட்டி துவைக்க, வெந்நீர் வைக்க, படுக்கை விரிக்க, சொன்னதைக் கேட்க, எதிராளிகளிடம் சென்று உளவு பார்க்க—எத்தனையோ ஆட்கள் அவனுக்குத் தேவை. காலை மாலை கலியுக பீம விலாசத்தில் குஸ்தி, சிலம்பம் முதலிய உடற் பயிற்சிகள் நடக்கும். அச்சமயம் நண்பர் தவிர வேறு அன்னியரை உள்ளே விடமாட்டார்கள்.

**கலியுக பீமுடு** தன் பயில்வான் கோஷ்டிகளுடன் மதுரைக்கு வந்த காட்சி, மலைகளும் குன்றுகளும் சேர்ந்து பவனி வந்தது போலிருந்தது. **குண்டு மல்லையா** அரண்மனையைச் சேர்ந்த ஒரு பெரிய பங்களாவில் முகாம் போட்டான். வாசலில் "**கலியுக பீமுடு** குண்டு மல்லையாகாரு" என்று தெலுங்கில் கொட்டை கொட்டையாக எழுதி ஒரு பரிவட்டம் கட்டினான். தன்னுடன் 'போட்டி போட உலகிலே யாரும் இல்லை.' என்று பறையடிக்கச் செய்தான். அது சிஷ்ய கோடிகளின் வாய்ப்பறைதான். மதுரைச் சீமைப் பயில்வான்களெல்லாம் தமக்கியன்ற பரிசுகளுடன் கலியுக பீமனை வந்து பார்த்து மரியாதை செய்தனர். வெல்

வெட்டு மெத்தை தைத்த வெள்ளி நாற்காலியில், தங்க மலைபோல வீற்றிருந்தான் மல்லையா. தோடாக்களும் வீரகண்டாமணிகளும், ஆரங்களும், பட்டு பீதாம்பரங் களும் அவன் மேனியைத் தழுவிப் புன்னகைத்தன. அவனது வாள் போன்ற **மீசையும்**, தேள் கொடுக்குப் போன்ற கூரிய மூக்கும், அதில் துடிக்கும் கோபாக் கினியும், இரண்டு கெண்டை மீன்களைப்போல "**நான் நான்**" என்று புரளும் விழிகளும் பார்த்தவர் மனத் தில் ஒரு பயத்தை யெழுப்பும். அவனுடைய குட்டி பீமர்கள் கூறும் பிருதாவளி இந்தப் பயங்கரத்தைப் பத்து மடங்காக்கும்:

'கம்பீர சிகரம்பு, கலியுக பீமுண்டு,
குண்டு மல்லய்யதோ குஸ்தி வேய
எவரய்யா வச்சேரு இகனந்து தெலுபண்டி!"

என்று பத்யங்களைக் கிளப்பிச் சபதங் கூறுவர் மல் லையா கோஷ்டியார். மதுரைச் சீமை வஸ்தாதுக ளெல்லாம் ஆளைப் பார்த்து மலைத்தனர்.

## IV

## அதிசய வைதிகர்

"விஜயதசமியன்று குண்டு மல்லையா தனது திற மையைக் காட்டலாம்" என்று இராணி உத்தரவிட்டி ருந்தாள். அவனுடன் அல்லது அவன் சிஷ்யர்களுடன் போட்டி போடும் மல்லர்கள் தளவாய் நரசையருக் குத் தெரிவிக்க வேண்டும் என்று ஏற்பாடு. சமஸ் தான மல்லர்கள் பன்னிரண்டு பேர் மல்லையா சிட ருடன் போட்டி போடுவதாக முன்வந்தனர். தன் னுடன் போட்டிபோடும் அரவவாடு யாருமே

இல்லை என்று பீமுடு மண்டையில் 120 டிகிரி செருக் கேறிப் போயிற்று.

சரஸ்வதி பூஜையன்று கலியுக பீம விலாசத்தில் ஏகக் கொண்டாட்டம் ; வாள், சிலம்பத்தடி, கர்லா, கதை, வில், ஈட்டி முதலியவற்றை யெல்லாம் வைத்து அமோகமாகப் பூஜை நடந்தது. அப்போது ஊரி லுள்ள வீரர்களும் வந்திருந்தனர். அவர்களுள் துவா தச நாமம் போட்டுக்கொண்டு துளசிமாலை அணிந்து, பஞ்சகச்சம் வைத்து ஆடையுடுத்தி, ஓர் அங்கவஸ் திரம் இடுப்பிற் கட்டிக்கொண்டு, வைதிகமாக ஒருவர் அக் கூட்டத்தில் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தார் ; அவருக்குப் பக்கத்தில் பத்துப் பதினைந்து பேர் வணக் கத்துடன் அமர்ந்திருந்தனர். வீரர் கூட்டத்தில் வைதிகரை யாரும் அதிகமாகக் கவனிக்க வில்லை. மல்லையா மட்டும் அவரைக் கண்டு திகைத்தான். அந்த வைதிகர் கலியுக பீமனையும், மாணவரையும் கண்கொட்டாமல் கவனித்துவந்தார். கலியுக பீமன் எழுந்திருக்கும்போதும், நடக்கும் போதும், கைவீசும் போதும் ஆளைக் கவனித்தார். சிஷ்யர்கள் பீமுடுவை அதிகமாக நடக்கவிடுவதில்லை ; கைலாகு கொடுக்க இருவர் எப்போதும் பக்கத்தில் இருந்தனர்.

தீபாராதனை யாயிற்று ; விநியோகத்திற்குக் காத்திராமல் வைதிகரும் தமது கோஷ்டியுடன் மெல்ல எழுந்து வெளியே சென்று விட்டார்.

## V

## மதுரை ஹநுமான்

'கலியுக பீமனை வெல்ல நமது சமஸ்தானத்தில் யாருமில்லையே' என்று தளவாய் நரசையன் வருத்தமுற்

திருந்தான். இராணிக்கும் வருத்தந்தான். அச்சமயம் ஓர் உள்ளூர் பயில்வான் நரசையரிடம் ஒரு சீட்டுக் கொடுத்தான். (அவன் சின்ன பாபுவின் சீடனே). நரசையர் ஆவலாகப் படித்தார் :

"எனது வணக்கத்திற்குரிய, மேன்மை தங்கிய அரசியாரின் உத்தர விருக்குமானால், நாளை மாலை (விஜயதசமி) ஆந்திர பீமன் குண்டு மல்லையா வுடன் நமது சமஸ்தான ஹநுமான் சிலம்பம் வீசுவான் ; அதன் பிறகு குஸ்தி செய்வான். உயிரைக் கொடுத்தாவது சமஸ்தானத்தின் பெயரைக் காப்பாற்றுவான். சிலம்பம் வீசும் இடம் சுமார் 30 அடிச் சதுரமா யிருக்க வேண்டும். அதிலேயே குஸ்தியும் நடக்கச் சௌகரியம் இருக்க வேண்டும். இரண்டிலும் வெற்றிபெறு விட்டால், சுருள் கத்தி வீச்சில் அவசியம் வெற்றி கிடைக்கும். நாளை மாலை 5-மணிக்குத்தான் இதைப் பகிரங்கப்படுத்த வேண்டும். இவ்வாறு தங்கள் பணிவுள்ள,

சின்னபாபு"

சின்னபாபுவைப்பற்றித் தளவாய் நரசையன் கேள்விப்பட்டிருந்தான்; என்றாலும் நன்கு அறியான்; ஏனெனில், பணக்காரரையும், பெரிய உத்தியோகஸ்தரையும் வலிய வந்து பார்த்துச் சலுகை கேட்டுக் காக்காய் பிடிக்கும் வழக்கம் சின்னபாபுவினிடம் கிடையாது. அவன்மேற் பொறாமை கொண்ட சமஸ்தான வஸ்தாதுகளும் பலரிருந்தனர். அவர்கள் அவன் பெயர்கூட இராணிக்குத் தெரியக் கூடா தென்று சூழ்ச்சி செய்தனர்.

தளவாய் நரசையர் தாராளமான மனமுடைய உண்மை வீரர். ஆகையால் இரண்டொரு கேள்வி கேட்டு ஆளைத் தெரிந்து கொண்டார்.

"மதுரை ஹநுமான், கலியுக பீமனுடன் நாளை மாலை 5-மணிக்கு மகாராணியின் முன்னிலையில் சிலம்பம், குஸ்தி, கத்தி இம்மூன்று பந்தயங்களும் போட உத்தரவு; மகாராணியின் சித்தமும் அவ்வாறே. வென்றவர்களுக்குத் தக்க சன்மானமும் விருதுகளும் கிடைக்கும்."

என்று ஓர் உத்தரவெழுதி, இராஜாங்க முத்திரை குத்தி, வந்த ஆளிடம் அனுப்பினான்.

பீமுடு வீட்டு சரஸ்வதி பூஜைக்கு வைதிகமாகப் போய், ஓசைப்படாமல் வந்தது நம் சின்னபாபுதான். அவன் நெடுநாள் சிலம்பத்தில் தேர்ந்தவனாகையால், அங்கத்தின் அசைவுகளைப் பார்த்தே ஆளின் திறத்தையும் அனுபவத்தையும் கண்டுபிடித்து, இவனை இப்படித்தான் வெல்ல வேண்டுமென்று தீர்மானித்து விடுவான். கலியுக பீமனின் தோளும், முண்டாவும், பார்வையும், ஆள் உயரமும் சரிதான். ஆனால், அவன் தொடையும் பின்புறமும் "குளுக், குளுக்" என்று அசைவதைப் பார்த்தான் சின்னபாபு; வயிறு முன்னே பானை மாதிரி வந்து முட்டுவதையும் பார்த்தான்; 'இந்த ஆள் சுகவாசி; கடுமையான வேலைக்கு லாயக்கில்லை; இரண்டொரு மணி நேரத்திற்குமேல் இவனால் ஓடியாடி வேலை செய்ய முடியாது; தொந்தி பெருத்திருப்பதால் சிறிய கோதாவில் குஸ்தி போடலாமே யொழிய, பெரிய கோதாவில் பாய்ந்து பாய்ந்து பிடிகொடுக்க முடியாது' என்றறிந்தான்.

## VI

## வீரப் போட்டி

விஜய தசமித் திருவிழா அமோகமாக நடந்தது. மாலை 5 மணிக்கு இராணியின் உத்தியான வனத்தில் நகரப் பிரபுக்களும் வீரரும் ஏராளமாக, அணி யணியாக அமர்ந்திருந்தனர். நடுவே 30 அடி நீளம், 30 அடி அகலமுள்ள ஒரு கோதா நிலம் கம்பியடைத்து, பயில்வான்களுக்காக ஏற்பட்டிருந்தது. அதன் ஒரு மூலையில் போர்ப் பாட்டுகளும், போர் முரசமும் முழங்கின. முரசின் வேகத்திற்குத் தக்கபடி அடி யெடுத்து வைத்துப் பயில்வான்கள் வந்தனர். அதன்பிறகு,

> "ஆந்த்ர வீர தீர பீம
> குண்டு மல்லையா—ஜய!
> குண்டு மல்லையா!"

என்ற பாட்டைப் பாண்டில் முழங்க, **கலியுக பீமன்** சீடர்களுடன் கம்பீரமாக நடந்துவந்து தன்னிடத்தில் அமர்ந்தான்.

வீரரெல்லாம் வந்தமர்ந்ததும், கட்டியக்காரன் இராணியின் வரவை அறிவித்தான். மங்கல வாத்தியம் முழங்கியது; அஷ்ட மங்கலங்களுடன் பெண்கள் முன்வந்தனர். பிறகு, பல்லக்கில் இராணி மங்கம்மாள் வந்திறங்கினாள். சபையோர் எல்லாம் எழுந்து,

> "எங்கள் ராணி மங்கம்மாள்
> மங்களமாய் வாழ்கவே!"

என்று துதிபாடினர். இராணி மங்கம்மாள் ஓர் அற்புதப் புன்னகை புரிந்து, சுற்றிலும் ஓர் இராஜ பார்வை பார்த்துத் தனது அரியணையில் அமர்ந்து "**ஆட்டம்**

நடக்கட்டும்!" என்றாள். தளவாய் நரசையன், கலியுக பீமனுக்கு உத்தரவிட்டான். கலியுக பீமன், தனது சீடருக்கு உத்தரவிட்டான். சீடர், கோதா நிலத்திற்கு நடுவே நின்று, மீசையை முறுக்கித் திசையதிரத் தோள் புடைத்தனர். 'பட் பட் படார்' என்று அவர்கள் தோள் கொட்டியதும் மற்றொரு மூலையிலிருந்து 'பட பட் படபடார்' என்று சத்தங் கேட்டது. பன்னிரண்டு வீரர்கள் முண்டாத் தட்டிக்கொண்டு வரிசைக் கிரமமாக எதிரிகளுடன் பஞ்சாக் கொடுத்துக் குஸ்தி போட்டனர். பீமன் வஸ்தாதுகள் பெரிய முண்டர்கள். அரைமணி நேரம் அவர்களுடன் மதுரை வீரர் நின்றதே பெரிய காரியம். அதற்குமேல் அவர்களால் நிற்கமுடியவில்லை; மூச்சுத் திணறியது.

அச்சமயம் "**மதுரை ஹநுமான் வருகிறார்!**" என்றொரு கட்டியம் கேட்டதும், சபை முழுதும் திரும்பிப் பார்த்தது. சின்னபாபு தன் சீடருடன் வணக்கமாக வந்து இராணியைப் பணிந்தான். "**சூடு ஒக செய்** (ஒரு கை பாரு) **சின்ன பாபு**!" என்று புன்னகை புரிந்தாள் இராணி.

**சின்ன பாபுவின் வீரத் தீயில் குங்கிலியம் கொட்டியது போலிருந்தது அந்தப் புன்னகை மொழி.** ஆவேசம் பிய்த்துக்கொண்டது ஹநுமானுக்கு! தன் சீடர் காதில் ஏதோ ஓதிச் சிலம்பத் தடிகளைக் கொடுத்தான். பீமன் சீடரும், ஹநுமான் சீடரும் பாய்ந்து சிலம்பம் வீசினர். பீமன் சீடருக்கு அடிமேல் அடி ஓங்கி ஓங்கி விழுந்தது. "அரே பாபுரே!" என்று ஆட்கள் அலறிப் போயினர்; தமது தோல்வியை ஒப்புக்கொண்டு இருப்பிடம் போய்ச் சேர்ந்தனர். பீமன்

முகம் சுருங்கிப் போயிற்று. இருந்தாலும் தன்னுடன் போட்டி போட யாருமில்லை யென்றிருந்தான்.

## VII

### ஹநுமான் வெற்றி

உடனே ஹநுமான் கோதாவிற்கு வந்து "கலியுக பீமசேனுலு, ரண்டி!" என்ருன். "அடா! இவனா!" என்று பார்த்தான் பீமன். நேற்று வந்த வைதிகனே! இவனை ஒரே குத்தாகக் குத்திக் கொன்றுவிடுவோம் என்று ஆத்திரத்துடன் எழுந்தான் பீமன். எதிரியைப் பேய்ப் பிடியாகப் பிடித்து வீழ்த்தி மூச்சுத் திணற வைப்பது அவனுடைய கைவேலை. முதலில் சிலம்பம் நடந்தது. இருவரும் மின்சார விசிறி போலக் கம்பை வீசி, சாரி திரிந்து, ஒருவர் தலையை மற்ருெருவர் குறி வைத்துப் போர்புரிந்தனர். கலியுக பீமன் பத்தடி வைப்பதற்குள், மதுரை ஹநுமான் இருபதடி வைத்துக் கோதா முனையிற் போய்க் கம்பை வீசிக்கொண்டு முன்னே வந்து தாக்கினான். பீமன் பின்னே பத்தடி ஓடுவதற்குள், ஹநுமான் பதினாறடி வேங்கை போலப் பாய்ந்து, முன்னே தாவி வந்து கழி வீசினான். பீமன் "இதேதடா சனியன்!" என்று இடப் பக்கம் போனான். ஹநுமான் இடக் கோடிக்குத் தாவி வந்து முதுகில் ஒரு போடு போட்டான். அன்று பீமன் கனமாகச் சாப்பிட்டிருந்தான். ஏற்கெனவே பானையைப் போலப் பெருத்த தொந்தி இன்று வண்ணான் தாழிபோலாயிற்று. பீமனால் ஓடமுடியவில்லை. "அர தேவுடா!" என்று பெருமூச்சு வாங்கினான். தோரணக் கம்பத்தில் நின்று அரக்கர்மேல் பாய்ந்த ஹநுமான் போலவே, சின்னபாபு பீமன்மேல் பாய்ந்

தான். முப்பதடிச் சதுரமுள்ள கோதா நிலத்தில் பீமுடுவை ஓட ஓடத் துரத்துகிறான் ஹநுமான்!

“பலே சின்னபாபு, அட்ல கொட்டுரா ஹநுமந்த வீரா!” என்று சபையினர் கைகொட்டிச் சிரித்தனர். பீமனின் யானைத் தொடைகளும், பானை வயிறும் அசைந்து குலுங்கும் விகாரமே பெரிய ஹாஸ்ய ரசமா யிருக்கிறது.

இவ்வாறு துரத்தி ஆளைத் தளர்த்திய பிறகு, கோதா நிலத்தின் நடுவே நின்று, பீமனுடன் ஹநுமான் பஞ்சாக் கொடுத்துக் குஸ்தி செய்தான். பீமுடு ஹநுமானை உடும்பு போலப் பிடித்தான். ஹநுமான் பீமுடுவின் தொந்தியில் தனது முழு பலத்தையும் வைத்தமுக்கினான். கைகளால் அக்குளைப்பற்றி, பீமனை ஒரே யடியாகக் குப்புற வீழ்த்திவிட்டான். தான் பிடித்த பிடியே பீமனுக்குத் தோல்வி யீந்தது.

“பலே சின்னபாபு! பலே ஹநுமான்!” எனச் சபையில் ஏகக் கரகோஷம்! மல்லாந்து விழுந்த பீமன் முதுகெல்லாம் செம்மண்; அவனை மீண்டும் குப்புறத் தள்ளி மீசையிலும் மண்ணொட்ட வைத்தான் சின்ன பாபு. கலியுக பீமன் முகம் இஞ்சி தின்ற குரங்கு மூஞ்சி மாதிரியானது!

இராணி மங்கம்மாள் ‘சபாஷ் சின்னபாபு!’ என்று ஜயமாலையீந்து, வீரப் பதக்கமும் தந்து, தனது படையணியில் ஒரு தலைவனாக சின்னபாபுவை நியமித்தாள்.

இச்சம்பவத்தின் பிறகு, சின்னபாபுவின் பெற்றோர் இறந்தனர். இராணி மங்கம்மாளைத் தாயாகவும், தளவாய் நரசையனைத் தந்தையாகவும் கருதினான் சின்ன பாபு.

## ச. தருமசாலை

### I

பாண்டியனும் சோழனும் அடித்துக்கொண்டனர். 'இரு தமிழா! தெலுங்கனைக் கூட்டிவந்து உன்னை வெளுக்கிறேன்' என்று **விட்டல்ராஜ** பாண்டியன் விஜயநகரத்திற்கு ஓடினான்; உதவி கேட்டான். விஜயநகர ராயர், **கம்பன நாயக்கர்** தலைமையில் ஒரு பெரிய படை யனுப்பினார். தெலுங்கப்படை மதுரையிற் புகுந்தது; பாண்டியனுக்கு உதவி செய்தது; உதவி செய்தபிறகு, "மீரு விஸ்ராந்தி சேசு கொண்டி" என்று விட்டல் ராஜலைப் பூப்போல ஒரு மூலையில் உட்கார வைத்துவிட்டு, கம்பன நாயக்கன் மதுரையை ஆண்டான். அன்று முதல் 1736-ஆம் ஆண்டு மட்டும் மதுரை நாயக்கர் ஆட்சியிலிருந்தது.

விசுவநாதன், திருமலை, சொக்கப்பன், அரங்க கிருஷ்ணன் முதலிய புகழ்பெற்ற நாயக்கர் ஆண்ட பிறகு **இராணி மங்கம்மாள்** பட்டத்திற்கு வந்தாள்.

* * *

### II

இங்கிலாந்தை ஆண்ட **டூடர்** (tudor) வம்சத்திற்கு எலிஜபெத் எப்படியோ, அப்படி நாயக்கர்வம்சத்திற்கு **இராணி மங்கம்மாள்**. மங்கம்மாள் 15 வருஷம் அரசாண்டாள். (1689-1704): அதற்குள் அவள் ஒரு நூற்றூண்டுக் காரியம் செய்து முடித்தாள். எலிஜபெத், விக்டோரியா, சந்து பீபி ஆகியவர்களைப் போலவே

மங்கம்மாளும் உலக சரித்திரம் புகழத்தகும் அரசியாவாள்.

படையணி முதல், பாதை போடுகிற வரையில், எல்லா அரசியற் காரியங்களையும் மங்கம்மாள் திறமையாகக் கவனித்துவந்தாள்; 72 பாளையக்காரர்களையும் ஒற்றுமைப் படுத்தினாள்; ஒவ்வொரு பாளையக்காரனும் தனக்கு இவ்வளவு படைவீரரை உதவவேண்டும் என்று திட்டப்படுத்தினாள்; தானே சென்று படையணி ஒழுங்கைக் கவனித்தாள். அக்காலம் நாடெங்கும் கள்ளர் தொல்லை செய்தனர்; இவர்கள் ஓர் இரகசியக் கூட்டம்; இரவில் திடீரென்று நூறுபேர் வாளுடனும் தீவர்த்திகளுடனும் கிராமங்களில் நுழைவர். வீடுகளைக் கொள்ளையடித்து இராஜா மாதிரிச் செல்வர். யாராயினும் எதிர்த்தால் கொலைதான்; மறுபேச்சுக் கிடையாது. இந்தக் கள்ளர் படையை மங்கம்மாள் அடக்கினாள்; கொடிய கள்ளரைப் பிடித்துத் தண்டித்தாள்; இணங்கி வந்த கள்ளரைச் சேனையிற் சேர்த்துக்கொண்டாள். தன் சிற்றரசரை யெல்லாம் அன்பினால் வசப்படுத்தியாண்டாள்; அகங்கரித்தவரை அடக்கியாண்டாள். அப்போது, திருவாங்கூர் மதுரைக்கு உட்பட்டிருந்தது. திருவாங்கூர் மன்னன் தான் கட்டிவந்த கப்பத்தைச் செலுத்த மறுத்தான்; "இந்தப் பெண்ணரசி நம்மை என்ன செய்யமுடியும்!" என்று நினைத்தே அப்படிச் செய்தான். "**பெண்ணரசியின் வீரத்தை இதோ காட்டுகிறேன்**" என்று மங்கம்மாள் தன் சேனாபதியான **தளவாய் நரசையனை** வலிய படையுடன் அனுப்பினாள். புதுவை இரகுநாதராயத் தொண்டமானும் மங்கமாளுக்கு உதவியாகச் சென்றார். போர் நடந்தது; மங்

கம்மாளுக்கே வெற்றி கிடைத்தது. நரசையர் ஜய பேரிகையுடன் மதுரைக்கு வருகிறார்.

* *

## III

அதற்குள் இங்கொரு சதியாலோசனை நடக்கிறது. மங்கம்மாள் அமைத்த ரஸ்தாக்கள் இன்னும் புகழ் பெற்று விளங்குகின்றன. அவற்றிற்கு "**மங்கம்மாள் சாலை**" என்றே பெயர்.

"**மங்கம்மாள் சாலை, மதுரை வழிச்சோலை**"

என்றொரு பழமொழி யுண்டு.

அச்சாலையில் இன்று நாம் பார்க்கும் அத்தி, ஆல், புளி, மா, நாவல் மரங்களெல்லாம் மங்கம்மாள் நட்டு வைத்தவையே. சாலை மண்டபங்களும் அவளால் கட்டப்பெற்றவையே. மங்கம்மாள் அடிக்கடி பழனிக்குச் சென்று முருகனை வணங்குவது வழக்கம். மதுரை-பழனி ரஸ்தா அவளால் போடப்பட்டது. திருவாங்கூரில் தன் படைகள் வென்ற செய்தி எட்டியதும், பழனி யாண்டவருக்கு அபிஷேகம் நடத்திப் பார்க்க விரும்பினாள் மங்கம்மாள்.

* * *

காரிருள் ; இரவு 8 மணி ; ஆலமரத்துக் கிளிகள் அயர்ந்து உறங்குகின்றன ; மதுரை-பழனி ரஸ்தாவினிடையே ஒரு மண்டபம். அதில் ஐந்துபேர் கூடிப் பேசுகின்றனர் :—

**வேங்கை** :—அடா சிவிங்கி ! இந்தப் பெண் பிள்ளைக்கு இருக்கிற ராங்கியைப் பாரடா ? ஆண் பிள்ளைகளைக் கண்ணிலே விரலைப்போட்டு ஆட்டுகிறாள். அவளுக்குத் தக்கபடி அந்த ஐயனும் சேர்ந்தான் !

**சிவிங்கி** :—ஐயஞ ? அந்தக் குட்டெல்லாம் எனக்குத் தெரியும். பார், நாடு சிரிக்க வைக்கிறேன். நாட்டிலே மட்டும் நல்ல பேர் வாங்கிக் கொண்டாள்: மங்கம்மாள் சத்திரம், மங்கம்மாள் சாலே, மங்கம்மாள் தருமம் என்று எங்கும் பேர் கிளம்பிவிட்டது. ஆளுக்குத் தக்கபடி நயமாக நடந்து கொள்ளுகிருள்; பாளையக்காரருக் கெல்லாம் தாராளமாக அள்ளிவிட்டு அவர்களைக் கைக்குள் அடக்கி வைத்துக் கொண்டிருக்கிருள்.

**வேங்கை** :—எல்லாம் வெளிச்சம்! தருமத் தூண்டிலில் ஆட்களைச் சிக்க வைக்கிருள். உள்ளே எல்லாம் பேராசை! என்ன நான் சொல்வது புலிக்கண்ணு ?

**புலிக்கண்** :—அப்படிச் சொல்லிவிடலாமா ? இராணி தாராளமாகத் தருமம் செய்துதான் வருகிருள். சாலைகளும், சோலைகளும், சத்திரங்களும், குளங் கிணறுகளும், கோயில் விளக்குகளும் இராணி பெயரால் விளங்குகின்றன. குடிகள் மனமறிந்து நடப்பதில் இராணி கைக்காரி; படைகளையும் பலமாக வசப்படுத்தி வைத்திருக்கிருள். இதிலெல்லாம் அவளைக் குறை சொல்ல முடியாது; பேராசை என்றும் சொல்ல முடியாது.

**சிவிங்கி**:—என்ன புலிக்கண்ணு, அப்படிச் சொல்லுகிருய்? மதுரையை ஆண்ட மகராசன் **சொக்கநாத நாயக்கருக்குப்** பிறகு **முத்து வீரப்ப நாயக்கன்**. முத்து வீரப்பனுக்குத் தங்கம்போல மகன் **ரங்க சொக்கநாதன்** இருக்கிருன். மகனுக்கு இப்போது 16 வயதாகிறது. அவனிடம் அரசைத் தரவேண்டியது நியாயம். அப்படியின்றி, நம் இளவரசனது பாட்டியாகிய இந்த மங்கம்மாள் பிடிவாதமாக நாட்டை ஆளுவதென்ருல்

யாருக்குப் பொறுக்கும்? இது பேராசையா, அல்லவா?

**வேங்கை:**—சரியான கேள்வி. இதுதான் **பெரிய நாயக்கர்** கோபத்திற்குக் காரணம். இளவரசனை அவர் சரிப்படுத்திவிட்டார். பையன் ஒரு வருஷமாகத் தனக்குப் பட்டங்கட்டச் சொல்லுகிறான். இராணி மறுக்கிறாள். அதனாலேதான் பெரிய நாயக்கர் சமயம் பார்த்திருக்கிறார்; அதனாலேதான் நாம் இங்கே கூடியிருக்கிறோம்.

**புலிக்கண்:**—நியாயம், அண்ணே; அதற்காக என்ன செய்ய யோசனை?

**வேங்கை:**—யோசனை என்ன? அடுத்த வாரம் பழனிக்குப் பல்லாக்கு இந்த வழிதானே போகவேண்டும். பெரிய நாயக்கர் நமக்குச் சொன்னபடி செய்ய வேண்டியதுதான். இராணி இருக்குமட்டும் பேரனுக்குப் பட்டம் கிடைக்காது. பெரிய நாயக்கர் வயிற்றெரிச்சலும் தீராது.

**சிவிங்கி:**—ஆனால், எப்படியடா அது முடியும்? ஐயரும், சின்னுவும் இராணியை அடைகாக்கின்றனர். சின்னு பலே சூரன்!

**வேங்கை:**—அவனைச் சரிபண்ணினாலே நமது எண்ணம் பலிக்கும். இராணிக்கு முன்பே அந்த முண்டனைப் பலி வைக்கவேண்டும்.

**புலிக்கண்:**—அவன்தான் மலையாளச் சண்டைக்கு நரசையருடன் போயிருக்கிறானே!

**சிவிங்கி:**—அப்படித்தான் பேச்சு; ஆனால் அந்தப் பேர்வழியை நம்பமுடியாது. சண்டை முடிந்து பதினைந்து நாளாகிறது. சின்னு திரும்பி வந்தே யிருப்பான்.

**புலிக்கண்** :—இல்லேங்கிறேன்; அவனே மலேயாளத்துப்படை கொன்றுவிட்டதாகக் கேள்வி.

**சிவிங்கி** :—அப்படி அவன் செத்திருந்தால் சாமிக்குப் பத்துத் தேங்காய் உடைக்கிறேன்.

**வேங்கை** :—நரியா, பழனிக்குப் போகும்போது இராணி வழியிலே எங்கே தங்குவதாகக் கேள்வி?

**நரியன்** :—த த த த ரு ம ச ச சா......

**வேங்கை** :—சரி தருமசாலே; நல்லது தான். இங்கே தருமசாலே ஒன்று வைத்து வழிப்போக்கருக்குப் பசி தாகத்திற்கு ஏராளமாகத் தருகிறுள். அதிலேயே தான் தங்கவேண்டிய சௌகரியமெல்லாம் செய்து வைத்திருக்கிறுள்.

**வேங்கை** :—நரியா, அம்மாள் தருமசாலேக்கு எந் நேரம் வருவாள்?

**நரியன்** :—ச ச ச சா ய ங் க க க.

**சிவிங்கி** :—சாயங்காலம். போதும்; திக்குவாயன் வாயைச் சும்மா கிளப்பாதே! இனிப் பெரிய நாயக்கரிடம் போவோம். அட ஊமைக் கழுதை! நீ ராணி உளவைப் பார்த்து வா!

* * *

## IV

சிவிங்கியும், வேங்கையும், நரியனும், புலிக்கண்ணும் கூடிச் சதியாலோசனே செய்து தீர்த்தனர். யார் இவர்கள்? இவர்கள் ஏனிப்படி பெயர் வைத்துக் கொண்டிருக்கிறுர்கள்? இவர்கள் காட்டு மிருகங்களா? ஆம். மானிடம் போர்த்த விலங்குகளே! வீரப்பன் சிவிங்கியானுன்; சுப்பா நாயக்கன் வேங்கையானுன்; சொக்கு நாயக்கன் நரியனுனுன்;

அழகிரி புலிக்கண்ணனுன். இவர்களுடன் இன்னும் ஓர் ஆள் உட்கார்ந்திருந்தான்; அவன் ஓர் ஆண்டாகப் பெரிய நாயக்கருடனேயே இருப்பவன். ஆனால் யாருடனும் பேசமாட்டான். அவனை **ஊமைக் கழுதை** என்பர் இந்தச் சதிக் கூட்டத்தார். ஊமைக் கழுதை உள்ளே காரியப் புலி. அவன் யாரெனப் பின்னே அறிவோம். மங்கம்மாளைச் சிறையி லடைத்துவிட்டு, அவள் பேரன் **விஜயரங்க சொக்க லிங்கனுக்கு** முடிசூட்ட வேண்டுமென்பது இவர்கள் சூழ்ச்சி. நரசையனும் திருவாங்கூரினின்று இன் னும் மதுரை வந்து சேரவில்லை. சின்னபாபுவும் போரில் இறந்துபோனதாக வதந்தி. இராணியும் நாளைப் பழனிக்குப் புறப்படுகிருள். இதுதான் சமயம் என்று சூழ்ச்சி செய்தான் பெரிய நாயக்கன். பெரிய நாயக்கன் சொக்கநாத நாயக்கர் காலத்தில் ஒரு தள கர்த்தனு யிருந்தவன். கள்ளர்கள் அவன் சொன்னபடி கேட்பர். தளவாய் நரசையன் மங்கம்மாளின் சலுகை பெற்றுப் படைத்தலைவனுனன். ' போருக்கே பிறந்த ஜாதிச் சிங்கம் நான் இருக்கும்போது, பருப்புத் தின் னிப் பார்ப்பான் படை நடத்துவதா?'' என்ற ஆத்தி ரம் பெரியநாயக்கன் மனத்தில் கொதித்துக்கொண்டே யிருந்தது. இராணி பேரனை வசப்படுத்திக் கொண்டு, மங்கம்மாளைச் சிறையிடச் சூழ்ச்சி செய்துவந்தான் பெரிய நாயக்கன்; இச்சமயம் தனது காரியம் கை கூடுமென்றே நம்பினன்.

* * *

## V

பழனி ரஸ்தாவில் ஒரு பெரிய **தருமசாலை**. அதன் பின்னே ஓர் அழகிய கட்டிடமும், பூந்தோட்டமும் இருந்தன. அந்தக் கட்டிடத்தில் இராணி வந்து இறங்கினாள். மறுநாட் காலைதான் அவள் மீண்டும் பல்லக்கில் பிரயாணம் செய்வாள். சுக்ல பக்ஷ த்ரயோதசி; நல்ல நிலவடிக்கிறது. இரவு பத்துமணி இருக்கும். தருமசாலையில் எந்த வேளையும் தாகத்திற்குக் கிடைக்கும். பகல் 12-மணிக்கும், இரவு 8 மணிக்கும் தேசாந்தரிகளுக்குப் போஜனம் கிடைக்கும். மங்கம்மாள் பிராமணரைப் போலவே மற்றச் சாதியினருக்கும் தனது தருமசாலையில் சாப்பாடுபோட ஏற்பாடு செய்திருந்தாள். அன்று இரவு, சுமார் 30 பேர் சாப்பிட்டனர். அவர்களுள் 5 பேர் பிராமணர். பிராமணர்களுக்கு மட்டும் உள்ளே சாப்பாடு. இந்தப் பிராமணருள் இருவர் சாப்பிட்ட பிறகு தருமசாலைக்குட் சென்று, சுற்றிலும் பார்த்தார்கள். பிறகு இராணி தங்கியிருக்கும் கட்டிடத்தைக் குறிப்பாகப் பார்த்து ஏதோ மனதில் குறித்துக்கொண்டு சென்றார்கள்.

இன்று சாப்பிட்டவர் அனைவரையுமே ஒருவன் மறைவாயிருந்து கவனித்து வந்தான்.

ரஸ்தாவிலிருந்து சற்று தூரத்தில் இரு புறமுங் காடு; அதன் மரங்களுக்கிடையே பதுங்கி யிருப்பவர் யார்? புலி நரிகளல்ல; புலி நரிகளினும் கொடிய சூழ்ச்சியாளர் அங்குப் பதுங்கி யிருக்கின்றனர். அதோ ஒருபுறம் **பெரிய நாயக்கன்** இருக்கிறான். நாம் முன்னே கண்ட வேங்கை, சிவிங்கி முதலியோர் அவனுடன் ஏதோ இரகசியம் பேசுகின்றனர். **ஊமைக் கழுதையை**

மட்டும் காணேம். 'கழுதை காயலாய்ப் படுத்திருக் கிறது' என்று செய்தி. இவர்களிடையே தெலுங்குப் **பிராமணன்** ஒருவன் அதோ நிற்கிருன். பெரிய நாயக் கன் அவன் காதில் ஏதோ சொல்லுகிருன். பிரா மணன் தரும சாலையை நோக்கி வருகிருன். மற்றவர் பத்துப் பத்துப் பேராகப் பிரிந்து இராணியிருக்கு மிடத்தைச் சுற்றி ஒளிகின்றனர்.

*　　　*　　　*

இராணி மங்கம்மாள் அன்று உறங்கவில்லை; சின்னபாபுவுக்கு ஏதோ செய்தி சொல்லுகிருள். ஊமை அதோ நிற்கிருன்; இப்போது சண்ட ப்ர சண்டமாகப் பேசுகிருன். ஊமை மங்கம்மாளின் ஒற் றன்; சின்னபாபுவிடம் அதிசயச் செய்திகளைக் கூறு கிருன். இராணி திகைப்புடன் கேட்கிருள்.

**சின்னு:**—அம்மா, பயமில்லை; பெரிய நாயக்கன் தலை இன்று சாய்ந்ததென்று வைத்துக் கொள்ளுங் கள். இவர்கள் சூழ்ச்சியை நேற்றே அறிந்தேன். இவர்கள் ரஸ்தாவின் வலப்புறம் ஒளிந்திருக்கிருர்கள். என் ஆட்கள் சரியான ஆயுதங்களுடன் ரஸ்தாவின் இடப் புறம் மறைந்திருக்கிருர்கள். எதிரிகள் நமது வீட்டை வளைத்ததும் அவர்களை நமது படை வளைத் துக்கொள்ளும். பாருங்கள் வேடிக்கையை!

**ஊமை:**—சொக்கு நாயக்கன் தெலுங்குப் பிரா மணனுக வந்து தருமசாலையில் பசிக்கு ஏதாயினும் கேட்பானும்; ஏதாயினும் தரும்போது, உள்ளே புகுந்து தனது வாளையுருவி தருமசாலைக் காவலா ளியை வெட்டுவானும்; உடனே மற்றப் பகைவர் பாய்ந்துவந்து இராணியின் ஜாகையை வளைத்துக் கொள்வார்களாம்!

**இராணி** :—அப்படியா? சின்னு, அந்தப் பிராமணனை முதலில் சிறைப் பிடித்துக்கொண்டு வா! நான் தாகசாந்தி செய்து வைக்கிறேன்.

**சின்னு** :—இதோ முகமூடி யணிந்து செல்லுகிறேன். அம்மா, நம் படைகள் இன்னும் ஐந்து நிமிஷத்தில் தங்கள் பாதுகாப்பிற்காகத் தயாராயிருக்கும்.

* * *

## VI

மணி பத்து. பழனி ரஸ்தாவில் ஆள் நடமாட்டமில்லை; தருமசாலையில் மினுக்கு மினுக்கென்று தீபம் எரிகிறது. அதன் பக்கத்தில் ஓர் ஆசாமி தூங்கி விழுவது போல உட்கார்ந்திருக்கிறான். அப்போது "ஜய சீதாராம்!" என்று தெலுங்குப் பிராமணரொருவர் நுழைந்தார். அவரைக் காணாதவன் போல, இன்னும் தூங்கி வழிந்தான் அங்கிருந்த ஆள்.

**பிராமணன்** :—ஜய சீதாராம்!

**ஆள்** :—ஆ, என்ன? யார் நீர்? எங்கு வந்தீர்?

**பிரா** :—ஆந்த்ர தேசமுனுண்டி அரவ தேசமு கொச்சி......

**ஆள்** :—அரவம் வேண்டா மடா! தூங்க வேண்டும்......

**பிரா** :—ஆகலி கொண்டினி அன்னம்பு பெட்டண்டி......

**ஆள்** :—அன்னமிட்ட வீட்டிற் கன்னமிடவா?

**பிரா** :—தாகானி கைனனு தயசேசி ஈயண்டி......

**ஆள்** :—குளத்திலே நீருண்டு குடித்துப் போடா!

**பிரா** :—தாம்பூலமைனனு தயசேசி ஈயண்டி......

**ஆள்** :—கோமுட்டி கடையிலே வாங்கிப்போடா!

**பிரா** :—கருண லேதா ?

இச்சமயம் அந்தப் பிராமணன் பிடரியை யாரோ பலமாகப் பிடித்தான். தூங்கி விழுந்த ஆள் புலி போலப் பாய்ந்தான்.

**ஆள்** :—"மோசக்காரப் பயலே! நீ பார்ப்பானு, சொக்கு நாயக்கனு !

**பிரா** :—நீ யார் ?

**ஆள்** :—முகமூடி எடுக்கிறேன், பார் ?

(ஆள் முகமூடி எடுத்ததுமே பிராமணன் நடு நடுங்கினுன்.)

**பிரா** :—ஆ சின்னு! நீ இருக்கிருயா?

**சின்னு** :- இருக்கிறேன் ; வா, இப்படியே ராணி யிடம்! உண்மையைச் சொன்னுல் உயிரோடு சிறை ; இன்றேல், இதோ ஒரே வெட்டு! வைகுண்டம் போவாய் !

பிராமணன் சொக்கு நாயக்கனே ; சொக்கு முன்பு இராணியிடம் விசுவாசமாயிருந்த வீரன். இராணியைக் கண்டதும் சொக்கு அலறிப் போனுன். "அரசீ, நான் நன்றி கெட்ட பாவியானேன் ; தங்கள் கையினுல் என்னை வெட்டிப் போடுங்கள் ! பெரிய நாயக்கன் வலையில் விழுந்து கெட்டேன்.

**இராணி** :—இனித் திருந்திஞற் சரி ; இந்தா பால் ; தாகசாந்தி செய்துகொள் ; உண்மையைச் சொல்லி விடு !

சொக்கு பெரிய நாய்க்கன் மோசத்தை யெல்லாம் கக்கிவிட்டான்.

இதற்குள், காட்டில் போர் தொடங்கிவிட்டது. சின்னபாபு 200 வீரருடன் பகைவரைப் பாய்ந்து

பாய்ந்து துரத்திப் பிடிக்கிறான், அடிக்கிறான், வெட்டு கிறான்.

பெரிய நாய்க்கன் சின்னபாவுடன் கைகலந்து மண்ணைக் கௌவினான். அவன் மார்பைக் கையால் அழுத்திக்கொண்டு, "அதர்மப் பதரே, உன் **பாச்சாப் பலித்ததா?"** என்று உறுமினான் சின்னபாபு.

"**என் பாச்சாப் பலிக்கவில்லை!** நீ யிருக்கு மட்டும் அது பலிக்காது" என்று ஒப்புக்கொண்டான் பெரிய நாயக்கன். சதிகாரரெல்லாம் கடுஞ் சிறைப்பட்டனர்.

இராணிக்கு ஒரு கண்டம் நீங்கியது.

# ரு. ஊரைக் காத்த பாட்டி

## I

**அதிலன்** (Atila) என்றால் அழுதபிள்ளை வாயை மூடும். அந்த ஹூணமன்னன் அவ்வளவு கொடிய போர்வீரன், அரக்கன். ஐந்தாவது நூற்றாண்டில் அவன் ஐரோப்பாவை அதலகுதலப்படுத்தினான்; ரோமை வென்றான்; பிறகு கால் (Gaul) தேசத்தின் மீது படையெடுத்தான். கால் (Gaul) என்பது தற்போது பிரான்ஸாக விளங்குகிறது. இப்போதுள்ள பாரிஸ் அக்காலம் **லுதேஸ்** என்னும் ஊராக விளங்கியது. அதிலன் லுதேஸின்மீது படையெடுத்தான். 'ஊர் பிழைக்காது' என்று எல்லோரும் குடல்நடுங்கி ஓடத் தலைப்பட்டனர். அப்போது ஒரு வீராங்கனை எழுந்தாள். "நான் இருக்குமட்டும் லுதேஸ் அழியாது. அதிலன் உங்களை யாதும் செய்யாமல் நான் பாதுகாக்கிறேன்" என்று கோட்டை வாயிலில் நின்றாள்; அதிலனை விரட்டியடித்தாள். இந்த வீராங்கனையின் பெயர் '**ழேன் வியேவ்**' (Gene Vieve) என்பர். "ழேன் வியேவ்" என்றால் 'பாரிஸைக் காத்த தெய்வம்' என்று பிரெஞ்சுக்காரர் கும்பிடுவர். ஜனவரிமாதம் மூன்றாந் தேதி வியேவ் திருவிழாவைப் பிரெஞ்சுக்காரர் சிறப்பாகக் கொண்டாடுவர்; அவள் சிலையை வணங்குவர். அதே மாதிரி நமது நாட்டில் இருந்த வீரப்பாட்டியொருத்தியின் கதையைக் கேளுங்கள்!

## II

சுமார் 140 ஆண்டுகளுக்கு முன்பு, தென்னாட்டில் பெரிய புரட்சி நடந்தது. அக்காலம் ஊரெங்கும்

திருட்டும் கொள்ளையும் மிகுந்தன. மனிதருள் ஒரு புரட்சிக்காரன் இருக்கிறானன்றோ? "பசி" என்பவன்! அவனுக்குக் கப்பம் கட்டாவிட்டால் ஒன்பது வாசற்கோட்டை பிழைக்குமா? போரும், பஞ்சமும் முற்றுகையிடும் காலத்தில், இந்தப் பசிப்புரட்சியைத் தீர்க்கக் கொள்ளைக்காரர் கிளம்பினர். "எங்கே பணம், எங்கே உணவு?" என்று மோப்பம் பிடித்து, அங்கே சென்று கொள்ளை யடிப்பது தான் அவர்கள் கண்ட வழி. சுற்றியுள்ள ஊர்மக்கள், வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பர். கொள்ளைக்காரர் வந்தால், உள்ளதைத் தந்தொழிக்க வேண்டும்; இன்றேல், உயிரைத் தரவேண்டும்; வேறுவழி யில்லை. கிராமங்களில், ஊர்காவலர், கண்களில் திரிபோட்டுச் சுற்றிப் பார்ப்பர்; "டடேய்" என்று அரற்றுவர். "டொம் டொம்" என்று முரசடிப்பர். வீடுகளில் தகரங்களையும், தாளங்களையும், மணிகளையும் அடித்துச் சத்தம் செய்வர். ஊர் கவனமாய்த்தான் இருக்கும்; மறுநாள் பார்த்தால் அஃது அல்லோல கல்லோலப்படும்! "ஐயோ மாடு போயிற்றே! அந்தோ, ஆட்டு மந்தை போயிற்றே! ஐயையோ புதைத்து வைத்த பொன் போயிற்றே! வெள்ளி போயிற்றே! களஞ்சிய நெல் போயிற்றே! அந்த வீட்டில் கன்னம்! இந்த வீட்டில் கொலை! இன்னொரு வீட்டில் கொள்ளை!" என்று இந்த மாதிரிப் புகார்கள் கிளம்பும்.

## III

பனையூர் சிவகங்கைக் கருகேயுள்ள ஒரு சிற்றூர். அதில் சுமார் 500 பேர் வசித்தனர். நாயக்க மன்னர் காலத்தில் குடியேறிய தெலுங்கரும், தமிழ் அந்தண

ரும் ஒற்றுமையாகவே அக்கிரகாரத்தில் வசித்தனர். அவர்களிடையே பிரிவினை யுணர்வில்லை.

## IV

பனையூர் அக்கிரகாரத்தில், "காமாக்ஷி" என்றால் "ஊருக்கு உத்தமி" என்பர். அதோ தெரிகிறதே தெருமுனையில் அதுதான் காமாக்ஷி வீடு! அது சிறிய வீடுதான். அதில் இரண்டு பிள்ளைகள், இரண்டு பெண்கள் குடித்தனம் செய்கிறார்கள். மூத்த பிள்ளை சுப்பையர் திண்ணைப் பள்ளிக்கூடம் போட்டிருக்கிறார். அவர் தம்பி வைதிகம் பார்க்கிறார்; மாப்பிள்ளைகள் இருவரும் கொஞ்சம் நிலம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லாம் சேர்ந்து ஒருவாறு குடும்பத்திற்குப் போதும். காமாக்ஷி யம்மாள் இருக்கு மட்டும் தாம் ஒன்றாகவே யிருப்பதென்ற கட்டுப்பாட்டுடன் அக் குடும்பம் நடக்கிறது. நாட்டுப் பெண்களிடம் நல்ல பெயர் வாங்கின மாமியார் யார் என்றால், "இதோ, காமாக்ஷி யம்மாள்!" என்றே ஊரார் காட்டுவர். காமாக்ஷி யம்மாள் கப்பலாய்க் காரியம் செய்வாள். காரியம் செய்யும் போதே, கைவல்யம், இராமாயணம், பாரதம், பாகவதம் முதலிய பாடல்களைப் பாடுவாள்; நல்ல கதை சொல்லுவாள்; வேடிக்கையாகப் பேசிப் பெண்களைத் திருத்துவாள்; நோய் வந்தால் பச்சிலைகளைக்கொண்டு அதைத் தீர்ப்பாள். காமாக்ஷி யம்மாள் மந்திர மறிந்தவள்; விஷக்கடிகளுக்கு மந்திரம் போடுவாள்; ஊரில் பிரசவம் பார்த்தல், குழந்தை நோய் தீர்த்தல், தேள் பூரான் கடிகளுக்கு மந்திரித்தல், அம்மை பார்த்தல், பெரிய காரியங்களுக்குத் துணை செய்தல் — இவையெல்லாம் காமாக்ஷி யம்மாளால்

நடக்கும். இத்துடன் அக்கிரகாரத்திற்கு வரும் அதிதிகள் காமாக்ஷி யம்மாள் வீட்டை விசாரித்துக் கொண்டு சம்பந்தி வீடுமாதிரித் தாராளமாக நுழைவர். "வாருங்கள்; இதோ சமையல் ஆகும்; அனுஷ்டானத்தை முடியுங்கள்!" என்று முகமலர்ந்து உபசரிப்பாள் காமாக்ஷி. தெருக்கோடியில் பிச்சைக்காரன் வரும்போதே பழைய சாதம் கரைத்துத் தயாராக வைத்துக்கொண் டிருப்பாள் காமாக்ஷி. "அப்பா வா, கையலம்பிக்கொள்; இந்தா, பச்சை மிளகாயும் உப்பும்; இந்தச் சோற்றைச் சாப்பிடு!" என்று போடுவாள். எச்சாதியானாலும் வேறுபா டில்லாமல், காமாக்ஷி யம்மாள் சோறு போடுவாள். "பசி எல்லாருக்கும் உள்ளதுதானே" என்பாள். "அம்மா மகராசி! உங்கள் கையினாலே இட்ட கூழும் அமுதமாயிருக்குதம்மா!" என்று புகழ்வார் ஏழை யெளியவர்கள். காமாக்ஷிக்கு நாற்பது வயதில் கணவன் தவறிப் போனான். அவர் சம்பாதித்தவை ஒரு வீடும், நாலு காணியுந்தான். இறுதிக் காலத்தில் அவர் பிள்ளைகளிடம், "நீங்கள் பாடு பட்டுச் சம்பாதித்தே உண்ண வேண்டும். நான் இருக்குமட்டும் அதிதி பரதேசிகளுக்கு அன்னமிட்டுவந்தேன். அந்தத் தருமத்தை இனிக் காமாக்ஷி நடத்த வேண்டும். எனது நில வரும்படியிலிருந்து அது நடக்கட்டும். நீங்கள் எனக்குச் சிராத்தம் வைப்பதைவிட, பசி என்று வந்த பேருக்கு அன்னமளிப்பது சிறந்த கடமை" என்றார்.

குடும்பமென்றால் செலவுதான். கடைசிப்பெண் கலியாணம் பாதி நிலத்தை விழுங்கியது; மீதியிருப்பதைக்கொண்டு, காமாக்ஷியம்மாள் தனது விரதத்தை நிறைவேற்றி வந்தாள். கணவனுக்குப் பிறகு

காமாக்ஷியம்மாள் பஞ்சாட்சர ஜபம், பரோபகாரம்— இரண்டிலேயே காலம் கழித்தாள்; தாமரை இலே மேல் தண்ணீர்த்துளி மாதிரி, மனப்பற்றில்லாமல், குடும்பத்தில் வசித்தாள். "**ஊருக்கு உத்தமி**" என்பதுடன், "**யாருக்கும் உபகாரி**" என்று அவளை ஜனங்கள் புகழ்ந்தனர். இப்போது காமாக்ஷியம்மாள், எழுபது வயதாகிக் **காமாக்ஷி பாட்டியானுள்!**

## V

இச்சமயம் ஊரில் கள்ளர் பயம் அதிகரித்தது; "அந்தத் தெருவில் கொள்ளை; இந்தத் தெருவில் சூறை" என்று விடிந்தால் ஊரில் செய்தி பரவும். திடீரென்று "தீவட்டிக் கொள்ளைக்காரர் வரப்போகிருர்கள்!" என்ருெரு வதந்தி பிறந்தது. பிறகு "கறுத்தச்சாமி படைகளாம், கிராமங்கள் நாசமாம்........" என்று செய்திகள் வந்தன. அதனுல் பனையூர் மகா ஜனங்கள் ஊர்காவலைப் பலமாக்கினர்.

"திருடன்" என்று கனவு கண்டாலும் "எங்கடா .........ளளள" என்று அஞ்சி உளறிக் கொண்டு தெருப்பக்கம் ஓடுவார் **சுப்பையர்.** உண்மையாகவே, ஊரில் தீவட்டிக் கொள்ளைக்காரர் புகுந்தால், அவர் பயத்திற்குக் கேட்க வேண்டுமா? பெண்கள் காதில் மூக்கில் இருப்பதெல்லாம் வாங்கி அவர் ஓரிடத்தில் புதைத்து வைத்துவிட்டார். தன்னிடமிருந்த ரொக்கத்தை ஒரு பணக்காரரிடம் கொடுத்துவைத்தார். பள்ளிப் பிள்ளைகள் "ஐயா, அங்கே கொள்ளை, இங்கே திருட்டு" என்று செய்திகளைச் சொல்லுவர். பிள்ளைகளை ஐந்து மணிக்கே வீட்டிற்கனுப்பி விட்டுக் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொள்வார் **சுப்பையர்.**

காமாக்ஷி யம்மாள் மட்டும் பயமில்லாமல் "வரட்டுமே கள்ளன்; நீதான் நகை நாணயம் பாத்திரம் பண்டமெல்லாம் பத்திரப்படுத்தி யிருக்கிருயே! "அப்பா நாங்கள் ஏழைகள்; வீட்டைப் பார்த்து என்ன வேண்டுமோ எடுத்துக் கொண்டு போ!" என்போம்; அவனுக்கும் உணர்ச்சியுண்டன்ருே?" என்பாள்.

## VI

இருட்டுக்காலம்; அக்கிரகாரத்திற்குத் தீவட்டிக் கொள்ளைக்காரர் வரப்போகிருர் என்ற வதந்தி பலமாக இருக்கிறது. ஒருநாட்காலை, அந்தத் தெருவில் இரண்டு பிச்சைக்காரர் வந்தனர்; பிச்சை கேட்பது போல ஒவ்வொரு வீட்டுத் திண்ணையிலும் நின்று, உள்ளே குறிப்பாகப் பார்த்தனர். காமாக்ஷி யம்மாள் கோயிலுக்குச் சென்று வந்தபோது, இவர்களைக் கவனித்தாள். இவர்களில் ஒருவன் அதோ இருக்கும் மாடி வீட்டுச் சுவரில் ஒரு கரிக்கோடு போட்டான். அதைக் காமாக்ஷி யம்மாள் பார்த்தாள். காமாக்ஷியம்மாள் வீட்டுக் கொல்லைக் கொட்டகை விசாலமானது. அதை ஒருவன் வீட்டுப்புறத்திலிருந்து பார்த்ததைக் கண்டாள். மறுநாளும் இப்படியே புதிய பிச்சைக்காரர் வந்தனர். "தடிப்பயல்களுக்குப் பிச்சையென்ன?, விறகுவெட்டிப் பிழையுங்களேன்" என்று எரிந்து விழுந்தார் செல்வர். அதே பிச்சைக்காரருக்குக் காமாக்ஷி யம்மாள் இரண்டுபிடி அரிசி போட்டாள். அப்போது அவர்கள் ஏதோ ஊமைச்சாடைகள் காட்டிப் பேசிக்கொண்டதையும் பாட்டி கவனித்தாள்.

பாட்டியின் பஞ்சாட்சர ஜபமும், வேதாந்தப் பாடல்களும் அதிகரித்தன. அவள் கொல்லைக்கொட்டிலிலேயே நிலையாயிருந்தாள். “ஐயோ பாட்டி, உங்களைத் திருடன் கொல்லப் போகிறான்” என்று ஊரார் எச்சரிக்கை செய்தனர். “பயப்படாதேயுங்கள்! பசி வரும்போது பூனையும் புலிபோலப் பாய்கிறதன்றோ? பசிக்கொடுமையால் மனிதன் திருடுகிறான். வரட்டும் கள்ளர்; நானிருக்கிறேன், என் கையிருக்கிறது, மனம் இருக்கிறது, பஞ்சாட்சரி இருக்கிறது” என்றாள் பாட்டி. “கிழவிக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது!” என்றார்கள் தம்மை உஷார் படுத்திக்கொள்ளும் ஊரார்.

ஓர் இரவில், பாட்டி கொல்லைச் சுவரண்டை கவனித்தாள். “நாளை இங்கே” என்ற பேச்சுமட்டும் கேட்டது. பிறகொன்றும் காணோம். ஆட்கள் மறைந்தனர். கொள்ளைக்காரர் ஒரு வீட்டைக் குறிவைத்து வருகின்றனர், என்று ஊரில் சத்தம் கிளம்பியது.

## VII

இன்றிரவு பாட்டி அரிசி பருப்பையெல்லாம் கொல்லைக் கொட்டிலில் கொண்டுபோய் வைக்கிறாள். வெங்காயம் தொடாதவள் இன்று ஒரு வீசை வெங்காயம் வாங்குகிறாள்; நாரத்தங்காய் ஊறும் கற்சட்டியில், பச்சை மிளகாயை ஊறப்போடுகிறாள்; தேங்காயும் பச்சை மிளகாயும் வைத்துத் துவையல் அரைக்கிறாள். “பாட்டி, உன் பேத்திக்குக் கலியாணமா? எதற்கு இத்தனை ஏற்பாடெல்லாம்?” என்று ஊரார் சிரிக்கிறார்கள். வீட்டைப் பொட்டலாக்கி, இதெல்லாம்

என்ன! ஊரார் பைத்தியம் என்பது சரிதான்'' என்று நாட்டுப் பெண்கள் முணுமுணுக்கின்றனர். பாட்டி வேதாந்தப் பாடலுடன் தன் காரியத்தைப் பார்க்கிருள். இரவு பதினெரு மணி; தெருவெல்லாம் ஆழ்ந்து உறங்குகிறது. பாட்டி அடுப்பு மூட்டி ஒரு பெரிய பானையில் சாதம் வடித்தாள் ; இன்னெரு பானையில் வெங்காயமும் பருப்பும் வேகவைத்து நிரம்பக் கத்தரிக்காய் பச்சை மிளகாய் போட்டு, கருவேப்பிலை கொத்தமல்லி கூட்டி, நிரம்ப எண்ணெய் விட்டுக் கடுகு தாளித்துக் கமகம வென்று வெங்காய சாம்பார் பண்ணி இறக்கினுள் ; இன்னெரு பானையில் கருவேப்பிலை எலுமிச்சம்பழம் சேர்த்து மோர் தயாரித்தாள்; காரமான ஊறுகாய் வைத்துக்கொண்டாள் ; இன்னெரு மிடாவில் சுத்த நீர் நிரப்பினுள் ; அடுப்பை அணைத்து, பஞ்சாட்சர ஜபம் பண்ணிக்கொண்டிருந்தாள்.

நள்ளிரவு; கிராமக் காவலர் "டடே" என்று ஊர் சுற்றி வந்தனர். "டண், டொண், டப் டமார்" என்று வீடுகளில் தகரங்களையும், பாத்திரங்களையும் போட்டடித்தனர். எல்லாம் எவ்வளவு நேரம்? ஒரு மணிக்கு எல்லாம் அடங்கியது. மீண்டும் உறக்க மயக்கம் ஊரைக் கவர்ந்தது.

இரண்டு மணி; நல்ல இருட்டு; கொல்லையில் காலடி கேட்டது; கொல்லைக் கதவுக்கடியில் "கொரு கொரு" வென்ற சத்தம்; பிறகு கதவு நிலை பெயர்ந்தது. ஒரு திருட்டுப் படை உள்ளே வருகிறது. இதோ தாழ்வாரத்திற்கு முன்னே எமபடர் போல இருபது கரி மூஞ்சிகள் நிற்கின்றன. "ஜாம்பார் வெகு ஜொகுஜுா றட!" என்முன் ஒருவன்.

"வானம் பொழிகுது பூமி விளைகுது,
மன்னன் காணிக்கை ஏதுக்கடா"

என்றொருவன் மெல்லப் பாடுகிறான். இப்பாட்டுப் பாடினால்"அடி கொள்ளை!" என்பதற்கு அடையாளம். திருடர் உள்ளே நுழையப் போகின்றனர். "அடே விளக்குடா!" என்றான் ஒருவன். ஆம்; நமது பாட்டி விளக்கேற்றினாள். 'ஹ, ஹ, ஹ—கிழவிடா;......ஒரு போடு......உள்ளே போ!' என்றான் தலைவன். திருடர் வாளையும் தடியையும் சுழற்றிவந்தனர். இதற்குள் பாட்டி இலை பரப்பி, ஒரு செம்பில் தண்ணீர் கொணர்ந்து, "குழந்தைக ளெல்லாரும் வாருங்கோ; உங்களுக் கெல்லாம் பசி; சாப்பிடுங்கோ; இந்தா ருங்கோ தண்ணீர்; கையைக் கழுவிக்கொண்டு வாருங்கோ!" என்று அன்புடன் உருக்கமாகப் பேசினாள். திருடர் முதலில் சந்தேகித்தனர்; பிறகு வியந்தனர்; அதன்பின் இளகினர், பணிந்தனர். அவர்களுக்குச் சரியான பசிதான். அத்தனைக் கரி மூஞ்சிகளும் கைகழுவி வந்து இலைகளின் முன் குந்தி "போடு போடு!" என்று அத்தனைச் சாம்பார்ச் சாதத்தையும் உண்டு தீர்த்து, மோரையும் பருகினர். "அப்பா உண்டெனச் சாப்பிடு! ஐயோ பாவம்; வயிற்றுக்கில்லாத குறைதானே உங்களை இந்தத் தொழில் செய்யச் சொல்லுகிறது. பணக்காரன் ஏழைக்குச் சோறு போடாமற் பூட்டிப் பூட்டி வைக்கிறான். அவன் புதையலைத் திருட இன்னொருவன் வருகிறான். "போடு சோறு!" என்றால் "சீ போ!" என்கிறான் செல்வன். "போடு மண்டையிலே!" என்றால் "ஐயோ, உயிரை விட்டுடு!" என்று பெட்டிச் சாவியைத் தருகிறான்"

என்று பாட்டி உருகினாள். இதைக் கேட்டதும் திருடர் தலைவனுக்குச் சந்தோஷம் உண்டானது.

தலைவன்:—அதுதான் நியாயம். அம்மா! ஏழைக்குச் சோறும், பணக்காரனுக்கு ஈகையும் இரக்கமும் இருந்தால் நாங்களேன் கொள்ளையடிக்க வேண்டும்?

பாட்டி:—அப்பா ஒன்று கேட்கிறேன். கோபித்துக் கொள்ளாதே! உலகத்திலே எத்தனையோ தொழில் உண்டே; யோக்கியமான ஒரு தொழில் செய்து கோடானுகோடி ஏழைகள் பிழைக்கவில்லையா? நீங்களேன் இந்தத் தொழில் செய்து பாபத்தைச் சம்பாதிக்க வேண்டும்?

தலைவன்:—நாங்களும் ஒரு தொழிலைச் செய்கிறோம் அம்மா; அஃது உயிர்போகிற தொழில்; காட்டிலிருந்து ஆபத்துடன் போராடுகிறோம். அந்தத் தொழிலுக்கு இந்த வழியிலேயும் சாப்பாடு சம்பாதிக்க வேண்டியிருக்கிறது. கருமிச் செல்வர் பணத்தையே நாங்கள் தொடுவோம்.

பாட்டி:—அது என்ன தொழில்? ஏதோ ஊமையன், மருது, இஞ்ஞி துரைச் சண்டையாமே.........! அதுவோ............!

தலைவன்:—எல்லாம் விடிந்தால் தெரியுமம்மா! இப்போது அதிகம் பேச்சுக் கூடாது.

பாட்டி:—ஆனால் சரி; அப்பா நான் பரம ஏழை; இதோ வீட்டுக்குள்ளே என் பிள்ளைகுட்டிகள் தூங்குகிறார்கள். வீட்டிலிருப்பது சட்டி பானைதான். ஏழையென்று வந்தால், என் சாப்பாட்டைக் குறைத்து ஒரு பிடி போடுவேன். அதுதான் எனக்கு முடிந்த தருமம். பசி எல்லாருக்கும் ஒன்றுதான். "கொள்ளைக்காரர் வரப்போகிறார்கள்" என்று ஊரெல்

லாம் தடிக்கம்பு தயாரித்தார்கள். நான் சாப்பாடு தயாரித்தேன்; ஏழைக் கிழவி, ஏதோ தோன்றி இப் படிச் செய்தேன்.

தலைவன் :—பெரியம்மா, நீங்கள் நன்ருயிருக்க வேணும்; மகராசி; இப்படி யாரும் அன்பாயிருக்க மாட்டார்கள். பசி எங்களைக் கொல்வதால் நாங்கள் பிறரைக் கொள்ளையடித்தாவது சாப்பிடத் துணி கிருேம். உங்கள் ஈகையை என்றும் மறவோம், அம்மா!

பாட்டி :—அப்பா, இன்னும் ஏதாவது வேணுமா? உள்ளே சட்டிபானை இருப்பதை வேண்டுமாளுல் எடுத்துக்கொண்டு போ; ஆளை மட்டும் தொடாதே!

தலைவன் :—அம்மா தாங்கள் புண்ணியவதி, தங் கள் கையினுல் வயிருரச் சாப்பிட்டுத் தங்கள் வீட் டிற்கே துரோகம் செய்ய மாட்டோம்!

பாட்டி :—அப்பா என் வீடென்ன, இன்ஞெரு வீடென்ன? எல்லாம் ஒன்றுதானே. ஊர்க் குழந்தை களும் என் குழந்தைகளே! நீங்களும் என் குழந்தை கள் என்றுதான் சோறுபோட்டேன். ஆகையால் என் வீட்டைப்போலவே, இந்த ஊர் வீடுகளையும் நீங் கள் மதிக்க வேண்டும்.

தலைவன் :—அம்மா புண்ணியவதி, தாங்கள் இருக் கும் ஊர்ப் பக்கமே இனி வரமாட்டோம்!

* * *

இவ்வாறு சொல்லி, கள்வர் தலைவன்

"வானம் பொழிந்தது; பூமி விளைந்தது;
வயிறும் நிறைந்த தண்ணே"

என்று மெல்லப் பாடிஞன். வந்தவர் அனைவரும் வரிசையாக ஓடி மறைந்தனர்.

## ஒரு கிழவியின் அன்பால் ஊர் பிழைத்தது.

## VIII

விடியற்காலம் ஊர் விழித் தெழுந்தது. சுப்பையர் கொல்லைக் கொட்டிலில் சமையல் சட்டிகளையும் பலர் சாப்பிட்ட தட்டத்தையும் கண்டார். "என்னம்மா இது?" என்றார். "அப்பனே, அன்புடன் போட்ட சோறு, ஊருக்கு வந்த ஆபத்தைப் போக்கியது" என்று பாட்டி நடந்ததைச் சொன்னாள். அன்று முதல் ஊரில் திருட்டுப் பயமே கிடையாது. பக்கத்துக் கிராமங்களில் "திருட்டு, கொள்ளை" என்று செய்தி வரும்; பனையூர் அமைதியாயிருக்கும்.

ஊருக்கு உத்தமி, உபகாரி என்பதுடன் ஊரைக்காத்த **பாட்டி** என்று காமாக்ஷியை அனைவரும் வாழ்த்தினர்.

## சு. இன்னொரு முத்தம்

### I

அவன் உயிர்; அவள் உடல். தழுவிய மார்பு பிரியவில்லை; போர் முரசம் அழைக்கிறது; நெஞ்சு துடிக்கிறது; கண்ணீர் வடிக்கின்றனர்.

"வீரப்பா, நானும் வருகிறேன்."

"கண்ணுத்தா,......இரு வீட்டுடன்!"

"நீ இல்லாமல் எப்படி யிருப்பேன்?"

"பகைவரை வென்று வருகிறேன்......முரசம் அழைக்கிறது; தாமதித்தால் சொல்லுக்கிடமாகும். விடை கொடு!"

"வீரப்பா, ஒரு முத்தம்."

"கண்ணுத்தா... இந்தா!"

"இன்னொரு முத்தம்."

"திரும்பி வந்து!"

* * *

மின் இருட்டு; இடி முழக்கம்; காற்று வீசுகிறது; புலி நரிகூடத் தலை காட்டவில்லை; காட்டு வழியே வீரப்பன் நடக்கிறான்; காட்டிருளை வாளால் வீசுகிறான். மிதி 'கிறிச், கிறிச்' என்று தாளம் போடுகிறது; வீரப்பனுக்கு மெல்லப் பாட்டுக் கிளம்புகிறது:

"வீரம் பெருகுதடீ—வாள்
வீசிச் சுழலுதடீ
காரம் பெருகுதடீ—பகைவரைக்
காட்டடீ வீராயி!"

திடீரென்று தீவட்டி வெளிச்சம்! நூறு வாள் வீரர் வருகின்றனர். வீரப்பன் அவர்களுடன் சேர்

கிருன். எல்லாரும் அடர்ந்த காட்டுக்குள் சென்று மறைகின்றனர். இவர்களே சிவகங்கைச் சின்ன மருதுவின் வீரர்; கும்பினிக்காரருடன் போர்புரிபவர்.

கும்பினிக்காரர் திருமயத்தில் வந்திறங்கினர். இனி அங்கே நடப்பதைக் காண்போம்.

## II

" காப்டன் ஸ்மித்!"

" ஹலோ!"

" ஸர்தார் கண்ணையன் எங்கே!"

" கிழக்கே சத்தம் கேட்டது; நூறு சிப்பாய்களுடன் சென்றுர்."

" இங்கே உஷார்! நான் இருபது வீரரை அழைத்துச் செல்கிறேன். கொள்ளைக்காரரை இன்று வளைத்துப் பிடிப்போம்."

'பட், பட்' என்று குதிரை நடக்கிறது; அஞ்ஞு துரை செல்கிருர். அவரே கும்பினிப் படையின் தளகர்த்தர்.

திருமயம் டெப்போவில் வீரர் உறங்குகின்றனர் .........காப்டன் ஸ்மித் அங்குமிங்கும் ரோந்தடித்து வந்து, துப்பாக்கியை ஊன்றி உட்கார்ந்து, அப்படியே கண் மயங்குகிருன்.

* * *

நள்ளிரவு; காற்று அலறுகிறது; அதைக் குறட்டைகள் துளைக்கின்றன. 'இனிப் பயமில்லை' என்று வீரர் உறங்குகின்றனர். விதி அவர்களை உஷார்ப் படுத்துகிறது; ஒரு சலசலப்பு; கலகலப்பு......!" வீசு, வீசு!" என்ற சத்தம்......பிறகு......" ஹா! ஐயோ! செத்தேன்! போர், போர், பகைவர்......!" இப்படிக்

குரல்கள் புறப்படுமுன், பலர் வெட்டுண்டனர்; கோட்டை கொள்ளை போயிற்று.

"போதும், திரும்புவோம்" என்றான் சின்ன மருது; வீரர் வெற்றி முழக்கத்துடன் திரும்பினர்; திருமயம் கோட்டை அல்லோல கல்லோலப்பட்டது. காப்டன் ஸ்மித் குதிரை யேறி, ஸர்தார் கண்ணையனைத் தேடிச் சென்றான்.

வந்துவிட்டான் கண்ணையன்! "வளை, அடி, பிடி, உதை, குத்து, வெட்டு,......!" என்று படையை ஏவினான். வலுத்த சண்டை நடந்தது; அதற்குள் அஞ்ஞு துரையும் வேகமாக வந்து, 'டாம், டாம்' என்று துப்பாக்கியால் பகைவருக்குப் பதில் சொன்னார். சின்ன மருதுவின் பக்கம் ஒரு குண்டு வருகிறது... "மகராசா!" என்று அவரைப் பிடித்து ஒதுக்கினான் வீரப்பன். மருது தப்பினான்; வீரப்பனின் வலக் காலில் குண்டு பட்டது; பகைவர் அவனை வளைத்தனர்; வீரப்பன் தனது வாளைச் சுழற்றி, அவர்களைத் தன் கிட்ட வராதபடி செய்தான். அவன் வீரத்தைக் கண்டு, அஞ்ஞு துரையே வியந்தார். பத்துத் துப்பாக்கிகள் அவனைச் சூழ்ந்தன. அப்போதும் வீரப்பன் வாளை விடவில்லை; இருபது பேர் அவனைப் பிடித்துக் கட்டி, செந்தூக்காகத் தூக்கிச் சென்றனர்.

வீரப்பன் திருமயம் கோட்டையில் சிறையிடப்பட்டான். கும்பினிப் படைக்குள் இச்சம்பவம் ஒரு திருநாள் போலானது. "வீரப்பன் பிடிபட்டான்; இனி மருது சகோதரர் கை ஏறாது" என்று சர்தார் கண்ணையன் அஞ்ஞு துரைக்கு உறுதி கூறினான். சிறைக்குப் பலமான காவல் வைத்தான்.

கருவைக்காட்டில் மருது சகோதரர் கூடி ஏதோ யோசிக்கிறார்கள். அக்கூட்டத்தில் கண்ணுத்தா காணப்படுகிறாள்.

*　　　*　　　*

'மருது சகோதரரைப் பிடிக்கப் போகிறோம்' என்ற நம்பிக்கையுடன் ஸர்தார் கண்ணையன் ஒரு நாற்காலியில் சாய்ந்து கனவு காண்கிறான். அச்சமயம் இளம் வீரனொருவன் வருகிறான்; அவன் கை வாள் 'போர், போர்' என்று துடிக்கிறது.

"யார் நீ?"

"வீரன்"

"பெயர்?"

"வேலு."

"காரியம்?"

"படையில் சேர வேண்டும்."

"என்ன வேலை செய்வாய்?"

"இரவில் காவல் காப்பேன்; பகலில் வாட்பணி செய்வேன்."

கண்ணையன் தொண்டைமான் சேனைத் தலைவன். தன்னிடம் வந்து இவ்வாறு பேசிய வாலிபனின் பேச்சும் பார்வையும் கண்ணையனைக் கவர்கின்றன. தொண்டைமான் படையில் வேலுவைச் சேர்க்கிறான்; இரவில் கைதிகளை வேலு காக்கிறான்.

## III

மையிருட்டு: முகாம் உறங்குகிறது; வேலு சிறை காவல் புரிகிறான். ஒரு சிறையில் மட்டும் புலப்பம் கேட்கிறது: "உயிர் இருந்தும் மருதப்பனுக்கு உதவாமல், இப்படிக் கூட்டுக்கிளி யானேனே...

கால் காயமும் தீர்ந்தது ; உள்ளம் துடிக்கிறது ; வீர வெற்றியுடன் வீடு சேர நினைத்தேன் ; இப்படி யானதே ! கண்ணுத்தா இன்னொரு முத்தத்திற்காக நீ காத்திருப்பாயே...!"

இப்படிப் புலம்பிய வண்ணம் வீரப்பன் கொட்டுக் கொட்டென்று விழித்திருந்தான். அச் சமயம் சிறைக் கதவு மெல்லத் திறந்தது.

" யாரது ?"

" நான்தான்."

" இந்த நிசி வேளையில் கதவைத் திறப்ப தில்லையே !"

" இதுவே நல்ல வேளை. உனக்கு விடுதலை; கிளம்பு, வீரப்பா...!"

" ஆ கண்ணுத்தா ! எப்படி வந்தாய் ?"

" கதை பிறகு பேசலாம் ; கிளம்பு !"

வேலு ஆண் வேடம் பூண்ட கண்ணுத்தா தான் !

ஒரு தலையணையின் மீது கம்பளியைப் போர்த்து வைத்து, இருவரும் வெளியே வந்தனர்.

" பூனை போல் நடந்துவா!" என்றாள் கண்ணுத்தா.

" கண்ணுத்தா, நான் வீரன். பேடிபோல் ஓட மாட்டேன். கொடு இப்படி வாளை...... !"

" வீரப்பா, அதோ நமது படை வருகிறது......... கலந்துகொண்டு......பிறகு அதெல்லாம்...... "

வந்தது மருது சேனை ; வீரப்பனும் கண்ணுத் தாளும் அதிற் கலந்து கொண்டனர் ; திருமயம் கோட்டையில் மறுபடியும் ரகளை ! போர் ; கடும் போர் ! கும்பினிப் பட்டாளம் எழுந்து பகைவரைச் சுட்டுத் தள்ளியது ; பலர் தப்பி யோடினர். தொண் டமான் படை துரத்தியது. சிலர் போராடினர்.

அதோ ஒரு வீரன் வாளைச் சுழற்றிச் சுழற்றி, எதிரிகளை வீர சொர்க்கத்துக்கு அனுப்புகிறான்; அவனே **வீரப்பன்**! அவனுடன் போர் புரியும் வாலிபனை ஸர்தார் 'பரம துரோகி!' என்று குறி வைத்துச் சுட்டான். வாலிபனைக் காக்க வீரப்பன் பாய்ந்தான். அதற்குள் ஒரு குண்டு அவன் மார்பிலே பாய்ந்துவிட்டது; இன்னொரு குண்டு வாலிபனின் இதயத்தைப் பிளந்தது. இருவரும் செயலற்று விழுந்தார்கள்.

உயிர் துடிக்கிறது.

"வீரப்பா...முத்தம்!"

"கண்ணாத்தா, **இந்தா அந்த இன்னொரு முத்தம்!**"

அதுவே காதலின் கடைசி முத்திரை.

## எ. ஏழை முருகன்

### 1. பிச்சைக்காரன்

**பிச்சைக்காரன்** :— "ஐயா, வயிறு பசிக்கிறதே! இராக்காலப் பிச்சை!"

**மல்லப்பன்** :—" அடிடா மூஞ்சியிலே தண்ணீரை! பிடிவிலே பஞ்சம்! வேலை செய்து பிழை, போ!"

*  *  *  *

**தங்கராஜா** அப்பா சொல்லை மீறமாட்டான். உடனே ஒரு லோட்டாத் தண்ணீரைப் பிச்சைக் காரன் மீது அபிஷேகம் செய்து விட்டான்.

——"அட அநியாயமே,பனிக்காலம்; தூவானம்; கந்தலும் நனைந்து போனதே!. இது தருமமா, தெய்வமே!"

——" போ பேசாமல்! இல்லாவிட்டால் மொச்சைக்கொட்டைப் பாராவில் அடைக்கச் சொல்லுவேன்!"

பிச்சைக்காரன் அழுதுகொண்டு சென்றான்.

" சபாஷ்டா தங்க ரா......ஜ்...ஜா......மணி!"— என்று **மல்லப்பன்** தனது செல்லக் குழந்தையைக் கட்டி முத்தமிட்டான்.

——" அப்பா நான் மாமாமாதிரி, போலீஸ் வேலை பார்ப்பேன்!"

——" ஆமடா துரையே, உன் ஜாதகத்திலேகூட அப்படித்தான் இருக்கிறது.

## II. ஏழையின் கருணை

——"யாரண்ணே, இங்கே வா. எனக்குள்ள கஞ்சியிலே நீ கொஞ்சம் குடித்துப் போ! தலையிலே கட்டிக்கொண்டு போவதென்ன!"

——"ஐயா! புண்ணியவான்! நல்லா யிருக்க வேண்டும்!"

பிச்சைக்காரன் முருகன் சிறுகுடிலில் நுழைந்தான்.

——"இராமாயி, கூழும் இரண்டு மிளகாய்த் துண்டமுங் கொண்டுவா!"

விருந்தாளியைக் கண்டதும் இராமாயி உற்சாகமாக ஒரு தடுக்கெடுத்துப் போட்டு உட்காரச் சொன்னாள். உடனே கேப்பைக் கூழும், மிளகாயும் வந்தன.

முருகன் :—"அண்ணே, சாப்பிடுங்க! பசி எல்லாருக்கும் ஒன்று தானே!

பிச்சை:—"நீ மகராசனா யிருப்பாய். அந்தப்பாவி வீட்டிலே பிச்சைகேட்டேன்; சள்ளென்று விழுந்து, தண்ணீரை அடித்து, இருக்கிற கந்தையையும் நனைத்து விட்டான்."

முருகன் :—"அதற்கென்ன, அண்ணே! இந்தாங்க, இந்த முண்டாசு எனக்குத் தேவையில்லை, உடுத்திக் கொள்ளுங்கள்!"

முருகன் செய்யும் உபசாரத்தில் பிச்சைக்காரன் திகைத்துப்போனான்.

கஞ்சிக் கவலை தீர்ந்தது. இருவரும் காலவர்த்தமானங்கள் பேசினர். "அண்ணே, தங்களை மறக்க மாட்டேன்; அந்தப் பாவியை விடமாட்டேன்!"

என்று தன் பேச்சிற்கு முற்றுப்புப் வைத்துப் பிச்சைக்காரன் விடைபெற்றுக் கொண்டான்.

## III. போர், பஞ்சம்

தமிழ் நாடெங்கும் வெள்ளப் பஞ்சம்; பயிரும் உயிரும் சேதம்! பணத்திற்கு எட்டு மரக்கால் விற்றது, மரக்காலுக்கு நாலுபணமானது. பசியின் கொடுமை, கொடுமை, கொடுமை! தூங்கும் மனைவியை விற்றுண்ணும் கணவனுமிருந்தான்! நல்லதங்காள் சகோதரிகளும் இருந்தனர்! ஏழை எளியவர் 'கஞ்சித் தொட்டி எங்கே எங்கே!' என்று தேடியலைந்தனர்.

இந்த வெள்ளப்பாழை விடக் கொடியது போர்ப் புயல்! சென்ற ஆண்டுதான் ஹைதராலியின் துருப்புகள் வந்து ஊர்களைக் கொள்ளை யடித்தன. இந்த ஆண்டு திப்பு சுல்த்தான் திண்டுக்கல்லில் கோட்டை கட்டிப் போர்புரிகிறான். கொஞ்சம் பசையுள்ளவர் பொருளெல்லாம் அவன் படைகளுக்குப் போகின்றன. அது மட்டுமா! அத்துடன் பாஞ்சாலங்குறிச்சிப்போரும் நடந்தது.

## IV. கருமி மல்லப்பன்

மல்லப்பன் இந்தப் பஞ்சத்தில் சந்தோஷமாயிருந்தான். அவன் அரைக்காசுக்கு ஆறுநாழி மல்லாடுவான்; இம்மி வட்டி விடமாட்டான். "**மல்லப்பன் நெஞ்சு கல்லப்பா!**" என்றொரு பழமொழியுண்டு. வெள்ளப் பஞ்சம் வரப்போகிறதென்று இட்சணி சொல்லிற்றோ, என்னவோ தெரியவில்லை; மூன்று வருஷத்திற்கு முன்பே, அவன் தன் பெரிய களஞ்சி

யத்தை நிரப்பி விட்டான். பிடிவிலே பஞ்சத்திலே அத்தனையும் பவுனும், மோகராவுமானது. அவன் நெல் வியாபாரத்துடன், வட்டிக் கடையும் வைத்தான். சுக்கிரதசை அடித்தது. அக்கருமி பை பையாகப் பணத்தைக் கட்டிக் கட்டித் தன் மனையில் ஓர் இரகசியமான சுரங்கத்தில் வைத்து, மேலும் மேலும் பொன்மலர் தூவி வழிபட்டுவந்தான். அந்த அறையில், அவன் தன் மனைவியைக்கூட விடுவதில்லை. பெண்கள் ஆசாபிண்டமாம்; நகை நாணயங்கள் கேட்பார்களாம்! மூலஸ்தான சுயம்புலிங்கம் மாதிரி மல்லனின் பண மூட்டை இருந்த இடத்தை விட்டு ஓர் அங்குலம் கிளம்பாதிருந்தது. பாவம்! இலக்ஷ்மிதேவி எத்தனைக் கருமிகளிடம் இப்படிச் சிறைப்பட்டு வருந்துகிருள்! மல்லப்பனுக்கு வயது சுமார் அறுபதை எட்டிப் பார்க்கிறது. எமதர்மன், தனது வழக்கப்படி முகத்தில் வெள்ளி முத்திரை போட்டு இடுப்பையும் வளைத்து விட்டான்.

அவனுக்கு நெடு நாளாகப் பிள்ளையில்லை. சுமார் நான்கு தாரங்களை அடுத்தடுத்து விவாகம் செய்து கொண்டும், பலனைக் காணும். ஐந்தாமவள்தான் **பாலாம்பாள்**. பிள்ளையில்லாக் குறை பெண்களுக்குப் பெருங்குறையா யிருக்கும். பிள்ளைகுட்டி பெற்றுச் சந்ததி பெருகுவதே வாழ்விற்கு இன்பம். பாலாம்பாள் தூண்டுதலால்—இதற்காக மல்லப்பன் சிறிது பணமும் செலவிட்டு—காசி, இராமேஸ்வரம், நாகப் பிரதிஷ்டை, அஸ்வத்தபிரதக்ஷணம் ஆகிய எல்லாம் பார்த்து, முடிவில், ஒருவழியாகத் **தங்கராஜா** பிறந்தான். தங்கமே தனது தெய்வமானதால் மல்லப்பன் தன் செல்லப் பிள்ளைக்கு இப்பெயரிட்டான். தங்கராஜா

மூன்று வயதிலேயே வெடுக் வெடுக்கென்று சுண்டைக்காய் கடித்தாற் போலப் பேசினன். மல்லப்பனிடம் கவிபாடி வயிறு வளர்க்கும் வித்வான்கள் வந்தால் காது கேளாது, சல்லி புரளாது; தங்கராஜாவின் சுண்டைக்காய்ப் பேச்சென்ருல் பரமானந்தப் பட்டு, இப்படிப்பட்ட பிள்ளை பெற்றதற்காக, மனைவிக்கு நகை நாணயங்கள் கூடத் தரத்துணிவான். மற்றைப்படி அவன் எச்சிற்கையால் ஈ கூட ஓட்ட மாட்டான்.

ஆனல், கானூரில் சர்க்கார் உத்தியோகஸ்தர் யாராவது வந்துவிடவேண்டும்; அன்று அமளி! மல்லப்பன் தாண்டுகால் போட்டு அவர்களை உபசரிப்பான்; சோடசோபசாரங்களும் செய்து, உச்சிமுதல் உள்ளங்கால் வரையிற் குளிரவைத்து அனுப்புவான். ஒரு தஹஸீல்தார் நம் மல்லப்பருக்கு '1220-ஆம் பசலிக் கர்ணன்' என்றும் பட்டம் கொடுத்து விட்டார். இதிலும் காரிய மில்லாமலில்லை. அதிகாரிகள் சலுகை சாமானியமா? மல்லப்பன் எது சொன்னலும் மேலாவிலே செல்லும். ஒருவனை மாட்டிவைக்கவோ, பொய் வழக்கு ஜோடித்துப் பாராவில் போடவோ, மல்லப்பனல் முடியும். அவன் தன் பந்துக்களுக்கெல்லாம் நல்ல உத்தியோகம் வாங்கித் தந்தான். பாலாம்பாள் அண்ணன் முத்துவுக்கு டாணவில் அதிகாரி வேலை. (மல்லப்பனுக்கு அடிக்கும் வேட்டை தான்!) ஊரெல்லாம் மல்லப்பன் என்ருல் நடுக்கம்.

## V. முருகன்

மல்லப்பன் வீட்டுக் கொல்லைப்புறம் முருகன் சிறுகுடில் இருந்தது. அதில் தம்பி, தங்கை, தமக்கை

குழந்தைகள்—இவர்களுடன் முருகன் வசித்தான். தங்கை கணவனுக்குப் பண்ணைச் சேவகம். தமக்கை **இராமாயி** கணவன் பிஞுங்கில் தோட்ட வேலை பார்த்தான். தம்பி வடிவேலுக்குப் பரிசம்போட்டிருக்கிறது. அவன் ஆடு மாடு மேய்த்து வருகிறுன். பலபீமஞன இராமமூர்த்தி மார்பில் யானையைத் தாங்குவது வியப்பன்று; முருகன் இக்குடும்பத்தைத் தாங்குவதுதான் வியப்பு.

முருகன் மகாபலசாலி; அஞ்சா நெஞ்சம் படைத்தவன்: ஆள் ஆறடி எட்டங்குலம்; மார்பு 54 அங்குலம் சுற்றளவு; மலைபோலத் தோள்கள்; கொல்லன் சம்மட்டிபோலக் கைகள்; உரத்துப் பெருத்து இறுகித் தடித்துக் கட்டுமஸ்தான பயில்வான் சரீரம்! வாள், சிலம்பம், குஸ்தி, ஓட்டம் எதிலும் யாரும் முருகனை மிச்சங் கொண்டுபோக முடியாது. பதக்கமும் விளம்பரமுந்தான் இல்லை அவனுக்கு; மற்றைப்படி தகுதியெல்லாம் உண்டு. ஒரு காரியம் வந்தால் அவன் சமயோசிதமாக நடந்து கொள்ளுவான்; நல்ல பரோபகாரி; 'கூடப்பிறந்தவர் குடும்பம் பிழைத்தால் போதும், நமக்கொரு கால்கட்டும் வேண்டாம்' என்று அவன் கலியாணம் செய்து கொள்ள மறுத்து விட்டான்.

முருகன் காட்டில் விறகு வெட்டிப் பெரிய சுமை கொண்டுவருவான், பனையோலை சீவுவான், கீற்று முடைவான், சுவர் வைப்பான், தோட்டம் போடுவான், குடும்பத்திற்குத் தன்னைக் கட்டும்படி பாடுபடுவான். தம்பி மாடு மேய்ப்பான்; பால் தயிர் கிடைக்கும். பொங்கல், தீபாவளிக்கு நாலுமுழ லேஞ்சிகள் வரும். ஜல்லிக்கட்டு மாடுகளை விடாது பிடித்து

அதில் கொஞ்சம் வரும்படியும் துண்டுகளும் வரும் அவற்றை இராமாயி மூட்டிப் பெண்களுக்கு இரண்டு சுற்றுச் சிற்ருடை தைப்பாள். பெண்கள் எருமுட்டை தட்டி விற்பர், அரிசி தீட்டுவர், நூற்பர். வீட்டில் கேப்பை, கிடைத்த காய்கறி, கடித்துக்கொள்ள மிளகாய்த் துண்டம்—இவைதாம் மாமூல் உணவு. அதுவும் இரண்டு வேளை தான்.மீன், ஊன்—எதுவும் கிட்ட வரக்கூடாது; முருகன் கண்டிப்பு. அவன், காலை நீராகாரம் உண்டு, குழந்தைகளைக் காட்டிற்கு அழைத்துச் சென்று, விறகு வெட்டிச் சிறுசிறு சுள்ளிக்கட்டுகளை அவர்கள் தலையில் ஏற்றி, அரைப்பணத்திற்கு விற்றுவரச் சொல்லுவான்; தானும் நாலு பணம் பெறக்கூடிய விறகுக் கட்டைச் சுமந்து செல்வான். ஐந்து மணிக்கு விற்றதைக் கொண்டு வருவான். அதன் பிறகுதான் இத்தனைப் பேருக்கும் கஞ்சி வைப்பாள் இராமாயி. முருகன் வியர்வை போக ஆவாரங் குழையரைத்துக் குளித்து, உவர்மண் போட்டு வேட்டியை வெளுத்து உலர்த்தி முற முற வென்று உடுத்தி, முருகையா கோவிலை எட்டுத்தரம் சுற்றிக் கும்பிட்டு, 'முருகா, முருகா' என்று 108-தரம் உருவேற்றி, ஒரு சூடனைக் கொளுத்தி வைத்து, "ஏழையால் முடிந்தது இவ்வளவுதான். என்னைக் கண் பார், முருகையா!" என்று மனங் குழைந்து வீடு திரும்புவான்.

வழியில் அதிதி பரதேசிகளைக் கண்டால், தன்னுடன் அழைத்து வந்து, தனக்குள்ளதை அவர்களுக்கும் தருவான். குடும்பம் முழுதும் இதே ஒழுங்கில், இதே அச்சில் வார்க்கப்பட்டது; சோற்றுக் கவலை தான் இடையிடையே; வேறு கவலையில்லை. கிராமச் சவுக்கத்தில் கந்த புராணம், கம்பராமாயணம், பார

தம் முதலியன நடக்கும். இவற்றைக் கேட்டுக் கேட்டு, முருகன் அறிவு பெற்றான். அவனுக்குச் சில தேவாரங்கள் வரும். வேறு எழுத்து வாசனை கிடையாது. இருந்தாலும் இயலறிவு மிகுதி.

முருகனுக்குப் பெரிய பெரிய எண்ணங்களுண்டு. நாட்டின் நடப்புகளெல்லாம் அவனுக்குத் தெரியும். தொண்டமான்சேனை இங்கிலீஷ்காரருக்குஎன்னஉதவி செய்திருக்கிற தென்றால், முருகனைக் கேட்கலாம். இப்போது கும்பினிப் பட்டாளம் எந்தக் காட்டில் முகாம் போட்டிருக்கிறது என்றால், முருகனைக் கேட்கலாம். சிவகங்கைச் சீமையில் சின்ன மருது, பெரிய மருது, ஊமைத் துரைமார்கள் என்ன செய்கிறார்களென்றால் மருள் வந்தவன் மாதிரி சொல்வான்.

இப்படிப்பட்ட முருகனைக் கண்டால் மல்லப்பனுக்கு மனதில் திகில்தான்; இந்தப் பயலை எப்படியாவது தனது அடிமையாக்க வேண்டுமென்று அக் கருமி கஜகர்ணம் போட்டுப் பார்த்தான். "அடிமை" என்றால் முருகனுக்கு வெகு எரிச்சல் வரும். "நமக்கெல்லாம் மேலே ஆண்டவன் இருக்கிறான்; அவன் எல்லாருக்கும் படி யளக்கிறான். ஏதோ அவனை நம்பிப் பாடுபட்டு அவரவர்கள் பிழைக்கிறார்கள். ஒருவருக்கொருவர் அடிமை யென்ன? 'நாமார்க்கும் குடி யல்லோம்; நமனை யஞ்சோம்" என்று அவன் தைரியமாகச் சொல்வான். இருந்தாலும் சமயா சமயங்களில் தேகப்பிரயாசைப்படப் பின்வாங்க மாட்டான். முருகனிடம் அகங்காரமில்லை; சுதந்தர உணர்ச்சி அதிகம். "முருகா வைத்தியரைக் கூட்டிவா; அடுத்த ஊருக்குச் செய்தி கொண்டு போ; சந்தையில் சாமான் வாங்கிவா!" என்றால் செய்வான். இப்படி

மல்லப்பனுக்குப் பல தடவை உதவியிருக்கிறான். அப்போது பாதி அழுகின பழங்கள், ஊசல் பணி காரங்கள், புளித்த காடி, கட்டிக் கழித்த கந்தை— இவற்றைக் கொடுத்து, "இந்தாடா பயலே, பிழைத் துப்போ; எஜமானனிடம் விஸ்வாசமா யிரு!" என்று தாராளமாய்ச் சொல்வான் மல்லப்பன். அவற்றையும் ஏழை, **முருகன் சகாயம்** என்று பெற்றுக்கொண்டுவந்து வீட்டில் தருவான்.

## VI. வறுமை, வறுமை

ஐப்பசி கார்த்திகை அடைமழை. வைகை வழிந்து பயிர்களையும் உயிர்களையும் வாரிச் செல்லு கிறது. காஞூரெல்லாம் கசகச வென்றிருக்கிறது. ஆள் வெளியே தலைகாட்ட முடியாது. விறகு வெட் டப் போவதெப்படி? ஆறுநாளாக வீட்டில் ஏகா தசி! முருகன் யாரிடமும் கையேந்த மாட்டான். "முருகன் செயல் நடக்கட்டும்!" என்றுதான் இருந் தான். ஆறாவது நாள்; குழந்தைகள் அழக்கூடச் சீவனில்லாது துடித்தன. "முருகா, ஒரு வேலையு மில்லாது தொந்தி சுமக்கும் அநியாய மல்லப்பனுக்கு அவ்வளவு பணமும், அமுலும் கொடுத்தாய்! ஒரு பாவமும் அறியாது, பாடு படும் எளியவரை ஏன் பட்டினி போடுகின்றாய்?" என்று மனமுடைந்தான் ஏழை.

அன்று தீபாவளி; ஊரெல்லாம் சீனி வெடி சுட்டு, நரகாசுர யுத்தம் படபடக்கிறது! மல்லப்பன் வீட்டில் சம்பந்திகள் வந்திருக்கிறார்கள். உப்பட்டும், வெள்ளை யப்பமும், போளியும், உக்கரையும், காப்பியுமாகப் போட்டு நிரப்பி, மல்லப்பன் உறவினரோடு தமா

ஷாகப் பேசிக் கொண்டிருக்கிறன். தங்கராஜா பட்டுக்கரை வேட்டி யுடுத்தி, "பட்டுப் பட பட்பட படபசட்" என்று படாரமடித்துக் காசைக் கந்தகப் புகையாக்குகிறன். அப்போது முருகன் தோன்றி ஞன். "என்னடா முண்டா, இன்றைக்கு வேலை யில்லை; இங்கே வந்து தொங்காதே, போ!" என்று கருவமாகப் பேசித் தன் காரியத்தைப் பார்த்தான் கருமி. தங்கராஜாவும் ஒரு யானை வெடியை அவன்மேல் எறிந்தான். 'கடவுளே, ஏழைமுகம் பார்க்க யாருமில்லையா?" என்று முருகன் வீடு திரும் பிப் பல யோசனைகள் செய்தான்.

## VII. நாடகம்

அன்றிரவு, மூன்று மைலுக்கு அடுத்துள்ள செம்ப ஞரில், தஹஸீல் தாமோதரம் ஏற்பாட்டில், பார்வதி கல்யாணம் நாடகம் நடக்கிறது. வித்வான் பாஸ்கரன் பரமசிவன்; சபாரஞ்சிதம் சாமண்ணு பார்வதி; குயில் குப்பண்ணு ரதி; ஜோர் செல்லப்பா மன்மதன்; பலே கிட்டண்ணு குண்டோதரன்.........எல்லாரும் சாஸ்திரம் படித்தவர்கள்; பெரிய கவிராயரிடம் பாடங் கேட்டவர்கள்; பல சமஸ்தானங்களில் தோடாப் பெற்றவர்கள். கேட்க வேண்டுமா? சிவன் கோயில் மண்டபத்தில் எள்ளுப்போட இடமில்லை, கூட்டம்! காரியங்களெல்லாம் வீரத்தேவன் பார்வை யில் நடந்தன. மல்லப்பனுக்குத் தனி உபசாரங்க ளுடன் அழைப்பு வந்தது. நாலு மயிலைக் காளை வண்டிகளுடன் வீரத்தேவன் வந்து நின்முன். வீட்டை வெகு கவனமாகப் பூட்டி முத்திரை வைத்துவிட்டு, மல்லப்பன் குடும்பத்தோடு நாடகம் பார்க்கப் போய்

விட்டான். விடிய நாலு மணிக்குத்தான் கைலாசத்தில் சகல தேவரும் புடைசூழப் பரமசிவன் பார்வதிக்கு மாங்கல்யதாரணம் செய்தான். "நமப்பார்வதீ பதயே—ஹரஹர மஹாதேவ! மங்களம்! மங்களம்! மங்களம் பவந்துதே மங்களம், மங்களம்!" என்று வெண்கலத் தொண்டை வேணு பாகவதர் சுருட்டியில் ஒரு பிர்க்கா வாங்குகிறார்! மத்தளம் மகாதேவனுக்குச் சடசடவென்று (கைதட்டல்) அப்ளாஸ் விழுந்தது. சுண்டல் விநியோகம்.....மல்லப்பனும் விழித்துக் கொண்டான்.

## VIII. உதவி

முருகனுக்கு உறக்கமில்லை; உலகில் நல்லோர் வருந்துவதும், செல்வத் திமிர் பிடித்தவர் ஏழைகளை நசுக்குவதும், என்ன நியாயம்? கடவுள் ஒருவர் இருந்தால் உலக நீதி இவ்வாறு வக்கரிப்பானேன்! "முருகா உன்னை நம்பினேன்; பாடுபட்டு உழைக்கிறேன். இந்த ஆறுநாளாக வேலையில்லை; கொன்றாலும் வேறொருவரைக் கேட்கமாட்டேன். எல்லாருக்கும் படியளக்க நீயிருக்கையில் யாரைக் கேட்பேன்? முருகா, உன்பெயர் சொல்லி இப்படியே குடும்பத்தோடு சாகிறோம்" என்கிறான் ஏழை. பிறகு தனது குடும்பத்தைத் தேற்றினான்.

சுமார் மூன்று மணி; முருகன் அன்றாயினும் விறகு வெட்டச் செல்லலாம் என்று வானத்தைப் பார்க்க வெளியே வந்தான். காலில் ஏதோ தடுக்கியது! என்ன? என்ன ஆச்சரியம்! ஒரு கூடை நிறையப் பணிகாரங்களும் கட்டுச் சோறும்! அவைமட்டுமா! ஒரு பையில் ரூ. 100! அதனுள் "முருகன் துணை"

என்று ஒரு சீட்டிருந்தது! என்ன ஆச்சரியம்! எல்லாரும் எழுந்து, பல் விளக்கி, கடவுளை நினைத்துக் கும்பிட்டு, பசிப்பிணியைத் தீர்த்துக் கொண்டனர். ஆனால், முருகனுக்குப் பணத்தைத் தொடச் சந்தேகம். தான் சம்பாதிக்காத பொருளைக் கடவுளே "இந்தா" என்று கொடுத்தாலும் அவன் விரல் போட்டுத் தொடமாட்டான். ஆதலால், அதைக் கட்டி ஒரு மூலையில் வைத்து, "புலன் விசாரித்துக் கொடுத்து விடுவோம்" என்று எண்ணினான்; "ஆண்டவன் இருக்கிறான்; அன்பரைக் காக்கிறான்" என்று நம்பினான். இறைவன் கருணையை நினைந்து நினைந்து மனங் கசிந்துருகினான் அன்பன்.

## IX. மல்லப்பன் பாய்ச்சல்

கதிர் எழுந்தது, வானம் வெளி வாங்கியது; பூமாதேவி பசுநகை குலுங்குகிறாள். மாந்தர் உள்ளமெல்லாம் இரவிக்கு வந்தனங் கூறுகிறது; தொழிலுலகம் சுறுசுறுப்பாக நடக்கிறது. மணி ஏழிருக்கும்; முருகன் சிறுவர்களைக் கூட்டிக்கொண்டு கோடரியுடன் விறகு வெட்டக் கிளம்பினான். விறகு விற்றுத்தான் அன்று பிழைப்பு. இராமாயியும், செல்லாயியும் வேறு வேலை யில்லாததால், கைவசமிருந்த கொல்லைப் பருத்தியை வில்லடித்துத் திரித்து நூற்கத் தொடங்கினர். தம்பி மாடு மேய்க்கச் சென்றான். "வேல் முருகன் சகாயம்" என்று நம் முருகன் வாசலில் வந்தான்.

"நில்லடா, முண்டா! எங்கே ஓடிப்போகிறாய்! உன்னை விடமாட்டேன்! சொல் உள்ளதை!" என்று வெறிபிடித்தாற்போல வந்தான் மல்லப்பன். பின்னால் டாணுமுத்து பரிவாரங்களுடன் வந்தான். என்ன

இது? முருகனுக்கு யாதும் விளங்கவில்லை. "என்ன செய்தி? ஏழைமீது ஏன் இத்தனைப் புலிகளுடன் பாய்கிறீர்?" என்று அவன் தைரியமாகக் கேட்டு விட்டான். பிடித்தது சனி! "இவனைக் கட்டடா முத்து! வீட்டைச் சோதனை செய்யலாம்" என்றான் மல்லப்பன். இத்தனைப் பேரையும் ஒரு முண்டு முண்டி இரண்டில் ஒன்று பார்த்துவிட முருகனுக்குப் பலம் உண்டு. என்றாலும், "கடவுள் உண்டு; நம்மீது பிச கில்லை, தருமநியாயப்படி எல்லாம் நடக்கும்" என் றெண்ணிப் பொறுத்திருந்தான். "நான் ஒரு குற்ற மும் அறியேன். வீட்டைத் தாராளமாய்ச் சோதனை போடுங்கள்! ஒன்றுமட்டும் சொல்லி விடுகிறேன்; இரவு மூன்று மணிக்கு வெளியே வந்தேன். காலில் ஏதோ தட்டுப்பட்டது; பார்த்தேன். ஒரு கூடையில் உணவும், ஒரு பணமுடிப்பும் இருந்தன; உணவைச் சாப்பிட்டோம். இதோ பணமுடிப்பு; நான் மனதார உழைக்காதது எனக்கு வேண்டா; வாங்கிக் கொள் ளுங்கள்! வேறு எதுவும் நானறியேன்; கடவுளுக்குப் பொதுவாகச் சொல்லுகிறேன்" என்றான். மல்லப்பன் ஆவலாகப் பணத்தைப் பெற்றுக் கொண்டு "முத்து, காரியம் நடக்கட்டும்!" என்றான். உடனே போலீஸார் ஏழைக்கு விலங்கு மாட்டித் தள்ளிக்கொண்டு சென்றார்கள். அதிகம் சொல்வானேன்! முருகன் செம்பனூர் டாணாவில், ஓர் இருட்டறையில் 144-வது எண் கைதியாக அடைபட்டான். என்னகாலம்!

## X. திருட்டு

நடந்ததென்ன? செம்பனூருக்கு நாடகம் பார்க் கப்போனவர்கள் காலை 5-மணிக்குத்தான் கானூருக்கு

வந்து சேர்ந்தார்கள். மல்லப்பனுக்கு உடல்தான் நாடகமண்டபத்தில்; உயிர் முழுதும் இங்கே பணப் பையில் இருந்தது. வீட்டில் அடியெடுத்து வைக்கும் போதே, தங்கராஜா "நச்" சென்று தும்மினான். மற்றவர் தும்மியிருந்தால் ஒரு ஸஹஸ்ரநாமம் நடந் திருக்கும். 'நமது குழந்தையே' என்று சும்மாவிட் டான் மல்லப்பன்.

அவன் வாசல் பூட்டைத் திறந்தான்; கதவு திறக்கவில்லை; உள்ளே பலமாகத் தாழிட்டிருந்தது. அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது! "ஐயையோ உள்ளே யாரோ புகுந்து தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு, கொள்ளை யடிக்கிறார்கள்!" என்று ஒரே கூக்குரல்; ஊர் இரண்டானது. டாணுமுத்து தைரி யம் சொன்னான். எல்லாரும் கொல்லைப்புறம் போய்ப் பார்த்தார்கள்; கன்னம் வைத்திருந்தது; மல்லப்ப னுக்கு உயிர் துடித்தது; 'லபோ லபோ' என்று நெஞ்சிலே அடித்துக்கொண்டு அலறினான்.

டாணாக்காரர் கதவை நெம்பிக்கொண்டு வீட்டுக் குள் சென்றனர். வீடு காலி! மல்லப்பன் தனது இரக சிய அறைக்குச் சென்றான்; "ஐயையோ போச்சே போச்சே!" என்று விழுந்தடித்து அலறினான். "நான் தோண்டிய பணக்குழி என் பிணக்குழி யாகட்டும்; பணம் போனபின் இனி உயிர் வைத்திருக்க மாட் டேன்," என்று மூர்ச்சித்தான். டாணாக்காரர் பரி சோதித்தனர். ஒரு மூலையில் ஒரு பணமும், ஓலைச் சீட்டும் இருந்தன. ஓலைச் சீட்டில் "கருமித்தனம் பண்ணாதே; இந்தா உன் வாய்க்கரிசிக்காக ஒரு பணம் வைத்திருக்கிறது. ஆண்டவன் செயல்!" என்று எழுதியிருந்தது!

## XI. தீர்ப்பு

முருகனே மோசஞ் செய்தான்; கூட்டுக் களவாணிகளைச் சொல்லமாட்டேனென்கிறான் என்று மல்லப்பனும், டாணு முத்தண்ணுவும் சந்தேகித்தனர்; முருகன் நகக்கண்களில் ஊசியேற்றினர்; முதுகில் சூடுபோட்டனர்; பட்டினி போட்டனர்; "சொல் உண்மை!" என்றனர். "உண்மைதான் சொல்லுகிறேன்; நான் ஏதும் அறியேன்; என்னை நம்பாவிட்டால் செய்வது செய்யுங்கள், தெய்வம் உள்ளது!" என்றான் முருகன். மல்லப்பனின் செல்வாக்கினால் ஒருதலைப் பட்சமாக விசாரணை நடத்தப்பட்டு, முருகன் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டான். ஒரு மாதத்திற்குப் பிறகு முருகனைப் போலீஸ் பந்தோபஸ்துடன் மதுரைக்கு அழைத்துச் சென்றனர். கஜானுப் பெட்டியும் இவர்களுடன் சென்றது. எல்லாரும் வண்டியூருக்கு அருகே வந்து டிகாணு போட்டனர். அவர்களை இங்கே நிறுத்தி, இடையில் நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்வோம்.

## XII. கொள்ளை

கட்டை பொம்ம நாயக்கன் என்னும் **கறுத்தையா** அக்காலவீரன். அவன் உடன்பிறந்த சிங்கம் **ஊ**மையன்; வயது 26 தான்! வாய் பேசாது என்றால் கையும் மூளையும் வட்டிபோட்டுச் செயலால் பேசும். அவனுக்கு மஹா சக்தி உபாசனை. பாண்டி நாடெங்கும் இவர்கள் கலகம் தூண்டினார்கள். வில்லடிச்சான் கோயில், தெருக்களில் காளியாட்டம், சின்னிப் பொம்மையாட்டம், பிச்சைக்காரர் பாட்டு முதலிய

பல வழிகளில் இவர்கள் ஜனங்களுக்குத் தமது கருத்தை அறிவித்தனர். பக்குவம் பார்த்துக் கட்டை பொம்மு வரிகட்ட மறுத்துவிட்டான்; "வானம் பொழியுது, பூமி விளையுது, மன்னவன் காணிக்கை ஏதுக்கடா?" என்ற பல்லவியுடன் சுதந்தர வரிசைகளைத் தொடங்கினான். இராமநாதபுரம் கலெக்டர் நேரே ஆஜராகும்படி வாரண்டு அனுப்பினார். சகோதரர் சென்றனர்; அங்கே தந்திரமாகத் தப்பி வெளியேறி இரண்டு அரசாங்க ஊழியரையும் கொன்று, பாஞ்சாலங் குறிச்சிக்குத் திரும்பி வந்து கொடியை உயர்த்தினர். மேஜர் பானர்மான் பாஞ்சாலங்குறிச்சியை முற்றுகை போட்டான்; இரு தரப்பிலும் வலுத்த சண்டை, சேதம். கோட்டை தகர்ந்தது. கட்டை பொம்மு, ஊமையன் வகையருக்கள் தந்திரமாகத் தப்பியோடி சிவகங்கைக் காடுகளில் மறைந்தனர். அம்பலக்காரரொருவர் துணையால் கட்டை பொம்மு பிடிபட்டு, 1799-ல் தூக்கிடப்பட்டான். ஊமைத் துரையும், அவனுக்கு வலக் கையாக உதவிய சுப்பிரமணியப் பிள்ளை என்பவரும் பாளையங் கோட்டையில் பலமான காவலில் வைக்கப்பட்டனர்.

ஊமைத் துரை பாளையங்கோட்டையினின்று எப்படியோ தப்பி, பாஞ்சாலங் குறிச்சிக்கு வந்து, அண்ணன் கட்டிய கோட்டையைவிட பலமான கோட்டைகட்டிக் கொடி நாட்டினான். ஆள் நெட்டை, ஒல்லி ; வசீகரமான முகம். அவன் சாடைகாட்டினால் போதும். காந்தம்போல் அவனைப் பின்பற்றினர் வீரர். 1801-ல் கர்னல் அஞ்ஞுதுரை வெகு பாடு பட்டுப் பாஞ்சாலங் குறிச்சியைப் பிடித்து விட்டார். ஊமையனைத் தேடினர் பகைவர். ஊமைச் சிங்கம்

ஓசைப் படாமல் ஓடிப்போயிற்று ; எங்கு? சிவகங்கைக்கு. அங்கென்ன?

மற்றொரு சம்பவம் ; சின்னமருது, பெரிய மருது என்ற பலபீமர்கள் ஊமைத் துரையைக் குதூகலமாக வரவேற்றனர். இந்த மருது சகோதரர் உடையனத் தேவருக்கு அடைப்பக்காரரா யிருந்தனர். பெரிய மருது அசகாய சூரன் ; போரிற் புலி ; அவனது திறமையை ஆங்கிலேயரே வியந்தனர். அவன் கை தூக்கினுல் ஊர் கிடுகிடுக்கும். தமது வீரத்தால் மேலோங்கி இந்த மருது சகோதரர் நாட்டுத் தலைமை வகித்தனர். நினைத்தபோது 10,000 வீரமறவர் படை அவர்கள்முன் நிற்கும். தீயோடு காற்றும் சேர்ந்தது போல ஊமைத்துரையும், இவர்களுடன் சேர்ந்தால் கேட்கவேண்டுமா? திருமயத்தில் ஊமையன் பெரிய கோட்டைகட்டிப் போர் தொடுத்தான். திருமயம், திருப்புத்தூர், சிறுவயல், கண்ணன்குடி, காளையார் கோயிலெல்லாம் அக்காலம் போர்க் களங்கள். அஞ்ஞுதுரையின் படைகளுக்கும் புதுவைத் தொண்டமான் படைகளுக்கும் கண் மூடாது வேலை ; காளையார்கோயில் காட்டில் ஒளிந்த புரட்சிக்காரரைக் கண்டு பிடிப்பதே கடினமாயிருந்தது. காளையார் கோயில் காட்டை வெட்டி அவர்களைப் பிடிக்க முயன்றனர். ஒரு புதரில் கை வைத்தால்—டபார்! ஆள் அந்தரம்! புதர்களில் வெடி மருந்துகள்! அந்தக் கதை இத்துடன் நிற்கட்டும்; நமது கதைக்கு வருவோம்.

செவ்வானத்தில் இருள் படர்கிறது ; குளிர் காலம் ; பூமி தேவி கறுப்புக் கம்பளி போர்த்துச் சத்தமடங்கியிருக்கிருள். டாணு வீரர் 'இனிப் பயமில்லை'

என்று அங்கு மிங்கும் உட்கார்ந்து, கட்டமுதுண் டனர். சிலர் தீவட்டிகளுடன் கஜானப் பெட்டியைக் காத்தனர்.

'தடார் தடார்' என்று சத்தங் கேட்டது; 'பளார் பளார்' என்று டாணு வீரர் முதுகில் விழுந் தது. என்ன இது! முருகன் கட்டு அவிழ்ந்தது ; ஒரு கொள்ளைக் கூட்டம் இவர்களை வளைத்துக்கொண்டது. முத்துமாமா குற்றுயிரானார். "ஐயா, ஒரு தடி கொடுங் கள். இத்தனைப் பேரையும் சிலம்பம் வீசி ஓட்டு கிறேன்" என்றான் முருகன். போலீஸார் மறுத்து விட்டனர். துப்பாக்கிகள் போனவிடம் தெரியவில்லை ; பல டாணு வீரர் கட்டுண்டனர் ; முருகன் மாய மானான். இருவர் தப்பி மதுரைக்கு ஓடினர் ; மேலதி காரிகளுக்குச் செய்தி கொடுத்தனர். கஜானு போன விடம் தெரியவில்லை எல்லாம் அரைமணிக்குள் நடந்த அமளி! என்ன மாயம்!!

## XIII. வீரையா

நள்ளிருள் ; நடுக்காடு ; அதனிடையே ஒரு வெளி; அதில் அங்குமிங்கும் குடிசைகள் ; அவற்றில் விளக்கு கள் மின்னுகின்றன. சுமார் 200 முண்டர்கள் அங்கே கூடிக் குதூகலமா யிருக்கின்றனர். அவர்களிடையே முருகன் காணப்படுகிறான். "சபாஷ், **வீரையா**! நல்ல போடுபோட்டாய். கானூர் பணமும் கஜானுவும் உண் டெனக் கிடைத்துவிட்டன. இனி நமது மருதப்ப ருக்கும் குமரப்பருக்கும் (ஊமையன்) ஜயந்தான். தொண்டியிலிருந்தும் அரிசி மூட்டை வந்திருக்கிறது." இதுவே அவர்கள் பேச்சின் சாரம். வீரையா யார்? பார்த்தான் முருகன்....ஆ, **பிச்சைக்காரன்!** இவனு

மல்லப்பன் வீட்டில் கொள்ளையடித்தவன்! உண்மை தெரிந்தது. பண்டமொரு பக்கம் பழியொரு பக்கம்—இதென்ன விதி!

எல்லாரும் சற்றுக் கண்ணயர்ந்தனர். வீரையா முருகனைத் தனியே அழைத்துப் பேசினான்:

வீர:—என்னைத் தெரிகிறதா?

முரு:—நல்லா; நம் விருந்தாளி யல்லவா?

வீர:—நூறு ரூபாயும், கட்டுச்சோறும் கிடைத்ததா?

முரு:—அண்ணே, தாங்களா வைத்தீர்கள்? ஆ! அதனாலேதான் எனக்குக் கடுங்காவல் கிடைத்தது.

வீர:—மல்லப்பனுக்கு எழுதிவைத்த சீட்டைப் படித்தாயா?

முரு:—கச்சேரியிலே படித்தார்கள்; கேட்டேன். கருமிக்குச் சரியான தண்டனைதான்; இருந்தாலும்...

வீர:—இருந்தாலுமென்ன? செத்தாலும், அவனை விடுவேனோ? செம்பனூரில் நான்தான் வீரத்தேவனைத் தூண்டி நாடகம் ஏற்பாடு செய்தேன். நான்தான் மல்லப்பன் வீட்டை அன்றே பொட்டலாக்கினேன். பணமெல்லாம் நம்ம ராஜாவுக்குப் போகிறது. மறுபடியும் இன்றைக்குக் காஞர் முகாம் நடக்கிறது!

முரு:—ஆ! அப்படியா: அவர்கள் கண்டுபிடிக்க முடியவில்லையே.

வீர:—நடக்குமா? அண்ணே, தாங்கள் நல்ல பலசாலி! தங்களுக்கு வேண்டிய ஆதாயம் கிடைக்கும்; எங்களோட சேர்ந்திடுங்கள்.

முரு:—விடிந்து யோசிப்போம். ஆனால் நான் ஒரு யோசனை சொல்லுகிறேன் கேளும்: கும்பினி கை வலுவாயிருக்கிறது. நாளை என்ன நடக்குமோ தெரி

யாது. வாருங்கள் என் பின்னே! ஒரு பெரிய நிலம் வாங்கி உழுது சாகுபடி பண்ணி மானமாகப் பிழைப் போம்.

வீர :—அப்படித்தான் எனக்கும் யோசனை. ஆனல்....

திடீரென்று முரசொலி கேட்டது. தீவட்டிகள் ஆயிரக்கணக்காக வந்தன.

கலகக்காரர் நாலாபுறமும் ஓடிப் போயினர். செய்தி மட்டும் முருகனுக்குத் தெரிந்தது :—"தொண் டமான் ராஜா ஊமையனைப் பிடித்துக் கொடுத்து விட்டார். பெரிய மருது திருப்புத்தூரில் தூக்கிலிடப் பட்டான். கும்பினிக்காரருக்கு வெற்றி! ஒரு பிள்ளை துப்புச்சொல்லி விட்டான்! கானூரைக் கொள்ளை யடித்தவர்கள் பெயர் ருசுவானது. அவர்களைப் பிடிக்கச் சிப்பாய்கள் வருகிருர்கள்! உடனே தப் பித்துக் கொள்ளாவிட்டால் தலை தப்பாது."

## XIV. விடுதலை

சிப்பாய்களும் ஆங்கில வீரரும் காட்டை வளைத் துக் கொண்டு சுட்டனர். திருடர்கள் பலர் பட்டனர்; மீதி எல்லாரும் பிடியுண்டனர். வீரையாவை விலங்கு மாட்டிச் செம்பனூருக்குக் கொண்டு போனர்கள். முருகன் மட்டும் தப்பிக்கொண்டு கானூர் சேர்ந்தான். அங்கு மல்லப்பன் பண ஏக்கம் பிடித்து இறந்து போனன். டாணு முத்துவும் காயப்பட்டு மதுரை ஆஸ்பத்திரியில் இறந்துபோனன். மல்லப்பன் சம் சாரம் வீட்டை விற்று வந்ததை எடுத்துக்கொண்டு திருப்பரங்குன்றத்தில் பிறந்தவீட்டில் வசித்தாள். தங்கராஜா அங்கே பள்ளிக்கூடத்தில் படித்தான்.

முருகன் வீடு, வெள்ளத்தால் விழுந்து விட்டது. குடும்பம் போன இடம் தெரியவில்லை. 'நேற்றிருந்தவர்களை இன்றைக்குக் காணேம்; உலக வாழ்வு இப்படி யிருக்கிறது. இனி, நாம் யாராயினும் பெரியாரை அண்டித் தொண்டு செய்து, கடவுளன்பில் காலங்கழிப்போம்' என்று பட்டது முருகனுக்கு. முதலில் தன் மீது மல்லப்பன் சுமத்திய பழியைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். அவன் அதற்காகத் தைரியமாகச் செம்பனூர் டாணுவிற்கு வந்தான்.

கானூர் கொள்ளை விசாரணை நடந்தது. வீரையா தான் கொள்ளைத் தலைவன் என்று ருசுவானது. அப்போது முருகன் வந்து முன்னின்று, இவ்வாறு துணிந்து பேசினன் :—

"சர்க்காருக்கு ஒரு விண்ணப்பம். எனக்கு எழுத்து தெரியாது; வக்கீல் பிடித்துப் பேசவும் பணமில்லை. மனதில் உள்ளதை ஒளிக்காமல் சொல்லி விடுகிறேன். என்னைக் குற்றவாளி என்று பிடித்தீர்கள். இந்தக் கொள்ளை நடந்தது கூட எனக்கு மறுநாள் தான் தெரியும். இங்கு வந்துதான் அதன் விவரம் தெரியும். இதோ நேருக்கு நேராகக் கேளுங்கள்—இவர்களில் யாருடனுவது நான் சம்பந்தப்பட்டதுண்டா என்று. என் வாழ்வில் எப்போதாவது திருட்டு, பொய் வழக்கில் சம்பந்தப்பட்டிருந்தால் இப்போதே தூக்குப் போடுங்கள்; மானத்தைவிட உயிர் பெரிதன்று!"

நீதிபதி விசாரித்தார்.

"வீரையா, கொள்ளையில் முருகன் சம்பந்தம் உண்டா?"

வீர :—அந்தப் புண்ணியவான் இப்படிப்பட்ட காரியங்கள் செய்யமாட்டான்.

**நீதி** :—பின்னே பிரதிவாதி வீட்டில் அகப்பட்ட 100 ரூபாய் எப்படி வந்தது?

**வீர** :—மழைக்காலம், முருகையா வீட்டார் பட்டினியாகக் கிடக்கின்றனரென்று தெரிந்து, நான்தான் ரூபாய் 100-ம் ஒரு சோற்றுக் கூடையும் அவன் வீட்டுத் திண்ணையில் வைத்தேன். அதில் 'முருகன் துணை' என்ற சீட்டும் வைத்தேன்.

**நீதி** :—எத்தனை மணிக்கு?

**வீர** :—இரவு 2-மணிக்கு.

**நீதி** :—ருசு சரி; மணலூர் கஜானு வழிப்பறிக் கலகத்தில் முருகன் கூட்டு உண்டா?

**வீர** :—இல்லவேயில்லை. அவரை நாங்கள் கட்டித் தூக்கிச் சென்றோம். கொள்ளைத் தொழிலை விட்டு, விவசாயம் செய்து பிழைக்கும்படி எங்களை அவர் தூண்டி, நல்லபுத்தி சொன்னார்.

**நீதி** :—சரி முருகா, உன் மீது குற்றமில்லையென்று ருசுவாயிற்று; விடுதலை; நீ போகலாம்! நல்ல பலசாலியா யிருக்கிறாய். உனது யோக்கியதைக்காகவும், நீ வீண் குற்றம் சுமத்தப்பட்டு வருந்தியதற்காகவும் பரிகாரமாக ஒரு தலையாரி வேலை ஒப்புக் கொள்ளுகிறாயா?

**முருகன்** :—வேண்டாமையா அடிமை வேலை! இனி, நான் கடவுளை நம்பிப் பிழைக்கிறேன். உத்தரவு; போய் வருகிறேன்! வேல்முருகன் துணை.

## XV. அன்புசாமி

தேன் பொழியும் தேனூர்; வைகைப் பாசனம்; அத்துடன் ஏரியிலும் ஏராளமான தண்ணீர் உண்டு. அங்கே ஒரு சாமியார் பெயர் முழங்கியது. அவர்

சொந்தப் பெயர் ஊர் யாருக்கும் தெரியாது. அவரது அன்பு மிகுதியால் எல்லாரும் "அன்புச்சாமி" என்று அழைத்தனர். அவர் கல்வி கேள்விகளில் சிறந்தவர்; தவ சக்தி வாய்ந்தவர். அவர் தமது தவ சக்தியைக் கொண்டு ஏழைகளுக்கு உதவி செய்தார். அவரைத் தரிசித்தாலே, குற்றவாளிகள் திருந்துவர்; குடிப்பவர் கள்ளை மறப்பர்; திருடர் உழைத்துப் பிழைக்கத் தொடங்குவர்; வேசையர் தமது தொழிலை விடுத்து ஒழுங்காக மணம் புரிந்து இல்லறத்தில் வாழுவர்; ஊனுண்பவர் சைவராவர்; பிச்சை யெடுப்போர் உழைத்துப் பிழைப்பர். அன்புச்சாமியார் எட்டு வயதிலேயே உலகை வெறுத்துத் துறந்தவர். அவருக்குச் சாதி சமய வேற்றுமை கிடையாது. பிற துறவிகளைப் போல அவர் பிச்சை யெடுப்பதில்லை; தாம் உழைக்காமல் எதையும் அனுபவிப்பதில்லை. முதலில் அன்புச்சாமி மதுரையில் ஒரு பாதிரியாரிடம் வளர்ந்தார்; நல்ல கல்வி கற்றார்; யானைமலையில் ஒரு ஜைனத்துறவியிடம் வடமொழி பயின்றார்; பழநியில் ஒரு பண்டாரத்திடம் சைவசித்தாந்தம் கற்றார்; ஸ்ரீரங்கத்தில் ஒரு பாகவதரிடம் நாலாயிரப் பிரபந்தம் பயின்று வடக்கே சென்றார்; காசியில் வேதம் படித்தார்; ஹ்ருஷீகேசத்தில் யோக சாதனம் செய்து பிரம்ம ஞானம் பெற்றுத் தாய்நாடு திரும்பினார்; வறுமை, மடமையால் மக்கள் படுந் துயரத்தைக் கண்டு சகியாமல், அவரது சொந்த முத்தியைக் கருதாது பிறர்க்கென வாழ்ந்தார்.

## XVI

தேனூர் வளமை அவர் மனத்தைக் கவர்ந்தது. கிராமத்தாரும் அவரிடம் பயபக்தி விசுவாசத்துடன்

நடந்தனர். ஊருக்கருகே ஒரு பெரிய திடல் காலியாயிருந்தது; அதில் பேய் நடமாட்டமென்று யாரும் கலப்பை நாட்டுவதில்லை. சாமியார் அந்தத் திடலில் ஒரு குடில் கட்டி வசித்தார்; நிலந்திருத்தித் தோட்டம் போட்டார்; கிராமத்தில் எளிதான கைத்தொழில்களை ஏற்படுத்தினுர்; பள்ளிக்கூடம் வைத்தார். எல்லாருக்கும் அறிவும், தொழிலும், அன்பும், அறவுணர்வும் அளித்தார்; பச்சிலைகளால் நோய் தீர்த்தார்; தொண்டர்களைத் தயார் செய்து சுற்றிலும் அனுப்பிக் கல்வியும் சன்மார்க்கமும் பரப்பினுர்; தரிசாகக் கிடக்கும் நிலங்களை வாங்கி, ஏழைகளைக் குடியேற்றிப் பயிர் நிலமாக்கினுர். அவரிருந்த இடத்தைச் சுற்றிப் பத்துமைல் வட்டத்திற்கு ஜனங்கள் கவலையில்லாமல் வாழ்ந்தனர். சுமார் ஆயிரம் தொண்டர் அவர் பணி புரிந்தனர். அதோ, சாமியார் முன்னே எப்போதும் கட்டும் காவலுமாயிருந்து ஒரு தொண்டன் பணி செய்கிருன். அவனே ஏழை முருகன்! முருகன் கானுரை மறந்தான்; தேனுர் வந்தான்; சாமியாரை அடைக்கலம் புகுந்தான். அவர் மொழிகளைப் பயின்ருன். அறிவும், அருளும் பெற்ருன். அவன் குரு அன்பு; சொல் அன்பு; மனம் அன்பு; செயல் அன்புமயம். "வீடு காணி, உறவு சுற்றமெல்லாம் வரும் போகும்; அன்பே நிலைத்திருக்கும்; அன்பு கொண்டு அன்பு செய்வதே இன்பம்." என்று முருகன் உறுதி சொல்லுகிருன். அவனே சாமியாரின் வலக் கைபோலுதவுகிருன். "அன்பு முருகன்" என்ருல் "நல்ல புண்ணியவான்; சத்தியவான்; பரோபகாரி" என்று ஜனங்கள் கையெடுத்துக் கும்பிடுவர்.

# அ. வீரபலி

ஆர்க்காட்டு முற்றுகையில் கிளைவ் திணறிப் போனான். அவனைத் திணறடித்தது யார் தெரியுமா? சந்தா சாஹெபல்லன்; பிரெஞ்சுக்காரரல்லர்; சிவ கங்கை இராமநாதபுரம் மறவர்களே! இந்த மறவர் கள் அசகாய சூரர்கள். பார்த்தாலே 'இவர்கள் வீரர் கள். இவர்களிடம் மரியாதையாக நடக்கவேண்டும்' என்று தோன்றும். இந்த வீரர்களே மத்திம காலத் தில் நமது நாட்டு மானத்தைக் காத்தவர்கள்; ஒரு துளி இரத்தம் இருந்தமட்டும் இவர்கள் உரிமைப் போர் புரிந்தார்கள்.

ஆர்க்காட்டு முற்றுகை முடிந்தது; சந்தா சாஹெ பும் திருச்சி முற்றுகையில் பிடிபட்டான்; அவன் மேல் குற்றம் சாட்டி அவனைக் கிளைவ் கொன்றான். ஐதராபாத்தில் சுபேதார் கொலையுண்டான்; அங்கே ஆங்கிலேயர் புகுந்தனர்; சலபத் ஜங்கைச் சுபேதா ராக்கினர். ஆங்கிலேயர் கை ஓங்கியது; நாட்டில் இரட்டையாட்சி ஏற்பட்டது; யூனியன் ஜாக்கின் நிழலில் நவாப் முகம்மதலி கருநாடகத்தை ஆண்டான். பேருக்குத்தான் நவாப்; அதிகாரமெல்லாம் கும்பினி கையில்! 'நீ அவல் கொண்டுவா, நான் உமி கொண்டு வருகிறேன்; ஊதி ஊதித் தின்போம்' என்ற கதை தான்!

கும்பினியார் ஏராளமான சுதேசிகளைப் பயிற்றிய படை சேர்த்தனர். அவர்களது பலத்தினாலேதான் நவாப் தர்பார் நடந்தது. எங்கே? காவேரிக்கு இப்

புறந்தான். வைகைக் கரையிலும், தாம்பிரவருணிக் கரையிலும் நவாபின் பாச்சா பலிக்கவில்லை ; கிஸ்தி வசூலிக்க, படை படையாக சாஹெபுகளை அவன் அனுப்பினான் ; கும்பினிப் படைகளுடன் தன் படைகளையும் அனுப்பினான். பலன் பூஜ்யம். 'கப்பம்' என்றால், மறவர் கத்தி உருவினர் ; 'கிஸ்தி' என்றால், 'கிட்ட வராதே !' என்றனர். இராமநாதபுரம், சிவகங்கை, சிவகிரி, பாஞ்சாலங்குறிச்சி முதலியன வீரர் புரங்கள். அதிலும், சிவகங்கையின் பேர் கேட்டாலே நவாபுக்குப் பகீர் என்னும். ஏன் ? அதன் வீர மறவர்களே சந்தா சாஹெபுடன் சேர்ந்து தன்னை விரட்டி யடித்தவர்கள். 'கிஸ்தி, கிஸ்தி' என்று எத்தனை தடவையோ ஓலை விடுத்தான் ; ஆள் விடுத்தான் ; பயமுறுத்தினான் ; படை விடுத்தான். சல்லி பெயரவில்லை.

முடிவில் நவாபு கும்பினிப் படையுடன் தன் மகனை அனுப்பினான் ; காரியம் பலிக்கவில்லை. மகன் உம்டட்-உல்-உமார் திரும்பிவந்தான்.

"என்ன உமார்...கிஸ்தி தந்தானா ?

"கஸ்திதான் தந்தான்"

"அரே ! என்ன சொல்றான் ?"

"போ போ ! சொல்றான்"

"ஹா ! க்யா கரேம் ? அரே ! அவர்களை அடக்காமல் ஏன் வந்தாய் ?"

"பாபா ! இந்த மறவர்களைமட்டும் நாம் அடக்கி நமது படையில் சேர்த்தால், உலகையே வெல்லலாம்; அவ்வளவு பலசாலிகள்."

"அரே நம்பள்கு இரிசால் செலுத்துறானில்லை ; நம் ஹூகுமை லக்ஷ்யம் செய்றானில்லை...உமார் !

ஜோஸெஃப் ஸ்மித்துடன் செல்...மறவர்களை அடக்கி ஒடுக்கிக் கொண்டா கிஸ்தி!"

உமாரும், ஜோஸெஃப் ஸ்மித்தும் பலமான படையுடன் புறப்பட்டனர். இவர்களுக்குப் புதுவைத் தொண்டமான் வலக் கைபோல் உதவினான். சேனை வெள்ளம் வருகிறது

'வரட்டும்' என்று முண்டாத் தட்டுகிறார் வீரரொருவர். யாரவர்? சிவகங்கை மன்னர் **முத்துவடுகிநாததேவர்**தாம். முத்துவடுகிநாதர் வீரப் புலியும் கொடை வள்ளலுமான சசிவர்ண தேவரின் புதல்வர். இவர் இராமநாதபுரம் அரசருடன் கூடிக் கும்பினிப் படையை எல்லா இடத்திலும் எதிர்த்து நின்றார். இராமநாதபுரம் சேதுபதி இறந்தார். அவர் மகன் மைனர். அவனைத் தளவாய்த் தாமோதரம் பிள்ளை பாதுகாத்தார். இவர் சிறிது காலம் போராடிக் கும்பினியாருடன் சமாதானம் செய்துகொண்டார். ஆதலால் முத்துவடுகிநாதர் பக்க பலமில்லாமல் தனியே நின்றார்; தைரியத்தை விடவில்லை. இவர் மனைவியே **இராணி வேலு நாச்சியார்.** சாந்த்பீபி, இலக்ஷ்மீபாய், துர்க்காவதி முதலிய வீராங்கனைகளுடன் இராணி வேலு நாச்சியையும் சேர்க்கவேண்டும். தன் கணவரின் வீரத்தை அவள் பதின்மடங்காக்கினாள். "கண்ணே! கும்பினி - நவாபு சேனை ஆற்று வெள்ளம்போல் வருகிறதே! என்ன செய்வோம்?" என்றார் கணவர். "நமது வீர வெள்ளத்தால், அதை அள்ளி விழுங்குவோம்" என்றாள் வேலு நாச்சியார்.

அக்காலம் அந்நியர் கொள்ளையால் மிகவும் கஷ்டப்பட்ட ஊர்களில் சிவகங்கையும் ஒன்று. சந்தா சாஹெபு வந்தான்; கொள்ளையடித்தான்; வீரர்

எதிர்த்தனர். வீரமறவரை மெச்சித் தன் படையில் அவன் சேர்த்தான். ஆர்க்காட்டு நவாபின் சேனை வந்தது; ஊரைச் சூறையிட்டது. வீர மறவர் நவாபை விரட்டி யடித்து இளைப்பாறும்போது, தஞ்சாவூர் மராட்டியப் படை புகுந்து, "எங்கள் துளஜாஜீ ஆணை; கொடு கப்பம்!" என்றது... "ஊரைப் பார்க்கப் போம்!" என்று மராட்டியப் படையை மறவர் திருப்பி யனுப்பினர்; மராட்டியர் நாகபட்டினம் டச்சுக்காரருடன் வந்து மிரட்டினர். வீர மறவர் அவர்களைப் பொருது விரட்டினர். புகுந் தது கும்பினி - நவாப் சேனை! அலுத்த புலியை வேட்டை நாய்கள் சூழ்வதுபோல், இரண்டு பெரும் படைகள் மறவர் சீமையைச் சூழ்ந்துகொண்டன. இராமநாதபுரத்தில் உமாரும், ஜோஸெப் ஸ்மித்தும் புகுந்து, மைனர் முத்துராமலிங்க சேதுபதியையும் இராணியையும் பிடித்துத் திருச்சியில் காவல் வைத்த னர்; பிறகு வெற்றி முழக்கத்துடன் சிவகங்கைமீது படை யெடுத்தனர்.

அச்சமயம் முத்துவடுகநாதர் வேட்டை யாடிக் கொண்டிருந்தார். "ஐயோ மஹாராஜா! நவாபு சேனை புகுந்தது!" என்று தளவாய் ஓடிவந்து செய்தி சொன்னான். "ஆ! வந்து விட்டார்களா?" என்று சிறிது திகைத்தார் மன்னர். "வரட்டுமே; கைத் தினவுதீர வெளுப்போம்" என்றான் சின்ன மருது. "சக்கையாக வெளுப்போம்" என்றான் பெரிய மருது. "மருது வாக்கு பலிக்க வேண்டுமே!" என்றார் மன்னர். "பளீர் பளீர் என்று அவுங்க முதுகிலே பலிக்கும், மகாராசா" என்றான் பெரிய மருது. "அவுங்க நெஞ்சிலே சுடச்சுடப் பலிக்கும்" என்றான்

சின்ன மருது. "பெரிய மருது! நீ நமது வலக்கை; சின்ன மருது நமது இடக்கை. இரண்டு கைகளிலும் வாள் பிடித்துப் போராடுவோம்" என்று மன்னர் அவசரமாக அரண்மனைக்கு ஓடி வந்தார்.

யார் இந்த மருது சகோதரர்? இவர்களின் வீரப் பெருமை மிகப் பெரிது. இவர்களது பெயரைக் கேட்டாலே, ஜனங்கள் கையெடுத்துக் கும்பிடுவர். பெரிய மருது அசகாய சூரன்; ஆஜானுபாகு; பலபீமன்; வேட்டையில் நிபுணன்; அவன் வைத்த குறி தவருது; எத்தனையோ ஆங்கிலேயர் அவன் திறமையை மெச்சினர். வாள்வீச்சில் அவனை யாரும் மிஞ்ச முடியாது. அவன் வளரிக் கம்பைச் சுழற்றி விட்டால், எதிரியின் கழுத்தைத் திருகி மண்ணில் உருட்டித் தான் திரும்பும். துப்பாக்கி சுடுவதில் அவனிடம் கும்பினித் தளகர்த்தர் கடன் வாங்கவேண்டும். அக்காலம் சிவ கங்கைக்கும் காளையார் கோயிலுக்கும் இடையில் காடு அடர்ந்திருந்தது; அதில் புலிகள் திரிந்தன; பெரிய மருது எத்தனையோ புலிகளை எமலோகத்துக்கு அனுப்பினுன். சுடுவது மட்டு மன்று; பெரிய மருது ஒரே பாய்ச்சலில் புலியைப் பிடித்து அதன் வாயைக் கிழித்துக் கொல்வான். அவன் முத்துவடுகி நாத தேவருக்கு வேட்டைத் துணைவனுனுன். வேட்டை நாய்களைப் பிடித்துச் செல்வதே அவனது வேலை; அவ் வேலையிலிருந்து அவன் மகாராஜாவுக்கு நண்பனுகி, ஊருக்குத் தலைவனுமானுன். எதனுல்? வீரத்தால்! சின்னமருது அரசனுக்கு அடைப்பைக் காரனுயிருந்து படிப்படியாக உயர்ந்தான்; அவன் வில்லாதி வில்லன்; நல்ல அறிவாளி; அரசியல் சதுரங்கத்தில் நிபுணன்; ஜனவசீகரமானவன். ஊரை

அடக்கி யாளுவதில் சமர்த்தன். இந்த இரண்டு மருதுக்களும் ஊருக்குத் தலைவர்களானார்கள்: இவர்கள் பாமர ஜனங்களுக்கெல்லாம் போர்ப் பயிற்சி தந்தனர்; பெரும் படை திரட்டினர். இவர்களை எல்லா வகையிலும் ஆதரித்தவள் இராணி வேலு நாச்சியார். பெரிய மருது இராணிக்கும் போர்க்கலை பயிற்றுவித்தான். இனிக் கதைக்கு வருவோம்.

* * *

மன்னர் வேட்டையிலிருந்து திரும்பிவந்தார். அரண்மனையின் முன்னே பெரிய கும்மாளம். போர் முரசம் இடி முழக்கம் செய்கிறது; பறைகள் கொட்டுகின்றன; எக்காளங்கள் முழங்குகின்றன; வீரர் தசை துள்ள அடி யெடுக்கின்றனர்; வேலு நாச்சியார் கொடி பிடித்து, "போ முன்னே!" என்று ஏவுகிறாள்.

நவாபு - கும்பினிச் சேனை இதோ வந்துவிட்டது; சிவகங்கையில் நுழைந்துவிட்டது. மன்னர் இளைப்பாறவில்லை; உண்ணவில்லை; ஆயுதச்சாலைக்கு நேரே சென்று, போர் அங்கி மாட்டி, வாளும் கேடயமும் பிடித்து வெளியே வந்தார். அதற்குள் நிலைமை அசாத்தியமாகிவிட்டது. "மாரோ, மாரோ!" என்று உமார் கர்ச்சித்தான்; "ஷூட் ஷூட்" என்று ஜோஸெஃப் ஸ்மித் உறுமினான்..."வெட்டு, வெட்டு! கொல், கொல்!" என்று இராணியும், மன்னரும் கட்டளை யிட்டனர். மறவர் படை ஊழியிடிபோற் பகைவரைத் தாக்கியது. கொடும்போர்! வீடுகளில் தீ! வீதிகளில் சூறை! 'ஹூம்' என்றால் கழுத்தில் கத்தி! படுகொலை நடக்கிறது. இதோ பகைவர், இராணியையும் மன்னரையும் பிடிக்க வருகிறார்கள்.

ஓடிவந்தான் பெரிய மருது; "மகாராசா பாவிப்பயல் கெடுத்தான்; வழிகாட்டிக் கொடுத்து விட்டான். உடனே காளையார் கோயில்!" என்றான். சின்னமருது வண்டி தயாராக வைத்திருந்தான். யாரும் காணாமல் இருவரும் மகாராஜாவைக் காளை யார்கோயில் கோட்டைக்கு அழைத்துச்சென்றனர். பெரிய மருது அங்கே பெரும்படை திரட்டினான்; கோட்டைமேல் ஏறிச் சுற்றிலும் பார்த்தான். சிவ கங்கையில் தோற்ற எதிரி இதோ காளையார்கோயி லுக்கும் வருகிறான்! கர்னல் பான்ஜூர், நவாபு சேனை யுடன் புயல்போலச் சீறி வருகிறான்! "மகாராசா! அந்தப் பாவி இங்கேயும் வழிகாட்டி மோசம் செய் தான்" என்று பெரிய மருது முறையிட்டான். "அந்த அயோக்கியத் துரோகியின் தலையைத் திருகி வேட்டை நாய்க்குப் போட்டுவிட்டு மறுவேலை பார்!" என்று மன்னர் சீறிச் சினந்தார்.

அந்தத் துரோகி! வழக்கமாக நமது நாட்டுக்குச் சனியனாக வரும் வஞ்சப் பதர்களில் இவனும் ஒருவன். ஒதெல்லோவில் வரும் மகா பாதகனான **அயாகோவை** அறிந்தால், இவனை அதிகமாக வர்ணிக்கவேண்டா. பெயர் சுப்பையா. அவனைக் '**குண்டுணிச் சுப்பன்**' என்பார்கள். குண்டுணிச் சுப்பன் மகா விஷமப் புச்சம்; நிமிஷத்துக்கு ஒரு சேட்டை செய்வான். திடீர்ப் புளுகன்; முழுப் பூசனிக்காயைச் சோற்றில் அமுக்கும் பேர்வழி; இரக்கமற்ற வறட்டுப் பாவி; பஸ்மாசுரனுக்கு அண்ணன்! அவன் நன்றாகப் படித் தவன்; தடபுடலாகப் பிரசங்கம் செய்வான்; வயிற் றுப்பிள்ளை கரையும்படி முன்னால் பேசி, ஆட்களைக் குல்லாப் போடுவான்; பின்னால் சூனியம் வைப்பான்.

இவன் முதலில் மகாராஜாவின் பிரியத்தைச் சம்பா தித்தான்; இவன் பேச்சு மகாராஜாவுக்குப் பொழுது போக்கா யிருந்தது. அக்காலம் பத்திரிகை கிடை யாது; குண்டுணிச் சுப்பனே மகாராஜாவின் தினசரிப் பத்திரிகை. "இவன் அப்படி, அவன் இப்படி" என்று கோட்சொல்லி ஆட்களைச் சிண்டு முடிந்து விட்டு, வேடிக்கை பார்ப்பதே குண்டுணியின் வேலை.

"ஆகா! தங்களைப்போலுண்டா! தர்மாத்மா, இராமச்சந்திரன் என்றால் தாங்களே!" என்று இங்கே புகழ்வான். மெல்ல எதிரியிடம் சென்று, "அவன் கிடக்கிறான் அற்பப் பயல்; வாய் சர்க்கரை, கை கருணைக் கிழங்கு—உங்களுக்குச் சமானம் வருமா!" என்று புகழ்ந்து பணப்பையைத் தட்டிக்கொண்டு போவான்.

இந்த அயோக்கியனைச் சின்ன மருது ஒரு சமயம் கையுங் களவுமாகப் பிடித்தான். அதுமுதல் மருது சகோதரரைக் கண்டால், குண்டுணிக்குப் பிடிக்காது; அவர்கள்மேல் பிரியமாயிருக்கும் அரசரையும் பிடிக் காது. குண்டுணிச் சுப்பன் எத்தனையோ நாச காரியங் கள் செய்தான்; அனைத்திலும் கொடியது அவன் இன்று செய்த துரோகம். பகைவர் கையாளாகி, அரச ரும் மருது சகோதரரும் இருக்கும் இடத்துக்கு அவன் வழி காட்டினான்; படைகளுக்கு வெடிமருந்தும் ஆயுதமும் உணவும் உதவும் இடங்களைச் சுட்டிக் காட்டினான்; அரசி வேலு நாச்சியாரைப் பிடித்துக் கொடுக்கச் சில பணிப் பெண்களைத் தயாரித்துக் கொடுத்தான்; நிதிச் சாலையைக் காட்டிக் கொடுத் தான். போதுமா துரோகம்? "இதோ பார், என்னவர்; எனது நாடு—பிடித்துக்கொள்!" என்று உள்ளே

அந்நியரை அழைத்துவந்து காட்டும் இப்படிப்பட்ட துரோகிகளாலேதான் நமது தேசம் இந்த நிலைக்கு வந்தது. இன்றும் இதே துரோகந்தான் நமது தாயின் மார்பில் ஈட்டி குத்துகிறது!

துரோகி காட்டியவழியே வந்து, கர்னல் பான்ஹூர் காளையார்கோயில் கோட்டையை வளைத்துக் கொண்டான். பெரிய மருதுவுக்குப் படுகோபம் வந்தது. தன் வீரர் இரவில் பகைவரது பாசறையில் உறங்கிய குண்டுணிச் சுப்பனை எப்படியோ தூக்கிவர வேண்டுமென்முன். அவன் ஆணைக்கு எதிர் கிடையாது. நவாபின் சிப்பாய்கள்போல வேஷம் போட்டு, உருது தெரிந்த நான்கு மறவர் சென்றனர். அவர்களுக்குப் பின்னே சிறிது தூரத்தில் ஒரு படை பதுங்கிப் பதுங்கிச் சென்றது. நாலு மறவரும் குண்டுணியைப் பின்கட்டாய்க் கட்டி வாயில் துணியடைத்துத் தூக்கிவந்தனர். பெரிய மருது வாளை உருவினுன். "அட துரோகி! ஊரைக் காட்டிக் கொடுத்த பாவி! இதோ சாகப்போகிமுய். இப்போதாவது உன் குற்றத்தை ஒப்புக்கொள்; பகைவர் உளவைச் சொல்!" என்று சின்னமருது கிண்டிக் கிண்டிக் கேட்டான். பகைவர் சூழ்ச்சிகளையெல்லாம் குண்டுணி சொல்லிவிட்டான். அரசரைக் கொலை செய்த பிறகு, உமார் இராணியைக் கைது செய்து கொண்டு செல்வது......சிவகங்கைச் சீமையைக் கொள்ளையடிப்பது — இன்னும் பல உபயோகமான செய்திகளும் சொன்னதால், பெரிய மருது குண்டுணியைக் கொல்லாமல், விலங்கு போட்டுச் சிறைக்கு அனுப்பினுன். இதற்குள் நவாப் சேனை கொடிய போர் தொடங்கியது. கும்பினிப்படை கோட்டை

மதிலை இடித்துக்கொண் டிருந்தது. கைதியான குண்டுணிமேல் ஒரு குண்டு விழுந்தது. குண்டுணி இறந்தான். விதியே அவனைக் கொன்றது. மறவர் திடீர் திடீரென்று கும்பினிப் படையை எதிர்த்தனர். பெரிய மருது நவாப் சேனையைச் சடசடவென்று வீழ்த்தினான். அரசர் கோட்டை மதிலிலிருந்து குண்டு பாய்ச்சிப் பகைவரைக் காலன்போல் கொன்றார்.

மறவர் குண்டுக்குக் குண்டு, குத்துக்குக் குத்து, வெட்டுக்கு வெட்டு—சரியான பதில் கொடுத்தனர். திடீரென்று சின்ன மருது "மகாராசா! கோட்டை வாசல் எதிரி கைப்பட்டது. நமது வெடி மருந்து அற்றுப்போயிற்று; உணவு வரவும் வழியில்லை" என்று விசனித்தான். "மருது! நீயும், அண்ணனும் எப்படியாவது இராணியைக் காப்பாற்றித் திண்டுக்கல்லுக்குக் கொண்டு செல்லுங்கள்! பகைவருக்கு ஒரு பைசா மிச்சமில்லாமல், ஒரு கத்திப் பிடிகூட அகப்படாமல் கஜானாவையும், ஆயுதங்களையும் பாதாள அறையில் புதைத்துச் செல்லுங்கள்! எனது உடம்பில் துளி இரத்தம் இருக்குமட்டும் எதிரிகளை வெட்டி வீழ்த்தி வீரசொர்க்கம் அடைகிறேன்" என்றார் அரசர். "அரசே! தாங்களும் தப்பினால் நல்லது; தங்களை எப்படி இழப்போம்! நிலைமை அபாயமாயிருக்கிறது. ஹைதராலி திண்டுக்கல் வந்திருக்கிறான். அவன் கும்பினிக்காரரின் விரோதி; பலசாலி. அவனை நான் உதவிக்கு அழைத்துவருகிறேன். எதிரிகளை நொறுக்கி யெறிவோம்" என்றான் மருது. "மருது! ஓர் அந்நியனை எதிர்க்க இன்னோர் அந்நியனை அழைத்து வருவது, தீயை அணைக்க எண்ணெய்

வார்ப்பது போலாகும். வந்தவன் நமது சீமையைப் பிடித்துக்கொண்டு நம்மை அடிமை செய்வான். அதைவிட உயிர் உள்ளமட்டும் போர் செய்வதே வீரம். நீ ஹைதராலியிடம் போனாலும், அவனுக்கு ஊரைக் காட்டிக்கொடுக்காதே; கவனம்! மறவர் சீமை மறவருக்கு. வீர தேவதைக்கு நானே பலியாகிறேன்; என் வீர இரத்தம் வீண் போகாது; ஒவ்வொரு துளியும் ஒரு வீரனாகக் கிளம்பும். நீ இராணியைக் காப்பாற்று!'' என்றார் அரசர்.

இதற்குள் கும்பினிப்படை கோட்டை மதிலை நான்கு பக்கமும் இடித்துத் தகர்த்து உள்ளே புகுந்தது. முத்துவடுகி கோடையிடி போலக் குமுறிப் பகைவரை எதிர்த்தார். மறவர் யாரும் புறங்கொடுக்கவில்லை. கோட்டைக்குள் 500 வீரரே இருந்தனர்; என்றாலும் ஒரு மறவன் பத்து ஆட்களைக் கொன்றான்...எதிரியின் படை பாதி காலி...பான்ஜூர் டாம் டாம் என்று குண்டு பாய்ச்சி மறவரை வீழ்த்தி, முத்துவடுகிநாதரை வளைத்துக்கொண்டான். "நான் கைதியாக இருக்கமாட்டேன்; வீரனாகவே இறப்பேன்'' என்று வடுகிநாதர் தன்னைக் கட்டவந்த பகைவரை வெட்டித் தள்ளினார்; சூறாவளிபோலச் சுழன்று வாள் வீசினார். பகைவர் வாளைப் பிடுங்கினர். பிறகு, கிட்ட வந்தவரைக் கையால் குத்தினார். பகைவர் கையை வெட்டினர். பகைவரைக் காலால் உதைத்தார். காலும் வெட்டுண்டது. இன்னும் அருகே வந்தவரைப் பல்லாற் கடித்தார். முகத்திலும் குத்து விழுந்தது. மறுபடியும் வந்தவர் மேல் "தூ தூ" என்று எச்சில் உமிழ்ந்தார். மார்பில் ஒரு குண்டு பாய்ந்தது. "என் கடமை முடிந்தது...

சிவபாதம் துணை" என்று முத்துவடுகநாத தேவர் இறந்தார். காளையார்கோயில் கோட்டை பிடிபட்டுத் தரைமட்டமானது. அக்கோட்டையின் தடம் கோயிலுக்கருகே இருந்தது. எல்லாம் போய் ஒரு குட்டிச் சுவரே மிஞ்சியது. அதைப் பார்க்கும்போதெல்லாம் முத்துவடுகநாதரின் வீர இரத்தம் நமது நினைவுக்கு வரும்.

# கூ. வேலு நாச்சியார்

அரசர் போரில் இறந்தார். 'எங்கே மருது சகோதரர்?' என்று நவாப் சேனை தேடியது. கும்பினி யார் பிணங்களைப் புரட்டிப் பார்த்தனர்; ஆட்கள் இல்லை. ஒற்றரை எங்கும் அனுப்பினர்; மருதர் சிவ கங்கைக்குத் தப்பியதாகச் செய்தி கிடைத்தது. "பிடி மருதரை! பிடி இராணியை! அடி கொள்ளை!" என்று எதிரிகள் வெற்றிச் செருக்குடன் சிவகங்கைக்கு வந்தனர். அரண்மனை வாசலில் கடும்போர் நடந்தது; நூற்றுக் கணக்கான மறவர் உயிரைப் பலிகொடுத்து மானங் காத்தனர். அரண்மனைக்குள் பகைவர் புகுந் தனர். "பகடோ, பகடோ!" என்று கூவினான் உமார். அரண்மனைக்குள் மருது சகோதரர்போல் உடை தரித்த இருவர் இருந்தனர். அவர்களை உமார் பிடித்து விலங்கிட்டான். "வாஹ்வா!" என்று எதிரிகள் ஊளையிட்டனர். "பிடி இராணியை!" என்று, உமார் அந்தப்புரத்துள் நுழைந்தான். அவனை யாரும் எதிர்க்கவில்லை. அந்தப்புரம் காலியா யிருந்தது; அங்கே ஒரு பெண் வேலுநாச்சியார்போல் ஆடை யணிந்திருந்தாள். 'பகடோ!' என்றான் உமார்; அந் தப் பெண்ணை எதிரிகள் பிடித்துப் பாசறைக்குக் கொண்டுபோனார்கள்.

இரவு. தலைகால் தெரியாமல் குடித்துக் கும்மா ளம் போடுகின்றனர் பகைவர். அச்சமயம் மூன்று வாள்வீரர் சிறையை உடைத்துவந்து, சிலரை வெட்டி வீழ்த்துகின்றனர். "அரே பத்மாஷ், மோசம் செய்

தான் " என்று கூக்குரலிட்டது நவாப் சேனை. உமார் விழித்துவந்து விசாரித்தான்; "எங்கே பீகம் வேலு?" என்றான். "நான் பீகமல்லேன்; வீரவேலு!" என்றான் உருவிய வாளுடன் நின்ற வேலுச்சாமி. அவன் அந்தப்புரக் காவலன்; இராணியைத் தப்புவித்து அனுப்பி விட்டு, அவள் உடையைத் தான் தரித்துக் கைதியாகி, இதோ, வாட்போர் புரிந்து வீரமாகச் சாகிறான்! "எங்கே இராணி? சொல்!" என்று வாளுருவி மிரட்டினான் உமார். " என் இராணியைக் காட்டிக்கொடுக்க நான் வரவில்லை; அவளுக்காக உயிர் கொடுக்கவே வந்தேன் " என்று நின்றான் வேலுச்சாமி. "மாரோ!" என்றான் உமார். வேலுச்சாமி கழுத்தில் வாள் விழுந்தது. அவன் எதிரியைப் பலமாக ஒரு குத்து விட்டு, " முருகையா !" என்று வீழ்ந்தான். மருது சகோதரராக நின்றவர், அவர்களுக்கு உயிர் போன்ற இரண்டு வீரர். மருது சகோதரர் தப்பியோட உதவி செய்து, இவர்கள் கைதியானார்கள். இந்த நாடகம் நடப்பதற்குள் மருதர் குறித்த இடத்தை அடைந்துவிட்டனர். கும்பினித் துரை, இவ்விருவரையும் சுடும்படி ஏவினான். சிப்பாய்கள் குறிவைக்குமுன், அவர்கள் சுற்றிச் சுழன்று பத்துப் பேரைக் கையால் குத்தி நொறுக்கினர்; மார்பில் குண்டு பட்டதும் " மருதப்பா... !" என்று அவ்விருவரும் வீழ்ந்தனர்.

சிவகங்கை அப்போதைக்கு நவாப் கைக்கு வந்தது. என்றாலும், இராணியும் மருதரும் உயிருடன் இருக்குமட்டும் எவர் அமுலும் அங்கே செல்லாது. அவர்களைத் தேடிப் பிடிக்கக் கும்பினியார் ஏராளமான ஒற்றரை நாலா பக்கமும் அனுப்பினர். எங்கும் தேடினர். காணோம்!

எங்கே இராணி? எங்கே மருதப்பர்? பூச்சி நாயக்கன் ஊரில் 2000 வீரருடன் இருப்பதாகத் தகவல் கிடைத்தது. உடனே கும்பினிப் பட்டாளம் அங்கே திரும்பியது. "தாண்டாதே எல்லையை!" என்று பூச்சி நாய்க்கன் ஓர் அதட்டுப் போட்டான். "தா மருதரை! தா இராணியை!" என்று எதிரி சேனை குமுறியது. "இருவர் உள்ளே வந்து பாருங்கள்; இருந்தால் பிடித்துச் செல்லுங்கள்" என்றான் நாய்க்கன். 'அது சரி' யென்று இரண்டு குதிரைக்காரரர் ஊரின் மூலை முடுக்கெல்லாம் சோதித்தனர்; ஏமாறினர்; "பிறகு எங்கே அவர்கள்?" என்று பூச்சி நாயக்கனைக் கேட்டனர். "ஐயா, நான் குண்டுணிச் சுப்பனல்லன். வேண்டுமானால் காளையார்கோயில் காட்டில் போய் அழுங்கள்!" என்றான் நாயக்கன். பகைவர் காடெல்லாம் துருவினர். மரங் கிளைகளை யெல்லாம் அசைத்துப் பார்த்தனர். ஆளைக் காணோம்! அவர்கள்எங்கே?

* * *

திண்டுக்கல்லுக்கு வாருங்கள்! அங்கே ஐதராலி பாடி யிறங்கி யிருக்கிறான். திண்டுக்கல் மலைக் கோட்டையில் ஹைதராலிக்கு முன் மூவர் வீற்றிருக்கின்றனர். இருவர் ஆண்கள்; ஒருவர் பெண். சுற்றிலும் சுமார் 2000 மறவர் வாளுருவிக் காவல் காக்கின்றனர். ஐதராலி அந்த மூவர் வீரத்தையும் மெச்சுகிறான். அவர்களே சிவகங்கையிலிருந்து தப்பிய இராணியும், மருது சகோதரரும் ஆவார்கள். அத்தனை எதிரிகள் கண்ணிலும் பொடி தூவி இவர்கள் தப்பியது ஓர் ஆச்சரியம்; ஔரங்கசீப் பிடியிலிருந்து சிவாஜி தப்பியதைவிட ஆச்சரியம்! ஏனென்றால், சிவாஜி அமைதியான தில்லியில் சிறை யிருந்தான்;

சுற்றிலும் போர்முரசு கொட்டி வாள் வீச்சு நடக்கும் போது, இந்த மூவரும் தப்பினர். காளையார் கோயி லில் எதிரி கை வலுத்ததுமே, அரசர் ஆணைப்படி பெரிய மருது சிவகங்கைக்கு வந்தான்; 2000 வீர ரைத் தேர்ந்தெடுத்தான்; அரண்மனையிலிருந்த அணி மணிகள், மகுடம், செங்கோல், ஆயுதங்கள் எல்லா வற்றையும் ஜாடாவாகப் பெட்டிபோட்டு வண்டி வண்டியாகப் பூச்சி நாயக்கன் சீமைக்கு அனுப்பிவிட் டான். பூச்சி நாயக்கன் அக்காலப் புரட்சி வீரருள் ஒருவன். சுமார் 500 வீரருடன் இராணி ஆண் வேடம் பூண்டு ஒரு பெட்டி வண்டியில் புறப்பட்டுப் பூச்சி நாயக்கன் ஊர் சென்ருள். மறுநாள் சின்ன மருது வந்தான். இரண்டு மருதரும் அரசாங்கத் தஸ்தவேசுகளையும் நிதிகளையும் ஓர் இடத்தில் பத்திர மாக மறைத்துவிட்டு, 1500 வீரருடன் புறப்பட்டனர். எல்லாரும் பூச்சி நாயக்கன் ஊரில் தங்கியிருந்து மறுநாள் இரவு மதுரை சென்று, அங்கிருந்து ஐதரா லிக்கு ஆள் விட்டனர். அவர்களை ஐதர் அழைத்தான். எல்லாரும் திண்டுக்கல் சென்றனர்.

ஐதராலி மறவருக்குச் சரியான போர்ப்பயிற்சி தந்தான். அக்காலம் பாளையக்காரர் பலர் அவனுடன் சேர்ந்து கும்பினிக்காரரை எதிர்த்தனர். இராணியின் வீரத்தை ஐதர் மெச்சினுன்; மருது சகோதரர் பலத் தையும், அறிவையும் வியந்து போற்றினுன்; மறவர் திறமையைப் புகழ்ந்தான். "மருது! நவாப் சேனையை முறியடிக்க வேண்டும்" என்ருன் ஐதர். பெரிய மருது ஒரு நவாப் நாணயத்தை எடுத்துப் படக் கென்று இரண்டாக விண்டு "இப்படி முறித்தெறி வேன்" என்ருன். அவன் பலத்தைக் கண்டு ஐதர்

திகைத்தான். பெரிய மருது இரும்புத் தசையுள்ளவன்; அவன் எந்த உலோகத்தையும் வளைத்து ஒடிப்பான்; பகைவரின் விலா எலும்பைப் படபடவென்று நெரித்துவிடுவான். அவன் பலத்தைப் பார்க்கப் பார்க்க, ஐதருக்கு அதிசயம் அதிகரித்தது. ஐதர் பாண்டி நாட்டைக் கொட்டை பரத்தவேவந்தான். பெரிய மருது அவனை ஒன்றுமட்டும் கேட்டுக்கொண்டான். "சுல்தான்! தாங்கள் எங்களுக்கு உதவி செய்யுங்கள்; ஆனால் எங்கள் சீமையைப் பிடிக்கும் எண்ணத்தை விட்டுவிடுங்கள்! 'நாட்டைக் காட்டிக் கொடுத்தவர்' என்ற வசை எங்களுக்கு வரக்கூடாது. தாங்கள் எங்கள் சீமையைக் கைப்பற்றுவதானால், இதோ வாள்பற்றிப் போர் செய்வோம்; உயிர் இருக்குமட்டும் ஊரை விடமாட்டோம்; எங்கள் உயிர் போனபிறகு என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்" என்றான் மருது. "மறவர் ஊரை நான் பிடித்துக்கொள்ளமாட்டேன்; கும்பினிக்காரருடன் போர் செய்யுங்கள்; பாளையக்காரரைக் கிளப்பிவிடுங்கள்; செய்யுங்கள் புரட்சி!" என்றான் ஐதர்.

ஐதராலி போருக்குக் கிளம்பின அதே சமயம், "அரசி கிளம்பட்டும்!" என்றான் சின்னமருது. சிவகங்கைக்குத் தகுந்த ஆட்களை அனுப்பி, இரகசியமாகப் புரட்சியை ஜோடித்தான் பெரிய மருது. "எல்லாம் தயார்' என்றனர் ஒற்றர்.

தனது சீமையைத் தன்னிடம் உடனே ஒப்பிக்க வேண்டும் என்று கும்பினிக்கு வேலுநாச்சியார் மனுப்போட்டாள். சரியான பதில் வராவிட்டால் இன்னது செய்வது என்பதை அவள் மற்றவர்களுடன் கலந்து தீர்மானம் செய்துகொண்டாள். இரவும்

பகலும் போர்ப் பயிற்சி செய்து மறவர் தசைகளை முறுக்கிவிட்டுக்கொண்டு, வாளைத் தீட்டிப் பளபளப்பாகப் பிடித்தனர்.

காலநிலை அபாயமாக மாறியது. மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், சிவகங்கை எங்கும் பாளையக்காரர் கிளம்பினர். கிஸ்தி வாயில் மண்ணைப் போட்டனர்; பணம் என்றால் பட்டாக்கத்தி உருவினர். இத்துடன் ஐதர் சண்டை வலுத்தது; அவன் இறுதிமட்டும் போர் தொடுத்துக் கும்பினிப் பட்டாளத்தைச் சிதறடித்து இறந்தான். அப்பனுக்குப் பிள்ளை தப்பாது வாய்த்தது. ஐதரின் மகன் திப்பு புலியாய்ப் பாய்ந்தான்; பிரெஞ்சுக்காரர் உதவியால் தனது சேனைக்கு நல்ல பயிற்சி தந்தான்; தந்தை பிடிக்க நினைத்த சீமைகளைப் பிடித்துக்கொண்டு, மேலும் படை நடத்தினான். மைசூர்ப் புலியுடன் போராடிக் கும்பினிப்படை திணறிப் போயிற்று. மைசூர் யுத்தம் வலுத்தது. இந்தச் சமயம் பாண்டி நாட்டில் வேறு போர் கிளப்பவேண்டா என்று கும்பினித் தலைவர் பாளையக்காரரைச் சும்மா விட்டுவிட்டனர். வேலுநாச்சியாரையும் தடை செய்யவில்லை. நாச்சியாரும் தைரியமாகப் புறப்பட்டுவிட்டாள். "மறலிக்கும் அஞ்சாத மறவர் படை, வருகுது வருகுது வீரப்படை" என்ற பாட்டு வானைப் பிளந்தது.

* * *

'நாச்சியார் வாழ்க' என்று எங்கும் முழக்கம். சிவகங்கைச் சீமையெல்லாம் ஒரே குதூகலம்! ஏன்?, வருகிறாள் இராணி யானைமேல் அம்பாரி வைத்து! இராணி கம்பீரமாக ஊர்வலம் வந்தாள். மருது சகோதரர் குதிரையேறி இருபுறமும் வீரர் புடைசூழ

வந்தனர். மறவர் படை வாகை சூடிவந்தது. தெருக்களில் ஆரத்தி யெடுத்தனர். "இராணி நாச்சியார் வாழ்க! மருதப்பர் வாழ்க!" என்று பொது ஜனங்கள் ஆரவாரித்தனர். வேலுநாச்சியார் தனது அரண்மனையில் தர்பார் நடத்தினாள். கண்கொள்ளாக் காட்சி! கவிகள் புகழ் பாடினர்; சங்கீத வித்வான்கள் இசை பாடினர். வேலுநாச்சியாரின் வீரத்தை எல்லாரும் போற்றிப் புகழ்ந்தனர். மருது சகோதரரே அவளுக்கு மந்திரிகள். சர்வாதிகாரமும் அவர்கள் கையிலிருந்தது. நாச்சியார் வெகு திறமையுடன் ஆண்டாள்; வீடு வீடாக உள்ள குறைகளை விசாரித்துப் பரிகாரம் செய்தாள். தனது அரசில் எந்தப் பெண்ணும் கண்கலங்கச் சகியாள்; எந்தக் குழந்தையும் அநாதையாக வருந்தப் பாராள்; ஏராளமான தொழில்களைத் தந்து ஜனங்களுக்கு உழைப்பும், பிழைப்பும் உண்டாக்கினாள்; படை வீரரை நன்றாகப் பயிற்றி எதிரிகள் நடுங்கச் செய்தாள்; சிறுவருக்குக் கல்வி புகட்டினாள். கலைவாணரை அன்புடன் ஆதரித்தாள்; புலவருக்கு மானியங்கள் விட்டாள்—நாட்டில் அறிவும் கலையும் அமைதியும் நிலவின.

நாச்சியார் கருணையைப் போற்றாதவரில்லை. 1790-ஆம் ஆண்டு தன் மகள் வெள்ளாச்சிக்குப் பட்டம் சூட்டி, வேலுராணி மண் வாழ்வினின்று விடை பெற்றுக்கொண்டாள். பிறகு மருது சகோதரரே ஆட்சி நடத்தினர். அவர்கள் மறவர், அகம்படியர், சேர்வைகள், முதலியார், பிள்ளைமார், ராஜுக்கள், நாயுடுகள்—எல்லோரையும் கூட்டிப் போர்ப் பயிற்சி தந்தார்கள். அவர்களுடன் எப்போதும் 20,000 வீரர்கள் இருந்தனர். அக்காலத்தில் இந்த இருவரும் ஒப்பற்ற சுதந்தர வீரர்களாக விளங்கினர்.

## ௬௦. வெள்ளைக்காரன் போட்டி

சண்டைக்கு மூலம் போட்டி, பொருமை; வெள்ளைக்காரனுக்கும் வெள்ளைக்காரனுக்கும் போட்டி வலுத்தால் துப்பாக்கி முனையில் முடியும். ஒரு சம்பவம் காண்போம்:

டேவிட் கோட்டை (Fort St. David) கூடலூருக்கருகே கெடில நதிக்கரையிலிருக்கிறது. 1690-ல் செஞ்சி இராமராஜாவிடமிருந்து கும்பினிக்காரர் இக்கோட்டையை 40,000 சக்கரத்திற்கு மலிவாக வாங்கினுர்கள்; கோட்டைமதிலி லிருந்து பீரங்கிக் குண்டு போட்டார்கள்; அந்தக் குண்டு விழுந்த இடம் வரையில் தங்கள் எல்லை கட்டினுர்கள்; அந்த எல்லை கிராமம் "குண்டுக் கிராமம்" என்று வழங்குகிறது.

ஔரங்கஜீப் படை தெற்கே வந்து செஞ்சியைப் பிடித்தது; ஃஜுல் ஃபிகர்கான் அதன் சுபேதாராஞன். கும்பினிக்காரர் அவனை வசப்படுத்தி நன்ருக ஊன்றிக் கொண்டனர். இந்தக் கோட்டையிலிருந்து சுற்றிலும் தலை தூக்கிய பிரெஞ்சு, டச்சுக்காரரை ஆங்கிலேயர் மட்டந்தட்டி யூனியன் ஜாக்கை நிலை நாட்டினர்; 1691-ல் டச்சுக்காரர் வசமிருந்த மஞ்சக்குப்பத்தைப் பிடித்துக் கொண்டனர். அது படு கொள்ளைக்காலம்; திடீரென்று இஸ்லாமியப் படை வரும்; கிராமங்களைச் சூறையாடும்; தீவைத் தெரிக்கும்; பணத்தைக் கொள்ளையடிக்கும்; ஆட்களைக் குத்தும் வெட்டும் கொல்லும்...கேள்வி முறை கிடையாது! 1710-ஆம் ஆண்டு ஃஜுல் ஃபிகர்கானுக்

குப் பதிலாக சொரூபசிங்கன் செஞ்சி சுல்தானுனன்; அவனுக்கும் கும்பினிப்படைகளுக்கும் போர் பற்றிக் கொண்டது. அவன் டேவிட் கோட்டையிலிருந்து இரண்டு வெள்ளைக்காரரைத் தூக்கிச் சென்று கைதி யாக்கினுன்; அதற்குப் பதில் வெள்ளைக்காரர் செஞ்சி யில் முதன்மையான புள்ளிகளைத் தூக்கி வந்து சிறை வைத்தனர்; ஐம்பது கிராமங்களைக் கொளுத்தினர். அறுபதாயிரம் மோகராக்கள் பெறும் நெல்லை அழித் தனர். சொரூபசிங்கன் அவர்களைப் பழிவாங்கக் கிளம் பினுன்; அவர்களுக்கு உணவே போகாமல் தடுத் தான். ஏட்டிக்குப் போட்டி வலுத்தது. முடிவில் ஜார்ஜ் கோட்டை கவர்னர் ராவொர்த்து என்பவரை அனுப்பிச் சமாதானம் பேசச் சொன்னுன். சண் டையே வலுத்தது; குண்டுகள் பறந்தன; இரண்டு பக்கமும் பிணங்கள் குவிந்தன. பகலில் கப்சிப்; ஈ ஆடாது! இரவில் திடீரென்று எதிரிகள் வந்து கும் பினிப் படைகளைத் தாக்கிக் கொல்வர். வெள்ளைக் காரன் குண்டும் சும்மாவிடாது. காலையில் பார்த்தால் ஊரில் கைவேறு கால்வேறு தலைவேருகக் குவிந்து கிடக்கும். இடையிடையே, டச்சுக்காரர் நன்ருகக் குடித்து வந்து ஆள்வேட்டை யாடுவர்; வெள்ளைச் சிப்பாய்களோ மூக்குப் பிடிக்கப் புட்டிபோட்டு நடுத் தெருவில் வாளுருவிப் போர் புரிவர்; ஏழைக் குடில் களில் நுழைவர்; அட்டகாசம்செய்வர். குடியும் வெறி யும் முரட்டு மதியும் சேர்ந்தால் கேட்கவேண்டுமா? டச்சுக்காரனொருவன் போதையில் ஓர் ஆங்கில ஸார் ஜண்டைச் சுட்டுக் கொன்ருன்; கோட்டை காத்த ஆங்கிலேயன் நன்ருகக் குடித்துவிட்டு வேடிக்கை பார்த்தான். குடிவெறியில் சிலர் எழுந்திருக்கக் கூட

முடியாமல் விழுந்து கிடந்தனர். இந்த நிலையில் சொரூபசிங்கனுடன் கும்பினிக்காரர் சமாதானம் செய்துகொள்ள முயன்றனர்; முதலில் நடக்கவில்லை; பிறகு புதுச்சேரி பிரெஞ்சுக்காரர் உதவியால் ஒருவாறு சமாதானம் நடந்தது.

ராவொர்த்து துரைக்குக் கூடலூரில் அனுபவம் அதிகம்; கும்பினிக்காரர் அவரையே டேவிட் கோட்டைத் தலைவராக நியமித்தனர்.

ஆனால், ராவொர்த்து யாருக்கும் பணியமாட்டான்; தலை நிமிர்ந்தே நடப்பான்; கணக்கு வழக்குகளை நேராக வைக்கமாட்டான்; தன் இனத்தார் என்று பார்க்கமாட்டான்; தன் மனத்திற்குப் பிடித்தவரை உயர்த்துவான்; மேலதிகாரிகளை மதிக்கமாட்டான்; சிப்பந்திகள் சம்பளத்தை அதிகப்படுத்துவான்; சிப்பாய்களைத் தன் கைக்குள் வைத்துக் கொண்டு காரியத்தைச் சாதிப்பான். அவன்மேல் பல புகார்கள் கிளம்பின!

சென்னையிலிருந்த கும்பினித் தலைவர் அவனை விலக்கி, ஹென்றி டேவன்போர்ட்டு என்பவனை அவனுக்குப் பதிலாக அனுப்பினர்..."விட்டேனா பார்!" என்று ராவொர்த்து மீசையை முறுக்கினான். உடனே, சேவகர்களையும் படைவீரரையும் தாஜாப் பண்ணினான்; "அவனை விடாதே உள்ளே!" என்று உத்தரவு போட்டான்.

டேவன்போர்ட்டு தலைவர் உத்தரவுடன் சிறப்பாக வந்திறங்கினான்; யாரும் அவனை வரவேற்கவில்லை; ராவொர்த்து கோட்டைக் கதவை மூடிவிட்டான். "என்னிடம் கும்பினி உத்தரவுள்ளது" என்றான் டேவன் போர்ட்டு; "யார் உத்தரவிருந்தாலும்

பலியாது; என் உத்தரவில்லை; போ திரும்பி!" என்று ராவொர்த்து முடுக்காக உத்தரவிட்டான். கொஞ்சம் காற்று வாங்கலாம் என்று டேவன், அருகிலுள்ள தோட்டத்திற்குப் போனான். 'பட்! நுழையாதே' என்று காவற்காரன் கதவை மூடிவிட்டான். "நான் ஸென்ஸ்! உன்னை ஒரு கை பார்க்கிறேன்" என்று டேவன் ரோஷமாகக் கிளம்பினான்; சில ஆட்களுக்கு இலஞ்சங் கொடுத்துச் சிறுபடை திரட்டினான். "யாராவது அவனுக்கு உதவினால் சுட்டுப் போடுவேன்" என்றான் ராவொர்த்து. அவன் இரவில் ஒரு படையை ஏவினான்; டேவன் பயந்தோடி அங்கு மிங்கும் புகல் தேடினான்.

நம் இந்தியருக்கு இரக்கம் ஒன்றிருக்கிறதன்றோ! ஒரு பிராமணன் டேவனை இரகசியமாக ஐந்து மைல் அழைத்துச் சென்று, ஒரு சத்திரத்தில் ஒளித்து வைத்தான். "எங்கோ மறைந்து படை திரட்டுகிறான், ரோக்! அவனைக் கண்டு பிடித்துக் கழுத்தைத் திருகிக் கொண்டு வாருங்கள்!" என்று ராவொர்த்து இருபது முரட்டுத் தடியர்களை வாளும் துப்பாக்கியும் தந்தனுப்பினான். ஜார்ஜ் கோட்டையிலிருந்த கும்பினித் தலைவருக்கு, "நான் தாராளமாகச் சம்பளம் கொடுத்தேன்; சிப்பந்திகளும், வீரரும் என்னைப் பிரியமுடியாது என்கிறார்கள்; கோட்டைவாசிகளெல்லாரும் 'துரையே நீங்கள் போனால் நாங்கள் உயிரை விடுவோம் என்று' அழுகிறார்கள்; டேவன் போர்ட்டை அவர்கள் 'உள்ளே விடமாட்டோம்' என்கிறார்கள்; நான் எவ்வளவு சொல்லியும் அவர்களுக்கு என் மேலுள்ள பாசம் போகவில்லை; ஆதலால் உடனே டேவனுக்குத் தந்த உத்தரவை இரத்துசெய்ய

வேண்டும்; இன்றேல் அபாயம்!" என்று நீளச்சரடு அனுப்பினன். அந்தக் காலம் போக்கு வரவு மாட்டு வேகந்தான்; பதில் வருவதற்குள் ராவொர்த்து தனது எதிரியைச் சரிபண்ணப் பார்த்தான். டேவன்போர்ட்டு சத்திரத்திலிருந்தபடியே "ராவொர்த்து செய்யும் அக்கிரமத்திற்குக் கணக்கில்லை; பல மாதங்களாகச் சம்பள பாக்கி; சிப்பந்திகள் முணுமுணுக்கிருர்கள்; என் பக்கம் சேர்ந்தால் உரிய சம்பளத்தில் மண்ணைப் போடுவதாக மிரட்டுகிருன்; சில குடிகாரருக்குப் போதை யேற்றி என்மேல் ஏவுகிருன்; கோட்டையிலுள்ள ஜனங்களெல்லாரும் என்னை வரவேற்க ஆவலா யிருக்கிருர்கள். இந்த அயோக்கியன் கதவை மூடி, என்னை உள்ளே விடமாட்டே னென்கிருன்; என்னைக் கொல்லச் சதிகாரரை ஏவுகிருன். அபாயம்! இந்தப் பயலை உடனே சுட்டாலொழிய டேவிட் கோட்டை நமதன்று" என்று தீட்டிவிட்டான்.

இருவர் சரடுகளையும் பார்த்த சென்னைத் தலைவர் 60 வீரரைப் புதுச்சேரி வழியாக அனுப்பி, டேவன் போர்ட்டுக்கு உதவி செய்யச் சொன்னுர். அதைக் கேட்ட சில படைவீரர் அவன் பக்கம் சேர்ந்தனர்; ராவொர்த்துஇதைக் கவனிக்காதவன் போலிருந்தான்; தனது கை வலுத்ததென் றெண்ணி டேவன் போர்ட்டு கோட்டைக்கு வெளியிலுள்ள தோட்டத்திற்கு வந்தான். "வருக வருக, புதிய துரையே வருக!" என்று சிலர் வெகு நயமாக மாலை போட்டு அழைத்தனர்; டேவன் வெகு விருப்பாகத் தோட்டத்திற்குள் நுழைந்தான். "படார், டபார்!" என்று துப்பாக்கி வெடித்தது. இருபதடி வந்திருந்தால் ஆள் தீர்ந்து போயிருப்பான். "அட கொலைகாரா!" என்று உயி

ரைப் பிடித்துக்கொண்டு குடல் நடுங்கி, கூச்சலிட்டு ஓடினான் டேவன் போர்ட்டு. இதைப்பற்றிப் புகார் வந்தது. துரைக்கு மரியாதை குண்டு போட்டதாகச் சொல்லிவிட்டான் ராவொர்த்து. எப்படி யிருக்கிறது சமாசாரம்! இப்படியே "வா வா, துரையே!" என்பதும், கிட்ட வந்ததும் அவன்மேல் மரியாதை குண்டு வெடிப்பதுமாகப் பல நாட்கள் இழுத்தடித்தான் ராவொர்த்து. டேவன் போர்ட்டு, கூடலூர் சத்திரமே கதி என்று ஒளிந்துகொண்டு, கும்பினி அதிகாரிகளுக்கு முறையிட்டான். "அந்த ராஸ்கலைச் சத்திரத்தை விட்டு ஓட்டுங்கள்!" என்று ராவொர்த்து குதிரைப் படை யனுப்பினான். "பேசாமல் எங்கள் எசமான் காலில் விழு! இல்லாவிடில் இதோ ஒரே வேட்டு; ஒழிந்து போவாய்" என்று குதிரைவீரர் துப்பாக்கியை நீட்டினர். டேவனிடமும் வீரர் சிலர் இருந்தனர். "உங்களையும் கொன்று, அந்த ராஸ்கல் தலையையும் மண்ணில் உருட்டுவேன்" என்று எழுந்தான் டேவன். "படார்! படார்" என்று குண்டுகள் பறந்தன. ராவொர்த்து கன கோபத்துடன் வந்தான்; "வீட்டைப் பிடித்த சனியன் வீதியைப் பிடிக்கும்; அந்தப் பயலை உடனே விரட்டுங்கள் சத்திரத்தை விட்டு!" என்று மிரட்டினான்.

"புகலடைந்தவரைக் காட்டிக் கொடுக்கமாட்டோம்" என்றார் சத்திர அகுதார்.

"சரணம் என்ற விபீஷணனை இராமர் காத்தாரன்றோ? என்று நம்மவர் புராணம் பேசினர். "அப்படியா?" இதோ உன் சத்திரம் போகிற போக்கைப் பார்?" என்று ராவொர்த்து சத்திரத்தை நோக்கிச் சுட்டான்.

உள்ளிருந்து பதில் வேட்டு வந்தது; அதிர் வேட்டு—எதிர் வேட்டு—, குத்து, வெட்டு, அடி, தடி, திட்டு, வசவு, அரட்டு, மிரட்டு! தன்னைவிட்டு எதிரியுடன் சேர்ந்த பயல்களைச் சரியானபடி வாட்டி விட்டான் ராவொர்த்து. ஏக ரகளை! கும்பினி வியாபாரம் கூட நடக்கவில்லை. இவன் கொடா முண்டன்; அவன் விடா முண்டன்!

இருவரையும் சமாதானம் செய்ய இரண்டு துரைகளைச் சென்னையிலிருந்து அனுப்பினர். "அதெல்லாம் நடவாது; கவர்னரே நேராக வரவேண்டும்; எனக்கு விசுவாசமா யிருந்த பேர்களைத் தண்டிக்கக் கூடாது; அவர்களைக் கௌரவமாக நடத்தி இன்னும் அதிகச் சம்பளம் தரவேண்டும். என் சம்பளப் பாக்கியை உடனே வட்டியுடன் தரவேண்டும்;... எதிரி தான் செய்த குறும்பிற்காக மன்னிப்புக் கேட்கவேண்டும்" என்று நிபந்தனை சொன்னான் ராவொர்த்து. என்ன செய்வது? சரியான குண்டர்கள் பின்னே இருந்தனர். மத்யஸ்தம் தீர்க்கவந்த துரைகள் சென்னைக்கு ஓடினார்கள்; "தாங்கள் போனாலொழியக் கலகம் ஒழியாது; பெரிய கோழிச் சண்டை; யார் மண்டை உருளுமோ தெரிய வில்லை" என்று முறையிட்டார்கள். 'அட விதியே!' என்று கவர்னர் புறப்பட்டு, மிகவும் சிரமப்பட்டுக் கூடலூருக்கு வந்தார்.

கவர்னர் ஹாரிஸன், கூடலூர்த் தோட்டத்தில் முகாம் போடக் கனஏற்பாடுகள் நடந்தன; டேவன் போர்ட்டு கொழுத்த கடாக்களையும், இளங் கன்றுகளையும், ஏராளமான முட்டைகளையும், சாராயப் புட்டிகளையும் கவர்னருக்காகத் தயாரித்தான். அவன் சேவகர் தோட்டத்தில் அலங்காரப் பந்தல் போட்டுத்

தோரணம் கட்டி எல்லாச் சௌகரியங்களும் செய்தனர். வருகிறார் கவர்னர்; "பும் பும்! டுமுக்கு, டுமுக்கு!" என்று பாண்டும், பறையும் திசையைப் பிளக்கின்றன; "துரையே வரவேண்டும்!" என்று டேவன் போர்ட்டு தன் ஆட்களுடன் ஆரவாரித்தான்.

"எங்கே ராவொர்த்து? நமக்கு மரியாதை செய்ய வரவில்லையா?" என்று வினவினார் கவர்னர். இதோ மரியாதை! ஒரு குண்டு, இரண்டு குண்டு, மூன்று, நான்கு...! எங்கிருந்தோ படபடவென்று வெடித்தன! ஐயோ என்று கூட்டம் கலைந்தது; பாண்டுக்காரர் ஓட்டமெடுத்தனர்; கவர்னர் தோட்டத்திற்குள் ஓடினார். அங்கே மூக்குமட்டும் குடித்துவிட்டு ஒரு டச்சுக்காரன் "ஹூயூ? டாம் டூம்—டாட் புட்டி" என்று வெறிகொண்டு பட்பட் என்று குண்டு விட்டான்; அது பல்லவி; பின்னிருந்து படபட பட வென்று குண்டுகள் அனுபல்லவி போட்டன.

கவர்னர் "அட துரோகி!" என்று பயந்து உயிரைப் பிடித்துக் கொண்டு ஓடினார்; "துரைகளே, இதோ வழி! இந்தக் கிராமத்திற்குள் போய் ஒளியுங்கள்!" என்றொருவன் வழி காட்டினான். அதுவே தேவநாம பட்டணம். கவர்னர் 'தப்பினேன், பிழைத்தேன்' என்று அங்கே சென்றார். "வருக வருக, துரையே!" என்று சிலர் வரவேற்றனர். கவர்னர் "தாங்க்யூ" என்றது தான் தாமதம். "ஹலோ!" என்றொரு பேய்க்குரல்! படபட படவென்று பல துப்பாக்கிகள் சுட்டன. கடவுள் புண்ணியத்தால் மண்டை பிழைத்தது. கவர்னருடன் வந்த ஆட்கள் சிதறியோடினர். அவர் டேவன் போர்ட்டு ஒளிந்த சத்திரத்திற்கே போய்ப் பதுங்கிக் கொண்டார். அகுதார்

இரண்டு துரைகளையும் காத்தார். "யாராவது டேவிட் கோட்டைப் பக்கம் வந்தால் தலை தப்பாது" என்று ராவொர்த்து தண்டோராப் போட்டு விட்டான். முரடனை அடக்க முடியவில்லை!

முடிவில் கவர்னர் மிகவும் நல்ல வார்த்தை சொல்லிச் சமாதானம் செய்துகொண்டார். அதன் பின், "என் இச்சைப்படி டேவன் போர்ட்டு இங்கிருக்கட்டும்; நான் புதுச்சேரிக்குப் போகிறேன்;" எனக்குப் பாதுகாப்புத் தரவேண்டும்" என்றான் ராவொர்த்து. "உன் இச்சைப்படியே நடக்கட்டும், ! ஐயா" என்று இணங்கினார் கவர்னர்; அவன் எப்படியாவது ஒழியட்டும் என்றே சமாதானமாகப் போனார்; தகுந்த காவலுடன் ராவொர்த்தைப் புதுச்சேரிக்கு அனுப்பினார். அங்கே அவன் பெரிய மோஸ்தரில் வாழ்ந்து, கப்பலேறிச் சீமைக்குச் சென்றான்.

அவன் செய்த கலகத்தைப் பற்றி ஹாரிஸன் பயங்கரமாக வர்ணித்து இலண்டனிலிருந்த கும்பினி அதிகாரிகளுக்கு எழுதினார். அதிகாரிகள் சினந்து, அவனைக் கைது செய்து கடுஞ்சிறை யடைக்கவோ, தூக்குப் போடவோ தீர்மானித்தனர். இதை அறிந்தான் ராவொர்த்து; தான் இந்தியாவிலிருந்து கொண்டுவந்த பணத்தைப் பத்திரப்படுத்திக் குடும்பத்திற்குக் கொடுத்தான். ஒரு படகில் ஏறி ஓசைப் படாமல் பிரான்ஸிற்குச் சென்று, பாரிஸில் வசித்தான். எப்படியாவது அவனைத் தண்டிக்கவே அதிகாரிகள் தீர்மானித்தார்கள்; ஆனால், அவனைச் சாவே தண்டித்துவிட்டது. ராவொர்த்து பாரிஸில் திடீரென்று இறந்துபோனான். இனிப் பரலோகக் கோர்ட்டிலே தான் விசாரணை! கும்பினிக்காரர் ஹாரிஸ

னுக்கு வைரவாள் வெகுமதி தந்தனர். போட்டிக் காரன் ஒழிந்தான் எனறு டேவன் போர்ட்டும் டேவிட் கோட்டையை நிம்மதியாக நிர்வகித்தான்.

---

## ௧௧. என்னைத் தொட்டானே!!

அவனையும் விஜயதசமியன்றே படிக்க வைத்தார்கள். அண்ணு வாத்தியார் "ஹரி:" என்னும் போதே, பையன் "ஹி ஹி ஹி" என்ருன்; அரிக்குழி தோண்டச் சொன்னுல் குரங்கு மூஞ்சியும் ஆந்தை மூஞ்சியும் போட்டு வம்பு பண்ணினுன்; உபாத்தியாயர் அடித்தால், பிரம்பைப் பிடுங்கிக் கொண்டு ஓடினுன். ஏட்டுக்கும் அவனுக்கும் ஏழாம் பொருத்தம். படிப்பென்ருல் கொட்டாவி வரும்! நவராத்திரியில் கிலுக்கெடுப்பதென்ருல் சந்தோஷம்...! பையன்களை உபாத்தியாயர் பணக்கார வீடுகளுக்கு அழைத்துச் செல்வார்; கோலாட்டம் போடச் சொல்வார். நம் கதாநாயகன் மதுவன ஹநுமார் மாதிரிக் குதிப்பான்; பாட்டுக்குத்தக்கபடி அபிநயம் பிடிப்பான்; விகடக் கச்சேரி நடத்துவான்: மாமியார் நாட்டுப்பெண் சண்டை, நாத்தனுர் குரோதம், கணவன் மனைவி ஊடல்—எல்லாம் நடித்துக் காட்டுவான். ஊரிலுள்ள முக்கியஸ்தர் போல நடிப்பான், பேசுவான். தென்னுலிராமன் வித்தையில், ஆட்களுக்குத் தினுசு தினுசாகப் பெயர் வைத்து நையாண்டி செய்வதில் அவனுக்கு யாரும் இணையில்லை. ஆதலால் அவனை எல்லாரும் "நையாண்டி முத்து" என்று அழைத்தார்.

முத்துக்குப் பத்து வயது; படிப் பேறவில்லை: அவனைக் கட்டி மேய்க்க முடியாமல் உபாத்தியாயர் விரட்டி விட்டார். தகப்பனுர் "அட தீவட்டித் தடியா!

உன் மூளையிலே களிமண்ணு!" என்றெல்லாம் ரோசம் வரும்படி வைதார்...முத்து தாயார் குரலை அபிநயித்து, "இதேதடி, இந்தப் பிராமணனுக்கு என்னைச் சொல்லாவிட்டால் போது போகாது! வீட்டிலே உப்பில்லை...புளியில்லை....தெருத்திண்ணையிலே வம்படிக்கிறது, சீட்டாடறது, பொடி போட்டு மெழுகறது.... நன்னாயிருக்கு..."என்று ஒரு நெளிப்பு நெளித்து ஓடுவான். குளக்கரைக்கு முத்து போவான். அங்கே நடக்கும் வம்பர்மகாசபையைக் கவனிப்பான். இவனும் பக்கத்தில் நீந்திக்கொண்டே அவர்கள் வம்பில் குறுக்கிடுவான். இளங்கைம்பெண்ணொருத்தி "அவர் இருக்கும் போது...உம் உம்...பச்சைத் தண்ணீரில் குளிக்கவிடமாட்டார்..."என்ற பல்லவியுடன் காலஞ் சென்ற கணவன் வரிசைகளைத் தோழியிடம் அரங்கேற்றுவாள். நடு நடுவே "தெய்வத்துக்குப் பொறுக்கவில்லை..." என்று கண்ணைக் கசக்குவாள். இந்த வாண்டுப்பயல், "ஆமடியம்மா...உன் உபத்திரவம் பொறுக்க முடியாமல்தான் அவர் சிவலோகம் போய்விட்டார்...!" என்பான். அப்புறம், ஒரு நாட்டுப் பெண் மாமியார்மேல் குறைசொல்லிக் கொண்டிருப்பாள். "எனக்கொரு நாட்டுப்பெண் வாய்த்ததே... கோபுர வஸ்துமாதிரி..." என்று அழகு காட்டுவான். "அட கட்டையிலே போறவனே!" என்று அவள் ஆசீர்வதிப்பாள். அவள் முகத்திற்கு நேரே அபிநயம் பிடித்து, "என்னமோம்மா உன் வாய் இப்படிக் குளத்தங்கரைமட்டும் நீண்டு போனது...உன் அகத்துக்காரருக்குப் பட்டை நூலும், ஊசியும் வாங்கித் தர வேண்டும்..." என்பான். அவன் பேச்சும் நடையும் சிலருக்குச் சிரிப்பாயிருக்கும்; சிலருக்கு எரிப்பா

யிருக்கும். அவனைச் சிலர் வீடுகளுக்கு அழைத்து, "அடபயலே! அந்த மாமா எப்படி நடக்கிறார்? அந்த வீட்டில் எப்படிச் சண்டை நடக்கிறது?" என்றெல்லாம் கேட்பர். பையன் அவரவர் போலவே அபிநயித்துப் பேசுவான். தெருவில்வரும் பிச்சைக்காரன், குடுகுடுப்பை, நரிக்குறத்தி, லாடன், குரங்காட்டி, கல்லுளிமங்கன் முதலியோர் அனைவரையும் அவன் தத்ரூபமாக அபிநயத்துக் காட்டுவான். வேறு படிப்பு கிடிப்பு, வேலை வெட்டி கிட்ட வரக்கூடாது.

பெற்றோர் பொறுமையிழந்து, "உன்னைக்கட்டி யார் சோறு போடுவது? போடா தடியா!" என்று முத்துவை விரட்டியடித்தனர்.

சிவன் கோயில் மடைப்பள்ளி சாம்பையர் கிழவர்; கண் மங்கல்! அவருக்கு ஓர் எடுபிடியாள் வேண்டியிருந்தது. "நான் இருக்கிறேன். அண்ணா!" என்று முத்து அண்டாவுருட்டும் வேலையிற் புகுந்தான். எசர்போடவேண்டியது, உலைவைத்து அரிசிகளைந்து போட்டுக் கிண்டவேண்டியது முத்து வேலை. அண்ணா கிட்ட இருந்து வக்கணை சொல்வார். முத்து அண்டா வேலையில் சோடையில்லை. என்றாலும், சிவன்கோயிலில் சம்பாச்சாதந்தான் கிடைத்தது...சாப்பாடு வகையில்லை. பெருமாள் கோயில் மடைப்பள்ளியில் தளிகை வேலை கிடைத்தால் அழுந்த அமுதுசெய்து கொண்டிருக்கலாமே என்று சப்புக்கொட்டினான். பட்டைநாமம் போட்டாலும் அந்த வேலை கிடைக்காது. முத்து சாப்பிடுவான்...பிள்ளையார் சந்நிதியில் கட்டையைப் போட்டு அடித்த பாம்புமாதிரி விழுந்து கிடப்பான். அண்ணா கரண்டியால் குத்தினால்தான் எழுந்திருப்பான். அவனைக் கும்பகர்ணன் பலமாகப்

பிடித்துக் கொண்டான்...பகலில் இப்படிக் குறட்டை விட்டு, அவன் இரவில் விகடம் நடத்திக் குருக்கள் தூக்கத்தில் மண்ணைப்போடுவான். அவன் காளமேகம் போல் சிலேடை யடுக்குவான்; பிள்ளையார் பெண் தேடிப்போனதாகக் கற்பனைசெய்வான்; இங்கிலீஷ் படித்த பெண் பிள்ளையாரைக்கேலிசெய்வது போலக் காட்டுவான்; சிவனுக்கும் பார்வதிக்கும் தர்க்கம் நடத்துவான். "இதேனிப்படித் திங்கு திங்குனு சுடு காட்டிலே குதிக்கிறதாம்...இப்படித்தான் சாம்பலை உடம்பெல்லாம் வாரி அப்புவீரோ!...அடி இதென்னடி, பாம்பைக் கழுத்திலே மாட்டிக் கொள்வாருண்டோ...!" என்றெல்லாம் பார்வதி சிவனைக் கிண்டல் பண்ணுவதுபோல நடிப்பான். எல்லோரும் சிரிப்பர். ஒருநாள் குருக்கள் தட்சிணை வாங்கும் படலத்தை நடித்துவிட்டான். அவருக்குக் கோபம் வந்தது. ஏதோ சாக்குவைத்து, "நீ கோயில் வேலைக்கு லாயக்கில்லை, குண்டோதர வேலைக்கே லாயக்கு, போ!" என்று விரட்டி விட்டார்.

*   *   *   *

முத்து மதுரைச் சித்திரைத் திருநாளுக்குப் போனவன்தான்...பத்து வருஷம் காடோ, கைலாசமோ என்று திரிந்தான். முகம்கூட மறந்துபோனது. உறவினர் ஊரைவிட்டே போய்விட்டார்கள். அவனைப் பற்றி யாரும் நினைக்க நியாயமில்லை.

ஒரு சமயம் "**பகல் வேஷம்** முத்துவாம்; இட்சணி உபாசனையால் எடுத்த வேடம்போட்டு நடிக்கிறானும்; அவனுடன் ஒரு பெண்ணும் நடிக்கிறாளாம். மதுரை தஞ்சாவூரெல்லாம் பிரசித்தமாம்; நம்ம ஊருக்கும்

வருகிருனும்" என்ளுெரு மாமா ஊரெல்லாம் செய்தி பரப்பினுர்.

*　　*　　*

ஒருநாள் சிவன்கோவில் தெருவில் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தன.

"டியோ டியோ டியோ டியோ
டியோ டியோ ஆயாலோ!"

என்று சத்தம் கேட்டது. "அடே, நரிக்குறவன் குறத்திடா!" என்று குழந்தைகள் பார்க்க ஓடினர். "அம்மி பொளியலியோ! ஊஷி வாங்கலியோ!" என்ற சத்தம் கேட்டது. வீட்டுக்குள்ளிருந்த பெண்கள் "அட குறவா, அம்மி பொளிய வா!...ஊசியென்ன விலே?" என்று கேட்டனர். குறவன் குறத்தி தமாஷாகப் பாடிக்கொண்டு,

"காதொடிந்த ஊஷியிலே கயிறு கோத்தேன் ஆயாலோ!"

என்று அபாரமாக ஆடத் தொடங்கவே, தெருவெல்லாம் கூடிவிட்டது.

"காடே கௌதாரி மைனு வாங்கலியோ ஆயாலோ!"

என்று பாடி மைனுக்குருவி கத்தி வேடிக்கைசெய்யும் போதுதான் ஒரு மாமா "அட, பகல் வேஷம் முத்துவா!" என்று ஆரவாரித்தார்.

*　　*　　*

ஊரெல்லாம் முத்துவை வரவேற்றனர். முத்து தினம் ஒரு வேஷம் போட்டுப் பகல் ஒன்பதுமணிக்கு வருவான். அடையாளமே தெரியாது. காசிப்பிராமணனுக கங்கையுடன் வருவான்; சுலோகங்கள் பொழிந்து தள்ளுவான். 'சுவாமிகளுக்குப்பாணலிங்கம் கொண்டு வந்திருக்கிறேன்' என்ருேர் அம்மிக் குழவி

யைக் காட்டும்போதுதான் முத்துவேலை தெரியும். மறுநாள் பரதேசியும் மடத்தாச்சியுமாக வருவான். மடத்தாச்சி மடியில் ஒரு பிள்ளையை மூடிவைத்திருப்பாள். இருவரும் தங்கள் கதைகளைச் சொல்லிக் குழந்தைக்குக் கொஞ்சம் பால் கேட்பர். "ஐயோ பாவம்!" என்று சங்கில் பால் தருவர். அதைப் புகட்டப் போகும்போது சேலைக்குள்ளிருந்து ஒரு பெரிய சுரைக்காய் வெளியேவரும்! "சபாஷ் முத்து!", என்று சிரிப்பர். காவடி யெடுத்தல், முளையிலறுத்த கைம்பெண், மாமியார் மருமகள் சண்டை, மாமூல் கிழவியின் பிலாக்கணம், குடுகுடுப்பை முதலிய எத்தனையோ வேஷம் போட்டுவந்து அவன் ஊரை மகிழ்விப்பதுண்டு. கடைசி நாள் அவன் சுயமாக வருவான். கடுக்கன் மோதிரம், பட்டுக்கரை வேஷ்டி அங்கவஸ்திரம் ருத்ராட்சமாலை—எல்லாம் வகையாயிருக்கும். நாசூக்காகப் பேசுவான். வீட்டுக்குக் கால்ரூபா, அரை ரூபா...அரிசி, பருப்பு...இனும் தருவர். எல்லாரும் அவனைச் சந்தோஷமாக வரவேற்பர்.

* * *

முத்துவைக் கண்டால் கதவைப் படாரென்று மூடும் பேர்வழி ஒருவரே. அவரே வடக்குத்தெரு பிக்ஷாண்டேச்வரர். இப்படிச்சொன்னல் கோர்ட்டு அமீனுக்குத்தான் தெரியும். **கருமிப் பிச்சு** என்ருலே ஊரில் தெரியும். பிச்சு மைடாஸின் அண்ணு; அல்நாஷருக்குத் தம்பி. தாதுவருஷப் பஞ்சத்திலே களஞ்சிய நெல்லைப் பிடிவிலைக்கு விற்று அவன் பூர்வீக ஆஸ்தியை நாலுமடங்காக்கினன். எப்போதும்போல் ஏழைகளுக்குச் சந்தை வட்டியும், பணக்காரருக்கு அடமானத்தின் பேரிலும் கடன் கொடுத்து நகை நகை

யாக, வீடுவீடாக, பணம் பணமாகத் தட்டினுன். வீடு கைலாசம் போலிருக்கும். அதில் ஒரு பாதாள அறை. அதற்குள் பிச்சு தன் சொத்து சுதந்தரங்களையெல்லாம் புதைத்து வைத்தான்; தினம் இரண்டு மூன்றுதரம் அங்கே இறங்குவான்; மோகராக்களையும் நகைகளை யும் வெள்ளிப் பணங்களையும் ஆவலாக எண்ணுவான். பணப்பைகளைக் கட்டித் தழுவி ஒரு முத்தம் கொஞ்சி, 'க்ஷேமமாயிருங்கள்' என்று ஆசீர்வதிப்பான். 'மஹா லக்ஷ்மி! என் ஆயுளுக்குள்ளே இந்த அறை நிரம்ப வேண்டும், இல்லாவிட்டால் நெஞ்சு வேகாது'' என்று பிரார்த்தனை செய்து, தீபாராதனை காட்டி, பூராச் சூடனையும் அக்கினிபகவான் விழுங்குமுன் 'உஃப்' என்று அணைத்து விடுவான். பாதிச்சூடன் நாளைக்கு இருக்குமன்ருே? பிச்சுவுக்கு முதல்தாரம் கிளிபோல வந்தாள்; அவளை அவன் படுத்திவைத்த பாட்டில் "உங்களுக்கு ஏழேழு ஜன்மத்திலும் பெண்சாதியே கிடைக்காமல் போகட்டும்'' என்ற சாபத்துடன் இறந்தாள். பிச்சு அளந்து அரைப்படி அரிசி தந்து உக்கிராணத்தைப் பூட்டிவிடுவான். வாழைக்காய், கறிகளை "இது ஒரு துட்டு, இது அரைத்துட்டு, கவனம்!'' என்று விலைசொல்லித் தருவான். உடுத்தத் தருவது தோம்பு, சுங்கிடி. இனித் தையலுக்கு இட மில்லை என்று பழகிப்போன பிறகுதான் புதுப்புடவை தருவான். அவன் தாடி மீசை வளர்த்து க்ஷவரக் காசை மிச்சம் பிடிப்பான். பகல் சோற்றில் தண்ணீர் விட்டு வைத்து இரவுக் கடன் கழிப்பான்; விறகு லாபம்! காலை வெளியே போனல் ஒருகட்டு ஆலிலை, மடிநிரம்ப மாவடு, நெல்லிக்காய் சேர்த்துவருவான். இலை லாபம் காய்கறி லாபம்! மாவடு ஊறப்போட்டுத்

தொட்டுக்கொண்டு மோர்ச் சாதத்துடன் வயிற்றுக் கடனைத் தீர்ப்பான். பிச்சு பசு வளர்த்தான்—தென் ஞலிராமன் குதிரை வளர்த்தது போலத்தான்! பசு கோலோகம் போய்விட்டது. பிச்சு வட்டி வசூலுக் குப் போகப் பெட்டி வண்டி வைத்திருந்தான். அவன் கைராசியோ, பைராசியோ தெரியவில்லை; அசல் சேலம் காளை வந்தாலும், டான் குக்ஸோட்டின் குதிரைபோல் எலும்பெடுத்து, கைலாச யாத்திரை சென்றுவிடும். இந்தக்கதி அவன் மனைவிக்கும் வந்து விட்டது. அவள் ஓரே பெண் குழந்தையை விட்டு மேற்கொண்டு எச்செலவும் வைக்காமல் உடம்பை உதறிச் சென்ருள். பிச்சன் இரண்டாம் கலியாணம் செய்துகொண்டான்.

வந்தாள் பகவதியம்மாள்; பத்ரகாளி! அவள் கை கார்மேகம்; இவன் கை கருணைக்கிழங்கு. வந்தபேர் போனபேரெல்லாருக்கும் அவள் தாட்டாகச் சாப்பாடு போடுவாள். பிச்சு "ஐயோ, நமது பணமெல்லாம் இப்படி வெங்கலப்பானை வெங்கலப்பானையாக இந்தப் பயல்கள் வயிற்றுட் போகிறதே!" என்று ஏக்கம் பிடித்து அழுவான். உப்புக்கும் பப்புக்கும் அவளுடன் மல்லாடுவான். "உங்கள் தலையிலே கட்டிக்கொண்டு போவதென்ன? நாமும் சாப்பிடுவோம்; நாலுபேரும் சாப்பிடட்டுமே! ...தரித்திரம்.. எதற்கு?" என்று அவள்பிச்சன்வாயை அடக்கித்தன் காரியத்தைப்பார்ப் பாள். "ஐயோ சிவனே, இவளையேன் கட்டிக்கொண் டேன்! இவள் என் சொத்தை இப்படிக் கரைப்பதை விட ஒழிந்துபோனல் தேவலையே" என்று பிச்சன் ஆத்திரப்படுவான்; பையிலிருந்து ஒரு ரூபா எடுக் கும்போது உடம்பிலிருந்து உயிரை எடுப்பதுபோன்று

நடுங்குவான் ; வாசலில் பிச்சைக்காரர் வந்தால் வப்பென்று இராஜபாளையம் நாய்மாதிரி விழுந்து துரத்துவான். அவள் கொல்லைப்புறம் வரச்சொல்லி வயிறு நிரம்பச் சோறுபோட்டனுப்புவாள். "அடி, என் குடியைக்கெடுக்கவா வந்தாய் ?" என்று பிச்சன் கூப்பாடுபோடுவான். இரண்டுபேரும் கணவன் மனைவியென்பதைவிட வெருகுப்பூனைகள் என்று சொல்லிவிடலாம். பெண் பெரியவளானாள். அவள் கலியாணத்திற்குப் பிச்சன் ஆயிரம்ரூபாய் மதிப்பிட்டான். மனைவி "ஆசைக்கு ஒரு பெண் ; அஷ்டதரித்திரம் பண்ணவேண்டா !" என்று ஆறுயிரத்திற்குச் செலவை இழுத்துவிட்டாள். பிச்சுவுக்கு ஹஸ்தியில் சுரம் பிடித்துவிட்டது. செலவுடன் செலவாகப் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைக்கத் தொடங்கினான். எதற்கு ? தனது பணத்தைப் பிடுங்கி ஊரில் இறைக்கும் இந்தப் பெண்சாதி சாகவேண்டுமென்றுதான். வேண்டுகோள் பலித்தது. பிரசவத்தில் ஜன்னி பிறந்து, மனைவி ஓர் ஆண் குழந்தையை விட்டு இறந்தாள். காலியான பணப்பைகளை மீண்டும் நிரப்பப் பிச்சு வெகு பாடுபட்டான்.

நமக்கெல்லாம் பக்ஷமொரு ஏகாதசி என்றால், பிச்சுவுக்கு வாரமொரு ஏகாதசி வரும். பணம் மிச்சந்தானே. ஊரில் கதை புராணமென்றால் பிச்சு எட்டிப்பார்க்கமாட்டான். ஏழு மணிக்கே வீட்டுக் கதவை அடைத்துச் சந்துபொந்துகளில் துணியடைத்துக் காற்றுக்கூடப்புகாதபடி கவனமாகப் படுப்பான். எலி ஓடினாலும் எழுந்து பார்ப்பான் !

* * *

பகல் வேஷம் முத்து பல வேஷம்போட்டு ஊரை மகிழ்வித்தான். அவன் தெருக்கோடியில் வரும் போதே, பிச்சு கதவை மூடிக்கொண்டு வேட்டை நாய்க்குப் பயந்த குழிமுயல்போல் உள்ளே பதுங்கி வந்தான். சும்மா விடுவானா முத்து? திண்ணையில் பெரிய கூட்டம் போட்டுத் தன் விகடச் சரக்கு களை அபாரமாக அவிழ்த்து விட்டான். பிச்சனுை குட்டெல்லாம் அவனுக்குத் தெரியும். அவனுக்கும் மனைவிக்கும் சம்பாஷணை நடத்துவான். அவன் கடன்காரரைப் படுத்தும் பாட்டை அபிநயிப்பான். எல்லாரும் கொல்லென்று சிரிப்பர். "இன்னும், இன்னும்" என்று முத்துவைத் தூண்டுவர். நரிக் குறத்தி, குறவன், காசிப்பிராமணன், லாடன், துறவி, பிள்ளைத்தாய்ச்சி, பண்டாரம், காவடி, காதர்மியான் சாஹெபு முதலிய எந்த வேஷம் போட்டாலும் சரி, அந்த வீட்டுத் திண்ணைக்கு வந்தால் தனது பேச்சில் பிச்சுவையும் சேர்த்துக்கொள்வான். பிள்ளை "அப்பா ஒரு காசு கொடு...மிட்டாய்!..." என்று நச்சுவது போலப் பேசுவான். "ஒரு காசா...ஹா......ஒரு ரூபா வட்டிக்குப் போட்டாலன்றோ ஒரு காசு...! நூறு ரூபா சந்தை வட்டிக்குப் போட்டாலன்றோ ஒரு ரூபா குட்டி போடும்...ஆயிரம் ரூபா இருந்தா லல்லவா நூறு ரூபா வரும். காசா லேசா...!' என்று கருமிபோல் முத்து மிரட்டுவான். திண்ணையி லிருப்பவரையெல் லாம் "காசா லே...சா!" என்று கத்தச் சொல்லுவான். பிச்சு உள்ளிருந்து ஆத்திரம் பொறுக்கமாட்டாமல் வைவான்; "ஊர்ப் பீடைகள் என் திண்ணையில் வந்து பிராணனை எடுக்கின்றன. 'ஒரு பைசா தரமாட்டேன் போ!' " என்று ஊளை யிடுவான்.

ஒரு வாரம் முத்து வரவில்லை. அவன் வேறு ஊருக்குப் போய்விட்டதாகச் செய்தி...பிச்சுவுக்கு உயிர் வந்தது. "அரை ரூபா பிழைத்தது" என்று சந்தோஷப்பட்டான்.

ஒரு நாள் சாயங்காலம். பிச்சு திண்ணையில் பிள்ளையை மடிமேல் வைத்துக்கொண்டு, "ஓரே ஞெண்ணு" சொல்லிவைத்துக் கொண்டிருந்தான்; இடையிடையே ஹூம் என்று பெருமூச்சும் விட்டான். பிச்சு மனத்தில் ஒரு பெரிய துக்கம் குடி கொண்டிருந்தது. உலகில் எப்படிப்பட்டவனுக்கும் வாழ்வில் துயரம் இல்லாமல் போகாது. "பணமிருக்கிறது...யாருக்கும் பயனில்லை. பிணம்போல் புதை குழியில் உறங்குகிறது. ஊரில் மதிப்பில்லை. தலை கால் வலித்தால் 'ஏன் கருடா?' என்று கேட்பாரில்லை. கைக் குழந்தையை விட்டு அவள் கண் மூடிச் சென்றாள். வீட்டைக் கவனிப்பதா? வட்டிக் கடையைக் கவனிப்பதா? ஆள் வைப்போமென்றால் மாதம் பத்து, பதினைந்து கேட்கிறார்கள். ஆயிரம் இரண்டாயிரம் வட்டிக்குக் கொடுத்தாலல்லவா அந்தத் தொகை கிடைக்கும்? ஒரு சாண் வயிற்றுக்குச் சோறு திண்டிப்போடப் பத்தும் பதினைந்தும் கொடுப்பதா? காசு காசாகச் சேர்த்த பணம் அல்லவா? யாராவது ஒரு கட்டை விதவை...வந்தால் சமையல் பண்ணிப் போட்டுக்கொண்டு, குழந்தையையும் பார்த்துக் கொண்டு வீட்டுடன் இருக்கலாம்...சாப்பாடு, வெள்ளைப் புடவையுடன் செலவு தீரும்!" என்று பிச்சு ஒரு வருஷமாக யோசித்துக்கொண்டிருந்தான். கண்ணில் தட்டுப்படும் இளம் விதவைகளைக் கண்டால், "நம்முடன் இருக்கமாட்டாளா!" என்று தோன்றும்.

சத்திரத்துக்கு வந்திருந்த விதவைகள் இரண்டொரு வரை "அம்மா என்னுடன் இரு!" என்று அசம்பா விதமாகப் பேசி, காரமாக நாலு வாங்கிக்கொண்ட பிறகு, அவன் வெளிப்படையாக யாரையும் கேட்ப தில்லை. ஆனால், அவனுக்குக் கைம்பெண்கள்மேல் ஒரு கண் உண்டு!

*　　　　*　　　　*

அன்று இந்தச் சிந்தனை பலமாயிருந்தது. சிவன் கோயிலிலிருந்து இளம் விதவை யொருத்தி வந்தாள். தும்பைப் பூமாதிரி வெள்ளைப் புடவை. நெற்றி நிரம்ப விபூதி, கழுத்தில் பத்திராட்சிமாலை. இடுப்பில் மடி சஞ்சி ; கையில் ஒரு ஸ்தாலிச் செம்பு ; வாயில் சிவ நாமம்....முகத்தில் நல்ல களை. உதட்டில் துக்கத் தின் அடையாளமேயில்லை. நல்ல சிரிப்பு. உயரம் பருமன் எல்லாம் கணக்கு. மான்போல விழிகள் ; தேன்போல மொழிகள் ; அன்னம் போல நடை...! பார்த்தான் பிச்சு....கைம்பெண் அவனையே கடைக் கண்ணால் பார்த்துக்கொண்டு சிறிது தூரம் சென் ருள்...பிறகு அப்படிக் கொஞ்சம் தளுக்காக நடந் தாள். வைத்த கண் எடுக்காமல் பிச்சு அவளையே பார்த்து மோகித்துப்போனான்....அவளும் ஆளைக் கண்ணம்பால் துளைத்துக்கொண்டேயிருந்தாள். காந் தம் பலமாக இழுத்தது. பிச்சுவின் திருவாய் மலர்ந் தது....பசக்கென்று எழுந்து வந்தான். "அம்மா, யார் வீட்டைப் பார்க்கிறீர்கள்...எந்த ஊர்?" என்று இடம் பொருளேவலை விசாரித்தான். கைம்பெண் கண்ணாலும், உதட்டாலும், கையாலும் எவ்வளவு ஜகஜால வித்தை பண்ண முடியுமோ, அவ்வளவும் பண்ணிப் பேசினாள்:—

"நான் திருவண்ணாமலையிலிருந்து இராமேஸ்வரம் போகிறேன். இந்த ஜன்மத்திற்கு ஏதாவது மூர்த்தி தலம் தீர்த்தம் வேண்டியிருக்கிறதே! கட்டை கடைத் தேறவேண்டுமன்றோ...? இந்த ஊருக்கு வந்தேன். இரவு பலகாரம் செய்யவேண்டும்...வயிறு இருக்கிற தன்றோ? நேற்று ஏகாதசி சுத்தோபவாசம்...இங்கே பிக்ஷாண்டேசராமே...மகா தர்மிஷ்டராமே! கொடையிலே கர்ணனும்...மடை மடையாகத் திறந்துவிடுவாராம்...பணம் லக்ஷயமில்லையாம்...வந்தபேர் போனபேர்க்கெல்லாம் அவர் வீடு சத்திரமாம்...!அவர் வீடு எது?...இராத்திரி இருந்து போகலாமோ?"

இவ்வாறு அவள் கூறியதுதான் தாமதம்...பிச்சுவுக்கு உச்சி குளிர்ந்தது. முகஸ்துதி யாரையும் வசப்படுத்துமன்றோ?

"அம்மா வாருங்கள், அம்மா வாருங்கள்! நானே பிக்ஷாண்டேசன். இதுவே என் வீடு. தாராளமாக இருங்கள்; உங்கள் வீடுபோலவே நினைத்துக்கொள்ளுங்கள்!" என்று உருக்கமாகப் பேசி, பிச்சன் கைம்பெண்ணை உள்ளே அழைத்துச் சென்றான். இதற்குள் வாசலில் ஒரு கூட்டம் கூடிவிட்டது. அதன் மர்மம் பிறகு தெரியும். உள்ளே போனவர்களுக்குள் நடந்த சம்பாஷணையைச் சிறிது ஒட்டுக்கேட்போம்! நம்முடன் இன்னும் சிலர் கேட்கிறார்கள்!

"அம்மா மஹாலக்ஷ்மி மாதிரி வந்தீர்கள். நெடுநாளாகப் பகவானை வேண்டிக்கொண்டிருந்தேன். வீடு வெறிச்சென்றிருந்தது. தங்களைப்போன்ற ஒருவர் கிடைக்கவேண்டுமே என்றிருந்தேன். வந்தீர்கள். நானே தோசைவார்த்துப் போடுகிறேனே.... இதோ அடுப்பு மூட்டுகிறேன்...ரவையும் மோரும் கரைத்து

உப்பும் போட்டு வார்த்தால் நிமிஷம் தோசை யாகிறது!"

"என் ஜன்யஹூனுக்கு இவ்வளவு உபசாரம் வேண்டா. அவாள் போனபிறகு யார் கையாலும் நான் சாப்பிடுகிறதில்லை. நானே பலகாரம் செய்தே ஒருவேளை சாப்பிடுவது."

"அதுதான் நல்லது. உடம்புக்கும் நல்லது; பண மும் மிச்சம். அம்மா ஒருவேளை தாராளமாக இங்கே பலகாரம் பண்ணலாம். இரண்டு வேளையானாலும் பரவாயில்லை."

"ஐயோ, அவாள் போலவே இருக்கிறதே உங் களைப் பார்த்தால். பேச்சு நடை யெல்லாம் அப் படியே! உங்களோடே பேசிக்கொண்டிருந்தால் போதும். பலகாரங்கூட வேண்டா."

"நிரம்ப சரி, அம்மா; பேச்சுக்கென்ன வரவா செலவா! தாராளமாக விடிய விடியப் பேசுவோம். விளக்குச் செலவுகூட இல்லை, மாடியில் பட்டுநிலா அடிக்கிறது. சொல்லுங்கள் உங்கள் கதையை! என் கதையைப் பிறகு சொல்லுகிறேன்."

"ஐயோ, இப்படித்தான் அவர் பேசுவார்! எனக் குப் பத்துவயதிருக்கும்; என்னைப்பார்த்து அவர் மோகித்துப்போனூர். 'இந்தப் பெண்ணைக் கலியாணம் பண்ணிக்காவிட்டால் தடிப் பிரமசாரியாகவே காலம் கழிப்பேன்' என்று தீர்மானம் பண்ணினூர். ஜன்ம வாசனை ஒட்டிக்கொண்டது. பத்தும் பொருந்தி யிருந்தது. தகப்பனூருக்கு நான் ஒரே பெண்; செல்வ மாக வளர்ந்தேன். நான் முகங்கோண அவர் சகியார். பூப்போல நடத்துவார். நல்ல இடத்திலேதான் கொடுத்தார். அவர் கொள்ளைப் பிரியம். இணைபிரியா

திருந்தோம். அவர் 'என் தங்கமே' என்று அழைக்கும் போது, என் மனம் குளிரும். என்னை அவர் சமைக்க விடமாட்டார். சமைக்கப் பரிசாரகன், புடவை துவைக்க ஆள் வைத்தார்; என்னை வெடுக்கென்று பேசியதற்காக அவர் தாயாரையே விரட்டியடித்தார். என்மேல் கோள்சொன்ன நாத்தனாரைத் "தாயாருடன் போயிரு!" என்று அனுப்பினார். "அட பெண்டாட்டிக் கள்ளா!" என்ற தகப்பனாரைத் தம்பி வீட்டுக்கு அனுப்பினார். நானும் அவருமே சுதந்தரமாகக் குடித்தனம் பண்ணினோம். ஹா, அந்த அருமையும் பெருமையும் நினைத்தால்... ஹூம் ஹூம். . ."

"அம்மா, அழாதே; அதைவிட அருமை பெருமை இங்கே உண்டு. கதையை மேலே சொல்லு; இந்தக் கோலம் உனக்கு எப்படி வந்தது?"

"ஊம் உம்...தெய்வத்துக்குப் பொறுக்கவில்லை, அண்ணா. நாத்தனார் குடிகேடி! என் கணவனைப் பசப்பு வார்த்தைகளால் மயக்கிவிட்டாள்; போனவள் வீட்டில் வந்து ஒட்டிக்கொண்டாள். அவளுக்கு இரண்டு விஷப் புச்சங்கள். எனக்கு மருந்துக்கு ஒரு குழந்தை கிடையாது. இவளுக்கு இரண்டு! எப்படிச் சகிக்குமண்ணா?"

"நியாயந்தானம்மா, நியாயந்தான். நல்லதோ பொல்லதோ, இரண்டு கீச்சுப் பீச்சென்றிருந்தால் தானே வீடு பிடித்திருக்கிறது! இதோ இவனைப்பெற நான் இராமேசுவர யாத்திரைகூடச்செய்து பதினைந்து ரூபா முண்டம்போலச் செலவிட்டேன். அப்புறம் சொல்லு! உனக்குக் குழந்தை குட்டி யில்லையா?"

"ஐயோ, அந்தத் துக்கத்தை ஏன் கேட்கிறீர்கள் அண்ணா? சங்கு விரதம் இருந்தேன். சோமவார

விரதம் இருந்தேன். வாழைப்பழமும் தேங்காயும் போட்டு அரசப் பிரதக்ஷணம் செய்தேன். நான் பிறந்த லக்னம் அப்படி; ஆசைக்கொரு குஞ்சில்லை. அவருக்கும் எனக்கும் பிடிக்காமல்கூடப் போனது; இரண்டாந்தாரம் கட்டிக்கொள்ள முயன்ருர். 'நாத்த ஞர் போராட்டம் போதாதா? ஒரு சக்களத்திப் போராட்டமும் வேண்டுமா, என் ஜன்மத்துக்கு? என்னைக் குளத்திலே கிணற்றிலே தள்ளி முழுகிவிட்டுக் கலியாணம் செய்துகொள்ளுங்கள்!' என்றேன். எனக்கும் அவருக்கும் பேச்சு வலுத்தது. ஒரு சந்யாசித் தடிக் கட்டையிலே போறவன் அவருக்குச் சிநேகம். அந்தப் பழிகாரன் வேதாந்தம்பேசி அவர் பிரியத்தைக் கெடுத்தான். அவர் உலகம் அபத்தம், குடும்பம் துன்பம் என்று உளரத் தொடங்கிஞர். ஒரு கல் உப்பு அதிகமாஞல் 'இதோ போகிறேன், சந்யாசம்' என்று தெருமட்டும் போய்த் திரும்புவார். ஒருநாள் வீட்டில் சண்டை வலுத்தது. அந்த நாத்தி என்னென்னவோ கோள் சொல்லி எனக்கு உதை வாங்கிக்கொடுத்தாள். நான் 'ஹோ!' என்று அழுதேன். 'உன்னைக் கட்டி மேய்ப்பதைவிட காஷாயம் வாங்கிக்கொண்டு ஓடிப் போவது நல்லது!' என்று கோபாவேசத்தில் சொன்ஞர். 'சும்மா சொல்லித் தெருமட்டும் போய்த் திரும்புவானேன்? அவ்வளவு வைராக்கிய புருஷராஞல் போமே, பரதேசியாக! அப்போது தெரியும் பெண்சாதி யருமை! உமக்கு யார் என்னைப்போல வடித்து வைத்துக் காத்திருப்பார்?' என்றெல்லாம் ஆத்திரத்தில் பேசிவிட்டேன். பாவம்! பிராமணர் பசுப்போல வெளியே போய்விட்டார். வழக்கம் போலவே திரும்புவார் என்றிருந்தேன். வரவில்லை.

ஒருவாரம், ஒரு மாதம்...ஒரு வருஷம்...இரண்டு வருஷம் ஆனது. ஆளைக் காணோம். அந்தத் தடிக் கட்டையிலேபோன சாமியாருடன் இராமேசுவரம் போனதாகவும், அங்கே பேதிகண்டு...ஹூம் ஹூம் ஹூம்...."

"அழாதே அம்மா! உலக வழக்கந்தானே. ஒன்று போனால் இன்னொன்று. சரி, இந்தக் கோலம் ஆனது; பிறகு......?"

"செய்தி யெட்டியதும், 'பிள்ளை போனாலும் போகட்டும், நாட்டுப் பெண் அறுத்தாளே' என்று மாமியார் சந்தோஷப்பட்டாள். 'அண்ணன் போனாலும் பரவாயில்லை; மதனி என்னைப் போலானாளே! இனி கூந்தலைக்காட்டி என் வயிற்றெரிச்சலைக் கிளப்பமாட்டாள்' என்று நாத்தி கூத்தாடினாள். அவள் என்னைக் காணும்போதெல்லாம் கண்ணில் இலேசாகத் தண்ணீரைத் தடவிக்கொண்டு 'அம்மா உன்கதியும் என் கதியும் ஒன்றானதே' என்று துக்கம் கேட்பாள். நான் அப்புறம் போனதும் 'வேணும் தடி முண்டைக்கு' என்பாள். அவளுக்கொரு தம்பி இருக்கிறானே, அவன் வீட்டுச் சொத்தை யெல்லாம் ஸ்வாஹா பண்ணிவிட்டான். அவன் பெண்சாதி ஒரு காலகண்டி: என்னைப் புலிபோலப் பார்ப்பாள்; விலைக்கு வாங்கின அடிமை போல வேலை ஏவுவாள். சந்திரமதிபோற் பொறுத்துப் பொறுத்துப் புண்ணாய்ப்போனேன்; மண்ணாய்ப்போனேன். அந்த வீட்டில் இருக்க எனக்குப்பிடிக்கவில்லை. நாலுபேரைப் பஞ்சாயத்து வைத்து, என் துக்கமெல்லாம் சொல்லியழுது, ஒருவழியாக மாதம் ஐந்து ரூபாய் ஜீவனாம்சம் வாங்கிக்கொண்டு, காசி இராமேசுவரம் போய், கட்டையைக் கடைத்தேற்றப் புறப்பட்டேன்.

மதுரையில் ஒரு சேதி கேட்டேன். இராமேசு வரத்தில் பேதிகண்டவர் சாகவில்லை. அந்தச் சாமி யார் கட்டையிலே போறவன் மருந்துகொடுத்து சொஸ்தப்படுத்தி வடக்கே அவரை இழுத்துக் கொண்டு போனானும். அவர் இருப்பதும், இல்லா ததும் தெரியவில்லை. என் தலைமட்டும் இப்படி யானது. பட்டுப்புடவை போய், வெள்ளைப்புடவை வந்தது. குங்குமம் போய், விபூதி வந்தது. காரசார மான சாப்பாடு போய், பலகாரம் வந்தது. வீடுபோய், யாத்திரை வந்தது. அண்ணா, விதி இப்படிச் செய்ததே! அவர் காசி கயாவில் இருந்தால், நான் மறுபடி தலை வளர்த்துப் பட்டும் பொட்டுமாய் யிருக்கலாம் என்று ஒரு தீட்சிதர் சொன்னார்."

"அம்மா அவன் இருந்தாலும் சரி, இல்லாவிட்டா லும் சரி! கிளிபோல உன்னைக் கைவிட்டுச் சென்ற பாவியை நினைப்பானேன்? பேசாமல் என்கிட்ட இருந்துவிடு! உன்னைப்பார்த்தால் என் இளைய சம் சாரம் போலிருக்கிறது, சாப்பாடு துணிக்குப் பஞ்ச மில்லை. இந்தக்குழந்தையையும் உன் குழந்தையாகப் பார்த்துக் கொள்ளலாம். கஷ்டப்பட்டு வெந்து நொந்துபோய் வந்திருக்கிறாய். அம்மா இரு...!"

"அப்படியிருக்க முடியுமா அண்ணா, ஒருவர் வீட்டிலே? நீங்களும் சம்சாரி. செலவாகுமே!"

"அம்மா உன்விஷயத்திலே வேண்டுமட்டும் செல வழிக்கிறேன், எனக்கு இருபதினாயிரம் ரொக்கம் இருக்கிறது, வீடிருக்கிறது, நிலமிருக்கிறது, பஞ்ச மில்லை."

"இதெல்லாம் வைத்துக்கொண்டு என்ன செய்கிற தாம்? கட்டை கடைத்தேற ஒரு தானதருமம் பரோப

காரம் பண்ணவேண்டாவோ? 'புதைத்து வைக்காத பொருளைப் பூதம் கொண்டுபோகும்' என்று வசனம் உண்டே!"

"எனது இளைய சம்சாரம் இப்படித்தான் தான தருமம் என்று என்னையைக் காலியாக்குவாள். அவள் இந்தக் குழந்தையை விட்டுப் போருள். எல்லாம் இந்தப் பையனுக்கே. அவன் தாயார் ஸ்தானத்தில் நீயிரு!"

"இல்லையண்ணு, நான் அவரைத் தேடிக்கொண்டு காசியாத்திரை போகிறேன். கையில் பணமில்லை. ஒரு நூறுரூபாய்போதும். யாசகம் கேட்டுப் பழக்கமில்லை."

"போகிற பேருக்குப் பணமில்லை. இருந்தால் வேண்டியதைச் செய்கிறேன்."

"இல்லையண்ணு, கருமிகளிடம் நான் இருக்கமாட்டேன். தான தருமம்செய்தாலே இருப்பேன்."

"சரி செய்கிறேன். இரு!"

"அண்ணு, இனி, தானதருமம் செய்யும்! நான் அவரை அழைத்துக் கொண்டு வருகிறேன். தனியாக இங்கே இருந்தால் வீண்பேர் வரும்."

"தனியாகத்தான் இருக்க வேண்டும்."

"ஐயோ, நான் மாட்டேன். அண்ணு, எனக்கு என்னவோ பண்ணுகிறது! போகிறேன்."

"சை இரு! உன்னை இனி விடமாட்டேன்."

இருவருக்கும் வாக்குவாதம் வலுத்தது. கருமிப் பிச்சனைப் பெண்ணின் சாகசம் வென்றுவிட்டது. தன்னிடம் அவன் மனம் நன்ருகச் சிக்கியதை அவளும் அறிந்து கொண்டு பிலுக்கு பண்ணிப் போவதும் வருவதுமாக இருந்தாள். முடிவில் பிச்சண்ணு "என் கண்ணே உன்னை விடமாட்டேன். பூப்போல வைத்

துக் கொள்வேன்" என்று அவள் கையைப் பிடித்து விட்டான். உடனே ஒரே கூக்குரல்! இளிக்குரல் பேய்க்குரலானது! மயில் புலியானாள்!

"அட, கட்டையிலே போறவனே! என்னைத் தொட்டானே! ஐயோ, ஐயையோ! என் கற்புப் போச்சே, மானம் போச்சே!"

"அடி கத்தாதேடி! அண்டை அசலார் வரப்போகிறார்கள்."

"கத்தாதேயா...என்னைக் கெடுத்ததும் கெடுத்து விட்டு!........விளக்குமாறெங்கே எடுத்து வளாசுகிறேன்."

"அடியே, கோபம் வேண்டா. கத்தாதே ஏதாயினும் தந்துவிடுகிறேன்."

"நானென்ன தேவடியாள் என்று நினைத்தாயோ? ஊரில் பஞ்சாயத்து வைத்து உன் மானத்தைக் கெடுக்கிறேன். காசிக்குபோய் அவரையும் கூட்டிவந்து உனக்கு வழிசொல்லுகிறேன். என் கணவர் போலீஸ் இன்ஸ்பெக்டரா யிருந்தவராக்கும்! ஹூம்! காசிக்குபோக இருநூறு ரூபா வேண்டும்."

"அம்மா, காளி ரூபத்தை அடக்கு! இந்தா இரு நூறுக்கு முந்நூறு தருகிறேன். பேசாமல் உடனே ஊரைவிட்டுப் போய்விடு; என் மானத்தை அம்பலமாக்காதே!"

பிச்சு பதறிப்போய் முந்நூறுரூபாய் எண்ணி விட்டான். கைம்பெண் அதை வாங்கிக்கொண்டு கதவைத்திறந்து திண்ணைக்கு வந்தாள். அங்கே ஏக கூட்டம்!

எல்லாரும் "பலே முத்து! சபாஷ் முத்து!" என்று கைம்பெண்ணைத் தட்டிக் கொடுத்தனர்.

"உன் கருமித்தனத்தைக் கட்டையிலே வைத்து மடமடவென்று எரிக்க! பணத்தைச் சேர்த்து சேர்த்து என்ன செய்யப் போகிருய்? சத்திரம் சாவடி வை; ஏழை எளியவருக்கு ஏதாவது தா!" என்று கூப்பாடு போட்டுச் சென்ருள் கைம்பெண்...

தேர்க்கூட்டம் திருநாட் கூட்டம்,! "என்னமா வேஷம் போட்டாயடா முத்து!" என்று எங்கும் புகழ்.

மறுநாள், முத்துதான் நேற்று வந்த கைம்பெண் என்பதைப் பிச்சு அறிந்தான். புத்தி வந்தது. தன் பெயரால் ஊரில் தேசாந்தரிகளுக்கு ஓர் அன்ன சத்திரம் கட்டினுன். அவன் இருந்த வீடு இன்று இல்லை. பிச்சுவண்ணு சத்திரம் மட்டும் நன்ருக நடக்கிறது.

## கஉ. சமூகப் புரட்சி

I

சுந்தரதீட்சிதர் என்றால் ‘**வைதிகரத்னம்**’ என்பர் சனாதனிகள்; “**முட்டுக்கட்டை**” என்பர் புதுமைப் பித்தர். தீட்சிதர் காலையில் வைகையாடி, சிவப் பழமாக ஜபம் செய்துகொண்டே அங்குமிங்கும் ஆவலாகப் பார்த்திருப்பார். சங்கற்பம் சொல்லிக் கொள்ள வருவோர் ஒவ்வோரணா தட்சிணை வைப்பர். எட்டுமணிக்கு மனைவி காமாட்சியம்மாள் கையில் அரைரூபாவாவது வந்து சேரும்; பிறகு எள்ளும் சமித்தும் தருப்பையும் பூணூலும் கொண்டு, ஊரை வலை போட்டரித்து, உபாத்யாயத்தில் அரைக்காலும் காலுமாக, சம்புடம் நிரம்பக்கொணர்ந்து காமாட்சி கையில் தருவார்; அப்படியே பிராமணார்த்தத்தில் வயிற்றிற்கும் பார்த்துக்கொள்வார். தட்சிணையுடன் சோமன் ஜோடிகளும் வரும். தம்பதி பூஜைகளுக்கு மனைவியுடன் செல்வார். மனைவிக்குப் புடவை கிடைக்கும். மாகமாசம் துலாகாவேரிப் புராணம் படிப்பார்; மீனாட்சி கோயில் பொற்றாமரைக்கரையில் ஹாலாச்ய மஹாத்மியம் படிப்பார்; புராணத்திற்கு அரிசி பருப்பு காய்கறி பணம் வைப்பதற்கெல்லாம் வகைவகையாகப் புண்ணியபலம் சொல்வார். விசேஷமாகப் பாட்டிமார்களே புராணம் கேட்கக் கூடுவர். ஊர்வாலிபர்களுக்கு இந்தப் புடலங்காய் புராணமும், பாட்டிக்கதைகளும் பிடிப்பதில்லை. ஊரார் புராணம் கேட்க வராதது “**கலி முற்றிப்போனதற்கு அடையாளம்!**”

என்பார் தீட்சிதர். இப்படிப் பலவகையில் வரும் பொருள் குடும்பத்திற்குக் கட்டிக் கொஞ்சம் மிஞ்சும். அப்படி யிருந்தும் தீட்சிதர் 'பணம், பணம்' என்று பம்பரமாய்ச் சுற்றுவார்.

ஏன், இவ்வளவு வைதிக சிரோமணிக்குக் கூட ஆங்கிலமாயம் போகவில்லை! தீட்சிதருக்கு இரண்டு குமாரர்; ஒரு மகள். பிள்ளைகள் இங்கிலீஷ் படித்து உத்தியோகம் செய்தால், தாம் ஹாயாய் இருக்கலாம் என்று அவர் கனவுகண்டார். மூத்தபிள்ளை **சிவம்** அமெரிக்கன் கல்லூரியில் பி.ஏ. படித்தான்; இரண்டாம் பிள்ளை **கணபதி** இண்டர்மீடியெட் படித்தான். பிள்ளைகள் கல்லூரிக்குப்போகச் சௌகரியமாக தீட்சிதர் ஆதிமூலம்பிள்ளை அக்கிரகாரத்தில் ஒற்றிக்கு ஒரு மனைவாங்கிக் குடியேறினார். தீட்சிதர் வாயைக் கட்டி வயிற்றைக்கட்டி, அணு அணுவாகச் சேர்த்துப் பையன்களைப் படிக்க வைத்தார். தான் கிழிசலும் தையலுமான மண்டிவேட்டி யணிந்தார்; நல்ல சோமன் ஜோடிகளைப் பையன்களுக்கே தந்தார். அதிலேயே அவர்கள் சட்டை தைத்துக்கொண்டனர். இரண்டு வேஷ்டிகளை ஒன்றாய்த் தைத்து "இந்தாடீ, துரதிஷ்ட மூதேவி" என்று மகள் முகத்தில் எறியும் போது அவர் அழுவார்; காமாட்சி அழுவாள்; மைந்தர் அழுவார்.

## II

ஏன்? மகள் **சாவித்திரி**க்கு சாஸ்திரப்படி 8 வயதிலேயே கலியாணம் செய்யத் துடித்தார் தீட்சிதர். சரியான வரன் கிடைக்கவில்லை; வறுமை; வரதட்சிணை தர முடியவில்லை! முடிவில் கலெக்டராபீஸ் குமாஸ்தா

ஒருவன் கிடைத்தான், வயது 40; முதல் தாரம் இழந்தவன். சாரதா சட்டத்துக்குப் பயந்து புதுக்கோட்டைக்குச் சென்று தீட்சிதர் கலியாணத்தை முடித்து வந்தார். ஆபீஸ் மூலையிலேயே ஓயாமல் வேலை செய்ததால், க்ஷயரோகம் வந்து, மாப்பிள்ளையை மறு மாதமே வாரிக்கொண்டு போய்விட்டது. பத்து வயதிலேயே சாவித்திரி விதவையானாள்! உலகறியாக் குழந்தையை முண்டையாக்கி, மூலையிலடைத்தது வைதிகக்கொடுமை! சாவித்திரி வீட்டுக்காரியமெல்லாம் செய்வாள்; ஒருவேளை ஆகாரமும், ஒரு வேளை பலகாரமும் போட்டு 'மொட்டச்சி, கம்மண்டாட்டி மூதேவி!' என்று பெற்றோர் வைவர். அவளுக்கு ஆறுதல் சொல்பவன் சிவம் ஒருவனே.

சிவம் அவளுக்கு எழுதப்படிக்கச் சொல்லித் தந்தான்; அறிவை வளர்க்கும் புத்தகங்களைத் தந்தான். "சாவித்ரீ, கவலைப்படாதிரு! இந்த வைதிகக் கொடுங்கோலை முறித்தெறிவோம்; பெண்களுக்கு நல்லகாலம் வருகிறது ; நீயும் தீர்க்க சுமங்கலியாவாய்" என்பான் சிவம். "அவன் பேச்சைக் கேட்காதேடி மொட்டச்சி! ஊர் பேர் வந்தால் என்ன செய்வேன்! உன் ஜன்மத்திற்கு என்ன படிப்பு வேண்டியிருக்கிறது ?" என்று கண்டிப்பாள் தாய். "உன் கிராப்போ, சட்டையோ, இலக்ஷணமோ! பாஷாண்டிப்பயலே! அவளைக் கெடுக்காதே போ!" என்று சிவத்தை எரிந்து விழுவார் வைதிகத் தந்தை.

## III

சிவம் வெகு சுத்தமாயிருப்பான்; நேர்மையாக நடப்பான்; வைதிக முட்டுக்கட்டையை எதிர்ப்பான்;

நாடொப்பன செய்வான்; அடிமைத்தளையை அறுத் தெறிவான்; சுதந்தர முழக்கம் செய்வான். அவன் கிட்டவந்தால் " போடா தள்ளி!" என்பார் தந்தை; மேலே பட்டாலோ மோசம் போயிற்று; "பறைப் பயலே, பள்ளிக்கூடத் தீட்டோடே வந்து தொட் டாயா!" என்று தலைமுழுகி வருவார் தீட்சிதர். சிவம் தொட்ட பாத்திரத்தைக் கழுவிவைக்கச் சொல்வார். தமது கிண்டியை அவன் தொடச் சகியார். சிவம் இதரஜாதி நண்பருடன் வீட்டிற்கு வருவான். "கிரஹ சாரம், பாமர சஹவாசம்!" என்று தீட்சிதர் மண்டை யிலடித்துக் கொள்வார். " ஸார், கொஞ்சம் தீர்த்தம் " என்பர் நண்பர். " அம்மா!" என்பான் சிவம். " கஷ்ட காலம்; ஆசார விவகாரமில்லாத் தடியன்!" என்று சிடுசிடுத்துக் கொஞ்சம் மோரைக் கலக்கி நீர் கொணர்ந்து தருவாள் காமாட்சி; பிறகு அந்தப் பாத் திரத்தை நெருப்பில் காட்டிக் கழுவுவாள்; நண்பர் உட்கார்ந்த இடத்தில் சாணி தெளிப்பாள்; அவர் தொட்ட தூணைத் தண்ணீர் போட்டுத் துடைப்பாள். சில சமயம் சிவம் ஹரிஜன கிறிஸ்த வரையும் அழைத்து வருவான, " அடே, அவன் என்ன ஜாதிடா?" என்று சினப்பாள் காமாட்சி. " ஆண்சாதி தானம்மா; என்னைப்போல அவனும் ஒரு மனிதன் " என்பான் சிவம். " இந்தப்பயலை ஜாதிப்பிரஷ்டம் பண்ணவேணும்"! என்று குமுறுவார் தீட்சிதர். தீட்சி தருக்குப் " பறையன் " என்ருல் பயம். ஏன்? பறைய னிடம் ஒரு நஞ்சு இருக்கிறதாம்; அவன் வாடை பட் டால் காயத்ரி பலனெல்லாம் போய்விடுமாம்! தெரு வில் நடக்கும்போதே "நீ எந்தச் சாதி?" என்று எதிரே வருவோரைக் கேட்பார். இந்தக் காலத்தில்

யார் சாதியை மதிப்பர்? அதிலும் மதுரையில் நீண்ட காலமாகவே வைதிகத்திற்கு மதிப்புப் போயிற்று. "சூத்திரன்" என்றால் உதைவிழும். பார்ப்பனர் பாடு திண்டாட்டமாயிருந்தது. முற்காலம் "தீண்டாதே" என்றால் ஹரிஜனர் ஒதுங்கிச் செல்வர்; இக்காலம் "அப்பா இரு! நான் ஒதுங்கிப் போகிறேன்" என்று தீட்சிதரே ஒதுங்கி நடப்பார்.

தீட்சிதர் ஒருதரம் அமெரிக்கன் மிஷன் கல்லூரி வருஷக் கொண்டாட்டத்திற்கு வேடிக்கை பார்க்கப் போனார். சிவம் கல்லூரியைச் சுற்றிக் காண்பித்தான்; அதிசயமாகப் பார்த்தார் தீட்சிதர். போஜன சாலைக்கு அப்பாவை அழைத்துச் சென்றான்; அங்கே, சில வாலிபர் சமபந்தி சாப்பிட்டனர். "அப்பா, சாப்பிட உட்காரு!" என்றான் சிவம். "சீ, பிரஷ்டப்பயலே!" என்று ஒரே கோபமாகக் கோபித்துக்கொண்டு வீட்டிற்கு வந்து ஒரு பாட்டம் மகனை வைது தீர்த்தார் தீட்சிதர். அன்று முதல், படிப்பென்றால் சாதிமத ஆசார நாசம், சமபந்தி போஜனம்—என்றே அவருக்குத் தோன்றியது.

சாவித்திரி மட்டும் சிவத்தின் சமதத்துவக் கொள்கைகளை மிகவும் ஆவலாக விரும்பினாள்.

## IV

சிவம் பி. ஏ. தேறினான்; மிஷன் பள்ளிக்கூடத்தில் ஓராண்டு உபாத்தியாயராயிருந்து, எல். டி. படித்தான். உடனே, அவனுக்கு மதுரைக் கல்லூரியில் கணக்குப் புலவர் வேலைகிடைத்தது; சம்பளம் ரூ. 100. படித்து, உத்தியோகமும் பார்க்கும் வாலிபனுக்குப் பெண்கொடுக்கப் பலர் முந்தினர். தீட்சிதரும்

ரூ. 5000 வரையில் வரதட்சிணை ஏற்றிப் பையை ஆவலாகத் திறந்து வைத்திருந்தார். "அப்பா, சாவித்திரிக்குக் கலியாணமாகாமல் நான் கலியாணம் பண்ணிக் கொள்ளமாட்டேன்," என்று பிடிவாதமாகச் சொல்லிவிட்டான் சிவம்.

தீட்சி:—அடே, என் குலத்தைக் கெடுக்கவந்த அதமப்பயலே! இதற்காடா உன்னைப்படிக்கவைத்தேன்? ஐயோ, வீடுவீடாக அலைந்து தொண்டைவற்ற மந்திரம் சொல்லி, அணு அணுவாகச் சேர்த்து உன் படிப்பிற்கு அழுதேனே; என் குடியைக் கெடுத்தாயே...!

சிவம்:—அப்பா, உன் குடி வாழத்தான் வகை சொல்லுகிறேன். சாவித்திரி என் தங்கை! நமது குலத்தின் கொடி; அது மலர்ந்து கனிந்து மங்கலமாயிருப்பதா; இப்படி மூலையில் புகைமூண்ட சித்திரம் போல் வாடித் தவிப்பதா?

தீட்சி:—அந்தப் பேச்சை இங்கே பேசாதே, மனுத்ரோகி; பிராமண அதமா! சாதி ஆசாரம் கிடையாது; பள்ளுப்பறை பதினெட்டுச் சாதியுடனும் சகவாசம் பண்ணுகிருய்; உனக்குப் பூணூல் எதற்கு! அதையும் அறுத்துப் போட்டுப் போ வெளியே!

சிவம்:—அப்பா உன் சொல் தவருமல் நடக்கிறேன். இதோ, உன் பூணூல்—நீயே வைத்துக் கொள்! இந்தப் பூணூலன்ருே சாதியிறுமாப்பிற்குக் காரணமானது? இதுவன்ருே என்னைப்போன்ற ஒரு மனித சகோதரனைக் கீழ்ச்சாதியென்றும், தீண்டாதவன் என்றும் மதிக்கத் தூண்டுகிறது? அப்பா, சாதிமத வேறுபாடுகளுக்குச் சாவுமணி அடித்தாயிற்று. இனிச் சுத்த சன்மார்க்கத்தில் எல்லோரும்

ஒன்றுபட்டு வாழ்வர். வாய்மையும், தூய்மையும், அன்பும், அறமும் கொண்டவரெல்லோரும் ஒரே குலமாவர். ஆணுயினும், பெண்ணுயினும் சுகதுக்கம் ஒன்றுதான். என்னைப்போன்ற ஓர் ஆத்மா இங்கே மூலையில் விழுந்தழச் சகியேன்; என்னைப்போன்ற ஒரு சகோதரன் தீண்டாதவன் என்னும் பழியைச் சகியேன். இன்று முதல் நான் இரண்டு புண்ணியங்கள் செய்யப்போகிறேன்: ஒன்று, பெண்களின் கண்ணீரைத் துடைப்பது; மற்ருென்று, தீண்டாமையை ஒழிப்பது.

தீட்சி:—போதும், போதும்! நீசப்பயலே, பாமரப் பயலே, உன் தண்டத்திற்கு அழுததெல்லாம் போதும்! உன்னைப் பார்ப்பதே மகாபாபம், தொலை வெளியிலே! எருக்கு வைத்து முழுகிவிட்டு நான் கோயிலுக்குப் போகிறேன். உனக்குக் கோயிலேது குளமேது?—பாஷாண்டி...போ...!

சிவம்:—என் சகோதரரான திருக்குலத்தாரை உள்ளே விட்டாலன்றி, நான் எந்தக் கோயிலிலும் நுழையமாட்டேன். தீண்டாமைப் பேய் இருக்குமட்டும் கோயில்களை நான் தீண்டேன். ஒரு நாள் கோயிலுக்குள் என் சகோதரருடன் வருவேன், காண்பாய்.

தீட்சி:—போடா பிரமஹத்தி...!

சிவம்:—பயப்படாதே அப்பா, உன் புடலங்காய் புராணத்திற்கு அவர்களையும் அழைத்துவருகிறேன்.

* * *

அன்றுமுதல் அப்பனுக்கும் பிள்ளைக்கும் பேச்சுக் கிடையாது. சிவம் காக்காத் தோப்புத் தெருவில்

ஒரு தனிவீடு வாங்கிக்கொண்டு வசித்தான்; அந்த வீட்டையே சன்மார்க்க சங்கமாக்கினுன்.

## V

சிவம் ஒழுக்கத்திற் சிறந்தவன்; அவன் ஆடையைப் போலவே அந்தரங்கமும் சுத்தமாயிருக்கும்; மனம்போலவே ஒழுக்கமும், அன்பும் அருளும் நிறைந்ததாயிருக்கும். சிவம் ஆங்கிலத்திலும் கணக்கிலும் நிபுணன்; ஹைஸ்கூலில் வடமொழி படித்தவன்; கீதையை மனப்பாடமாக ஒப்பிப்பான்; அதன்படி நடப்பான்; சமத்வமும், சமானத்வமும் கீதையின் சாரமென்பான். நச்சினுர்க்கினியர் தமிழ்ச்சங்கத்திற் பயின்று அவன் தமிழிலும் தேர்ச்சிபெற்ருன்; காலத்திற்கேற்ற இளந்தமிழ் நடையில் அவன் நன்ருகப் பேசுவான், எழுதுவான். ஏழைகளைக் கண்டால் சிவம் மனமிளகி உதவுவான்; "பாதிரிமார்கள் தமது சமயத்தைப் பரப்புவதுபோலச் சன்மார்க்கத்தைப் பாமர ஜனங்களிடையே பரப்பவேண்டும். பெயருக்குத்தான் நாம் இந்துக்கள் என்றிருக்கிருேம். நம்மிடையே ஆயிரத்தெட்டுச் சாதி வேறுபாடுகளும் கருமாதி வேறுபாடுகளும் உள்ளன. இவற்ருலேதான் நமது சமுதாய முன்னேற்றம் தடைப்படுகிறது. காலத்திற்கும், கீதை, குறள் முதலிய அறநூல்களுக்கும் பொருந்தியவாறு சுத்த சன்மார்க்கக் கொள்கைகளை வகுக்கவேண்டும். அவற்றை ஏராளமாக அச்சிட்டுத் தாராளமாகப் பரப்பவேண்டும். சன்மார்க்கத் தொண்டரைத் தயாரித்துக் கிராமங்களுக்கு அனுப்ப வேண்டும்" என்பான் சிவம். அவனுக்குச் சொல்லும் செயலும் ஒன்று.

## VI

சிவம் பல மதங்களையும் நன்றாக ஆராய்ந்தான்; நாட்டு நலத்திற்காகப் பத்துக்கொள்கைகளை வடித்தெடுத்தான்; அவையாவன:—

(1) இறைவன் ஒருவனே; சாதி சமய வேறுபாடின்றி ஆண்பெண் அடங்கலும் அவனை அடையலாம்.

(2) உலகமெல்லாம் இறைவன் ஆலயம்; ஒவ்வொருவர் உள்ளமும் இறைவன் சந்நிதி.

(3) புறவேடங்கள் எப்படியிருந்தாலும், அனைவரும் இறைவன் புதல்வரே. சாதி சமய வேறுபாடுகளெல்லாம் மனமயக்கத்தால் உண்டானவை.

(4) அன்பு, அருள், கருணை, வாய்மை, உட்புறத் தூய்மை, சமநோக்கம், பொதுநலம், சமுதாயத்திற்குப் பயனுள்ள தொழில் செய்து பிழைத்தல், காலை மாலை அரைமணிநேரம் தியானம் செய்தல், காலத்திற்கேற்ற முன்னேற்றக்கொள்கைகளை அனுசரித்தல் —இவை சன்மார்க்க நெறியாம்.

(5) ஏழைகளுக்குப் பிழைப்புண்டாக்கல், கல்வி புகட்டல், புதிய சாத்திரங்களை விளக்கல், சுகாதாரங் கற்பித்தல், கள்ளொழித்தல், கவறொழித்தல், தீண்டாமையொழித்தல், பெண்கல்வி பரப்பல், பாலிய விவாக கண்டனம், மாதர் மறுமணம்— இவைபோன்ற முன்னேற்ற இயக்கங்களைச் சன்மார்க்கிகள் ஆதரித்து, வெற்றிபெறச் செய்யவேண்டும். சமுதாய சேவைக்கு உடலுறுதிவேண்டும். தினம் இரண்டு மணிநேரம் சன்மார்க்கி உடற்பயிற்சி செய்யவேண்டும்.

(6) மனிதனை மனிதன் அசூயைகொண்டு, சாதி மதப் பித்தம் அல்லது தேச, மாகாணப் பித்தம்

கொண்டு வேறுபடுத்தும் எந்த இயக்கத்திலும், சடங்கிலும் சன்மார்க்கி சேரக்கூடாது. நாட்டின் ஒற்றுமைக்கும், புதிய முன்னேற்றத்திற்கும், விடுதலைக்கும், பொருட் செழிப்பிற்கும், உலக சமாதானத்திற்கும், ஜீவகாருண்யத்திற்கும் சன்மார்க்கி பாடுபடவேண்டும்; பாடுபடும் இயக்கங்களை ஆதரிக்கவேண்டும்.

(7) அடிமை நாட்டில் எந்தச் சன்மார்க்க இயக்கமும் செழிப்புறாது. அடிமைத்தனம் கொடியநோய்; ஆதலால், தேசவிடுதலைக்கு வீரத்தொண்டு செய்வது சன்மார்க்கிக்குக் கோயிற்பணிபோலாகும். உலகமே சன்மார்க்கியின் கோயில்; உயிர்த் தொகுதியே சாமி.

(8) ஒவ்வொரு சன்மார்க்கியும் வீட்டுக்கொரு மொழி, நாட்டுக்கொரு மொழி, உலகுக்கொருமொழி நன்றாகப் பயிலவேண்டும். தமிழர் தமிழை உயிர் போலப் போற்றவேண்டும். இந்துஸ்தானியும் ஆங்கிலமும் கற்கவேண்டும். ஒவ்வொரு சன்மார்க்கியும் ஏதாயினும் ஒரு கலையில் தேர்ச்சிபெற்று, அதன் மூலம் சமுதாயத்திற்கு உதவிசெய்து, தானும் பிழைக்கவேண்டும்.

(9) சன்மார்க்கிகள் சுதேசி விரதம் பூணவேண்டும். இயன்றமட்டிலும் தமது தேசத்தில் உண்டாகும் சாமான்களையே வாங்கவேண்டும். தாம் தேவையளவு துய்க்கவேண்டும்; தேசமுன்னேற்றத்திற்கு இயன்றதைத் தரவேண்டும்.

(10) ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை 6-மணிக்குச் சன்மார்க்கிகளெல்லாம் ஒரே இடத்திற் கூடி, எல்லார் நலத்திற்காகவும் இறைவனை வணங்கித் தியானம் செய்யவேண்டும்.

## VII

இச் சுத்த சன்மார்க்க சங்கத்தில் ஏராளமான மாணவர் சேர்ந்தனர். பிறகு ஊர்வாலிபர் சேர்ந்தனர்; பெண்கள் சேர்ந்தனர். அவர்களுக்குத் தனியாக "சக்திசமாஜம்" ஒன்றமைத்தான் சிவம். அதற்குத் தலைவி **இலட்சுமி அம்மாள்**. இலட்சுமி அம்மாள் கணவன் **கோபாலன்**, சிவனுக்குக் கல்லூரித் தோழன்; வக்கீலில் நல்ல வரும்படியுள்ளவன்; முன்னேற்றத்தை விரும்பும் சன்மார்க்கி; ஆதலால் இலட்சுமி சக்தி சமாஜத்தைத் தனது மாளிகையிலேயே வைத்து நடத்த, எல்லாச் சௌகரியங்களும் அவன் செய்துகொடுத்தான். அத்துடன் கோபாலனுக்கு ஒரே பெண்; 16 வயது. அவளைச் சிவனுக்கே தரவேண்டுமென்று உறுதிபூண்டான். தனது சபதம் நிறைவேறிய பிறகே மணம் புரிவதாகச் சிவம் சொன்னான். சன்மார்க்க சங்க வாலிபர்களெல்லாரும் சிவம் பங்களாவிலேயே கூடுவர். சிவம் வீடு எப்போதும் திறந்திருக்கும். வீட்டுக்குப் பின்னால் பெரிய தோட்டம். அதில் சுமார் 1000 பேர் கூடலாம். அங்கே வாலிபர் தேகப்பயிற்சி செய்வர்; தோட்டவேலை செய்வர்; தியானிப்பர், நூற்பர், படிப்பர். அங்கே யாரும் அரட்டையடிக்கக்கூடாது, சோம்பேறியாகத் திரியக்கூடாது. அவரவர் இஷ்டப்படி, திறமைக்கேற்றபடி, சமாஜத்திற்குப் பயனான எந்த வேலையும் செய்யலாம். சிவம் அரிய நூல்களடங்கிய ஒரு புத்தகசாலை வைத்திருந்தான். அதை யார் வேண்டுமானாலும் உபயோகிக்கலாம். வெள்ளிக்கிழமை மாலை 6-மணிக்குத் தோட்டத்தில் அகண்ட சங்கீர்த்தனம் இசைக்கருவிகளு

டன் நடக்கும்; எல்லாரும் சேர்ந்து பக்தி பரவசக் கீர்த்தனங்களைப் பாடுவர்; பிறகு அரைமணி நேரம் மௌனமாகத் தியானம் செய்வர். அதன்பிறகு சிவம், கோபாலன் போன்றவர் ஒரு மணிநேரம் சன்மார்க்கப் பிரசங்கம் செய்வர். சிவம் சன்மார்க்கப் பணிக்காகச் சுமார் 100 திருத்தொண்டரைத் தயாரித்தான். அவர்களில் மாணவரல்லாதார் நாளுக்கொரு கிராமமாகச் சென்று ஜனங்களுக்குச் சன்மார்க்க போதனையும் சுகாதார போதனையும் செய்வர். அதற்கேற்ற துண்டுப் பிரசுரங்களை எளிய நடையில் கோபாலன் அச்சிட்டுத் தருவான். மாணவர் விடுமுறை நாட்களில் கிராமசேவை செய்வர்.

## VIII

இவ்வாறு சிவம் மதுரையில் ஒரு சமூகப் புரட்சி செய்து வாலிபவுலகை வசப்படுத்தினான். அவனுக்கு வைதிகர் விரோதிகளானார்கள். முதல் விரோதி தீட்சிதரே. "**காக்காத் தோப்புப் பறையன்,**" என்று தீட்சிதர் தம் மூத்தமகனை ஏசுவார்; அவன் பெயரை எடுத்தால் குமுறுவார். அவனுக்கு எதிரிடையாகப் பிரசாரம் செய்ய ஊர் வைதிகரை எல்லாம் சேர்த்து "**சுஷ்கவைதிக சபை**" யொன்று ஏற்படுத்தினார் தீட்சிதர். அதன் கூட்டம் "வர்ணாசிரம தர்ம ரக்ஷண சிரோமணி" என்று பட்டம்பெற்ற வக்கீல் **வேதாந்தமையர்** M. A., B. L., பங்களாவில் நடக்கும். "**பிராமணன் பிராமணனே!**" என்பது அச்சபையின் மூலாதாரக் கொள்கை. இச்சபையை "**மடிசஞ்சிக் கும்பல்**" என்பர் ஊர் வாலிபர். பெண்கள் நீச ஜன்மம் என்று தீட்சிதர் ஒருநாள் இடிமுழக்கினார். அதுமுதல் சக்தி

சமாஜத்தார் வைதிக முட்டுக்கட்டைகளைப்பற்றி வளாசத் தொடங்கினர். வைதிகக் கொடுங்கோலால் வருந்தும் இளங் கைம்பெண்களுக்குச் சரணளித்துத் தக்க கணவரைத் தேடி விவாகம் செய்தனர் சக்தி சமாஜத்தார். இலட்சுமியும், அவள்செல்வி மீனாட்சியும் பெண்களினம் வாழ்த்த அரிய உதவி செய்தனர்.

## IX

இச் சமூகப் புரட்சி யெல்லாம் சாவித்திரி காதிற் கெட்டியது. அப்போது சாவித்திரிக்குப் பதினேழே வயது. அங்கங்களெல்லாம் நல்ல வனப்படைந்திருந் தன. பால் வடியும் மதிமுகம், கமலக் கண்கள், பவழ வாய், முத்துப் பல், கும்ப மார்பு—எல்லாம் சரி தான். தலை மொட்டை! வெள்ளைப்புடவை! காமாட்சி தன் இளம்பெண்ணைக் கோட்டான்மாதிரி காத்து வந்தாள். அக்கம்பக்கம் பார்த்தால் நூறு மொட் டைச்சி வசவு; வீட்டுக் காரியம் முழுதும் அவளே செய்யவேண்டும். வைகையிலிருந்து ஜலங் கொண்டு வரப் பெரிய குடத்தைத் தந்தனுப்புவாள் தாய்.

ஆற்றிற்குப்போய் வரும்போது சாவித்திரி விழி கள் ஒரு வாலிபனை இரண்டொரு முறை சந்தித்தன. அவனை அவள் மனத்தில் வைத்துக் கொண்டாடினாள். கொஞ்சம் நேரங் கழித்து வந்தால், "தட்டுவாணி, யாரோடே வம்பளந்தே?" என்று திட்டுவாள் காமாட்சி. அவளுக்குமேல் தீட்சிதர் கட்டுப்பாடு செய் வார். என் செய்வாள் இளம்பெண்! தலை மொட்டை யானால் மனமும் சூனியமாகுமா? ஆசை போகுமா? இளமைக்குரிய உணர்வுகளை க்ஷவரக்கத்தி வழித்தெறி யுமா? ஆண்வாடையே கூடாதென்று பரியாரிச்சி

யைக்கொண்டே பெண்தலையை மொட்டையிடச் சொல்வாள் காமாட்சி. எனினுமென்ன? சாவித்திரி அடிக்கடி தனியே அமர்ந்து தனது வாழ்வைப்பற்றிச் சிந்திப்பாள்; பெற்ரேர் கொடுங்கோலை மீறத் துடி துடிப்பாள். சக்திசமாஜத்தில் சேர்ந்து தானும் மறு மணம் புரியவேண்டும் என்று உறுதிகொள்வாள்; தன்னை யார் காதலிப்பார் என்று தளர்வாள்; கதவை மூடிக்கொண்டு, பட்டுப்புடவையுடுத்தி, குங்குமமிட் டுக் கண்ணுடி பார்ப்பாள். ஒருசமயம் அவள் நாலைந்து மாதங்கள் தலையை வளர்த்தாள்; எண் ணெய்தடவிச் சீவினுள்; மஞ்சட் குங்கும மிட்டுக் கொண்டு கண்ணுடிபார்த்துப் பெரியகனவு கண்ட படியே உறங்கிப்போனுள். மணி இரண்டிருக்கும். காமாட்சியும் தீட்சிதரும் அன்று ஒரு பெரிய வீட்டு மங்கிலிப் பெண்டுகளுக்குச் சென்று, வேகுவேகென்று வந்தனர்; கதவைத் தட்டினர், தட்டினர். திறக்க வில்லை. "அடி மொட்டைச்சி, எவளேடே..." என் றெல்லாம் வைதனர். முடிவில் சாவித்திரி எழுந்து தான் பூண்ட சுமங்கலிக் கோலத்தை மறந்துபோய்க் கதவைத் திறந்தாள். தீட்சிதர் கண் தீப்பறந்தது! காமாட்சி புலிபோலப் பாய்ந்தாள். "அடி பாதகி, குல கேடி, பாவி, அறுதலிக் கம்மனுட்டி, தடிமொட்டச்சி! உனக்கென்னடீ பட்டும் பொட்டும்? அடி மூளி...... கண்ணுடி பார்த்தாயா! உன்னைக் கட்டையிலே வைத்துப் பொசுக்க......என்ன திரிசமன் பண்ணினு யடீ? சொல்லு உள்ளதை......!!' என்று இரண் டறை வைத்தனர்.

சாவித்திரிக்கு ரோசம் பொறுக்கவில்லை, "என் னம்மா பண்ணினேன்? ஏன் என் மேல் இப்படிப்

புலியாய்ப் பாய்கிறீர்கள்? நான் மாடா, கழுதையா, நாயா!" என்று எதிர்த்தாள்.

**தீட்சிதர்:**—ஸ்த்ரீஷு தூஷ்டாஸு வார்ஷ்ணேய ஜாயதே வர்ண சங்கர :

என்று சுலோகமாரி பொழிந்து, "அடி பாதகி, உன்னைப் போன்ற மொட்டைச்சிகளாலே தானேடி நமது வர்ணதர்மம் பாழாய்ப்போனது? கலி முற்றிப் போனது!" என்று சொன்னார்.

**சாவி:**—கலி முற்றினு லென்ன? உங்கள் வைதிகக் கொடுமைகளெல்லாம் பறந்தோடும்; நாங்கள் சுதந்தரமாகத் தலைநிமிர்ந்து நடப்போம். சாதிப் பித்தம் ஒழியும்; பலசாதிச் சண்டை தீரும். எல்லாரும் ஒரு குலமாவர். கலியுகம் வாழ்க!

**காமாட்சி :**—அடி மொட்டச்சி, அதெல்லாம் யாரிடம் கற்றுயடீ?

**சாவி :**—என் மனச்சாட்சி யிடம்.

**தீட்சி:**—அந்தக் காக்காத் தோப்புப் பறையன் பண்ணும் விஷமம் இதெல்லாம்! கலிகாலம், கஷ்டகாலம்! வைதிக தர்மம் போச்சு; பறையனெல்லாம் கோயிலில் நுழைகிருன். மொட்டச்சிக் கல்யாணங்கள் வலுக்கின்றன; அடி முண்டே, நீயும் அப்படி ஏதாயினும் உத்தேசித்திருக்கிருயா?

**சாவி :**—அதனுலென்ன? என்னை அடக்கிவைக்க நீங்கள் யார்?

**தீட்சி :**—சரி, கட்டு மீறிப்போனது தடிக்கழுதை, போ அப்படியே! அந்தப் பறையனுடன் போயிரு! இந்த வீட்டில் உன் வாடையாகாது. போ, ஊரிலே திரி மொட்டைச்சி! உனக்குக் கடசிராத்தம் பண்ணித் தலை முழுகுகிறேன்.

சாவித்திரியை ஒரு தள்ளுத் தள்ளினார் தீட்சிதர். "ஐயோ தெய்வமே!" என்று தெருவில் வந்து விழுந்தாள் பெண் பேதை; பேச்சியம்மன் முன்னே "இந்த வைதிகம் நாசமாய்ப் போக!" என்று மண்ணைவாரித் தூற்றினாள்; உடுத்திய பட்டுடனே காக்காத் தோப்புத் தெருவிற்கு வந்தாள்.

## X

சிவம் பள்ளிக்கூடத்திற்குச் சென்றிருந்தான். அவன் வீட்டில் தனியாய் ஒரு வாலிபக்காளை யிருந்தான். அவனே கோபாலன் தம்பி ஹரி; அவள் வைகைக்கரையில் கண்ட வாலிபன்! ஹரி எலெக்ட்ரிக் இஞ்சினீரிங் படித்தவன். மதுரை நகர மின்சாரத் தொழிலை மேற்பார்ப்பவன்; வயது 25 இருக்கும். முதல் மனைவியைப் பறி கொடுத்தவன்; சன்மார்க்க சங்கத்திற்கும், சக்தி சமாஜத்திற்கும் அயராமல் உழைக்கும் பொதுநல வீரன். அவன் சாவித்திரியைப்பற்றிச் சிவனிடம் கேள்விப்பட்டிருந்தான்; வைகைக்கு வரும்போது அவளைப் பார்த்திருக்கிறான். இருவர் விழிகளும், வைகைக்கரை மண்டபத்தில் இரண்டு மூன்று முறை சந்தித்திருக்கின்றன. அந்தத் தெரு மின்சார விளக்குகளைப் பார்க்கப் போகும் போது, சாவித்திரி கண்கள் தவறாமல் அவனைப் பார்க்கும். சிவத்தினிடம் ஹரிக்கு உயிர்நட்பு; ஒருநாள் வெளிப்படையாக "உன் தங்கையை நான் மணந்தாலென்ன?" என்றே கேட்டான். "ஆட்சேபணையில்லை; மடிசஞ்சியை விட்டு வெளியேறி வந்தால் உனக்குத்தான்..." என்று சிவமும் தமாஷாகச் சொன்னான். இன்று ஹரி, சிவம் தோட்டத்தில் எல்லாரும்

சுற்றியிருந்து படிக்க ஒரு மின்சாரத் தூண் விளக்குப் போட்டுக் கம்பி யிணைத்துக் கொண்டிருந்தான். அப்போதுதான் "சிவம் இருக்கிருரோ?" என்று சாவித்திரி உள்ளே வந்தாள். ஹரிக்கு உடல் பூரித்தது; உள்ளம் பூரித்தது: தன் மனத்திலுள்ள அழகி முன்னே நின்ருள்.

"வாருங்கள் அம்மா; அவர் தங்கைதானே தாங்கள்? இப்படி உட்காருங்கள்." என்று உபசரித்து, ஹரி ஒரு தட்டில் கனிகளை வைத்துக் "களைப்பாயிருக்கிறீர்கள், சாப்பிடுங்கள்!" என்ருன்.

ஹரியைக் கண்டதும் சாவித்திரியின் இளமை பூரித்தெழுந்தது; நாணம் அரும்பியது.

**சாவி**:—அண்ணு எப்போ வருவார்?

**ஹரி**:—இதோ இன்னும் அரைமணி நேரத்தில் வந்துவிடுவார். மணி $4\frac{1}{2}$ ஆயிற்று. அம்மா நீங்கள் நிம்மதியாயிருங்கள்! இந்தாருங்கள் சக்திசமாஜ வெளியீடு; இதைப் படித்துக்கொண்டிருங்கள்—!

சாவித்திரி நாணத்தால் அதிகம் பேசவில்லை; "**பெண் விடுதலை**" என்ற அந்த நூலைப் படித்துப் பெரிய சிந்தனையில் ஆழ்ந்தாள்.

அப்போது, சிவன் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தான். "வா, வா சாவித்திரி; விடுதலை, விடுதலை, விடுதலை! இனி உனக்குச் சிறையில்லை; மடிசஞ்சிக் கட்டுப்பாடில்லை. கவலையற்றிரு! என்ன, உன்னை இம்சைப்படுத்தி வைதார்களோ?" என்று பேசும்போதே சாவித்திரியின் கவலைகளெல்லாம் பறந்துபோயின. அண்ணுவுக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, நடந்ததெல்லாம் சொல்லி, "அண்ணு, நீதான் என் இரட்சகன்" என்று விம்மி அழுதாள் சாவித்திரி. "அம்மா

உன் கண்ணீர் துடைக்கவே இத்தனை நாள் காத்திருந்தேன். கிணற்றில் குளித்து வா! உனக்கு நல்ல புடவைகள் தயாராயிருக்கின்றன; சவுரி வைத்திருக்கிறேன்; வைத்து அழகாகத் தலை பின்னிப் பூமுடித்துப் பொட்டிட்டுக்கொண்டு என் பின்னே இலட்சுமியம்மாளைப் பார்க்க வா!" என்றான் சிவம். அரைமணி நேரத்தில் சாவித்திரி புதுமைபெற்றுப் பூரித்தாள்; காலை ரோஜாபோலப் பொலிந்தாள். "ஆ, இந்த அழகு!" என்று ஹரி வியந்தான். எல்லாரும் இலட்சுமியம்மாளைப் பார்க்கச் சென்றனர்.

* * *

இலட்சுமி யம்மாள் முகமலர்ந்து சாவித்திரியை வரவேற்றாள். அவள் வனப்பைப் பார்த்து ஹரி சொக்கிப்போனான். இருவர் மனமும் பொருந்தியிருப்பதை இலட்சுமியும் கோபாலனும் அறிந்தார்கள். "அடுத்த புதன்கிழமை கொட்டுவோம் இரட்டை மேளம்!" என்றார்கள். சாவித்திரிக்கும் ஹரிக்கும் கலியாணம்; அத்துடன் தம் மகள் மீனாட்சியைச் சிவத்திற்குக் கலியாணம் செய்து கொடுப்பதாக ஏற்பாடு செய்தனர். "மீனாட்சி தரிசனம் செய்தே மீனாட்சியை மணப்பேன்" என்றான் சிவம். "அதற்கென்ன செய்தால் போயிற்று; வா இன்றே!" என்றான் கோபாலன். "என் சகோதரர்களான திருக்குலத்தாருடனேதான் நான் கோயிலுக்குட் செல்வேன்" என்று பிடிவாதமாகச் சொன்னான் சிவம்.

## XI

தேசம் விழித்தது; காலங் கனிந்தது. திருக்குலத்தார் கோயில் நுழைவைப் பற்றிச் சட்டம் நிறை

வேறியது. தென்னிந்தியக் கோயில்களில் பெரியது மதுரை அன்ரூே? அதில் வெற்றி பெறவேண்டு மென்று பொதுநலத் தொண்டர் முனைந்து முயன் றனர். அத்தொண்டில் சிவம் பெரும்பங்கு கொண் டுழைத்தான்.

* * *

இரவு மணி 9; சிவமும், கோயில் டிரஸ்டிகளும் முன்னே சென்றனர். பின்னே, சன்மார்க்க சங்கத் தொண்டர் திருக்குலத்தாருடன் பஜனை செய்து தொடர்ந்தனர். எல்லாரும் கிளி மண்டபத்தை அடைந்தனர். வைதிகர் சிலர் "ஐயோ கலிகாலம்! சாதி ஆசிரமம் போச்சே! நீங்கள் நாசமாய்ப்போக! சாமி தீண்டலாய்ப் போச்சே!" என்று சாபமிட்டனர். சிவநாமாவளியின் இடி முழக்கத்தில், அவர் கூக்குரல் கேட்கவில்லை. அது தீண்டாமையின் சாங்குரல்! திருக்குலத்தா ரெல்லாரும் உள்ளே நுழைந்தனர்; காங்கிரஸ் அபிமானியான ஒரு பட்டர் மீனாட்சிக்குப் பூசை செய்து தீபாராதனை காட்டி எல்லாருக்கும் பிரசாதம் வழங்கினார். கோயில் நுழைவு வெற்றி பெற்றது. மறுநாள் நான்கு மணிக்குக் கோயில் மண்டபத்தில் ஹரிஜனங்கள்கூடி அம்மனுக்கும் சுவா மிக்கும் அபிஷேகங்கள் நடந்ததும், சிவம் ஹிந்து தர் மத்தைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்யப் போவதாக விளம்பரம் செய்தனர். சுந்தர தீட்சிதருக்கு மறுநாள் செய்தி எட்டியது. பிராமண சபையாருடன் பெரிய கிளர்ச்சியை ஜோடித்தார்.

நாலுமணிக்குச் சுந்தர தீட்சிதர் "சுக்லாம் பர தரம் விஷ்ணும்" என்று குட்டிக்கொண்டு ஹாலாச்ய

மஹாத்மியம் வாசிக்கத் தொடங்கினர். பாட்டிமார்கள் அரிசி பருப்பு வைத்துக் கதை கேட்டனர். அப்போது திமுதிமு வென்று ஹரி ஜனங்கள் புடைசூழச் சிவமும், காங்கிரஸ்—சன்மார்க்கத் தொண்டரும், ஊர் மகா ஜனங்களும் வந்தனர். தீட்சிதர், நீச ஜாதிகள் காதில் விழக்கூடாதென்று புராணத்தை நிறுத்தி, "சிவனே, எல்லாம் கலிக்கொடுமை! நீயும் தீண்டலாய்ப் போனாய்" என்று பெருமூச்சு விட்டார். அச்சமயம் சமரசப் பாடல்கள் முழங்கின. சபை மனங் குவிந்து கேட்டது; சிவம் தனது உருக்கமான பிரசங்கத்தைத் தொடங்கினன். பிரசங்கம் ஒருமணி நேரம் நடந்தது. சாரத்தை மட்டும் இங்கே தருவோம்:—

## XII

"பரமாத்மா இல்லாத இடமில்லை; உள்ளத்திலும் உலகிலும் அவனே நிறைந்திருக்கிறான். பசு பட்சிகளிலும் அவனே என்றால் மனிதருள்ளும் அவனே விளங்குகிறான் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? இந்த ஊரிலுள்ள மின்சார விளக்குகளின் அளவும் நிறமும் பலவா யிருக்கலாம்; அனைத்திலும் பரவி நிலவும் மின்னொளி ஒன்றுதானே; மனிதர் பெயர் வடிவில் வேறுபாடுகளிருக்கலாம். எல்லார் உயிரும், உயிர்ப்பும் ஒன்றுதானே. எவன் அனைத்திலும் தன்னை, அனைத்தையும் தன்னில் காண்கிறானோ அந்த ஆத்ம ஞானியே உண்மையான பக்தன். சமதர்சனமே புலவர் பெருமை என்றெல்லாம் நம் அறநூல்கள் பேசுகின்றன. இந்தச் சமதர்சனத்தை இழந்தோம்; நாம் பலவாகப் பிரிந்து பலங் கெட்டோம்; பிறருக்கு அடிமைப் பட்டோம். ஹிந்து தர்மம் எங்கேயிருக்கிறது?

நம்மவர் பிறமதங்களுக்கு இரையாகி வருகின்றனர். கோடி கோடியாக நம்மவரை இழக்கிறோம்; ஏன்? நம்மவரை நாம் நாய்மாதிரி அன்பில்லாமல் நடத்துவதாலேதான். பிறர் "வா வா" என்றழைக்கின்றனர்; நாம் நம்மவரைச் "சீசீ, கிட்ட வராதே, போ போ!" என்று துரத்துகிறோம். அதனால், இன்று பத்துக் கோடி பேர் பிற மதத்தைச் சேர்ந்து நமக்கே அந்நியராயிருக்கக் காண்கிறோம். ஏழுகோடி ஹரிஜனங்களை ஒதுக்கி வைத்திருக்கிறோம். உலகம் நம்மைப் பார்த்துச் சிரிக்கிறது. நம்மைப் பிரித்துவிட்டுத் தமது காரியத்தைச் சாதிப்பவர் கை வலுக்கிறது.

இன்றுடன் ஹரிஜனங்களுக்கு விடுதலை; ஹரிஜனங்களைக் கோயிலில் விடுவதுமட்டும் போதாது. இவ்வளவு பெரிய கோயிலைச் சமுதாய நன்மைக்குப் பயன்படுத்த வேண்டும். கோயில்களைப் பள்ளிக்கூடங்களாகவும் சன்மார்க்க சங்கங்களாகவும், புத்தக சாலைகளாகவும் ஆக்கவேண்டும். அக்காலமும் வரும். இதோ அம்மன் புது நகை புரிகிறாள்! அவளைத் தீண்டலானாள் என்னும் வைதிகர் நாஸ்திகர் என்பேன். சூரியனுக்குத் தீண்டலுண்டா? பரமாத்மாவான ஈசுவரனுக்கும் எல்லாம்வல்ல பரா சக்திக்கும் தீண்டலுண்டா? சகோதரர்களே, இந்த மூடக் கொள்கைகளைச் சிரித்தோட்டுங்கள்! உலகமே கோயில்; உயிர்த் தொகுதியே பரமாத்மா. இதயமே அன்பு மலர்...எல்லாரும் அருட்பணியால் வழிபடுங்கள்! தீண்டாமையைப் போலவே மற்றொரு கொடிய நோய் நமது ஹிந்துதர்மத்திற் படர்ந்துள்ளது—பெண்ணடிமை. அதற்கும் சாவுமணி யடித்தாயிற்று; தீண்டாமையை ஒழித்தோம்; இனிப் பெண்

மணிகளின் துன்பக் கண்ணீரைத் துடைப்போம்; துடைத்துக்கொண்டிருக்கிறோம். அப் பணியில் இன்னும் தீவிரமாக ஈடுபடுவோம்! இனி, இந்தியாவில் மனிதனை மனிதன் தாழ்வாக நினைக்கும் சாதிப்பித்தம் தலைகாட்டாதடிப்போம்; பெண்மைக்குச் சுதந்தர பேரியடிப்போம்; எங்கும் சுத்த சமரச சன்மார்க்கச் சங்கு முழக்குவோம். எல்லாரும், இன்புற்று வாழ்க!"

சிவம் சொற்பொழிவு சபையோருக்குப் புதிய தைரியத்தையும், உற்சாகத்தையும் கொடுத்தது. தீட்சிதருக்கோ "காக்காத் தோப்புப் பறையனை" வெட்டிவிடலாம் என்று தோன்றியது.

## XIII

விரதம் நிறைவேறியது; அன்றிரவே சிவமும் மீனாட்சியும் அம்மன் சந்நிதியில் நின்றனர். மறுநாள் சக்தி சமாஜத்தில் மங்கள வாத்தியம் முழங்கியது.

அதே நாள் மாலை சுஷ்க வைதிக சங்கம் வேதாந்தம் வீட்டில் கூடியது; சாத்திர விசாரணைகள் பலமாய் நடந்தன. தம் மகன் செய்த அக்கிரமம் தீட்சிதருக்குப் பொறுக்கவில்லை; பிராமணர் கறுப்புக் கொடி பிடித்தனர்; ஒன்றும் பலிக்கவில்லை; மண்ணை வாரித் தூற்றலாமென்றாலும் சாமிகளெல்லாம் திண்டலாய்விட்டன; "மீனாட்சி சுந்தரேசா! உமக்கும் கண்ணவிந்ததா? இந்த அக்கிரமத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறீரா? கோயிலுக்குப் பறையரைக் கூட்டி வருவோரையெல்லாம் நெற்றிக்கண்ணைத் திறந்து சாம்பலாக்க மாட்டீரா?" என்று முறையிட்டனர்; சீர்திருத்தக்காரர் ஒழிய ஒரு யாகம் செய்யக் கூட முற்பட்டனர்.

மறுநாள் இரவு ஒன்பது மணி; கோயிலுக்கு சம்ப்ரோக்ஷணை செய்து தீண்டலான மீனுட்சியைக் காப்பாற்ற வைதிகர் உள்ளே நுழைந்தனர். பொது ஜனங்கள் ஏக கலாட்டா செய்தனர். வாய் வீச்சுடன் கல் வீச்சும் நடந்தது. வைதிகருக்குக் கோபம் வந்தது. கோபத்திற்குச் சாதி கிடையாதன்ருே? இரண்டு பக்கமும் கை கலக்க நேர்ந்தது. சில வைதிகர் காயமடைந்தனர். செய்தி சிவத்திற்கு எட்டியது. உடனே, சிவம் தொண்டரை அனுப்பிக் காயப்பட்டவரை எடுத்துவரச் சொன்னுன். தொண்டர் கலகத்தை நிறுத்தினர். ஒரு வைதிகர் மயக்கம் போட்டு விழுந்துகிடந்தார். அவரைத் தொண்டர் சுமந்து சக்தி சமாஜத்திற்குக் கொண்டுவந்தனர். சமாஜ டாக்டர் வடிவேலு (ஹரிஜன்) சிகிச்சை செய்தான். வைதிகர் கண்ணைத் திறந்து பார்த்தார்; "அப்பா நீ க்ஷேமமாயிரு!" என்று ஹரிஜன வடிவேலுவை வாழ்த்தினுர்.

"அப்பா, நமஸ்காரம்" என்று சிவம் தன் மனைவி மீனுட்சியுடன் வணங்கினுன்; "அப்பா நமஸ்காரம்" என்று சாவித்ரி ஹரியுடன் பணிந்தாள். கோபாலன் சந்தனம் பூசினுன்; ஒரு வெள்ளித் தட்டில் ஜோடி சோமனும் இரண்டு புடவையும் 200 ரூபாவும் வைத்துக்கொடுத்தான். தீட்சிதர் இந்த வைபவங்களைக் கண்டு திகைத்தார். நண்பரெல்லாம் "என்ன தவம் செய்து சிவனைப் பெற்றீர்!" என்று தீட்சிதரைப் புகழ்ந்தனர்.

தீட்சிதர் நடந்ததையறிந்தார்; அவர் மனம் மின்சார வேகத்தில் மாறியது; வீட்டில் முக்காடு போட்டழுத சாவித்திரி மறைந்தாள். மஞ்சளும், குங்கு

மமுமாகத் தம்முன் இலக்ஷ்மிகரமாக நின்ற சுமங்க லியை "தீர்க்க சுமங்கலீபவ!" என்று வாழ்த்தினுர். "காக்காத் தோப்புப் பறையன்" மறைந்தான். உல கம் புகழும் பரோபகாரியான சிவம் மீனுட்சியுடன் அவரை மகிழ்வித்தான். "அப்பா சிவம்! பழைய கதையை மறந்துவிடுவோம். உனக்கு அருமையான மனைவி வாய்த்தாள். இருவரும் பெற்றுப் பெருகித் தீர்க்காயுசுடன் இருங்கள்!" என்று மனமார வாழ்த்தி ஞர்; சுந்தர தீட்சிதர் சமரச தீட்சிதராய்ச் சன் மார்க்க சங்கத்துடன் ஐக்கியமானுர்!

## கரு. சரியான ஜோடி

### I

கமலம், டாக்டர் இராகவனுக்கு ஒரே பெண். பூத்த மல்லிகைபோல் அழகி! அவள் நடந்தால் அன்னம் தோற்றுப் போகும். பேச்சில் கிளி கொஞ்சும். பாட்டில் குயில் கொஞ்சும். முகத்தில் அழகுடன் தைர்யலக்ஷ்மியும் வாசம் செய்வாள். டாக்டர் இராகவன் சீர்திருத்தவாதி. ஆண் பெண் சரிநிகர்சமானமாக வாழவேண்டும் என்பவர். ஆதலால், அவர் தம் அருமைக் கமலத்திற்கு எல்லாச் சுதந்தரமும் தந்து, அவள் மனங் கோணுமல் நடந்தார்.

கமலம் நன்ருகப் படித்தாள்; இண்டர்மீடியட் தேறியதும் வைத்தியக் கல்லூரியில் சேர்ந்து எம்.பி. ஸி.எம்., பட்டம் பெற்ருள். அவளிடம் பெண்மையுடன் ஆண்மையும் குடிகொண்டது. அவள் ஃபுல் சூட்போட்டுக் குதிரைச் சவாரி செய்வாள்; பந்தாடுவாள்; ஆண் பிள்ளைகளுடன் பந்தயம் போட்டு ஓடி முந்துவாள். புத்தகப் பூச்சிகளைக் கண்டால் அவளுக்குப் பிடிக்காது. வீரதீரர்களையே அவள் விரும்புவாள். அவள் பெண்சங்கத்தில் வீராவேசமாகப் பேசுவாள். பெண்ணுரிமையை நிலைநாட்டுவாள். அவளை யாரும் தட்டிப்பேச முடியாது.

கமலத்திற்கு வயது இருபதானது. அவள் படிப்பையும் அழகையும் கண்டு 'நான் முந்தி, நீ முந்தி' என்று செல்வர் ஜாதகங்களை அனுப்பினர். வாலிபருக்கு அவளைப்பற்றியே பேச்சு! அவள் மேல் கண்!

என்றாலும், யாரும் அவளைத் துணிந்து 'அந்த வார்த்தை' கேட்க முடியாது. ஒரு வாலிபன் எக்கச் சக்கமான கேள்விகேட்டுத் தவடை சுத்திபெற்றான். அவள் பார்க்கும் பார்வையிலேயே ஆள் விலவிலத்துப் போவான். வாலிபரின் காதல் நாடகம் அவளிடம் செல்லாது. அந்த வயதில் அவ்வளவு 'துணிந்த கட்டையை' யாரும் கண்டதில்லை. இப்படிப்பட்ட பெண்மேல் உலகம் கதை கட்டுவதுண்டு. கமலத்தை "**மிஸ்டர் கமலம்**" என்று நண்பர் அழைப்பர், அதைத் தவிர வேறு சேட்டைக்கு இடமில்லை. அத்தான் சேஷன் பி.ஏ., பி.எல்., அவளை மணக்க விரும்பினான். "என்னுடன் சரியாகக் குதிரை சவாரி செய், பார்ப் போம்!" என்றாள் கமலம். சோனிச் சேஷு பயந்து போனான். தந்தை இரண்டொரு இடங்களைத் தீர்மா னித்தார். "அப்பா, நான் எனது இஷ்டப்படித்தான் கலியாணம் செய்துகொள்வேன். யாரும் கட்டாயப் படுத்தக்கூடாது" என்று கமலம் கண்டிப்பாகச் சொன்னாள். டாக்டரும் பிறகு மகளை வற்புறுத்த வில்லை. வைதிகத் தாயார் மட்டும் "கமலம், பெண்ணு லக்ஷணமாயிரு! அத்து மீறி நடக்காதே! கொஞ் சம் குனிந்து தணிந்து நட... ஊரெல்லாம் உன்பேச்சா யிருக்கிறது...!" என்று கண்டித்தாள். கமலம் சிரித்து விட்டுத் தன் மனப்படியே நடந்தாள். அவளுக்கும் பருவத்திற்குரிய உணர்ச்சி யிருந்தது. அவள் பலர் முகத்தையும் அகத்தையும் சோதித்தாள்; ஆனால் தனக்கிசைந்த வீரனை எதிர்பார்த்திருந்தாள். ஒரு நாள் கமலம் தந்தையுடன் கிரிக்கெட்பந்தயம் பார்க்கச் சென்றாள். அங்கே ஆடிய வீரனொருவனிடம் அவள் மனம் சென்றது. அவன் உருவும், திறமும், பந்தை

அடிக்கும் இலாகவமும், சுறுசுறுப்பும், பொறுமையும், மரியாதையும் அவனை வசீகரித்தன. அவனும் அடிக் கடி கமலத்தின் கண்களைச் சந்தித்தான். அவனுக்கே ஆட்டத்தில் வெள்ளிக் கோப்பை கிடைத்தது. அந்த வாலிபனையே தான் விரும்புவதாகக் கமலம் தகப்பனாரிடம் தெரிவித்தாள். டாக்டர் இராகவன் மறுநாள் அவனை விருந்திற்கு அழைத்து நெருங்கிப் பேசினார். இடம் பிடித்திருந்தது. மறுவாரமே கலி யாணமாயிற்று.

## II

மாப்பிள்ளை கோபாலன் ஐ.எம்.எஸ்., இப்போது தான் சீமையிலிருந்து வந்தவன்; வீர தீரன், விஜயன்; சொல்லும் செயலும் ஒன்றானவன். கமலம் தனக் கேற்ற தீரனை அடைந்தாள். "இவளுக்கு அவன், அவனுக்கு இவள்; **சரியான ஜோடி!**" என்று ஊரெல் லாம் பேசிக்கொண்டனர். இருவரும் வைத்தியத் தொழிலில் வந்ததைக் கொண்டு தாட்டாக, (தாராள மான ஈகையுடன்) வாழ்ந்தனர். அவர் மனம், செயல், எண்ணம், பேச்சு, போக்கு எல்லாம் ஒன்று. "படித்த பெண்கள் புருஷனுக்கு வணங்கமாட்டார்கள், மனம் போனபடி தலைதெறித்து நடப்பர்" என்னும் மாமூல் பொய்களுக்கு இடமேயில்லை. கமலமும் கோபாலனும், அவ்வளவு ஒட்டுறவாக, உடலும் உயிரும்போல வாழ்ந் தனர். கமலம் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் வைத்தியம் பார்த்தாள்; ஏழைகளுக்கு இனமாகச் சிகிச்சை செய்தாள். "நல்ல மகாராசி" என்று அவளை ஜனங்கள்கொண்டாடினர். கோபாலன் ஆண்களுக்கு வைத்தியம் பார்த்தான். இரண சிகிச்சையில் பெரும்

புகழ் பெற்றுன்; நன்ருகப் பணமும் சம்பாதித்தான். இருவரும் சாயங்காலம் பந்தாடி வருவர்; ரேடியோ கேட்பர். சாப்பாடானதும் கமலம் வீணையுடன் பாடுவாள். அவள் அழகிலும் குரலிலும் கோபாலன் சொக்கிப் போவான். காலையில் இருவரும் குதிரைச்சவாரி செய்துவருவர். கோபாலன் கமலத்திற்கு வாள்வீசப் பழக்கினுன்; 'ஜியு ஜித்சு' என்னும் ஜப்பானியத் தேகப்பயிற்சி சொல்லித் தந்தான். இருவருக்கும் போர்க்கலையில் கருத்துண்டு. நம் வாலிபருக்குப் படிப்புடன் போர்க்கலையும் கட்டாயமாகப் பயிற்ற வேண்டுமென்பது அவர் கொள்கை. ஆறுண்டுகள் இப்படி அவர் வாழ்வு அமைதியாகச் சென்றது. கமலம் கர்ப்பவதியானுள்; ஒன்பது மாதம்.

## III

அப்போது ஐரோப்பியப் போர் நடந்தது; ஹிட்லரின் உக்கிரம் வலுத்தது. இங்கிலாந்து தனியே நின்று அவனது அசுரக் கூட்டத்துடன் தர்ம யுத்தம் செய்தது. கமலமும் கோபாலனும் ரேடியோச் செய்திகளை ஆராய்ந்தனர். சர்ச்சிலின் வீர முழக்கத்தில் இருவருக்கும் பெரிய மோகம்! "என்ன தைரியம், ஆணித்தரமான பேச்சு!" என்று சர்ச்சிலை அவர்கள் மெச்சுவார்கள். "இந்தியாவின் க்ஷேமம் பிரிட்டிஷ் வெற்றியிலிருக்கிறது; நாஜி அரக்கரை ஒழித்தாலே உலகில் வாழமுடியும். உலகின் தலைவிதியைத் தீர்மானிக்கும் இந்தக்கொடிய போரில், நியாயவான்கள் யாரும் பிரிட்டிஷ் கட்சியிலேயே சேருவர்." என்பது கோபாலன் கொள்கை. ஜர்மன் குண்டு இலண்டனில் விழுந்தபோதே கோபாலன் உள்ளம் துடித்தது.

தானும் போர்முனை செல்ல எழுந்தான். சர்ச்சில் ஒரு நாள் "நடக்கட்டும் உங்கள் அட்டூழியம்! எங்களால் ஆனதைச் செய்கிறோம்." என்று பேசினார். "கண்ணே, நம்மால் ஆனதைச் செய்வோம்." என்றெழுந்தான் கோபாலன்; ஊர்ஊராகச் சென்று யுத்தநிதி வசூலித்துக் கொடுத்தான்; தனது பாங்கிப் பணத்தில் பாதி தந்தான்; முடிவில் தன்னையே தந்தான். கவர்னர் அவனை நன்கு மதித்து, சரியான பதவி தந்து போர் முனைக்கு அனுப்பினார்.

எவ்வளவு தைரியமாயிருந்தாலும் காதலர் பிரியும் போது கண்கலங்காமல் இருக்குமா? "கண்ணாளா, உம்மைப் பிரிந்து ஒரு நிமிஷம் இருக்கச் சகிக்காதவள் எப்படிக் காலந்தள்ளப் போகிறேன்?" என்று கமலம் கணவனை இறுகத் தழுவிக்கொண்டு விம்மி விம்மி அழுதாள். "கண்ணே, குழந்தை பிறந்ததும் உடம்பைத் தேற்றிக்கொள்! செஞ்சிலுவைப் படைக்கு உன்னையும் சிபார்சு செய்கிறேன். நீ பாரஷூத் பயிற்சியும் பெறவேண்டும். இக்காலம் அஃது அவசியம்! அதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் மிஸ் மேரி செய்வாள். கண்ணே கலங்காதே! காகிதம் போடுகிறேன். **நான் இருக்கும் இடத்திற்கு நீயும் வரலாம்.**" என்று கோபாலன் விடைபெற்றுச் சென்றான்.

## IV

கமலத்திற்கு முத்துப்போல் ஆண் குழந்தை பிறந்தது. அவள் அதற்கு "**ஜய வீரன்**" என்ற பெயர் சூட்டினாள். கணவன் இந்த அருமைப் பிள்ளையைப் பார்த்து மகிழாததே ஒரு குறை. கமலம் சதா ரேடியோவில் B. B. C. செய்தியை ஆவலாக எதிர் பார்ப்

பாள் ; பத்திரிகைகளில் போர்ச் செய்திகளை ஆழ்ந்து படிப்பாள்; செஞ்சிலுவைச் சங்கத்துடன் கடிதப் போக்குவரத்துச் செய்வாள். "நீயும் வரலாம்" என்ற நாயக வசனம் அவளை உந்தி யிழுத்தது. அந்த நாளை ஆவலாகப் பார்த்திருந்தாள் ; அதற்கு வேண்டிய தயாரிப்புகளையெல்லாம் இரகசியமாகச் செய்தாள். தாயார் மாமியார்களுக்கு மட்டும் அவள் போக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. தாயார் தினம் மாப்பிள்ளை ஜாதகம் பார்ப்பாள், குறிகேட்பாள், பெருமாளுக்கு வேண்டிக்கொள்வாள் ; மாப்பிள்ளை க்ஷேமமாக வர வேண்டுமே என்று கவலைப்படுவாள் ; கனவு காண பாள் ; அதற்குப் பலவிதமான பலன் சொல்வாள். பல மாதங்கள் கடிதம் இல்லை. ஒரு நாள் "நான் மத்திய தரைக்கடலில் டேரிங் என்னும் கப்பலில் ரணவைத்தியம் செய்கிறேன் ...க்ஷேமம்" என்று கார்டு வந்தது ; அவ்வளவுதான். போரின் கொடுமை நெறிகட்டி யேறியது. இட்லாசுரன் தேசம் தேசமாக ஸ்வாஹா பண்ணினான்; இத்தாலியைத் திக்குமுக்காடச் செய்த கிரீசையும் தாக்கி ஆக்கிரமித்தான். பிறகு மத்திய தரைக்கடலில் கொடிய கப்பல்போர் நடந்தது. கிரீட்டில் நடந்த போரைக் கமலம் ஊன்றிக் கவனித்தாள்...கவலை அதிகரித்தது. போர் முழுதும் அவள் மனத்தில் நடந்தது. கப்பல்கள் முழுகும் செய்திவரும்போதெல்லாம் அவள் நம்பிக்கையும் துயர்க்கடலில் மூழ்கும். ஒரு நாள் ரேடியோவைக் கண்ணீரும் கம்பலையுமாகக் கவனித்தாள். அவள் மனத்தில் ஏதோ செய்தது. "**டேரிங் கப்பலில் குண்டுவிழுந்தது...மூழ்கியது; அதிலிருந்தவர் அதோகதியடைந்தனர்.**" என்ற செய்தி கேட்டது. "ஐயோ

என் வாழ்வில் இடி விழுந்ததே! என்னகாலம், என்ன காலம்! நானும் அவருடன் சென்று மூழ்கியிருக்க லாகாதா! அட ஜயவீரா, உன்னால் அன்றோ அந்தப் பாக்கியம் கிடைக்காமல் போனது. இனி உயிரைப் பிரிந்து எப்படி வாழ்வேன்?" என்று கமலம் அடி சாய்ந்த பூங்கொடிபோல் விழுந்து அழுதாள். வீடு துக்கக் காடானது. "ஐயோ, உன் மாங்கல்யபலன் இப்படியா இருக்கவேண்டும்! அந்தப்பழிகாரன் இப்படியா என்பெண்ணை மோசம் செய்யவேண்டும்! இந்தக் குழந்தை வந்து அப்பனை உருட்டியதே...! அதிட்டக்கட்டை" என்றாள் தாய். "இந்தப் பெண் அதிட்டமே எங்கள் பிள்ளையைக் கொண்டுபோனது. துரதிட்ட மூதேவி!" என்றனர் சம்பந்திகள். "அம்மா, கவலைப்படாதே கமலம், உனக்கு மறுமணம் செய்கி றேன்" என்றார் தகப்பனார். "அப்பா, அந்த வார்த்தை வேண்டா. அவர் என் உயிர். நான் உயிரைத் தேடிப் புறப்படுகிறேன்" என்றாள் கமலம். "நீ போவையோ? ஓடி காலை! கிழித்தகோட்டைத் தாண்டினால், தெரியுமா செய்தி!" என்று உறவினர் கண்டித்தனர். டாக்டர் மட்டும் மறுவிவாகம் செய் யவே முன்னின்றார். "பிள்ளையைச் சாகக்கொடுத்த புண்ணுடன், மொட்டைச்சிக் கலியாணத்தின் அவ மானமும் எங்களுக்கு வரவேண்டுமா?" என்று சம் பந்திகள் இடித்தனர். கமலம் கலங்கவில்லை; தைரிய மாகவேயிருந்தாள். கணவரைப் போலவே "தானும் போரில் உதவிசெய்யவேண்டும்; அதுவே தருமபத்தினி யின் கடமை" என்றுணர்ந்தாள். வீட்டில் விதவைக் கோலம்போட ஏற்பாடு செய்தனர். கமலம் "கிட்ட வந்தால் தெரியுமா செய்தி?" என்று வாளைச் சுழற்றி

ளுள்; நிமிர்ந்து நடந்தாள்; தலைவாரிப் பின்னிப் பொட்டிட்டாள்; பூ முடித்தாள்; குதிரைச் சவாரியிலும் குறைவில்லை. டாக்டர் இராகவன் மட்டும் "இப்படியே சந்தோஷமாயிரு!" என்ருர். ஊரார் கன்னத்தில் கைவைத்து, "இதென்னடீ கலிகாலம்! அறுத்தவள் தலைவாரிக்கிறதாம், நகைபோட்டுக்கிறதாம், நடையைப் பாரேன் நடையை!...என்னத்தைச் சொல்லுவேன்! காலமம்மா காலம்" என்று தலையில் அடித்துக்கொண்டனர். "ஜாதிப்ரஷ்டம் பண்ணுவோம்; கடசிராத்தம் பண்ணுவோம்" என்று உறவினர் கூப்பாடுபோட்டனர். தாயார், "கமலம் அப்படிச் செய்யாதே, இப்படி நடக்காதே, அங்கே பார்க்காதே!" என்று சும்மா தொண தொணத்தாள். கமலமோ மாங்கல்யத்துடன் மங்கலமாகவே இருந்தாள். உபத்திரவங்களை முண்டித் தள்ளிச் சுதந்தரமாகவே நடந்தாள். சமூகத்திற்குப் பயப்படவில்லை.

## V

ஒருநாள் டாக்டர் வெளியூருக்கு வைத்தியம் பார்க்கச் சென்ருர். வீட்டிலுள்ளவர்கள் பெருமாள் சேவைக்குச் சென்றனர். இரவு ஒன்பது மணி; இராகவ விலாஸ் தோட்டத்திலிருந்து ஐரோப்பிய கனவானொருவன், மீசையை முறுக்கிவிட்டுக் கிளம்பினுர். "யார்? எங்கே சென்ருர்?" என்பவை யாருக்கும் தெரியாது.

பெருமாள் சேவைக்குச் சென்றவர் திரும்பி வந்தனர். குழந்தை ஜயவீரன் உறங்கினுன். கமலத்தைக் காணவில்லை. வீடு, தோட்டம், தெரு, ஊர், அயலூர் எல்லாம் தேடினர். ஸ்டேஷனுக்கு ஸ்டே

ஷன் தந்தியடித்தனர். தகவலில்லை. "ஐயோ அடங் காப்பிடாரி, பஜாரி...கம்பிநீட்டிவிட்டாள். குலத் திற்குத் தீராப்பழி வந்ததே" என்று தாயார் பொருமி ஞள். டாக்டர் இராகவன் வந்தார்; விஷயத்தை ஒரு வாறு யூகித்தார்; தமது பீரோவைத் திறந்தார். தொப்பென்று ஒரு கடிதம் விழுந்தது, படித்தார்; "அப்பா, அவர் இருக்குமிடத்திற்குச் செல்கிறேன். யாரும் என்னைத் தேடவேண்டா! ஜயவீரனைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளுங்கள்! ஊரார் அசட்டு வார்த்தையை அம்மா கேட்கவேண்டா. உரியகாலத்தில் செய்திவரும். அன்புள்ள கமலம்."

ஊரில் இதே பேச்சு...ஏகக்கசமுசல்! "கேட் டீரா! டாக்டர் பெண் கம்பி நீட்டிவிட்டாள்! "ஆசாமி யார்?"-"அந்தப் பயலோடேதான் போயிருப்பாள்"- "குதிரை சவாரி பண்ணும்போதே இவள் இலட்சணம் தெரிந்தது"—"டாக்டர் சீர்திருத்தம் சந்திசிரித்தது."- "பெண்ணைப் பெண்ணாக வளர்க்காமல் தில்லிமட்டக் குதிரைபோல் வளர்த்தான். அது விட்டது சவாரி!"- "ஏண்டீ அலமேலு, இப்படித்தான் போவாளோடி? ஒரு குழந்தையையும் உன்கழுத்தில் கட்டிவிட்டு! அவள் காலை ஒடித்துக் கட்டிப்போடாது நீயும் சும்மா இருந்தாயே, பைத்தியக்காரி!"—"நானென்ன பண் ணட்டுமம்மா; எல்லாம் அவர் கொடுத்த செல்லம் இப்படி வந்தது." இப்படி நெடுநாள் பேசி ஊர் இந் தச் சம்பவத்தையே மறந்தது. கோபாலன் சண்டை யில் இறந்தான்...கமலம் எங்கோ ஓடிப்போனாள்... அவ்வளவுதான் ஊருக்குத் தெரியும். நாம் உண் மையை அறிவோம்.

# VI

தளபதி வாவெலும், பிரெஞ்சுச் சுதந்தர வீரர் தெ கோலும் ஆஃபிரிக்காவிலும், அரேபியாவிலும் கலகங் களை அடக்கினர். அங்கே வாலாட்டிய ஜர்மன் சூழ்ச் சிக்காரரை முறியடித்தனர். இராக்கில் ஜர்மனி விஷ மம் பலிக்கவில்லை. ஸிரியாவில் ஆகாய விமான தளம் ஏற்படுத்திக்கொண்டு, கிழக்கில் வால்நீட்ட ஜர்மனி முயன்றது. அதைத் தடுக்க தெ கோல் படைகளை அனுப்பினர். இந்தியப் படைகள் பேருதவி செய் தன. பல டாக்டர்கள் சேவை செய்தனர். அவர்க ளுள் மேஜர் சிங் ஒருவர். அவரிடம் தளகர்த்தனுக்கு அபார நம்பிக்கை, பிரியம். தெமாஸ்கஸ் முற்றுகை யில் மேஜர் சிங் அற்புதமான வீரங் காட்டினர். தெமாஸ்கஸ் நேசப்படைகள் கைக்கு வந்தது. போர் வென்றது. ஆனல் வெற்றிமுழக்கத்துடன் ஒரு துன் பச்செய்தியும் சேர்ந்தது : மேஜர் சிங் போரில் காயம் பட்டு வீழ்ந்தார். உடனே ஒரு பாரஷூத் வீரன் வந்து குதித்தான் ; மேஜர் சிங்கைத் தனது தொண் டர் உதவியால் விரைவாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்முன்; மிகவும் கருத்துடன் சிகிச்சை செய்தான். நல்ல வேளையாக அபாயமில்லை. குண்டின் அதிர்ச்சி யால் மூர்ச்சைபோட்டிருந்தது. காலில் சிறிது காயம், புஜத்தில் இலேசான காயம்...நெஞ்சை அடைத்தது. இரண்டுவாரம் சிகிச்சை செய்தபிறகு மேஜருக்கு சுயப்ரக்ஞை வந்தது. தம்மைக் காத்த வீரனுக்கு வந் தனம் செலுத்தினர் மேஜர் சிங். பால்வடியும் அவன் இளமுகமும், அன்பும், ஆதரவும், உருக்கமான பேச் சும், தமிழும் மேஜரின் உள்ளத்தைக் கவர்ந்தன. அந்த

இளைஞன் தன் பெயரை "டேரிங்" என்று சொன்னான். இருவருக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. மேஜர் மயக்கமாயிருந்தபோது அடிக்கடி "கமலம், கமலம்" என்று புலம்பியதை டேரிங் கேட்டான். "தங்கள் பெயர் என்கப்பலின் பெயர். அது மூழ்கியது" என்று மேஜர் சொன்னார். "பிறகு நடந்ததென்ன?" என்று டேரிங் கேட்டான். "கப்பலில் இருந்தவரெல்லோரும் நடுக்கடலில் தவித்தோம். பலர் மூழ்கினர். நான் வெகு சிரமப்பட்டு நீந்தி ஒரு திட்டில்வந்து ஏறி, மயக்கம்போட்டுக் கிடந்தேன். நல்லவேளையாக ஜெனரல் கோலின் கப்பல் வந்தது. ஒரு தளகர்த்தர் என்னை மெல்ல எடுத்துக் கப்பலில் வைத்துச் சிகிச்சை செய்தார். போன உயிர் வந்தது. எனக்குப் பிரெஞ்சு நன்ருகத் தெரியும். ஆதலால், என்னைப் பிரெஞ்சுப் படையில் சேர்த்துக்கொண்டனர். நான் ஸிரியாப் போரில் கலந்து உதவினேன். நல்ல பெயர் பெற்றேன். தெமாஸ்கஸ் முற்றுகைக்குப் பின் நடந்தது உமக்குத் தெரியும்" என்ருர் மேஜர். "தாங்கள் 'கமலம் கமலம்' என்று புலம்பக் காரணம் என்ன" என்று கேட்டான் வீரன். "அப்பா, அஃது என் மந்திரம். கமலம் என் அருமை மனைவி. எனக்கேற்ற வீராங்கனை. அவள் பூரண கர்ப்பிணியாயிருந்தபோது பிரிந்து வந்தேன். குழந்தை பிறந்த பிறகு செஞ்சிலுவைப் படையில் சேர்ந்து யுத்தசேவை செய்யச் சொன்னேன். அவள் மகா பராக்கிரமசாலி. டேரிங் கப்பல் மூழ்கியதைக் கேட்டு அவள் எப்படி வருந்தினளோ, என்ன செய்தாளோ? என் குழந்தை என்னவானதோ தெரியவில்லை" என்று மேஜர் விசனித்தார். அச்சமயம் நர்சுகள் சிலர் உள்ளே வந்து

"மாதாம் டேரிங், உமது நோயாளி சௌக்கியமானது பற்றி மகிழ்வு!" என்று கைகுலுக்கினர். மேஜருக்குத் தூக்கி வாரிப் போட்டது. "இந்த வீரன் பெண்ணு? ஏன், ஆணுடை தரித்தாள்?" என்று வியந்தார்; அவள் கதையைக் கேட்டார். "நான் தமிழ்நாட்டுப் பெண், டாக்டர் இராகவன் மகள். என் கணவன் கப்பல் மூழ்கியதைக் கேட்டேன்; அதே பெயரை நான் வைத்துக்கொண்டு **மாதாம் டேரிங்** ஆனேன். எனக்கோர் ஆண் குழந்தை பிறந்தது. பெயர் ஜயவீரன். வீட்டிலிருந்தவர் எனக்கு விதவைக் கோலம்போட முயன்றனர். என்னென்னவோ அசட்டுக் கட்டுப்பாடுகள் செய்தனர். அனைத்தையும் மீறினேன். ஐரோப்பியக் கனவான் வேடத்துடன் மீசை வைத்துக்கொண்டு தப்பினேன். செஞ்சிலுவைச் சங்கத்தில் என் தோழி மிஸ் மேரியைக் கண்டேன். பாரஷூத் பயிற்சி பெற்றேன். உடனே, இராக்குப் போரில் கலந்துகொண்டேன். பிறகு, ஜெனரல் கோலின் சுதந்தரப்படை ஸிரியாவிற்கு வந்ததை அறிந்தேன். எனக்கு பிரான்ஸ் விழுந்ததைப் பற்றி அளவற்ற துக்கம். நான் ஒரு ஜோன் ஆஃப் ஆர்க்கின் வேகத்துடன் சுதந்தரப் படையில் கலந்துகொண்டேன்; என் தளகர்த்தனிடம் ஓர் உத்தரவுமட்டும் பெற்றேன்—எப்போதும் ஆணுடை தரிப்பதே! எனது கற்பைக் காக்க அதுவேண்டியிருந்தது. அதற்கு ஹானி நேர்ந்தால் இதோ சுழல்துப்பாக்கி தயாராக வைத்திருக்கிறேன். நான் என் நாதனையே காணவந்தேன். அவரைக் காணுவிட்டால் அதே போர்க்களத்தில் பலியாகவே துணிந்தேன். நானே **கமலம்**" என்று ஆணுடையை உதறி நின்றுள் கமலம்!

## VII

"ஆ டேரிங் கமலம்! என் அருமைக் காதலி! எதிர்பாராத இன்பம் தந்தாய்! எனக்காக இவ்வளவு அபாயங்களைத் தாண்டி வந்தாய். உனது வரலாறு உலக சரித்திரத்தில் இடம்பெற வேண்டும்." என்று மேஜர் கோபால்சிங் காதலியைத் தழுவி இன்பக் கண்ணீர் வடித்தான். பூனுவில் கோபாலன் விமானப் பயிற்சி செய்து பஞ்சாப் சிப்பாய்களுடன் புறப்படும் போது, தன் பெயருடன் சிங் பட்டத்தையும் பூண்ட தால் அவனுக்கு மேஜர் சிங் என்றே பெயர் வழங்கி யது. வீரக்காதலர் தருமயுத்தத்தில் அரிய பணிகளைச் செய்தனர். நாளுக்கு நாள் போரும் தீவிரமானது. ஹிட்லர் நன்றிமறந்து, ருஷ்யாவைப் படை யெடுத் தான். "விநாசகாலே விபரீத புத்திஹி" என்றான் கோபாலன். "மாஸ்கோ அவனுக்குத் தோல்வி மணி யடிக்கும்" என்றாள் கமலம். இதோ இங்கிலாந்தும் அமெரிக்காவும் சோவியத்துடன் சேர்ந்து ஜர்மனி யைப் பிண்டம் பிடிக்கக் கிளம்பிவிட்டனர். சர்ச்சில் வீரமுழக்கம் அலிகளுக்கும் ஆண்மையளித்தது! சர்ச்சில் 'V' என்னும் வெற்றிப் படை திரட்டினார். பிரிட்டிஷ் படையெங்கும் வெற்றிப்பாட்டு முழங்கி யது. கமலகோபாலரும் வீரருடன் சேர்ந்து ஜய கானம் செய்தனர்.

## VIII

டாக்டர் இராகவன் ஒரு பெண்ணையும் இழந்து தவித்தார்; பேரன் ஜயவீரனைக் கண்டு கண்ணீர் வடித்தார். வீட்டில் சதா அழுகைதான். அலமேலு வெளியில் தலைகாட்டவில்லை. பந்துக்கள் "ஓடிப்

போனவள் வீட்டிற்கு வரமாட்டோம்" என்று கட்டுப் பாடு செய்தனர். நிலைமை மோசமானது. அச்சமயம் ஒரு தந்தி பறந்து வந்தது. "நாங்கள் க்ஷேமமாயிருக் கிறோம். இருவரும் யுத்தத்தில் வைத்திய சேவை செய்கிறோம். சந்தோஷமாயிருங்கள்! விவரம் பின். கமலம் கோபாலன்."

தந்தி கண்டு டாக்டருக்கு உளம் பூரித்தது. அது காறும் உலகாயதத்தில் மூழ்கியவர், "தெய்வமே, என் னைக் காத்தாய், என் மகளைக் காத்தாய், மாப்பிள்ளை யைக் காத்தாய்,மானங் காத்தாய்..." என்றுஉருகினார்; திருவாய்மொழி ஓதினார். பெருமாளுக்கு இலக்ஷார்ச் சனை செய்தார். தம் காலத்தை கீதைவழியில் நடத்திச் சாந்தமடைந்தார். வம்பர்வாய் அடைந்தது. "கோபால னுக்கேற்ற கமலம்! சரியான ஜோடி! க்ஷேமமாயிருக் கட்டும்" என்று எல்லோரும் புகழ்ந்தனர். "இதென் னடீ, ஒரு பொம்மனாட்டி சண்டைக்குப் போறதாம், ஆகாசக் குடையில் குதிப்பதாம்! என்ன துணிச்ச லடீ!" என்று சிலர் பேசினர். "ஏன், ருஷ்யா இங்கி லாந்து தேசங்களிலெல்லாம் பொம்மனாட்டிகள் துப்பாக்கி பிடித்து யுத்தம் செய்யும்போது, நமதுநாட் டில் ஒருத்தி அப்படிச் செய்வது குற்றமா? அது நமக்கே பெருமையன்றோ?" என்றனர் சிலர். பலர் அப்படிச் சொல்லும் நாள் வருகிறது-வீரம் ஓங்குக!

முற்றிற்று.